



# செம்பருத்தி

பிரதேச மலர் - 1

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவை பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
03 JAN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்பருத்தி

## பிரதேச மலர் - 01

**வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவை,**
**பிரதேச செயலகம்,**
**பருத்தித்துறை.**
**2014**

9548(P)
PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : "செம்பருத்தி"

வெளியீடு : பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

பதிப்பு : 16 ஆவணி 2014

தொகுப்பாசிரியர் : செல்வி. சே. செல்வசுகுணா
(கலாசார உத்தியோகத்தர்)

அட்டைப்படம் : ஆசை இராசையா

பக்கங்கள் : xxvii + 220

பிரதிகள் : 300

பதிப்பகம் : **S.P.M** பிறின்ரேர்ஸ்,
வி.எம்.றோட், பருத்தித்துறை
தொ.பே : 0774966997

சர்வதேச குறியீட்டு இல. : 978-955-41633-0-0
(ISBN)

**Title** : SEMPARUTHTHY

**Published by** : Divisional Kalasara Peravai,
Divisional Secretariat,
Vadamaradchy North, Point Pedro.

**In Published** : 16th August 2014

**Compile** : Miss.S.Selvasuguna
(Cultural officer)

**Cover Design** : Asai Rasaia

**Pages** : xxvii + 220

**No.of Copies** : 300

**Printers** : **S.P.M** Printers,
V.M.Road, Point Pedro.
T.P : 0774966997 , 021 226 0055

**ISBN No.** : 978-955-41633-0-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தாய் வணக்கம்

(பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

"மனோன்மணியம்"
பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்னை

## தமிழன்னை உருவ வரலாறு

### உருவ விளக்கம்

**இருக்கை** : இயல், இசை, நாடகம், சேர, சோழ, பாண்டியல் இலச்சனைகளைக் கொண்டது.

**மாலை** : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மலர்களால் தொடுக்கப்பெற்றது.

**அபயகரத்தில் உள்ள அ–ன்** : தமிழ் முதல் எழுத்தாகிய "அ" என்பதையும் இறுதி எழுத்தாகிய "ன்" என்பதையும் கொண்டது. இதன் பொருள் தன்னை வணங்கியவர்களுக்குத் தமிழறிவு நல்கும் என்பதாகும்.

**ஏடு** : இலக்கியம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் கயிற்றால் கட்டாத ஏடு காட்டுகிறது.

**அணிகலன்கள்** : தமிழ்ப்புலவர்கள் சூட்டிய இலக்கிய இலக்கணங்கள்

**சேலைக்கரை** : குணத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளும் 'அன்னத்தைக்' கொண்டது

**பின்னணி** : தமிழ் - உலகம் தழுவிய மொழி என்பதைக் காட்டுகிறது

**தோற்றம்** : என்றும் இளமை குன்றாதது என்பதற்கு ஏற்ப கன்னித் தோற்றம்

**தாமரை** : தெய்வமலர்த் திருவடிகள்

**அன்னை உருவாகிய வரலாறு** : தமிழறிஞர்கள், அயல்நாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் கூறிய கருத்துக்களுக்கு ஏற்ப ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டின் பொழுது இலங்கை ஓவியர் பெனடிரிக்கால் வரையப்பட்டது.

**சிறப்பு** : பூம்புகாரில், 2-1-81 அன்று, மதுரை சோமு இன்னிசை வழங்க, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

அன்னை உலா : 3-1-81 அன்று பூம்புகாரில் இருந்து புறப்பட்டு மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சை, புதுக்கோட்டை, நமனசமுத்திரம், ஆத்தங்குடி, குன்றக்குடி, திருப்பத்தூர், திருமெய்யம், கோனாபட்டு, மேலூர் வழியாக 4-1-81 அன்று காலை அறங்காவலர்கள் வரவேற்க, மதுரை அருள்தரு மீனாட்சி அம்மன் கோயிலை வந்தடைந்தது.

தமிழ்ச்சுரங்கம் வெளியீடு — பேராசிரியர் முனைவர் ஆறு.அழகப்பன், தலைவர், தமிழ்த்தாய் உருவ அமைப்புக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு
# பிரதேச கீதம்

**பல்லவி**

வாழ்க பல்கலை வளம் தரும் ஆலயம்
வாழ்க வளருக வாழியவே வாழியவே

**அனுபல்லவி**

உள நலம் தானறியும் உன்னத நிர்வாக
வள நிறை கோயில் வனப்புடன் வாழியவே

**சரணம்**

கடல் பனை வளமிகு துறைமுக மடியில்
கலங்கரை கோபுர உயர் முடி வீடு
வடமராட்சி வடபிரதேசம் நாளும்
உயர்வொடு செயலகம் எழும் தினம் நீடு - வாழியவே

தலமது சிறக்கவே! நலமது பெருகவே!
புலம்புகழ் பேறுயர் கல்லூரி தன்னோடு
கலைமிளிர் முத்தமிழ் வித்தகர் உருவாகும்
நிலைதனை பகரும் திருமுக பெறு பூமி - வாழியவே

அருங்கலை கவினுயர் ஆடல் பாடல்
தருமுடற் பயிற்சி தக்கதற் கலையும்
விருப்புடன் வேண்டி விளையுமே மேன்மை
இருப்பினை தன்னகம் ஊற்றென தருமே - வாழியவே

வித்தகர் வான்புகழ் சத்தியம் தான் குறி
சித்திகள் எழுபலர் சொத்துக ளாயுளோர்
எத்தனை செழுமை எம்மனம் புகழும்
நித்தியம் வாழ்த்தும் நிதமறி வோமே - வாழியவே

**ஆக்கம்**

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்கு பிரதேச

# கலாசாரப் பேரவை

# கீதம்

(தொகையறா)

கலைகளைப் போற்றிக் கண்ணீர் துடைப்போம்.
கலைகளால் நெஞ்சின் காயம் களைவோம்.
கலைகளால் மேன்மை வாழ்வை அடைவோம்.
கலைகளால் ஞான நிலையையும் தொடுவோம் !

(பல்லவி)

உயிரில் உறைந்தெங்கள் உணர்வில் சுரந்தூர்க்கு
ஒளியெனும் தமிழி னூடு
வடமராட்சி வடக்கு கலாசார
பேரவைப் புகழைப் பாடு !

(சரணங்கள்)

அரச பணியாலே அனைவர்களும் மேன்மை
அடைய உழைப்போர் நாம் வந்தோம் - நம்
அகத்துக் கணைபோட்டு அது நல் வழிசெல்லக்
கலையின் துணைகொண்டு வென்றோம்
வருடந் தொறும்ஆன்ற அறிஞர் முகதாவில்
மகிழ்ந்து விழாசெய்திம் மண்ணின் - நிஜப்
பெருமை, கலைமேன்மை, உரைத்துச் சிலிர்க்கின்றோம்!
பிழைகள் பொறுத்தேற்றுக் கொள்வீர்.

அழகுக் கலை, ஞானம் அடையும் கலை, இந்த
அவையில் அரங்கேறும் பாரீர் - நம்
அருமைத் தமிழ்மூன்றும் இனிமை குறையாதிவ்
அரங்கில் விளையாடும் கேளீர் !
இளைய கலைஞர்கள் முதிய கலைஞர்கள்
இவர்கள் அறிஞர்கள் என்று — கவி
எழுதிப் புகழ்பாடி.. விருது கொடுத்தாடி
இதயம் குளிர்வோமே இன்று !

பழைய கலைநுட்பம் புதிய தொழில்நுட்பம்
புழகிக் கலைசெய்ய வேண்டும் - இப்
பதியின் வரலாறு எமது எதிர் காலம்
பலதும் அதில் நெய்ய வேண்டும்
மொழியை கலைதன்னை வளர்க்கும் இளையோரின்
முயற்சியினை வாழ்த்த வேண்டும் - நம்
முகத்தை இழக்காமல் நமது அடையாள
முதுசக் கலைகாப்பம் மீண்டும்.

-த.ஜெயசீலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம குருமார்களின் நல்லாசிகளும் நல் வாழ்த்துக்களும்

**பிரம்மஸ்ரீ. ச. க. சுதர்சனக்குரு J.P,**
**பிரம்மஸ்ரீ. ச. க. புருஷோத்தமக்குரு J.P,**
பிரதமகுருக்கள்,
அருளமிகு ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் சுவாமி கோவில்,
புலோலி.


இயல், இசை, நாடகம் எனும் மூன்றும் கலந்தவைதான் எமது கலாசாரமாகும். பண்பாடு என்பது அதனுடன் இணைந்த எமது நாளாந்த நல்ல ஒழுக்கமான பழக்கவழக்கமாகும். வடமராட்சி வடக்கு பிரதேச செயலக செயலாளர் தலைமையில் அமைந்துள்ள கலாசாரப் பேரவையினரின் பெருமுயற்சியினால் தமிழ் மக்களின், பண்பாடுகள், பாரம்பரியங்கள் என்பனவற்றைப் பேணிப் பாதுகாத்து அடுத்துவரும் தலைமுறையினருக்கு விளங்கிக் கொள்ளும் வகையில், அதன் பெறுமதியினையுணர்ந்து கொள்ளும் வகையில் "செம்பருத்தி" எனும் பெயரில் "பிரதேச மலர்" 2014ம் ஆண்டாகிய இந்த ஆண்டு வெளியிடுவது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

அவனருளாலே அவன்தாள் வணங்கி, ஸ்ரீவல்லிபுர மாயவனின் பெருங்கருணையால் மென்மேலும் வருடந்தோறும் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணும் வகையில் சிறந்த ஆக்கங்களை வெளியிட்டு, வரும் தலைமுறையினருக்குச் சமர்ப்பித்து பெருமையடைய வேண்டும் என மாயவனைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ் மக்கள் ஆகிய நாமனைவரும் இத்தகைய நூல்களை வாங்கிப்படித்து பயனடைய வேண்டும்.

**நன்றி சுபம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**வ**டமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் "செம்பருத்தி" என்னும் பிரதேச மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். மனிதன் பல துறைகளிலும் தன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எடுக்கும் முயற்சியே பண்பாடு ஆகும். இந்த வகையில் வடமராட்சிப் பிரதேசத்தின் பண்பாட்டினால் கிடைக்கும் நல்ல விளைவுகளை நாம் மறந்துவிட முடியாது. இப்பண்பாட்டுக் கலாசார பாரம்பரியங்கள் பயனுள்ளவை. போற்றுதற்குரியவை. இப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அடையாளம் கண்டு அவற்றின் சிறப்புத் தன்மையை உள்வாங்கி அவற்றின் மதிப்பை உணர்ந்து பாராட்டி வளர்த்தெடுக்கின்ற முயற்சி பாராட்டப் படக்கூடிய ஒன்றாகும்.

அதேவேளையில் இன்று விஞ்ஞானத்தில், மனித சமூகவியலில், தொழில்துறையில், அறிவியலில், சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் மனிதன் கண்டுள்ள முன்னேற்றத்திற்கு அளவே இல்லை. இவைகள் ஒரு அனைத்துலகப் பண்பாட்டை உருவாக்கி வருகின்றன. என்பதையும் மறுக்க முடியாது.

இவற்றை உணர்ந்து, வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை "செம்பருத்தி" என்னும் மலர் வழியாக, இப்பிரதேசத்தின் பண்பாடு, கலாசார அம்சங்களை வெளிக்கொணர இருக்கின்றது. இப் பாரம்பரியங்களை ஆவணப்படுத்துவது என்பது இலகுவான விடயமல்ல. இதற்குப் பலருடைய பங்களிப்பு, கடின உழைப்பு முக்கியமானதாகும். இப் புனிதமான முயற்சியில் முன்னின்று உழைக்கும் நல் உள்ளங்களைப் பாராட்டி இப் பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை ஒன்று சேர்க்கும் இந்த முயற்சி வெற்றிகாண எல்லாம் வல்ல இறைவனை ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்பணி யோ. யோண் மவுலிஸ்**
பங்குத்தந்தை, பருத்தித்துறை,
பருத்தித்துறை மறைக்கோட்ட குருமுதல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

**எல்லாம் வல்ல இறைவனின் திருநாமம் போற்றி ஆரம்பிக்கிறேன்.**

காலத்தின் தேவை அறிந்து வெளியிடப்படுகின்ற பண்பாட்டுப் பாரம்பரியங்களின் பொக்கிஷம் "செம்பருத்தி" நூலுக்கு ஆசி உரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஓர் இனத்தின் இனத்துவ அடையாளங்களாக அந்த இனத்தின் பண்பாடும், கலாசார பாரம்பரியங்களும் காணப்படுகின்றன. அதேபோன்று அவ்வினத்தின் இருப்பின் உயிர்ப்பாகவும், வாழ்வின் அத்தாட்சியாகவும் அமைவனவும் அவையே.

அவ்வினத்தின் பாதுகாப்பு என்பது இவ்வினத்தை தனி நபர்களை சுதந்திரமாக வாழ வைப்பது மட்டுமல்ல, மாறாக அவ்வினத்தின் தனித்துவமான , அவ்வினத்திற்கே உரிய உயரிய பண்பாட்டு விழுமியங்களையும் நாகரீக கலாசாரங்களையும் பாதுகாப்பதும் அவ்வினத்தின் பாதுகாப்பாகவே கருதப்படுகின்றது.

தனித்துவம் என்ற போர்வையில் ஒதுங்கி புற நடையாக செல்லாமலும், பன்மைத்துவம் என்ற வகையில் கரைந்து காணாமல் போகாமலும் தனித்துவம் காத்து இணங்கி வாழும் கலாசாரத்திற்கு சொந்தக்காரர்கள் நாம். அந்த பண்பாட்டு ஒழுங்கிலே எமது பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாப்பதும் எம் அனைவரினதும் கடமையாகும். அதற்கெதிராக விடுக்கப்படும் அறைகூவல்களும், சவால்களும் எமது இனத்தை கபளீகரம் செய்வதற்கு சமனாகும். அந்த வகையில் காலத்தின் தேவை கருதியும், எதிர்கால சந்ததியினருக்கு நன்மை அளிக்கும் விதத்திலும், எமது பண்பாட்டு, பாரம்பரியங்களை ஆவணப்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் இம்முயற்சி பாராட்டத்தக்கது மட்டுமல்லாமல் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டியது அனைவரின் கடமையாகும்.

இத்தகைய மகத்தான ஆவணப்படுத்தல் பணியில் ஈடுபட்டிருக்கின்ற வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவைக்கும், ஏனைய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு, இப்பணி சிறப்புறவும், மேலும் தொடரவும் எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசியை வேண்டி விடை பெறுகிறேன்.

**சாமஸ்ரீ "தேசமான்ய" "தேச கீர்த்தி"**
**அஷ்ஷேஹ் அஜ்மல்.ஏ.காதர்,**
பிரதமஇமாம், மொஹிதீன் ஹமீதியா ஜும்துபள்ளிவாசல்,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஒவ்வோர் பிரதேசத்தினது பண்பாட்டு பாரம்பரியங்களை வெளிக்கொணர்வது மானிட சமூகத்தின் உயர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் அடிப்படையாகின்றது. இந்தவகையில் பருத்தித்துறை பிரதேச செயலகம் "செம்பருத்தி" என்னும் பெயரில் மலரினை மணம் வீசச்செய்யும் முயற்சி போற்று வதற்குரியதாகும். இம்மலர் பூத்துக் குலுங்குவதற்கு ஏற்பாடாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு ஊக்கம் அளிப்பது வரவேற்கத்தக்கது.

இப்பிரதேச பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு, விழுமிய சிந்தனைகள், கல்வி விளையாட் டுக்கள், தொல்பொருள் சின்னங்கள் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்கும் பொக்கிஷமாக இம்மலர் அமைவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பிரதேச விழுமியங்கள் மேலோங்கிப் புத்துணர்ச்சி பெற்று இம்மலர் எல்லோருக்கும் மணம் பரப்பும் இதழாக வெளிவர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாண மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார பேரவையினால் வெளியிடப்படும் "செம்பருத்தி" மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலர் வடமராட்சிப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு போன்ற விடயங்களை உள்ளடக்கியிருப்பதுடன் இப்பிரதேச மக்களின் உயர்வான வாழ்வியல் முறைமைகளையும் தொகுத்து சந்ததி சந்ததியாக சான்றுபடுத்தக்கூடிய ஆவணம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப் பட்டு வரும் இச்செயற்பாடானது இளம் எழுத்தாளர் களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் என்பதுடன் எதிர்காலச் சந்ததியினருக்கும் ஒரு வரலாற்றுப் பதிவாக அமையுமென நம்புகின்றேன்.

இப்பிரசேதத்தின் பிரதேச செயலாளராக கடமையாற்றும் திரு.இ.த.ஜெயசீலன் மிகவும் உயர்ந்த பண்புகளைக் கொண்ட, ஆற்றலும் ஆளுமையும் மனித நேயமும் மிக்க சிறந்த முகாமையாளர். நான் கரவெட்டி பிரதேச செயலாளராக கடமையாற்றிய போது அப்பிரதேசத்தில் கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றி எமது கலை இலக்கிய செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாகவிருந்து தற்போது பருத்தித்துறைப் பிரதேச கலாசார உத்தியோகத்தராக சிறப்பாக கடமையாற்றிவரும் செல்வி.செல்வசுகுணா சேனாதிராஜா மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் "செம்பருத்தி" சஞ்சிகையானது ஆலமரம் போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி எமது சமூகத்திற்கு மணம் பரப் வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் கலை பண்பாட்டு வெளியீடாக "செம்பருத்தி" மலர் வெளிவரவிருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரதேசத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட பிரதேச மட்டத்திலான கலாசாரப் பேரவைகள், தமது முன்னுதாரணமான செயற்பாடாக கலை, பண்பாட்டுத் தகவல்களை உள்ளடக்கிய பிரதேச மலர்களை வெளியிடுவதற்கு முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இலங்கைத்தீவின் வரலாற்றில் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேசத்திற்கு தனியான இடம் உண்டு. கடல் வளமும், நிலவளமும், அத்துடன் இணைந்த தொழில் வளமும், கலை வளமும் மிக்க பிரதேசம் பருத்தித்துறை. இதற்கு இப்பிரதேசம் எங்கும் பரந்து கிடக்கும் தொல்லியல் சான்றுகளும், தனித்துவமான உணவுப் பழக்க வழக்கங்களும், வீரதீர கலைகளுடன் கூடியதான கலைகளின் மேம்பாடும், தொழில் முறையின் ஊடான அனுபவ முதிர்ச்சியும் சான்றாக அமைந்துள்ளன.

இத்தகைய , ஈழவளநாட்டின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், தனக்கே உரிய தனித்துவமான வாழ்வியல் கோலங்களால் சிறப்புற்று விளங்குவதுமான வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேசத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்படுதல் வேண்டும். இந்த பொறுப்பு மிக்க சமூகப்பணிக்கு நாங்கள் அனைவரும் எம்மால் இயன்ற பங்களிப்பையும் வழங்குதல் வேண்டும். இதனை உணர்த்துவது தான் இச்சஞ்சிகையின் வரவு என நான் எண்ணுகின்றேன்.

இயந்திரமாகி விட்ட இன்றைய சூழ்நிலையில் வளர்ந்து வரும் நமது இளைய தலைமுறையினருக்கு கலை, பண்பாட்டின் முக்கியத்துவங்களை விளக்கிக் கூறுவதுடன், அவற்றை அழியவிடாது பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தையும் எடுத்துக்கூற வேண்டியுள்ளது.

இவ்வாறு காலதேச வர்த்தமானத்தினை கருத்தில் கொண்டு செயற்படும் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினரை மனதார வாழ்த்துவதுடன், அவர்களின் பணி தொடர எல்லாம் வல்ல வல்லிபுர மாயவரைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி உஷா சுபலிங்கம்**
பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில் மணம் வீசுபவை

பக்கம்

உள்ளே.........


- ✱ தமிழ்தாய் வணக்கம்
- ✱ பிரதேச கீதம்
- ✱ கலாசாரப்பேரவை கீதம்
- ✱ ஆசிச் செய்திகள்
- ✱ வாழ்த்துச் செய்திகள்
- ✱ பிரதேச செயலாளரின் நிர்வாக அறிக்கை

01. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் புவியியல் சார் தரைத்தோற்ற அமைவிடமும் அவற்றின் செல்வாக்கும். 01

02. வடமராட்சி வடக்குப் பிரதேச நகர அபிவிருத்தி அன்றும் இன்றும் ஒரு நோக்கு...! 07

03. வடமராட்சி வடக்கின் குடிநீர்இடர்பாடுகள் ஒரு எந்திரியலாளனின் பார்வை 28

04. வடமராட்சியை இணைத்துவைத்த வணிக வழிகள் 36

05. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் தற்கால கல்விஅபிவிருத்திப் போக்குகள் 53

06. யாழ்ப்பாணத்தின் மூளை என வர்ணிக்கப்படும் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் அச்சுக்கூடச் செயற்பாடுகள். 63

07. வடமராட்சி வடக்கு பிரதேச இலக்கியப் பாரம்பரியம் : குறிப்பான ஆளுமைகளும்.... 78

08. வடமராட்சியின் பாரம்பரிய ஆற்றுகைக் கலைகள் 95

09. பண்பாட்டு வாழ்வியலோடு கலந்த வடமராட்சி வடக்கு மண்ணின் கரகாட்டமும் இசைப்பாடல்களும் 116

10. "மழைக்கால மாமி இருள்தனிலே...." 126

11. கற்கோவளப் பிரதேசப் பெண்களின் கும்மியடித்தல் வழிபாட்டு முறையும் கும்பி அம்மன் வழிபாடும் 132

12. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஒரு பதிவு 139

13. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் கோலாச்சிய சித்த மருத்துவப் பின்னணி 158

14. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தவரின் மதிநுட்பத்தினை உலகிற்குப் பறைசாற்றிய அன்னபூரணியின் அமெரிக்கப்பயணமும் அதன் பின்னரான தாஹிற்றிப் பயணமும் 164

15. வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் பெருமைக்குரியவர்களில் சிலர் ஓர் பதிவு
    - 01. இயற்றமிழ் போதகாசிரியர் வல்லை வயித்தியலிங்கம் பிள்ளை 170
    - 02. தமிழ் சமுதாயம் போற்றும் சதாவதானி கதிரவேற்பிள்ளை 174
    - 03. சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் வாழ்வும்.கல்வி. சைவம் சார்ந்த பணியும் 181
    - 04. பாரதியை ஆகார்சித்த அருளம்பல மௌன சுவாமிகள் 187
    - 05. அறிஞர் கந்தமுருகேசனார் 190
    - 06. புலோலிக்குப் புகழ்சேர்த்த பண்டிதை ந.பத்மாசனி அம்மாள் 196
    - 07. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் பற்றிய அறிமுகக் குறிப்பு 200
    - 08. பன்மொழி வல்லுனரும் ஆய்வாளனுமாகிய தும்பளை கலாநிதி தாவீது அடிகளார் 203
    - 09. வடமராட்சி வடக்குப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த கவிஞர் யாழ்ப்பாணன் (சிவக்கொழுந்து) 205
    - 10. இருபதாம் நூற்றாண்டின் சாதனையாளர் மு.நவரத்தினசாமி 210




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள்

1. திரு.இ.த.ஜெயசீலன் (தலைவர், பிரதேச செயலாளர்)
2. திரு.இ.து.குலசிங்கம் (உபதலைவர்)
3. செல்வி.சே.செல்வசுகுணா (செயலாளர், கலாசார உத்தியோகத்தர்)
4. திரு.யோ.இருதயராசா (உபசெயலாளர்)
5. திரு.க.சின்னராஜா (பொருளாளர்)
6. திரு.ந.அனந்தராஜ்
7. திரு.பி.கிருஷ்ணானந்தன்
8. திரு.ஆ.நா.சு.திருச்செல்வம்
9. திரு.வெ.முத்துச்சாமி
10. திரு.பா.இரகுவரன்
11. திரு.க.யோகேந்திரநாதன்
12. திரு.த.சந்திரதாஸ்
13. திரு.சீ.லம்போதரன்
14. திரு.இ.ஆழ்வாப்பிள்ளை
15. திரு.இ.மதியழகன்
16. திரு.கோ.கோகிலரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள்

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு.வெ.முத்துச்சாமி, திரு.ஆ.நா.சு.திருச்செல்வம், திரு.க.சின்னராஜா (பொருளாளர்), திரு.த.ஜெயசீலன் (தலைவர் / பிரதேசசெயலாளர் , திரு.இ.து.குலசிங்கம் (உப தலைவர்), திரு.யோ.இருதயராசா (உப செயலாளர்), செல்வி சே.செல்வசுகுணா (செயலாளர் / கலாசார உத்தியோகத்தர்), திரு.ந.அனந்தராஜ்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : திரு.பா.இரகுவரன், திரு.இ.மதியழகன், திரு.க.யோகேந்திரநாதன், திரு.த.சந்திரதாஸ், திரு.பி.கிருஷ்ணானந்தன் , திரு.கோ.கோகிலரதன் , திரு.சீ.லம்போதரன் , திரு.இ.ஆழ்வாப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி வடக்கு பிரதேச செயலரது நிர்வாக அறிக்கை 2012/2013

**திரு. இ. த. ஜெயசீலன்**
பிரதேச செயலாளர், பருத்தித்துறை

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கையின் வடபுலத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் சென்னியாய் வடமராட்சி வடக்கு பிரதேசம் அமைந்துள்ளது. எமது பிரதேசமானது வடக்கே பாக்கு நீரிணையையும் கிழக்கே இந்து சமுத்திரத்தையும் தெற்கே கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளையும் மேற்கே தொண்டமானாறு கடல்நீரேரியையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது.

இது யாழ்ப்பாண மாவட்டத்தின் 4.96% நிலப்பகுதியை அதாவது **50.2** சதுர கிலோமீற்றர் பரப்பினை கொண்டமைந்துள்ளது. இப்பிரதேசத்தின் பெரும் பகுதி கடலால் சூழப்பட்டுள்ளதால் இது எழில்மிகு நகரமாகத் திகழ்கின்றது. இதன் நகர அபிவிருத்தியானது

1. பருத்தித்துறை நகர சபை
2. பருத்தித்துறை பிரதேச சபை
3. வல்வெட்டித்துறை நகரசபை

என மூன்று உள்ளூராட்சி மன்றங்களை கொண்டு நிர்வகிக்கப்பட்டிருப்பதுடன் எமது பிரதேசமானது மந்திகை ஆதார வைத்தியசாலை, ஊறணி மாவட்ட வைத்தியசாலை என இரு வைத்திய சாலைகளையும், மாவட்ட நீதி மன்றம், நீதவான் நீதிமன்றம் என இரு நீதிமன்றங்களையும், ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம், வல்வை மகளிர் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி போன்ற முன்னணிப் பாடசாலைகளையும், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம், கால்நடை வைத்திய சாலை, விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி சபை, நீர்வழங்கல் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, இரண்டு பிரதான தபாலகங்கள் , இரண்டு பொலிஸ் நிலையங்கள், மதுவரித் திணைக்களம் போன்றவற்றுடன் பருத்தித்துறை, புலோலி ப.நோ.கூ.சங்கங்களையும், இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, சணச அபிவிருத்தி வங்கி போன்ற வங்கிகளையும் கொண்டமைந்துள்ளது. மேலும் உள்ளூர் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுப்பதற்குமான வகையில் திக்கம் வடிசாலை, கற்கோவளம் ஐஸ்கட்டி தொழிற்சாலை, வல்லிபுரம் பதநீர்ச் சங்கம் போன்றன உருவாக்கப்பட்டு சிறந்த சேவைகள் வழங்கப்பட்டுவருகின்றன. இங்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆலயங்களாக தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயமும், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயமும் விளங்குவதனால் இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களின் மஹோற்சவங்கள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் மேற்பார்வையில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன

எமது பிரதேசமானது 35 கிராம அலுவலர் பிரிவுகளையும் 132 கிராமங்களையும் கொண்டுள்ளது. இப் பிரதேசத்தின் பிரதானமான தொழிலாக மீன் பிடித்தொழில் காணப்படுவதுடன் பிரதான பயிர்ச்செய்கைகளாக வெங்காயம், மிளகாய், புகையிலை போன்றனவும் காணப்படுகின்றன.

இப் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறை, உடுப்பிட்டி என இரு தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு பருத்தித்துறை "ஏ" தொகுதியில் 27 வாக்கெடுப்பு நிலையங்களும், உடுப்பிட்டித் தொகுதியில் 12 வாக்கெடுப்பு நிலையங்களுமாக மொத்தம் 39 வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளன.

இப்பிரதேசமானது யாழ்ப்பாணத்திலிருந்து 32 கிலோமீற்றர் தூரத்திலும் கொழும்பிலிருந்து 386 கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. இப்பிரிவின் பிரதான பாதைகளாக யாழ் நகரிலிருந்து நெல்லியடி ஊடாக பருத்தித்துறைக்கும் அல்லது யாழ் நகரிலிருந்து தொண்டமானாறு வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறைக்கும், பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக சாவகச்சேரி, கொடிகாமம் ஊடாக தென்பகுதிக்கான பிரதான பாதைகளும் அமைந்துள்ளது. அத்துடன் பருத்தித்துறை மருதங்கேணி ஊடான போக்குவரத்தும் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கிராம அலுவலர் பிரிவுகளும் சனத்தொகையும்**

இப்பிரிவில் 35 கிராம அலுவலர் பிரிவுகளுள் 132 கிராமங்கள் காணப்படுகின்றன. 31.12.2013 இல் 14331 குடும்பங்களில் 47182 அங்கத்தவர்கள் வசித்து வந்துள்ளனர். இக்குடும்பங்களில் நிரந்தரமாக வதியும் குடும்பங்களும் உயர் பாதுகாப்பு வலயமான வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துவந்து எமது பிரதேசத்தில் வதியும் குடும்பங்களும் உள்ளடங்குகின்றனர். பொலிகண்டி மேற்கு நலன்புரி நிலையத்தில் 44 குடும்பங்களில் 169 அங்கத்தவர்களும், பொலிகண்டி கிழக்கு நலன்புரி நிலையத்தில் 95 குடும்பங்களில் 37 அங்கத்தவர்களும், அல்வாய் வடகிழக்கு நலன்புரி நிலையத்தில் 11 குடும்பங்களில் 39 அங்கத்தவர்களும், அல்வாய் வடமத்தி நலன்புரி நிலையத்தில் 10 குடும்பங்களில் 42 அங்கத்தவர்களும், வியாபாரிமூலை நலன்புரி நிலையத்தில் 58 குடும்பங்களில் 168 அங்கத்தவர்களும் வதிகின்றனர். மேலும் இடம்பெயர்ந்தவர்களில் 630 குடும்பங்களைச் சேர்ந்த 2135 பேர் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசிக்கின்றனர்.

**பிரதேச அபிவிருத்திக்குழு**

பிரதேச அபிவிருத்திக்குழுவானது பிரதேசத்தின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பங்குபெறும் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவார்கள். இக்குழுவின் தலைவராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார். இக்குழுக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி தொடர்பாகவும், பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், அவற்றினை முன்னெடுப்பதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும். மேலும் எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மொழிவுகள் இக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**பிரதேச செயலகத்தின் சேவை வழங்கும் கிளைகள்**

இப் பிரதேச செயலகத்தினால் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு தொடர்புடைய கிளைகளினூடாக திருப்திகரமான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. தாபனக் கிளை / நிர்வாகக்கிளை
2. நிதிக் கிளை
3. திட்டமிடல் கிளை
4. சமூகசேவை கிளை
5. பதிவாளர் கிளை
6. பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் கிளை
7. காணிக் கிளை
8. சமுர்த்தி கிளை
9. தொழிற் திணைக்களப் பிரிவு
10. கிராம அபிவிருத்திப் பிரிவு
11. கலாசாரப் பிரிவு
12. விளையாட்டுப் பிரிவு

## நிர்வாகக் கிளை / தாபனக் கிளை

இக்கிளையினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i. தேசிய அடையாள அட்டை விநியோகம்
ii. கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவ விநியோகம்
iii. தேருநர் பதிவேடு விநியோகம்
iv. தினவரவு
v. ஆளணி, உத்தியோகத்தரின் தாபன நடவடிக்கைகள்
vi. மகாபொல புலமைப்பரிசில் / உதவிப்பண விண்ணப்ப சிபாரிசு
vii. குடும்ப அட்டை விநியோகம்
viii. நற்சான்றிதழ் மேலொப்பமிடல்

## ஆளணி விபரம் - 2013

*பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலர்கள் விபரம்*

| | | |
|---|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | - | 05 |
| சமுர்த்தி முகாமையாளர்கள் | - | 03 |
| வெளிக்கள உத்தியோகத்தர்கள் / அபிவிருத்தி உதவியாளர் | - | 105 |
| சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | - | 57 |
| கிராம அலுவலர்கள் | - | 19 |
| சாரதி | - | 02 |
| அலுவலகப்பணியாளர்கள் | - | 07 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய அடையாள அட்டை விநியோகம்**

| ஆண்டு | மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை | | | கிடைக்கப்பெற்ற தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | | | ஒருநாள் சேவைக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | புதியது, தொலைந்தது | திருத்தம் | மொத்தம் | புதியது, தொலைந்தது | திருத்தம் | மொத்தம் | |
| *2012* | *572* | *844* | *1416* | *497* | *747* | *1244* | *238* |
| *2013* | *508* | *767* | *1275* | *317* | *444* | *761* | *218* |

**மகாபொல புலமைப்பரிசில் / உதவிப்பண விண்ணப்ப சிபாரிசு**

உயர்கல்வி மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் / உதவிப்பண விண்ணப்பங்கள் எம்மால் சிபாரிசு செய்யப்பட்டு உரிய பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

| ஆண்டு | சிபாரிசு செய்யப்பட்ட Mahapola/ Bursary விண்ணப்பங்களின் எண்ணிக்கை | சிபாரிசு செய்யப்பட்ட புலமைப்பரிசில், உயர்கற்கைநெறி உதவிப்பண விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| *2012* | *185* | *454* |
| *2013* | *243* | *127* |

**உலர் உணவு அட்டை விநியோகம்**

*2012, 2013* ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட குடும்ப பதிவு அட்டைகளின் விபரம் வருமாறு.

| ஆண்டு | குடும்ப பதிவு அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|
| *2012* | *705* |
| *2013* | *368* |

**நிதிக்கிளை**

இக்கிளையில் கணக்குப்பிரிவு, ஓய்வூதியப்பிரிவு ,மோட்டார் போக்குவரத்து பிரிவு என்பன செயற்படுகின்றன. கணக்குப்பிரிவின் மூலம் இச் செயலகத்தின் சகல நிதிப் பெறுவனவு, கொடுப்பனவு, நடவடிக்கைகளும் ஓய்வூதியப்பிரிவின் மூலம் உள்நாட்டில், வெளிநாட்டில் வதியும், ஓய்வுதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவும், மோட்டார் போக்குவரத்துப்பிரிவின் மூலம் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரமும், வாகன உடமை மாற்றம், சம்மந்தப்பட்ட கடமைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் இக்கிளையின் மூலம் வியாபார பெயர்ப்பதிவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. *2012*இல் *604* , *2013*இல் *44* வியாபார பெயர்ப் பதிவுகளும் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதிய விபரம்

| இல | விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | 2012 | 2013 |
| 1 | குடிசார் | 844 | 850 |
| 2 | படையினர் | 12 | 11 |
| 3 | ஆசிரியர் | 1 | 2 |
| 4 | விதவைகள் | 426 | 426 |
| 5 | அனாதைகள் | 6 | 6 |
| 6 | மாற்றுவலுவுடையோர் | 18 | 17 |
| 7 | விதவைகள் - படையினர் | 1 | 2 |
| 8 | விதவைகள் - ஆசிரியர் | 9 | 9 |
| 9 | உள்ளூராட்சி | 34 | 33 |
| | மொத்தம் | 1351 | 1356 |

மோட்டார் வாகன வரி அனுமதிப்பத்திர விபரம்

| No | Particulars | No of Vehicle | |
|---|---|---|---|
| | | 2012 | 2013 |
| | Revenue License - Private vehicle | | |
| 1 | Dual Purpose Vehicle | 286 | 256 |
| 2 | Land Vehicle | 255 | 205 |
| 3 | Lorry | 263 | 176 |
| 4 | Land Vehicle Trailer | 85 | 73 |
| 5 | Motor Car | 153 | 126 |
| 6 | Motor Cycle | 6889 | 5965 |
| 7 | Motor Tricycle | 747 | 603 |
| 8 | Omnibus (RP) | 60 | 42 |
| 9 | Private Coach | 20 | 19 |
| 10 | Revenue License - Public vehicle | 43 | 23 |
| 11 | Revenue License - Cooperation vehicles (SLTB) | 51 | 27 |
| 12 | **Total Revenue License** | 8852 | 7515 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டமிடல் கிளை

இக்கிளையினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுத்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**வாழ்வு எழுச்சித்திட்டம் / திவிநெகும திட்டம்**

| இல | வேலைத்திட்ட விபரம் | விநியோகிக்கப்பட்ட ஆண்டு | |
|---|---|---|---|
| | | 2012 | 2013 |
| 1 | விதைப் பொதிகள் | 14550 | |
| 2 | உரப்பொதிகள் | 3500 | |
| 3 | பழமரக்கன்றுகள் - மாதுளை | 2450 | 2380 |
| 4 | முருங்கை | 3850 | |
| 5 | தென்னங்கன்று | 3080 | |
| 6 | கருவாடு பதனிடும் தளபாடம் | 32 | |
| 7 | ஒரு மாத கோழிக்குஞ்சு (114 பயனாளிகளுக்கு தலா 10 வீதம்) | 1140 | |
| 8 | கோழிக்கூடுகள் | 114 | |

**கடும் பாதிப்புற்றோர் கொடுப்பனவு**

| விபரம் | 2012 | 2013 |
|---|---|---|
| அனுப்பப்பட்ட கோவைகள் | 21 | 15 |
| கொடுப்பனவு செய்யப்பட்டவை | 25 | 45 |

**யாழ் - பருத்தித்துறை வீதி அகலிப்பு**

2012, 2013 இல் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் மடத்தடியிலிருந்து பருத்தித்துறை துறைமுகம் வரையிலான வீதி அகலிப்பு மேற்கொள்ளப்பட்டன.

**5000 ஆரம்ப பாடசாலைகள் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2012/2013**

இத்திட்டத்தின் கீழ் ஏழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தலா ரூபா 500,000 பெறுமதியான புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்
2. யா/புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
3. யா/தம்பசிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை
4. யா/திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்
5. யா/வட இந்து ஆரம்ப பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. யா/துன்னாலை வடக்கு மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை
7. யா/தட்டாதெரு மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

**பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு**

2013 இல் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிடைக்கப்பெற்ற தொகை ரூபா 30,99,344.00 முன்பள்ளிகள், பாடசாலைகள், சமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டது.

**சமூக சேவைக்கிளை**

இக்கிளையினால் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கல், சுயதொழில் உதவித் திட்டங்கள், தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுகள், சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம், வலிந்துதவு சமூக சேவை நிறுவனங்களைப் பதிவு செய்தல், முதியோர் சேவைகள், விசேட தேவைக்குரியோர் சேவைகள், மற்றும் இயற்கை அனர்த்த சேவைகள் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

| இல | விபரம் | 2013 | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
| 1 | பொதுசன மாதாந்த உதவிப்பணம் | 1956 | 6,974,900.00 |
| 2 | காச நோயாளர் கொடுப்பனவு | 3 | 13,550.00 |
| 3 | தொழு நோயாளர் கொடுப்பனவு | 1 | 4,800.00 |
| 4 | புற்று நோயாளர் கொடுப்பனவு | 65 | 400,650.00 |
| 5 | தற்செயல் நிவாரணம் | 9 | 170,000.00 |

மேலும் சுய தொழில் கொடுப்பனவு 1ம், 2ம் கட்டங்களாக ரூ.352,500.00 வழங்கப்பட்டது. 3 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளும், ஒரு பயனாளிக்கு சக்கர நாற்காலிகளும், ஒரு பயனாளிக்கு முச்சக்கர வண்டியும், ஒரு பயனாளிக்கு அமைச்சு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது.

**இக்கிளையினால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைத்திட்டங்கள்**

1. 2013 ம் ஆண்டு 783 முதியவர்களுக்கு ரூ.1000 வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்பட்டது.
2. சர்வதேச முதியோர், மாற்றாற்றலுடையோர் தினவிழா 15.10.2013 அன்று நடைபெற்றது.
3. 18 பயனாளிகளுக்கு வீடு சேதமடைந்ததற்காக தகரம், மரம் வழங்கப்பட்டது.
4. 100 பயனாளிகளுக்கு ரூ.4500 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது.
5. உலர் உணவு நிவாரணம் 526 பேருக்கு ரூ. 333235.00 பெறுமதிக்கு வழங்கப்பட்டது.
6. சமைத்த உணவு ரூ.141300.00 இற்கு வழங்கப்பட்டது.
7. ஒருவருக்கு இறப்புப் பணிக் கொடையாக ரூ.15000.00 வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்**

❖ DRC நிறுவன உதவியுடன் 166 பயனாளிகளுக்கு ரூ.3500 பெறுமதியான பாடசாலை உபகரணப் பொதி, 4 பயனாளிகளுக்கு ரூ 6000.00 பெறுமதியான சத்துணவுப் பொதி மருத்துவ உதவி தேவைப்பட்டோருக்கு போக்குவரத்துவசதி வழங்கப்பட்டது.

❖ JAIPUR நிறுவன உதவியுடன் மாற்றாற்றலுடையோர் 3 பேருக்கு சக்கர நாற்காலி களும், கை ஊன்றுகோல் 3 பேருக்கும், முச்சக்கரவண்டி பயன்படுத்தும் 5 பேருக்கு ரூ.5000 வீதம் வழங்கப்பட்டது.

❖ C.B.R நிறுவன உதவியுடன் மாற்றாற்றலுடையோர் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டங்கள், சுய உதவிக்குழுக் கூட்டங்கள், தன்னார்வ தொண்டர்களுக்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

❖ சமூக பராமரிப்பு நிலைய வசதி மேம்படுத்தலுக்காக சமூக சேவைகள் அமைச்சினால் ரூ.49,104.00 கிடைக்கப்பெற்றது.

❖ UNICEF நிறுவன உதவியுடன் 12 பயனாளிகளுக்கு மொத்தமாக ரூ 442,174.00 வழங்கப்பட்டது.

**மேலதிக மாவட்ட பதிவாளர் கிளை**

எமது செயலக பிரிவில் வல்வெட்டித்துறை, கட்டைவேலி, பருத்தித்துறை ஆகிய பதிவாளர் பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன. பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் உரிய பதிவாளர்கள் மூ லம் மேற்கொள்ளப்பட்டு உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

| இல | விபரம் | தொகை | |
|---|---|---|---|
| | | 2012 | 2013 |
| 1 | பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் | 792 | 1404 |
| 2 | பதிவு செய்யப்பட்ட இறப்புச் சான்றிதழ்கள் | 323 | 323 |
| 3 | பதிவு செய்யப்பட்ட விவாகச் சான்றிதழ்கள் | 358 | 301 |
| 4 | பிறப்பு, இறப்பு சான்றிதழ்களில் மேற்கொள்ளப் பட்ட திருத்தங்கள் | 289 | 317 |
| 5 | விவாகச் சான்றிதழ்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் | 4 | 3 |
| 6 | காலங்கடந்த பிறப்பு,இறப்பு பதிவுகள் | 74 | 134 |
| 7 | பதிவு செய்யப்பட்ட தேவாலயத் திருமணப் பதிவுகள் | 6 | 23 |
| 8 | காணமற்போன நபர்களது இறப்பினைப் பதிதல் | 7 | 5 |
| 9 | வழங்கப்பட்ட பிறப்பு இறப்பு விவாகச் சான்றிதழ்கள் | 19503 | 26269 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி கிளை

### பெண்கள் அபிவிருத்திப் பிரிவு

எமது பிரதேச செயலகத்தின் கீழ் 12 மகளிர்விவகாரக் குழுக்களும் 01 விதவைகளுக்கான குழுவும் 01 பிரதேச வலையமண்டல அமைப்பும் இயங்கி வருகின்றது. மேலும் இக்குழு அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் வட்டியில்லாக் கடனுதவியையும் வழங்கப்பட்டு வருகின்றது. எமது பிரிவில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை 2731, விதவைகளின் எண்ணிக்கை 2330 ஆகும்

### மகளிர்தின விழா

2013ம் ஆண்டு குடும்பத்தை பாதுகாப்பவளை மேன்மைப் படுத்துவோம் என்ற தலைப்பில் இவ்விழா நடாத்தப்பட்டது. 2012ம் ஆண்டு எமது பிரதேச செயலர் திரு.இ.த.ஜெயசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் சர்வதேச மகளிர் தினத்தன்று கௌரவிப்பைப் பெற்ற மதிப்பிற்குரிய யாழ் மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

2012, 2013 ம் ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை வாரத்தில் விழிப்புணர்வு நாடகம், தெருக்கூத்து என்பன நடாத்தப்பட்டன. எமது கிளையால் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக அவர்களுக்கான சட்ட ஆலோசனைகளும் இலவச சட்ட உதவிகளும் வழங்குவதற்கு வழிகாட்டப்பட்டு வருகின்றன. மேலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உளநல சேவைப்பிரிவில் இயங்கும் GBV Desk ல் வரும் முறைப்பாடுகளும் கையாளப்பட்டு வருகின்றன.

### முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு

முன்பள்ளிகளில் கற்கும் சிறார்களுக்கு ஒரு கிளாஸ் பசுப்பால் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 2012 ம் ஆண்டில் சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் வேலைத்திட்டம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சிப்பட்டறை, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி வேலைத்திட்ட கருத்தரங்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி வேலைத்திட்ட கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டது

2013 ம் ஆண்டில் பொலிகண்டி தெற்கு பாரதி முன்பள்ளிக்கு ரூ 60.000 செலவில் சீசோ (Seasow), சறுக்கீஷ் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 2013 இல் பெற்றோர், ஆசிரியருக்கான முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி வேலைத்திட்ட கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் மேம்பாட்டுப் பிரிவு**

எமது பிரதேச செயலகத்தின் கீழ் 24 சிறுவர் கழகங்களும், 28 சிறுவர் பாதுகாப்புக் குழுக்களும் இயங்கிவருகின்றன. தாய் தந்தையற்ற மாணவர்களுக்கான கொடுப்பனவு 42 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ரூபா 1000/- Asia Capital நிறுவனத்தின் உதவியுடனும், 8 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ரூபா 1500/- படி ரூபா 12,000/- சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் உதவியுடனும் வழங்கப்பட்டு வருகின்றன.

எமது கிளையால் இளவயதினர் மத்தியில் ஏற்படும் பருவ மாற்றங்களும் அவர்களின் சுய அபிவிருத்தியும், வளர்ந்து வரும் தொழினுட்பமும் சிறுவர்களும் போன்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் கிராமமட்ட பாதுகாப்புக் குழுவை வலுப்படுத்தலுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடசாலை இடைவிலகிய மாணவர்களை பாடசாலைக்கு மீள் இணைத்தல், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத பிள்ளைகளுக்கு அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டல் போன்ற பல சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

15.10.2013 அன்று "குடும்பம் உங்களைப் பாதுகாக்கும் என்ற தொனிப் பொருளில் சிறுவர்தின விழா இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கவிதை, கட்டுரை போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டது.

**உளவளத் துணைப்பிரிவு**

மன அழுத்தத்தினை முகாமை செய்தல் தொடர்பான உளவளத்துணை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்து அனுப்பி வைக்கப்படும் திருமணமாகாத கர்ப்பம், தற்கொலை முயற்சி, விரும்பத்தகாத கர்ப்பம், இளவயது திருமணம் போன்றவற்றிற்கு உளவளத்துணை அளித்தல். நீதிமன்றம், மத்தியஸ்தர்சபைகளிலிருந்து இங்கு அனுப்பப்படும் குடும்ப பிரச்சினைகளிற்கு தீர்வும் ஆலோசனைகளும் வழங்கல்

தற்கொலை முயற்சியைத் தடுத்தல், குறைத்தல் தொடர்பாகவும் தாழ்வு மனப்பான்மையை போக்கல், சிறந்த தலைமைத்துவம், நேர்மய சிந்தனை (positive thinking), உளஆரோக்கியம் போன்ற தலைப்புக்களிலும் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டமை.

**காணிக் கிளை**

அரச காணி, காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல், தொடர்பான கடமைகள் இக் கிளையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | வேலைத் திட்டங்கள் | எண்ணிக்கை 2012 | எண்ணிக்கை 2013 |
|---|---|---|---|
| 1 | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் | 28 | 2 |
| 2 | வழங்கப்பட்ட, தயாரிக்கப்பட்ட அளிப்புக்கள் | 5,25 | 22 |
| 3 | அளிப்பு உரிமை மாற்றம் | 9 | 9 |
| 4 | அளிப்பு முதல் உரிமை மாற்றம் | 0 | 6 |
| 5 | குத்தகைக்கு முன் அனுமதி பெறப்பட்டவை | 1 | - |
| 6 | பாரதீனப்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டவை | - | 2 |
| 7 | திணைக்களக் கையளிப்பிற்கு சிபார்சு செய்யப்பட்டவை | - | 10 |
| 8 | காணி, கரைவலைப்பாடு தொடர்பான அறவீடு | 510/= | |
| 9 | காணியற்றோர் படிவம் விநியோகிக்கப்பட்டவை | 1500 | 1000 |
| 10 | காணியற்றோர் படிவம் பெற்றுக்கொள்ளப்பட்டவை | 912 | 600 |
| 11 | நிலஅளவை விண்ணப்பம் அனுப்பியது | 4 | 9 |
| 12 | நிலஅளவை வரைபடம் கிடைத்தது | 3 | 6 |
| 13 | 2013/01 சுற்று நிருபத்திற்கமைய விநியோகிக்கப்பட்ட இணைப்பு I படிவங்கள் | - | 1800 |
| 14 | 2013/01 சுற்று நிருபத்திற்கமைய பெற்றுக்கொள்ளப்பட்ட இணைப்பு I படிவங்கள் | - | 571 |
| 15 | 2013/01 சுற்று நிருபத்திற்கமைய பதிவு செய்யப்பட்ட இணைப்பு II படிவங்கள் | - | 513 |
| 16 | 2013/01 சுற்று நிருபத்திற்கமைய பதிவு செய்யப்பட்ட இணைப்பு III படிவங்கள் | - | 58 |
| 17 | 2013/01 சுற்று நிருபம் தொடர்பாக நடாத்தப்பட்ட பகுதிநாட் கூட்டங்கள்<br>காணி சுவீகரிப்பு நிறைவு செய்யப்பட்ட கோவை | - | 07<br>01 |
| 18 | மரம் தறித்தல் - பனை, ஏனையவை | 1282 | 1306 |
| 19 | வழி அனுமதி - விறகு, மரம், தளபாடம், மணல், கால்நடை | 134 | 151 |
| 20 | தனியார்மரக்காலை பதிதலுக்கு சிபார்சு செய்தல் | 6 | 1 |
| 21 | பிரதேச காணிப்பயன்பாட்டு குழுக்கூட்டம் | 3 | 2 |
| 22 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பான பாடசாலை மட்ட, கிராம மட்ட விழிப்புணர்வுக்கூட்டம் | 2,20 GN | 1 |
| 23 | 5ஆண்டு அபிவிருத்தி திட்டம் தொடர்பான தகவல் சேகரிப்பு | 35 GN | |
| 24 | இடம் சார் தகவல்களை வரைபடமாக்கல் தொடர்பான தகவல் சேகரிப்பு | 35 GN | |
| 25 | இடம்சார் தகவல்களை Arc GIS மூலம் கணனிமயப்படுத்தி வரைபடமாக்கல் | | 35 GN |
| 26 | "துண்டு நிலமட்டத்தில் காணிபயன்பாட்டுத் திட்டமிடல் மாதிரி" தொடர்பான செயற்றிட்டம் (அலுவலகத் தோட்டம்) | | 1 |
| 27 | Arc GISமூலம் தொடர்பானவரைபடம் தயாரித்தல் (பிரதேச சபை பருத்தித்துறை, நகரசபை பருத்தித்துறை, நகரசபை வல்வெட்டித்துறை | | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

## சமுர்த்திக் கிளை

❖ சமுர்த்தி முத்திரை தொடர்பான விபரங்கள்

| முத்திரை பெறுமதி | எண்ணிக்கை(2012 /2013) |
|---|---|
| 750 | 3458 |
| 1500 | 202 |
| மொத்தம் | 3660 |

❖ சமூகப்பாதுகாப்பு உதவிகள் பற்றிய விபரங்கள்

| ஆண்டு | திருமணம் | எண் | மகப்பேறு | எண் | மரணம் | எண் | சிகிச்சை | எண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 180000.00 | 60 | 30000.00 | 06 | 430000.00 | 43 | 720000.00 | 21 |
| 2013 | 260000.00 | 56 | 150000.00 | 30 | 370000.00 | 37 | 85400.00 | 25 |

❖ சிப்தொற புலமைப்பரிசில் திட்டம் பற்றிய விபரங்கள்

| ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 2012 | 23 | 368500.00 |
| 2013 | 43 | 432000.00 |

❖ புகைத்தல் எதிர்ப்பு கொடிவார நிதி சேகரித்தல் பற்றிய விபரங்கள்

| ஆண்டு | வல்வெட்டித்துறை வலயம் | பருத்தித்துறை வலயம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2012 | 653941.00 | 620420.00 | 1274361.00 |
| 2013 | 210400.00 | 236016.00 | 446416.00 |

❖ சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் பற்றிய விபரங்கள்

❖ சிசுதிரிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்

| ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 2013 | 103 | 925200.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **மேலதிக சேவைகள்**

❖ திரிய பியச வீட்டுத்திட்டம்

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| *2012* | *11* | *800000.00* |
| *2013* | *04* | *160000.00* |

❖ மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டி வழங்கல்

| ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| *2013* | *13* | *130000.00* |

## தொழிற்றுறைத் திணைக்களப் பிரிவு

எமது பிரதேச செயலக பிரிவில் பாரம்பரிய கைத்தொழில் நிறுவனங்களாக, எமது திணைக்களத்தின் கீழ் இயங்குபவை இரு நெசவு நிலையங்களாகும்.

1. துன்னாலை வடக்கு நெசவு நிலையம்
2. நெல்லண்டை - தும்பளை கிழக்கு நெசவு நிலையம்

இந்நெசவு நிலையங்களில் திணைக்களத்தின் நிதியீட்டத்தினூடாக 6 மாத கால பயிற்சிநெறிகள் வழங்கப்படுகின்றது. பன்னவேலை, 'பற்றிக்' உற்பத்தி, தோல் உற்பத்தி, உணவு உற்பத்தி போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நெசவு தொடர்பாக வெளி மாவட்டங்களில் நடைபெறும் பயிற்சிகள், கண்காட்சிகளில் பங்குபெறச் செய்தல். மேலும், நெசவுப்பயிற்சி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்துதல், மூலவளத் திரட்டு தயாரித்தல், கைத்தொழிலாளர்களுக்கு சுய தொழில்கடன்வசதி, சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பல சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி திணைக்களப் பிரிவு

தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்துக்குரிய விதாத வள நிலையம் பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் 01.06.2008 முதல் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகின்றது. விதாத வளநிலையத்தில் பல்வேறு பயிற்சிநெறிகள் நடைபெற்று வருகின்றன.

| இல | பயிற்சிநெறிகள் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணனி பயிற்சிநெறி | 250 |
| 2 | பேக்கரி உற்பத்தி பொருட்கள் தயாரித்தல் | 20 |
| 3 | பால் உற்பத்தி பொருட்கள் தயாரித்தல் | 20 |
| 4 | கைத்தொலைபேசி திருத்துதல் | 10 |
| 5 | அலங்கார மெழுகுதிரி தயாரித்தல் | 25 |
| 6 | பழங்கள், மரக்கறி கொண்டு உணவு மேசை அலங்கரித்தல் | 25 |
| 7 | திரவ கைகழுவும் சவர்க்காரம் தயாரித்தல் | 30 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி பிரிவு**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் தொழினுட்பப் பாடத் தெரிவும், தொழினுட்ப தகைமை சான்றிதழ் விளக்கமும், தொழிற்கல்வியை வழங்கும் நிறுவனங்கள் அதன் செயற்பாடும், தொழிலின் வகைகள் பற்றிய வழிகாட்டல் கருத்தரங்குகள் எமது செயலக பிரிவுக்குட்பட்ட 10 பாடசாலைகளில் நடாத்தப்பட்டது. தொழிற்பயிற்சி அதிகார சபையினால் குளிரூட்டல் பயிற்சிநெறி கருத்தரங்கு பருத்தித்துறை திக்கம் பிரிவில் நடைபெற்றது.

திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 குடிசைக் கைத்தொழில் பயனாளிகளுக்கு 18.03.2014 அன்று உபகரணம் வழங்கப்பட்டது. சுயதொழில் வழிகாட்டல், தொழினுட்ப தகைமை சான்றிதழ் விளக்கமும், தொழிற்கல்வியை வழங்கும் நிறுவனங்கள் அதன் செயற்பாடும், தொழிலின் வகைகள் பற்றிய வழிகாட்டல் கருத்தரங்குகள் தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம், பொலிகண்டி விதாதா வளநிலையம் என்பவற்றில் நடாத்தப்பட்டது.

**மனித வளஅபிவிருத்தி பிரிவு**

இக்கிளையின் மூலம் வழங்கப்பட்ட வேலை விபரம் வருமாறு.

| இல | வேலை விபரம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொழிற்சந்தை | 338 |
| 2 | தொழில் வழிகாட்டல் சேவை | 49 |
| 3 | **வேலை வாய்ப்பு** | |
| | பாதுகாப்பு சேவை | 9 |
| | காப்புறுதி சேவை | 3 |
| | விற்பனையாளர் | 3 |
| | உற்பத்தி சார்ந்தது | 2 |
| 4 | சுயதொழில் ஊக்குவித்தல் நிகழ்ச்சி - 1 | 35 |
| 5 | பாடசாலை நிகழ்ச்சிகள் - 9 | 251 |

**கிராம அபிவிருத்திப் பிரிவு**

கிராம அபிவிருத்திக் கிளையானது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பனவற்றை கிராம மட்டத்தில் உருவாக்கி பதிவு செய்தல், சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு மிகக்குறைந்த வீத வட்டியில் சுழற்சி முறைக்கடன் வழங்கல் போன்ற சேவைகளை வழங்கப்பட்டு வருகின்றது.

❖ கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் 17 கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 40 மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 1 சமாசமும் 3 புனரமைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு சிறப்பாக இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சுழற்சி முறைக்கடன்

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுழற்சிமுறைக்கடன் சுயதொழில், வியாபாரம், கடற்றொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, உணவு பதனிடல், தையல் நோக்கங்களுக்காக வழங்கப் படுகிறது. இதற்கு நிதி மூல நிறுவனங்கள் Necdep, UNHCR, Gamaneguma, Neiap, Sewalanka, Hudec

❖ 2012 ம் ஆண்டு 604 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக்கடன் ரூபா. 26,713,000.00

❖ 2013 ம் ஆண்டு 536 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக்கடன் ரூபா. 22,115,000.00

❖ பயிற்சிகள்

2012ம், 2013ம் ஆண்டுகளில் ஆடை வடிவமைப்பும், கைவேலைக்குமான 1ம் கட்டப்பயிற்சிநெறிக்கு 20 மாணவர்களும் மனையியலும் அழகுக்கலைக்குமான 2ம் கட்டப்பயிற்சிநெறிக்கு 20 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது.

❖ கண்காட்சிகள்

2011,2012 ம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்களினது கண்காட்சிகள் முறையே தையல் பயிற்சி நிலையத்திலும் கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய கட்டட வளாகத்திலும் சிறப்புற நடைபெற்றது. இதில் பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர், பணிப்பாளர், மாவட்ட உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்ததுடன் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

❖ IOM நிறுவனத்தின் உதவியுடன் உற்பத்தி நிலையக் கட்டடமும், நெனசல திட்டத்தின்கீழ் கொட்டடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

❖ கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களுக்கென 4 தையல் இயந்திரங்கள் 2013 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது.

## கலாசாரப் பிரிவு

பிரதேச கலைஞர்கள் கலையார்வலர்களை ஒருங்கிணைத்து 2000ம் ஆண்டிலிருந்து பிரதேச கலாசாரப் பேரவை இயங்கி வருவதுடன் இக்கலாசாரப் பேரவையினூடாக கீழ்வரும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

1. பிரதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் "தரிசனம்" என்னும் சிறுகதைத் தொகுதி 28.01.2012 வெளியீடு செய்யப்பட்டது. இந்நிகழ்வுக்கு கரவெட்டி பிரதேச செயலாளர் திரு.ஆர்.வரதீஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார். இதில் இப் பிரதேசத்தினைச் சேர்ந்த 17 எழுத்தாளர்களின் சிறுகதைகள் பிரசுரிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிரதேசத்தின் குறும்படம் எடுத்தல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் குறும்பட விமர்சன நிகழ்வு இடம்பெற்றது. அத்துடன் பாடசாலை மாணவர்களின் விவாதிக்கும் திறனை விருத்தி செய்வதற்காக விவாத அரங்கப் போட்டி நடாத்தப்பட்டு வெற்றிக்கேடயமும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

3. பிரதேச பண்பாட்டுப் பெருவிழா - 2012 13.10.2012 ம் திகதி அஞ்சலியக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் அவர்கள் கலந்து கொண்டதுடன் இப் பிரதேசத்தின் மூத்த கலைஞர்கள் ஐவர் கலாசாரப் பேரவையின் உயரிய விருதான "கலைப்பரிதி" - 2012 விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் விபரம் கீழ்வருமாறு:

அ. திரு.ஆறன் கந்தையா - இலக்கியம்
ஆ. திரு.மாணிக்கவாசகம் இரத்தின சோதி - பாரம்பரிய உடற்பயிற்சிக் கலை
இ. காத்தாமுத்து அமிர்தலிங்கம் - தோல் வாத்தியம்
ஈ. வைரமுத்து விஜயகுமார் - மரச்சிற்பம்
உ. கந்தவனம் இளையதம்பி - பாரம்பரிய நாடகம்

4. நாடகப் போட்டியும் நாடக விழாவும் (27.10.2013)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ரூபா 100,000 நிதியில் மேற்படி போட்டியும் விழாவும் புலோலி பசுபதீஸ்வரர் ஆலய பர்வதபத்தினி மண்டபத்தில் 27.10.2013 நடாத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு பேராசிரியர் ஞானகுமரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு வெற்றிக் கேடயம், சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டது. அத்துடன் தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றியீட்டிய, பாடசாலை மட்டப் போட்டியாளர்கள் மற்றும் திறந்த போட்டியாளர் களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது

இவ்விழாவின்போது இப்பிரதேசத்தின் மூத்த கலைஞர்கள் எழுவருக்கு கலாசாரப் பேரவையின் உயரிய விருதான "கலைப்பரிதி" -2013ஆம் ஆண்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் மேலும் இருவருக்கு சிறந்த அறிவிப்பாளர் விருதும், சிறந்த குருதிக் கொடையாளி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

"கலைப்பரிதி" - 2013 விருது

1. திரு. மாரிமுத்து. ஜெயானந்த ஆச்சாரி-வார்ப்புக்கலை
2. திரு. சி. சின்னராஜா - இலக்கியம்
3. திரு. யோ. இருதயராசா - நவீன நாடகம்
4. திரு. சி. தில்லைநாதன் - பத்திரிகை
5. திரு. அ. சித்திரவேலாயுதம் -மரபு ரீதியான நாடகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அறிவிப்பாளர் விருது
திருமதி கவிதா தவேஸ்வரன்

சிறந்த குருதிக் கொடையாளி விருது
திரு. துரைச்சாமி சக்திவேல்

5. கலைஞர் ஓய்வூதியம் - திரு வைரவன் இராசையா அவர்களுக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மாதாந்தம் ருபா 2000/= வழங்கப்பட்டு வருகின்றது.

6. வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் போதைப் பொருள் மதுஒழிப்பு வார விழிப்புணர்வுப் பேரணி நடாத்தப்பட்டது. பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி பொது அமைப்புக்கள்,அரச நிறுவனங்கள், அலுவலக உத்தியோகத் தர்கள் ஒத்துழைப்புடன் பருத்தித்துறை நடராஜர் கலையரங்கினைச் சென்றடைந்தது. இங்கு விழிப்புணர்வு நாடகங்கள் மூன்று மேடையேற்றப் பட்டதுடன் சிகரட்டும் எரியூட்டப்பட்டது.

7. வருடாந்தம் ஆளுநர் விருதுக்கு பொருத்தமான இரு கலைஞர்களின் விபரம் சிபார்சு செய்து அனுப்பி வைக்கப்படுகின்றது.

8. வடமாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வு
மேற்படி தேர்வுக்காக எமது பிரதேச எழுத்தாளர்களால் 2012ஆம் ஆண்டில் வெளியீடு செய்யப்பட்ட 11 எழுத்தாளர்களது நூல்கள் அனுப்பிவைக்கப் பட்டன. இவற்றில் திரு க. சின்னராஜன் அவர்களின் கவிதை நூலான வல்லைவெளி என்னும் நூலிற்கும் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் அவர்களின் under standing modern management volume – I என்ற உயர்கல்விக்கான நூலிற்கும் வடமாகாண இலக்கிய நூல்பரிசு கிடைக்கப்பெற்றது.

9. புனர்வாழ்வு அதிகார சபை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கோரிக்கைக்கேற்ப மாவட்ட செயலகத்தின் பணிப்பினை ஏற்று பயங்கரவாதம் காரணமாக பாதிப்படைந்து புணர்நிர்மாணம் செய்யவேண்டிய வணக்கத்தலங்கள் பற்றிய விபரம் கொடுப்பனவு செய்வதற்காக சிபார்சு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது.

10. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறை மையங்கள் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டன.

11. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆலயங்கள் இரண்டினதும் மகோற்சவம் சிறப்பாக நடைபெற ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அத்துடன் மத்திய அரசின் கலாசார திணைக்களத்தினால் தேசிய கலை இலக்கிய போட்டித் தொடர் திறந்த போட்டியாகவும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாகவும் பிரதேச செயலக ரீதியாக நடாத்தப்பட்டு முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் படைப்புக்கள் மாவட்ட மட்டப்போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாவட்ட மட்டப்போட்டியில் சிறுகதையில் தும்பளை தெற்கினைச் சேர்ந்த பா.வேதநாயகம் அவர்களும் கவிதைப்பாடலில் யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி சி.சங்கவி அவர்களும் முதலாம் இடத்தினைப் பெற்று எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்தனர். அத்துடன் தேசிய மட்டப் போட்டியில் சி.சங்கவி இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தார்.

- 2013ம் ஆண்டு கலாபூஷணம் விருது எமது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 4 பேருக்கு கிடைத்தமை சிறப்புக்குரியது.

  விருதுபெற்றவாகள் விபரம்.

  1. இராமசாமி பாலசுப்பிரமணியம் - மாதனை
  2. சிவநாமம் சிவநேசன் - அல்வாய் வடமேற்கு
  3. சதாசிவம் உருத்திரேஸ்வரன் - பருத்தித்துறை
  4. வெள்ளியம்பலம் முத்துச்சாமி - வல்வெட்டித்துறை

- அரச குறுநாடக விழா போட்டிக்கு எமது பிரதேசத்தைச் சேர்ந்த கே.றமணின் "கோலம்" நாடகமும் ஆர்.மகிந்தனின் "இன்னும் என்ன சோலை" நாடகமும் மாவட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு 19.01.2014 அன்று யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் இடம்பெற்ற தேசிய மட்டப்போட்டி யிலும் பங்குபற்றியது.

- புத்தசாசனம் மற்றும் மதஅலுவல்கள் அமைச்சினால் சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

- கலாசார மத்திய நிலையம் அமைப்பதற்கான காணி புற்றளைப் பிரதேச பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டு கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் அனுமதியுடன், நிதி ஒதுக்கீடாக 2012,2013 ம் ஆண்டுகளில் ரூபா 04 மில்லியன் பெறப்பட்டு அதற்கான கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### விளையாட்டுப்பிரிவு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் 21 ஆகும். இவ் விளையாட்டுக் கழகங்கள் தற்போது சிறப்புற இயங்கிக் கொண்டிருப்பதுடன், பிரதேச மட்ட, மாவட்டமட்ட, மாகாணமட்ட மற்றும் தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி வருகின்றன. மேலும் இவர்கள் பல்வேறு தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளைப் படைத்தும் விருதுகளைப் பெற்றும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதேச செயலக விளையாட்டுவிழா**

பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. *2013* ம் ஆண்டுக்குரிய பிரதேச விளையாட்டுவிழா கம்பர்மலை நெற்கொழு விளையாட்டு மைதானத்தில் *11.05.2013* அன்று எமது பிரதேச செயலர் திரு.இ.த.ஜெயசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விளையாட்டுவிழாவிற்கு யாழ் மாவட்ட அரசஅதிபர் திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இவ் விளையாட்டுவிழாவில் பிரதேசமட்ட ரீதியிலான பின்வரும் சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

| இல | நிகழ்வு | நேரம்/ தூரம் | வீரர் / கழகம் |
|---|---|---|---|
| *1* | 4 X 100m அஞ்சல் ஓட்டம் | 46:60 Sec | கழுகுகள் விளையாட்டுக்கழகம் |
| *2* | 4 X400m அஞ்சல் ஓட்டம் | 3:47:50 Sec | வல்வை விளையாட்டுக் கழகம் |
| *3* | உயரம் பாய்தல் | 1.71 m | ந.நரேந்திரன்- வல்வை விளையா ட்டுக்கழகம் |

மேலும் கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து விளையாட்டுக் கழகங்களுக்கு பிரதேச செயலரின் சிபார்சின் மூலமாக பல விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தேசிய மட்ட விருதுபெற்றோர்**

| இல | போட்டி | பதக்கம் | வீரர் |
|---|---|---|---|
| *1* | குத்துச்சண்டை - *2012, 2013* | வெண்கலம் | ரஞ்சிநாதன் ரமேஸ் |
| *2* | குத்துச்சண்டை - *2012* | வெண்கலம் | சிறிதரன் |

**கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டி**

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்படும் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக மட்டத்தில் புலோலி கிழக்கு திரு. மு.கந்தசாமி கிராம அலுவலர் 1ம் இடத்தையும் அல்வாய் மேற்கு திரு. தி.ரங்கநாதன் கிராம அலுவலர் *2*ம் இடத்தையும் புலோலி தென்மேற்கு திரு. த.வதனரூபன் கிராம அலுவலர் *3*ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் புவியியல் சார் தரைத்தோற்ற அமைவிடமும் அவற்றின் செல்வாக்கும்

திரு. க. சிவகுமார்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

ஒரு பிரதேசத்தின் வாழ்வும் வளமும் அப்பிரதேசத்தின் புவியியல் சார்ந்த அமைவிடத்திலும் மக்களின் வாழ்வாதார முறைகளிலும் பெரிதும் தங்கியுள்ளது. இலங்கையின் வடபகுதியைச் சார்ந்து அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியான வடமராட்சிப் பிரதேசம் சமூக பொருளாதார கலாசார பண்பாட்டின் அடிப்படையில் வரலாற்று ரீதியான தனிப்பெருஞ்சிறப்பினை தன்னகத்தே கொண்டுள்ளது. இது வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை), வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி), வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) எனும் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவற்றிலே புவியியல் சார் இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டதாக கொண்டமைந்ததாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவு காணப்படுகின்றது. கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தினாலும், மருத நிலத்தினாலும் சூழப்பெற்ற பிரதேச செயலர் பிரிவாக இது விளங்குகின்றது. வடக்கு பாக்கு நீரிணை கடற்பரப்பினையும் தெற்கே மருதங்கேணி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளையும் கிழக்கே இந்து சமுத்திர கடற்பிராந்தியத்தினையும் மேற்கே (வலிகாமம் கிழக்கு) கோப்பாய் பிரதேச செயலர் பிரிவினையும் கொண்டதாகவும் பருத்தித்துறை எனும் வரலாற்று சிறப்புப் பெயருடன் **132** கிராமங்களை உள்ளடக்கிய **35** கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாகவும் **03** உள்ளூராட்சி அமைப்புக்களை கொண்டதாகவும் அமைந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான **1063.81** சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பளவில் **289.09** சதுர கிலோ மீற்றர் (27.9%) நிலப்பரப்பினை வடமராட்சி வடக்கு பிரதேசம் உள்ளடக்குகின்றது.

இதன் நிருவாகப்பிரதேசம் தொண்டமானாற்றிலிருந்து வல்லிபுரம் வரையான பிரதான கரையோர பகுதிகளை உள்ளடக்குவதுடன் இரண்டு முக்கிய நகரங்களான வல்வெட்டித்துறை, பருத்தித்துறை என்பவற்றினையும் தொண்டமானாறு, கெருடாவில், பொலிகண்டி, இன்பர்சிட்டி , அல்வாய் , புலோலி , துன்னாலை, வல்லிபுரம் ஆகிய முதன்நிலை கிராமங்களை கொண்டதாகவும் இருக்கின்றது. இப்பிரதேசம் பாக்கு நீரிணை பகுதியையும் இந்திய கடல் எல்லையையும் சார்ந்து இருப்பதனால் வரலாற்றுக் காலம் தொட்டு தென்னியந்தியர்களோடு உறவுகளை பேணி வந்ததாகவும் வர்த்தக பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் மக்கள் இங்கு வந்து குடியேறியும் கடல் வழிப் போக்குவரத்துக்கான தளமாகவும் பயன்படுத்தி வந்துள்ளமையையும் வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகின்றது.

**சுண்ணாம்பு கற்பாறை அமைப்பு**

இப்பிரதேசத்தின் பௌதிக அமைப்பினை நோக்கும் போது தள அமைப்பானது பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய இடங்களைப் போன்றே சம தரையான அமைப்பினைக் கொண்டமைந்துள்ளது. எனினும் கெருடாவில், மயிலியதனை, ஊரிக்காடு, கொம்மந்தறை போன்ற இடங்கள் உயரமான மேட்டு நிலப்பண்பு கொண்டதாக காணப்படுகின்றது. இது குடாநாட்டுக்கே உரித்தான சுண்ணக்கல் திணிவைக் கொண்டுள்ளது. இது ஏறத்தாழ 35 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசீன் காலத்தின் இறுதிக் காலப் பகுதியைச் சேர்ந்ததாக வரலாற்றுப் பதிவுகளிலிருந்து அறியமுடிகின்றது. இப்பிரதேசத்தின் பாறைத்தன்மையானது பருத்தித்துறை. புலோலி, துன்னாலை ஆகிய பிரதேச கிராமங்களுக்கு மேற்கே சுண்ணாம்புப் பாறைகள் கொண்ட தரையமைப்பும் கிழக்கே உள்ள பிரதேசம் மணற் பகுதிகளாகவும் காணப்படுகின்றது. மேற்கே காணப்படுகின்ற சுண்ணாம்புக்கற் பகுதியானது சின்ன மண்டபம் பெரியமண்டபம் போன்ற காஸட் நில உறுப்புக்களையும் கொண்டு அமைந்துள்ளது.

**மண்ணின் அமைப்பு**

சம தரையான தரைத்தோற்றம் கொண்ட இப்பிரதேசம் 350 தொடக்கம் 550 வரையான குளோரைட் செறிவுடைய நீரையும் மண் தரை அமைப்பையும் கொண்ட புவியியல் சார் அமைவிடத்தில் உவர் மண் கல்சிய மண், செம்மஞ்சள் மண். மணல் மண் ஆகிய மூன்று வகையான மண் வகைகளின் பரம்பலினைக் கொண்டு காணப்படுகின்றது. உவர் மண்ணை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 285 ஹெக்டேயர்கள் கொண்டதாகவும் இவற்றில் 75 சதவீதமான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு உட்படுவதாகவும் உள்ளது. மிகுதி 25 சதவீதமான நிலப்பரப்பு பயன்பாடின்றி தரிசு நிலமாகக் காணப்படுகின்றது.

**விவசாயம் சார்ந்த செயற்பாடுகள்**

இப்பிரதேசத்தில் கல்சிய செம்மஞ்சள் மண் வகையானது ஏறக்குறைய 483 கெக்டேயர் நிலப்பரப்பில் பரம்பி உள்ளது. இம்மண்ணில் விவசாயம் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் அமைந்திருப்பது விவசாயம் சார்ந்த செயற்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளது. இதனால் ஜீவனோபாயத் தொழிலாக கொண்ட ஏறத்தாழ 15 வீதமான மக்கள் இதில் ஈடுபடுகின்றனர். 208.8 கெக்டேயர் நிலப்பரப்பு பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 139.1 கெக்டேயரில் நெல் உற்பத்தியும் 28.4 கெக்டேயரில் உப உணவுப்பயிற்செய்கையும் 11.6 கெக்டேயரில் மரக்கறி செய்கையும் 29.8 கெக்டேயரில் பழவகை மரங்களும் 2524.8 கெக்டேயர் நிலப்பரப்பில் தென்னை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை, கமுகு போன்ற நீண்ட காலத்திற்கு பயன்தரு மரங்களும் காணப்படுகின்றது. இவற்றோடு வெங்காயம், புகையிலை, மிளகாய் போன்றவை தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பிரதானமாக தொண்டமானாறு, கெருடாவில், கொம்மந்தறை, மந்திகை, அல்வாய், புலோலி ஆகிய கிராமங்களில் பயிரிடப்படுவதுடன் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை கணிசமான அளவில் வருமானத்தினை பெறக்கூடியதாகவும் இருந்து வந்தது. பின்னர் உள்நாட்டு யுத்தம் காரணமாக தரைவழிப்பாதையான A9 நெடுஞ்சாலை மூடப்பட்டதைத் தொடர்ந்து விவசாய உற்பத்திப் பொருட்களின் கேள்வி சரிவுப் பாதையில் சென்றதனால் இதனை நம்பி வாழும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கடுமையான பொருளாதாரப் பாதிப்பிற்கு முகம் கொடுத்தனர். மேலும் இப்பிரதேச விவசாய நடவடிக்கைகளில் நிலத்தடி நீரைப்பயன்படுத்துவதனால் நிலத்தடி நீர் வீதம் அகற்றப்பட்டு குறைந்து செல்வதுடன் ஊற்றுக்கள் வற்றிப்போகும் ஆபத்தும் காணப்படுகின்றது. அத்துடன் பொருத்தமற்ற இரசாயன வளமாக்கிகள் பாவனையால் நிலத்தடி நீரில் நைத்திரேற்றின் அளவும் அதிகரித்துச் செல்லும் நிலை உள்ளதுடன் மண் வளம் குன்றி வருகின்ற நிலைமையினையும் அறிய முடிகின்றது.

## காலநிலைப்பண்புகள்

பொதுவாக இப்பிரதேசம் குடாநாட்டிற்குரிய காலநிலைப்பண்புகளை கொண்டமைந்த வரண்ட வலயத்திற்குரிய காலநிலைப் பண்புகளையே கொண்டு விளங்குகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தின் சராசரி வெப்ப நிலையானது $81.7^0$F ஆகவும் ஏப்ரல் மே மாதங்களில் $85^0$F ஆகவும் ஜனவரியில் $72^0$F ஆகவும் காணப்படுகின்றது. எனினும் கடற்கரையோரங்களில் கடலிலிருந்து வீசும் கடற்காற்றின் தாக்கத்தினால் வெப்பநிலை வீச்சின் அளவு பகல் இரவு வேளைகளில் வேறுபாடு கொண்டதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தின் காலநிலைகள் வடகீழ் பருவக்காற்று, தென்மேல் பருவக்காற்று எனும் வேறுபட்ட காலநிலைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு விளங்குகின்றது. தென்மேல் பருவக்காற்று காலநிலையானது மே தொடக்கம் செப்டெம்பர் வரையான காலங்களிலும் வடகீழ் பருவகாற்று காலநிலையானது டிசம்பர் தொடங்கம் பெப்ரவரி வரையான காலப்பகுதி வரையும் நிலவுகின்றது. பொதுவாக தென்மேற் பருவக்காற்றுக் காலப்பகுதியில் மழை வீழ்ச்சி குறைவாகவும் வடகீழ் பருவக்காற்று காலத்தில் அதிகளவான மழைவீழ்ச்சியைப் பெறும் நிலைமையினையும் குறிப்பாக 90% மான மழை வீழ்ச்சி இக்காலத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டே இப்பிரதேச மக்கள் விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றார்கள்.

### மணல் மண்ணைக் கொண்ட குன்றுகளின் அமைவு

பொதுவாக சமதரையான மண் அமைப்பினைக் கொண்டிருப்பதாலும் பருத்தித்துறை பனை முனையிலிருந்து வல்லிபுரம் அம்பன் வரை தாவரப் போர்வையற்ற அசையும் மணற்படிவினையும் அம்பன் முதல் குடாரப்பு வரையான கிராமங்களின் கரையோரங்களில் தாவர அடர்த்தியுள்ள நிரந்தரமான மணற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டுக்களையும் காண முடிகின்றது. எனினும் ஆங்காங்கே 30 அடி தொடக்கம் 50 அடி வரையான உயரத்தினைக் கொண்டதான சில மணற்குன்றுகள் காணப்படு கின்றன. இம்மணல் மண் வகையானது ஏறக்குறைய 2 – 5 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பினைக் கொண்டதாக இருக்கின்றது.

இம்மணல் மண் குடாநாட்டின் கட்டிட நிர்மாணப்பணிகளிற்கும் வீதியமைப்பிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு உயர்ந்த மணற்திட்டுக்களால் கடலரிப்பு கடல் வெள்ளப்பெருக்கு ஏற்படாது கரையோரக் கிராமங்கள் பாதுகாக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். எனினும் தற்போது முறையான திட்டங்களின்றி பொருத்தமற்ற வகையில் மணல் அகழ்வு நிகழ்தல் காரணமாக இக்குன்றுகள் அழிந்து கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகும் அபாயமும் காணப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சுனாமியினால் ஏற்பட்ட அழிவிற்கும் கரையோர மணற்றிட்டுக்கள் திட்டமின்றி அகற்றப்பட்டமையையும் ஒரு காரணமாக கூறலாம். இதைவிட சிலிக்கா மணல் வகையினைக் கொண்டு கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கக்கூடிய வகையில் சிலிக்கா மண்ணின் பரம்பலும் காணப்படுவது இப்பிரதேசத்திற்கே உரித்தான சிறப்பம்சமாகும்.

## நீர் வளம்

இப்பிரதேசத்தின் நீர்வளம் தொடர்பாக நோக்கும்போது பெரும்பாலும் தரைக்கீழ் நீரைப் பெறுவதனை நோக்கமாக கொண்டு கிணறுகள், குழாய்க்கிணறுகள் நீர்நிலைகளில் இருந்து மக்கள் நீரைப் பெற்றுக்கொள்கின்றனர். பொதுவாக கற்கோவளம் வியாபாரிமூலை அல்வாய் பொலிகண்டி வல்வெட்டித்துறை தொண்டமானாறு ஆகிய கிராமங்களில் கிணறுகள் சராசரி 8அடி ஆழம் கொண்டதாகவும் ஏனைய கிராமங்களில் சராசரி 14அடி ஆழமாகவும் காணப்படுகின்றது. நன்னீர் நிலைகளின் பரம்பலினை நோக்கும்போது தொண்டமானாறு, துன்னாலை, போன்ற இடங்களில் மிகவும் குறைவாகவும் உவர்ப்புத்தன்மை கொண்டதான தரைக்கீழ் நீர் ஊற்றுக்களை கொண்டதாகவும் காணப்படுவதனால் குடிநீர் பெறுவதில் மக்கள் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர். இங்கே காணப்படுகின்ற மயோசின் சுண்ணாம்புக்கற் படுக்கைகளின் செல்வாக்கினால் நீரின் கொள்ளளவு ஆற்றல் அதிகமாக இருக்கின்றது. இதனால் தாராளமாக தரைக்கீழ் நீர் கிடைக்கப்பெறுகின்றமையும் மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். ஊரிக்காடு, கொம்மந்தறை பகுதிகளில் 220 ppm குளோரைட்டு செறிவிலிருந்து 300 ppm செறிவு வரையில் உள்ளதான நன்னீரினைப் பெற்றுக்கொள்ள முடியும். நீர்வளம் தொடர்பாக இப்பிரதேசததில் எதிர்நோக்கும் பிரச்சினையாக 4 Km நீளமுடைய தொண்டமானாறு கடனீரேரியினால் நீர் ஊற்றுக்களில் உவர்ப்புத் தன்மை தோற்றுவிக்கப்படுகின்றமை முக்கிய பிரச்சினையாகும். இதனோடு கடல்நீர் தரைப்பகுதிக்குள் புகுதல், மழைவீழ்ச்சி குறைவடைதல், ஆவியாதல் அதிகரிப்பு, நீரின் பாவனை அதிகரிப்பு சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினால் நீர் நிலைகள் மாசடைதல், விவசாய நடவடிக்கைகளின்போது விவசாயிகளினால் பொருத்தமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இரசாயன வளமாக்கிகள், அதிகளவான நச்சுத்தன்மையுடைய கிருமி நாசினிகளைப் பயன்படுத்துதல் போன்ற காரணங்களினால் மண்ணின் வளம் குறைவடைவதோடு தரைக்கீழ் நீர் ஊற்றுக்களில் நீண்ட காலப்பாதிப்பினையும் ஏற்படுத்தி விடுகின்றது. எனவே இப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் பாதுகாப்பான குடிநீர் பெறுவது என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

## வடிகாலமைப்பு

இப்பிரதேசத்தில் ஆறுகள் எவையுமற்ற நிலையில் மழைகாலத்தில் மழை நீர் தேங்குவதைத் தவிர்ப்பதற்காக வாய்க்கால் வடிகாலமைப்புக்கள் அமைத்தல் என்ற விடயத்தில் ஏழு பொருத்தமான இடங்களில் மட்டும் வெள்ள வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை குளங்களோடு இணைந்த வகையில் நில அமைப்பின் ஏற்றத்தாழ்வினைக் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை கமநலச் சேவை நிலையத்தினால் காலத்திற்கு காலம் புனரமைக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. தற்போது சில இடங்களில் சீமேந்து அணையினால் இருபுறமும் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளமையையும் காண முடிகின்றது.

## குளங்கள்

மழை காலத்தில் கிடைக்கின்ற நீரை சேமித்து வைப்பதற்காக 17 சிறிய குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குளங்களிலிருந்து கால்நடைகள் குடிநீரைப் பெறுதல், மண்ணின் ஈரப்பதன் பாதுகாத்தல், தரைக்கீழ் உவர் நீரூற்று நன்னீரூற்றாக மாறி உவர்ப்புத்தன்மையைக் குறைத்தல் மற்றும் நீர்த்தாவரங்களான தாமரை அல்லி போன்ற தாவரங்களும் நன்னீர் மீன் உயிரினங்களும் இக்குளங்களிலிருந்து பயன்பாட்டினைப் பெறுகின்றன.

## வீதியமைப்பும் போக்குவரத்தும்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 3 உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் 345 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் காணப்படுகின்றன. இதில் 34.2 கிலோ மீற்றர் நீளமான A , B தர வீதிகள், 9 இணை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. 45.6 கிலோ மீற்றர் C , D தர வீதிகள், வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் தாரிடப்பட்ட வீதிகளாகும். மிகுதி 265.5 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் உள்ளூராட்சி மன்றங்களின் பராமரிப்பிற்குட்பட்டதாக தார், கிரவல், களிமண் என பல்வேறு வகையிலமைந்துள்ளது. போக்குவரத்து பிரதான மார்க்கங்களாக பலாலி விமான நிலைய இணைப்பு வீதி காங்கேசன்துறைமுக இணைப்பு வீதி, யாழ் பருத்தித்துறை 750,751,752 பிரதான வீதிகள் முக்கியமான வீதிகளாக காணப்படுகின்றன. அத்தோடு பருத்தித்துறை துறைமுகம் அமைந்துள்ள பிரதான வீதி போக்குவரத்து மையமாகவும் விளங்குகின்றது. குறிப்பாக 1990 களில் தரை வழிப் போக்குவரத்தான A9 வீதிப் பயன்பாட்டினை இழந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறைமுகமூடாகவே யாழ் குடாநாட்டிற்கான உணவுப்பொருட்கள் ஏற்றி இறக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## மீன்பிடித் தொழிலுக்கான சாதகமான வாய்ப்புக்கள்

வடமராட்சி வடக்கு பிரதேசம் ஏறக்குறைய 21 கி.மீற்றர் நீளமான கடற்கரையோரமானது வல்லிபுரம் தொடங்கி முனை வரையான 5.32 கிலோ மீற்றர் நீளமான கரையோரம் மணற்பாங்கான தரைச் சூழலையும் முனையிலிருந்து தொண்டமானாறு வரையான 13.68 கிலோ மீற்றர் நீளமான வடக்கு கடற்கரை கடல் வாழ் உயிரினங்கள் வாழ்விடமாகவும் சீமேந்து உற்பத்திக்கான மூலவளமாகவும் காணப்படுகின்றது. 1.67 Km நீளம் கொண்டதான கடனீரேரி உவர்நீர், நன்னீர் கொண்ட சேற்று நிலமாக உள்ளதால் இறால் வளர்ப்பு மீன் வளர்ப்பு தொழிலுக்கான சாதகமான இடமாகவும் பருத்தித்துறையின் வடக்கே அமைந்துள்ள பேதுரு கடலடித்தள மேடை ஏறத்தாழ 60 Km அகலம் கொண்டதாக காணப்படுவதால் மீன்வளம் மிக்க கடற் பிரதேசமாக இருக்கின்றது. இதனால் மொத்த சனத்தொகையில் 24% மானோர் மீன்பிடித்தொழிலை வாழ்வாதார தொழிலாகக் கொண்டுள்ளனர். இப்பிரதேசத்திலிருந்து கணிசமான அளவு கடலுணவுகள் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் கருவாடு பதனிடல் தொழில் வாய்ப்பும் கிடைக்கின்றது. கரையோர மீன்பிடியுடனும் கூடிய ஆழ்கடல் மீன்பிடித் தொழிலையும் மேற்கொள்ளக்கூடிய வகையில் இப்பிரதேசம் விளங்குகின்றது.

## முடிவுரை

நீண்ட வரலாற்றுத் தொன்மையும் பௌதிக கடல் வளங்களையும் கொண்டதாக விளங்கும் இப்பிரதேசம் இயற்கையின் கொடைகளாக கடல்சார் வளமும் மண்வளமும் செழிப்பு மிக்கதாக கிடைக்கப்பெற்றிருப்பதனால் மீன்பிடித்தொழிலும் விவசாய வேளாண்மையுடன் கூடிய கைத்தொழில் சார் நடவடிக்கைகளுக்கு பொருத்தமான இடமாகவும் விளங்குகின்றது. கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக இப்பிரதேசத்தின் உட்கட்டுமானப் பணிகளும் அபிவிருத்தி செயற்பாடுகளும் பின்னடைவைச் சந்தித்திருந்தும் தற்போது அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் சிறப்பான பிரதேச நிர்வாக செயற்பாடுகள் காரணமாக எழுச்சி மிக்க நகரமயமாக்கல் திட்டங்களுடன் கூடிய அபிவிருத்தி சார் எழுச்சி திட்டங்களின் மூலம் புதுப் பொலிவு பெற்று ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுடன் போட்டி போடுமளவிற்கு முன்னேற்றமடைந்துள்ளது என்றால் மிகையாகாது.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேச நகர அபிவிருத்தி அன்றும் இன்றும் ஒரு நோக்கு...!

வல்வை. ந. அனந்தராஜ்
தவிசாளர்,
வல்வெட்டித்துறை நகரசபை.

இலங்கையின் உச்சிப் பகுதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாக விளங்கும் வடமராட்சி பின்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய பிரதேசங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றமையால் வடமராட்சியின் தனித்துவம் பேணப்பட்டு வருகின்றது. ஆயினும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நகர அபிவிருத்தியின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் ஒப்பு நோக்கும் பொழுது ஒரு பாரிய தலைமுறை இடைவெளி காணப்படுவதை வெளிப்படையாகவே அவதானிக்கமுடிகின்றது.

❖ மேற்கே தொண்டைமானாறு தொடக்கம் கிழக்கே அமைந்துள்ள வல்லிபுரக்கோயில், வடக்கே வளம் நிறைந்த கடலும், தெற்காக விவசாய பிரதேசமும் உள்ளடக்கியதால் ஒரே பார்வையில் விவசாய பிரதேசம், கடல் சார்ந்த பிரதேசம் ஆகிய இரு வெவ்வேறு சூழல்களை அவதானிக்கும் வகையில் வடமராட்சி வடக்கு பிரதேசம் அமைந்துள்ளது.

❖ வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளையும், பருத்தித்துறை பிரதேச சபையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாக மூன்று உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் காணப்படுகின்றன.

❖ இரு வெவ்வேறு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக வடமராட்சி வடக்கு விளங்குகின்ற காரணத்தினால் கடல் உணவுகளின் மூலமும், விவசாய உற்பத்திப் பொருட்களின் மூலமும் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டில் கணிசமான பங்களிப்பைச் செய்யும் ஒரு பிரதேசமாக விளங்குகின்றது.

❖ சுனாமி, புயல், வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அழிவுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இயற்கையான பாதுகாப்பு அரண்களைக் கொண்டிருப்பதால் பாரிய வெள்ளப் பெருக்குகளினாலோ அல்லது சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலோ வடமராட்சி வடக்கு பிரதேசங்களில் பாரிய அழிவுகள் ஏற்படுத்தப்படவில்லை.

❖ கல்சைட் போன்ற கனியவளங்களை அதிகளவில் கொண்டிருப்பதும், அரிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பவளப்பாறைகள் வடமராட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரங்களில் கொண்டிருப்பது வடமராட்சியின் இயற்கை அழகுக்கு கட்டியம் கூறி நிற்கின்றன. ஆனால் இன்று அதிகளவிலான பவளப்பாறைகள் சுனாமி தாக்கத்தினாலும், சட்டவிரோத அகழ்வினாலும் அகற்றப்படுவதுடன் அதிகளவிலான கனிய மணல், கட்டடத் தேவைகளுக்காகவும், வீதிகள் அமைப்பதற்காகவும் அகற்றப்படுவதால், வடமராட்சிக் கடற்கரையின் எழிலும், இயற்கை வனப்பும் அழிந்து கொண்டு வருகின்றன.

❖ ஏனைய பிரதேசங்களைவிட உயர்ந்த கல்வித் தரம் பேணப்பட்டு வருவதற்கு, வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் மிகச் சிறந்த கல்லூரிகள் காணப்படுகின்றன.


அந்த வகையில் பல வளங்களைக் கொண்டுள்ள வடமராட்சியின் அன்றைய சிறப்புக்களையும் எதிர்காலத்தில் மேலும் எவ்வகையில் வடமராட்சியை மேம்படுத்தலாம் என்ற ஒரு விழிப்புணர்வையும் எமது மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

**வரலாற்றுப் புகழ்பெற்ற இந்து ஆலயங்கள்:**

இலங்கையின் பிரபல்யமானதும் அரசாங்கத்தினால் வர்த்தமானிப் படுத்தப்பட்டதுமான முக்கியத்துவம் வாய்ந்த இரு ஆலயங்களைக் கொண்டிருப்பது ஏனைய பிரதேசங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பியல் பாகும். வடமராட்சியின் மேற்காக தொண்டைமானாற்றங்கரையுடன் அமைந்துள்ள செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும், கிழக்காக ஆர்ப்பரிக்கும் கடலுடன் சார்ந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் அமைந்துள்ளன .இவ்விரு ஆலயங்களையும் தரிசிப்பதற்காக நாடளாவிய ரீதியில் வருடாந்தம் பல இலட்சக் கணக்கான மக்கள் வருகை தருவதால் இப்பிரதேசம் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகமம் சாராத ஒரு ஆலயமாகவும், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், ஆகமம் சார்ந்த வைஷ்ணவ ஆலயமாகவும் விளங்குவதால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களாக விளங்குகின்றன.

செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு வருபவர்கள் முதலில் ஆற்றில் நீராடிய பின்னர், அதற்கு எதிர்ப்புறமாக ஆலயத்துடன் உள்ள நன்னீர்க் கேணியில் நீராடிய பின்னரே ஆலயத்திற்குச் செல்வார்கள்.

**தொண்டைமான் ஆறும் செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்பகாலத் தோற்றமும்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**மடாலய அமைப்பில் உருவாக்கப்பட்ட எளிமை நிறைந்த செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் அன்றைய தோற்றமும், இன்றைய தோற்றமும்**



வடமராட்சியின் புகழ் பெற்ற வைஷ்ணவ ஆலயமான வல்லிபுரக் கோயில் அமைந்துள்ள வல்லிபுரம் என்பது பண்டைய தமிழ் சிங்கை நகர் இராட்சியத்தின் தலைநகரமாக விளங்கிய இடமாகும்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலின் மூலஸ்தானத்தில் சக்கரம் வைக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகின்றது. சூரிய வழிபாட்டிலும் சக்கரமே வழிபாட்டுச் சின்னமாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் வல்லிபுரப் பிரதேசத்துடன் ஆழ்வார் கோயிலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வடமராட்சி வடக்கில் காணப்படுகின்றது.

**வடமராட்சியில் அமைந்துள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் ஆலயத்திற்குத் தெற்காக இயற்கையாக அமைந்துள்ள கிளைகள் விட்ட பனைமரமும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறைமுகங்களின் அபிவிருத்தி:**

வல்வெட்டித்துறை , பருத்தித்துறை ஆகிய நகரங்களில் இருந்த துறைமுகங்கள் அன்று மிகவும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின. இத்துறை முகங்கள் எந்த ஒரு பாதகமான சூழ்நிலையிலும் கப்பல்கள் வந்து செல்லக்கூடியவகையில் இயற்கையான பாதுகாப்பான அரண்களைக் கொண்டிருந்த காரணத்தினால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்த துறைமுகங்களைவிட இவை அமைவிடம், பாதுகாப்பு, இலகுவில் சென்றடைதல், இயற்கை அரண் போன்ற காரணங்களினால் சிறப்புப் பெற்றிருந்தன. இதனால் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்கள் பாரிய கப்பல்களுக்கும் , பாய்மரக் கப்பல்களுக்கும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டன. அன்று, வல்வெட்டித்துறையில் ஒரே நேரத்தில் நூறு பாய்க்கப்பல்கள் கட்டப்பட்டி ருந்ததாக, ஆய்வாளரான றொபேட் நொக்ஸ் தனது பயணக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வல்வெட்டித்துறை துறைமுகமும், பருத்தித்துறை துறைமுகமும் அழிவடைந்த நிலையில் இருப்பதாலும் அதனைப் புனரமைக்க வேண்டுமென்ற பரந்த சிந்தனை இல்லாததாலும் அவை இன்றும் கவனிப்பாரற்றுக் காணப்படுவது ஒரு துர்ப்பாக்கியமாகும். அதனைப் புனரமைக்கவேண்டிய ஒரு தேவையும் உள்ளது.

***1985-1990*** காலப்பகுதிகளில் பருத்தித்துறையில் இருந்து திருக்கோண மலைக்கு பயணிகளை ஏற்றிச் செல்வதற்கும்,கொழும்புக்கும் பருத்தித்துறைக்கு மிடையில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் பருத்தித்துறைத் துறைமுகத்தில் இருந்தே கப்பல்கள் புறப்பட்டன.இன்று நவீன முறையில் மீன்பிடித்துறையை விஸ்தரிப்பதனூடாக வடமராட்சியின் மூலம் அதிகளவிலான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இதற்கு தற்போதுள்ள நிலையில் பாரிய துறைமுகங்களை அமைக்கமுடியாவிட்டாலும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் நங்கூரமிடும் துறைமுக வசதிகள்(Anchorage Habour Facilities) ஏற்படுத்தப்பட்டு,சிறந்த சந்தை வாய்ப்புகளும் உருவாக்கப்படுமாயின் மீன்பிடித்துறையினூடாக எமது பிரதேசம் தன்னிறைவு அடையும்.பருத்தித்துறை வல்வெடடித்றையில் மீண்டும் துறைமுகங்களை புனரமைக்க அரசாங்கம் முன்வருமானால்,தமிழகத்தின் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் நிலையில் இவையும் முக்கியத்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்கள் சரக்கு இறக்குமிடம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கப்பல் ஓட்டிய தமிழர்கள்:**

வல்வெட்டித்துறை,தொண்டைமானாறு,பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் அன்று கப்பல் கட்டும் தொழில் நன்கு விருத்தியடைந்திருந்ததால், பல நூற்றுக் கணக்கான கப்பல்கள் உள்ளூர் வேப்ப மரங்களில் இருந்தே தயாரிக்கப் பட்டன. இவை எந்தவிதமான பாதகமான சூழ்நிலையையும் தாங்கக்கூடியதாக இலகுவில் கடலையும் கிழித்துக் கொண்டு பயணம் செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டன. அன்றைய எமது மேத்திரிமார்களினால் தயாரிக்கப்பட்ட இரட்டைப்பாய் மரக்கப்பல்களின் மூலம், காக்கிநாடா,ரங்கூன்,தூத்துக்குடி போன்ற துறைமுகங்களுக்கும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங் களுக்கும் இடையிலான கடல் போக்கு வரத்துக்கள் மூலம் ஏற்றுமதி இறக்குமதிகள் சட்டரீதியாகவே இடம் பெற்றுவந்தன.தரைப் போக்குவரத்துக்கள் முக்கியத்துவம் பெறாத காலப்பகுதியில் இவ்வகையான கப்பல்கள் மூலமாகவே பயணிகள் போக்குவரத்தும் நடைபெற்றிருக்கின்றன.

வல்வெட்டித்துறையில் சுந்தரம் மேத்திரியாரினால் வேப்பமரத்தில் தயாரிக்கப்பட்ட "அன்னபூரணி அம்மாள்" என்ற பெயரிலான இரட்டைப் பாய்மரக் கப்பல் அமெரிக்கரான றொபின்சன் என்பவரால் 1938 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டு, வல்வெட்டித்துறை மாலுமிகளின் உதவியுடன் கொந்தளிக்கும் இராட்சத அலைகளையும் கடந்து சுயஸ் கால்வாயினூடாக அமெரிக்காவின் போஸ்ரன் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட சாதனை இன்றும் உலகளாவிய ரீதியில் வியந்து பேசப்படுகின்றது.

**போஸ்ரன் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட நிலையில் அன்னபூரணி அம்மாள் இரட்டைப் பாய்மரக்கப்பல்**



**வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம்:**

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த புகழ் பூத்த கல்லூரிகள் காணப் படுவதால் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் ,கல்வித் தரமும் அன்று தொடக்கம் இன்று வரை மிக உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் அன்று தென்னிலங்கையில் இருந்தும் கூட மாணவர்கள் வடமராட்சியில் இருந்து கல்வி கற்று மிக உயர்ந்த நிலைகளில் இருந்திருக்கின்றனர். தொண்டைமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரை இயங்கும் உயர்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்களைக் கொண்ட கல்லூரிகளில் குறிப்பாக, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி, வல்வைமகளிர் மகாவித்தியாலயம், மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி , வடஇந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம், புற்றளை மகாவித்தியாலயம் ஆகிய உயர்தர வகுப்புகளைக் கொண்ட கல்லூரிகள் அன்று தொடக்கம் இன்று வரை மிக உன்னதமான கல்விச் சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்:**

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதற்காகவும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும், உயர்தர வகுப்பு மாணவர்களைப் பொதுப் பரீட்சை களுக்குத் தயாராக்குவதற்காகவும் 1968 ஆம் ஆண்டு தொண்டைமானாற்றின் அக்கரையில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் என்ற பெயரில் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்டது.

இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றிருந்த யுத்தம் காரணமாகவும், இடப்பெயர்வுகளின் காரணமாகவும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் கட்டடங்களும், அதனுள் இருந்த பெறுமதியான கற்றல்-கற்பித்தல் வளங்களும், அரிய உயிரியல் சேமிப்புக்களும், பல ஆயிரக்கணக்கான நூல்களும் அழிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அதன் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதை தொடர்ந்து வெளிக்கள நிலையத்தின் அபிவிருத்திச் செயற் பாடுகள் முடக்கப்பட்டபோதும், மாணவர்களுக்கான கருத்தரங்குகள், மாதிரிப் பரீட்சைகள் நடத்துதல் என்பவற்றைத் தொடர்ச்சியாகக் கொண்டு நடத்தும் வகையில், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஒரு அறையிலும் இயங்கி வந்தமையினால், அதன் செயற்பாடுகளும் அழிந்துவிடாது பாதுகாக்கப்பட்டன. இந்த நிலையில் 2011ஆம் ஆண்டு தொடக்கம் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் மீண்டும் தொண்டை மானாற்றில் இயங்கத் தொடங்கியுள்ளது. செல்வச் சந்நிதி ஆலய பிரதம குருக்களில் ஒருவரான சிவஸ்ரீ த.அகிலேந்திர ஐயர் அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய 9 பரப்புக் காணியில் ஆற்றங்கரை வீதியில் செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு அண்மித்ததாக 27 வருடங்களுக்குப் பின்னர், அமைக்கப் பட்டதால் பல நூற்றுக் கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் பயனடைந்து வருகின்றனர். இது வடமராட்சிக்குக் கிடைத்த பெருமையாகும்.

**வெளிக்கள நிலையம் அக்கரையில் அன்றும் , இக்கரையில் இன்றும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சுற்றுலா மையங்கள், மற்றும் வரலாற்று முக்கியத்தவமுள்ள கட்டடங்கள் :**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதுமான மையங்கள் வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இவற்றிற்கான வரலாற்றுச் சம்பவங்கள் எழுதி வைக்கப்படாத காரணங்களினால், அவற்றின் முக்கியத்துவம் பற்றி அதிகளவுக்குப் பேசப்படுவதில்லை. குறிப்பாக தொண்டைமானாறு, மயிலியதனை, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்றன. குறிப்பாகப் பின்வரும் சுற்றுலா மையங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களில் சிலவற்றை இன்றும் வடமராட்சியில் காணலாம்.

❖ தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள, வற்றாத நன்னீரைக் கொண்ட பொந்துக் கிணறு,

❖ தொண்டைமானாற்றில் கரம்பாவளிப் பிரதேசத்தில் கற்பாறைகளிடையே காணப்படுகின்ற வற்றாத நீர்ச் சுனைகள். இது பண்டைய காலத்தில் வாழ்ந்த பிரபல்யமான குடும்பத்தினரால் நீராடுவதற்காக வெட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**(வற்றாத நீர்க் கிணறுகளின் படங்கள்)**





தொண்டைமானாறு கடல்நீரேரிக்கு அண்மையில் அமைந்துள்ள கரம்பாவளி என்ற இடத்தில் பற்றைகள் மற்றும் தொடர் கற்பாறைகளுக்கு மத்தியில் நீராடும் வகையில் அமைக்கப்பட்ட பெரிய குளமும் , அதன் அருகாக சிறு சிறு வற்றாத நன்னீர் ஊற்றைக் கொண்ட ஆழம் குறைந்த சிறு கிணறுகளும் காணப்படுகின்றன. இதற்கு அண்மையில் உள்ள ஆவுரஞ்சிக் கல்லும் , அதனுடன் சேர்ந்த கல்வெட்டும் இவற்றின் வரலாற்றைக் குறிப்பிடுகின்ற போதிலும், அவற்றை முழுமையாக வாசிக்க முடியவில்லை. இங்குள்ள பெரிய குளத்தின் மேற்குப் புறமாக மூன்றரை அடி உயரமும், ஒன்றரை அடி அகலமும் உள்ள ஆவுரஞ்சிக் கல்லில் ஒன்பது வரிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.இக்கல்வெட்டில் 'சூலம்' படம் பொறிக்கப்பட்டு அதன் கீழ் உள்ள முதல் ஐந்து வரிகளில் "குமாரசுவாமி பெண் வீராத்தை வெட்டுவித்தது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய வாசகங்கள் தெளிவில்லாது இருந்தபோதும் இதன் காலம் போர்த்துக்கேயர் காலத்திற்குரியது என்பதை அறியமுடிகின்றது.எனினும் அக்காலத்தில் சமூகத்தில் பெண்கள் பெற்றுள்ள முக்கியத்துவத்தையும் , இக்குளத்தை வெட்டுவித்த 'வீராத்தை' என்ற பெண் சமூகத்தில் வகித்த பங்கையும் அறியமுடிகின்றது. இக்குளத்தில் இருந்து மேற்காக உள்ள உப்புமால்வரை கருணாகரத் தொண்டைமானினால் வெட்டுவித்த பாதையும் உப்பு ஏற்றுமதி செய்வதற்காக அமைக்கப்பட்டது. இது ஒரு வண்டில் பாதையாகவே இருந்ததாகவும் வரலாறு கூறுகின்றது.

❖ வல்வெட்டித்துறை ஊறணியில் அமைந்துள்ள ஊற்றுக்கேணி 2013ஆம் ஆண்டில் இருந்து மரபுரிமைகள் அமைச்சினால் பேணப்படவேண்டிய மரபாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலைக்கு வடக்கே கடலுடன் இணைந்ததாக காணப்படும் நன்னீர் ஊற்றுக் கேணி, வேலாயுதர் ஆறுமுகத்தார் என்பவரால் இருநாறு ஆண்டுகளிற்கு முன் 1714 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தென்மேற்கில் இருந்து ஓடிவரும் நன்னீர் ஊற்று இங்கு வெளிப்பட இக்கேணி உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இருந்து வெளிவரும் தண்ணீர் மருத்துவக் குணம் நிறைந்ததாகக் காணப்படுவதால், சிரங்கு மற்றும் வாத நோய்களால் துன்பப்படுபவர்கள் இங்கு வந்து நீராடிச் சுகமடைந்து செல்கின்றனர். இதனுடன் இணைந்துள்ள கடல் புனிதம் நிறைந்த இயற்கை வளமாகும். ஆடி அமாவாசை விரதம், சித்திரா பௌர்ணமி விரதம் மற்றும்,பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவோரும் இங்கு வந்து நீராடித் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்கின்றனர். வல்வெட்டித்துறை, பொலிகண்டி, வல்வெட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் தீர்த்தோற்சவம் இச் சமுத்திரத்திலேயே மேற்கொள்ளப்படுவதால் இந்தப் பிரதேசம் புனிதப் பிரதேசமாக விளங்குகின்றது.

கடந்த சுனாமி தாக்கத்தின் போது,சேதமடைந்த நிலையில் காணப்படுவதால்,அதனைத் திருத்தி சிறந்த சுற்றுலா மையமாக்குவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

**வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள ஊற்றுக் கேணி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிச்சவீடு (கலங்கரை விளக்கம்)**

பருத்தித்துறை முனையில் அமைந்துள்ள வெளிச்சவீட்டுக் கோபுரம். அன்று போர்த்துக்கேயர் காலத்தில் வடமராட்சியில் உள்ள பிரதேசங்கள் "பற்றுக்களாகப்" பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பற்றுக்கும் ஒரு உடையார் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தக் காலப் பகுதியில் 1916களில் பருத்தித்துறை முனைப்பகுதியில் உள்ள கடற்கரையோரமாக 105அடி உயரமான வெள்ளை நிற கூம்பு வடிவில் அமைந்த வெளிச்சவீடு கட்டடப்பட்டது. சாமுவல் அன் சன்ஸ் நிறுவனத்தினர் இதனைப் பொறுப்பேற்றுக் கட்டிக் கொடுத்திருந்தனர். பல ஆண்டுகளாக இயங்கி வந்த இந்த வெளிச்சவீட்டுக் கோபுரம் தற்போது செயலிழந்து புனரமைக்கப்படாது இருக்கின்றது.

**வெளிச்ச வீடு**



❖ **கிட்டங்கிகள்**

பல நூற்றுக் கணக்கான தொன் நிறைகொண்ட கப்பலில் இருந்தும் இறக்கப்பட்ட பொருட்களைச் சேமித்து வைக்கக்கூடிய பல கிட்டங்கிகள் 1840 ஆம் ஆண்டுகளில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்று, அவற்றுள் பெரும்பாலானவை அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆயினும் வல்வெட்டித்துறையில் மூன்று கிட்டங்கிகள் இன்றும் காணப்படுகின்றன. கப்பல்கள் கட்டப்படிருந்த காலத்தில், பருத்தித்துறை துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் ஆறு கிட்டங்கிகள் இருந்தன. அக் கிட்டங்கிகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு அவை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படத் தொடங்கியதால் அவை இருந்தமைக்கான எச்சங்களையே காணமுடியவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ வழுக்கல் மடம்

வழுக்கல் மடம் என்று அழைக்கப்பட்டு வந்த இந்த மடம் 100 வருடங்களுக்கு மேல் பழமையானது. வல்வெட்டித்துறை சிவன் கோயிலுக்கு மேற்குப் புறமாக இன்றும் காணப்படும், இந்த மடமானது முழுமையாக சலவைக் கல்லினால் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**100வருடம் பழமைமிக்க வழுக்கல் மடமும் கிட்டங்கியின் தற்போதைய தோற்றமும்**



## ❖ தெருமூடி மடம்

பருத்தித்துறையின் பிரதான வீதியில்இருந்து கிழக்குப் புறமாக தும்பளை வீதியில் சிவன் கோயிலுக்கு முன்புறமாக இன்று எஞ்சி இருக்கும் பழைய தெருமூடி மடம் எமது பாரம்பரியமான மரபைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. இதைப் போன்ற அமைப்பு கண்டி அரசர் காலத்தில் அம்பலம என்ற இடத்திலும் காணப்பட்டது. இதில், இடப்புறமாகவும், வலது புறமாகவும் உள்ள இருபக்கங்களிலும் தரையில் இருந்து இரண்டு அடி உயர்த்தப்பட்டு, 40 அடி நீளத்திற்குத் திண்ணையாக்கப்பட்டு, 20 அடி உயரமான கூரை அமைக்கப்பட்டுள்ளது. பிரதான வீதிக்குக் குறுக்காக இருபக்கங்களையும் மூடி கூரை அமைக்கப்பட்டுளளது. நீண்ட தூரம் பயணம் செய்து வருபவர்கள் அதில் அமர்ந்து இளைப்பாறிச் செல்வதறகு ஏற்ற வகையில், 160 வருடங்களுக்கு முன்னர் இது கட்டப்பட்டிருந்தது. பருத்தித்துறையில் உள்ள தெருமூடி மடம் மட்டுமே இன்றும் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. இதன் கட்டடக் கலையானது, திராவிடக் கட்டடப் பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டடமானது, வெண்வைரச் சுண்ணக் கல்லினால் உருவாக்கப்பட்ட தூண்களைக் கொண்டதுடன் அதன் கபோதங்கள் மற்றும் தளம் ஆகிய சிறந்த கொத்து வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. இங்கு காணப்படும் பதினாறு தூண்களில், ஆறு தூண்களில் தமிழ் வரிவடிவில் சாசனங்கள் பெறிக்கப்பட்டுள்ளன. இத்தெரு மூடி மடத்தின் கூரையானது, எவ்வகையிலும் போக்குவரத்துக்குத் தடையாக அமையாமல் உருவாக்கப்பட்டுள்ளமை இதன் இன்னொரு சிறப்பாகும். ஏற்கனவே வடமராட்சியில் மேலும் பல தெரு மூடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடங்கள் இருந்தபோதும் அவை அழிக்கப்பட்ட நிலையில் எஞ்சியுள்ளவற்றை யாவது நாம் ஒரு அமைப்பு ரீதியாகச் செயற்பட்டுப் பேணிப்பாதுகாக்க முன்வர வேண்டும். ஆயினும் பருத்தித்துறை வாழ் மக்கள் இன்றும் அதனைப் பாதுகாத்துவருவதையிட்டு தமிழுலகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது.



❖ நெற்கொழு வைரவர் ஆலயத்தின் முன்னால் காணப்படும் 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த ஆலமரம். இன்றும் பச்சைப் பசேலென்று செழிப்புடன் காணப்படுகின்றது.

**எண்கோண வடிவில் நெடியகாட்டில் அமைந்திருக்கும் மோர் மடம்**



**திராவிடக் கட்டட மரபுகள்:**


தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வர்த்தக ரீதியாக மட்டுமல்லாது, பண்பாட்டு ரீதியாகவும், தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத் தினால், வடமராட்சி மக்களுக்கும் தென்னிந்திய மக்களுக்கும் இடையிலான உறவுகள் காலம் காலமாகப் பேணப்பட்டு வந்திருப்பதை வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, பருத்தித்துறை ஆகிய இடங்களில் காணப்படும் நாற்சார் வீட்டு அமைப்புக்களும், திராவிடக் கட்டட அமைப்பு முறையிலான வீடுகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு முகப்புக்கள்,கதவுகள் ஆகியன திராவிட கட்டட மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றன. ஆனால் இன்று அவற்றுள் பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்டு அமெரிக்கப் பாணியிலான வீடுகள் நவீன முறையில் அமைக்கப்பட்டு வருவதால், எமது பண்டைய பண்பாட்டு ரீதியிலான வளர்ச்சி அழிவடைந்து கொண்டு வருகின்றன. ஆயினும் இவ்வளவு யுத்த அனர்த்தங்களுக்கு மத்தியிலும், இன்றும் தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதிகளிலும் பருத்தித்துறை தம்பசிட்டி, தும்பளை பகுதிகளிலும் இத்தகைய திராவிட கட்டடமுறையிலான வீட்டு முகப்புத் தோற்றங்கள் அழிவடையாத நிலையில் காணப்படுகின்றன.


**வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பகுதியிலும், தொண்டைமானாறு பெரிய கடற்கரை வீதியிலும் இருக்கும் திராவிடக் கட்டட மரபில் அமைந்த வீடுகள்**




**ஆவுரஞ்சிக் கல்லும், சுமைதாங்கியும்**

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மக்கள் கூடும் இடங்கள் மற்றும் மாட்டு வண்டிப் போக்குவரத்து இடம் பெற்ற பகுதிகளில், மடங்கள், தெருமூடி மடங்கள், கேணிகள், சுமைதாங்கிக் கற்கள், ஆவுரஞ்சிக் கற்கள் என்பன பரவலாக அமைக்கப்பட்டிருந்தன.

**ஆவுரஞ்சிக் கல்**



**சுமை தாங்கிக் கல்**



வடமராட்சியில் பரவலாகக காணப்படும் ஆவுரஞ்சிக் கல் தமிழ் பண்பாட்டின் முக்கிய மரபுரிமைச் சின்னமாகக் காணப்படுகின்றது. மந்தைகளுக்கு தோலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற எரிவைப் போக்குவதற்காக பண்டைக் காலம் தொட்டு நீர் நிலைகளுக்கு அண்மையில் பல்வேறு வடிவங்களில் கற்களினால் அமைக்கப்பட்டிருந்தன. இதனை பழந்தமிழ் இலக்கியங்களில் மந்தைக் கல், தீண்டுகுற்றி, ஆரோஞ்சிக் கல், ஆவுரிஞ்சி என்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டன.

**பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்கள்**

பாரம்பரிய கலைவடிவங்களான கரக ஆட்டம் , உடுக்கு அடித்துப்பாடுதல், பொம்மலாட்டம், சிலம்பு ஆட்டம், நாட்டார் பாடல்கள், கூத்துக் கலைகள் என்பன வடமராட்சி வடக்கில் முக்கியத்துவம் வாய்ந்த கலைவடிவங்களாக அன்று தொடக்கம் இன்றுவரை பேணப்பட்டு வருகின்றன. இத்தகைய தமிழ் மக்களின் கலைவடிவங்களைப் பேணிவருவதில் வடமராட்சி வடக்கில் உள்ள ஆதிகோயிலடி, பொலிகண்டி , மாதனை , நெல்லண்டை ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம். ஆயினும் இக்கலைவடிவங்களைப் பாதுகாப்பதில் ஒரு குறிப்பிட்ட சிலரே இன்றும் முன்னணியில் உள்ளனர். அவற்றை முறைப்படி கற்று மக்கள் மயப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் எங்கள் இளைஞர்களிடம் இன்று அருகிவருவதால் அவை காலப்போக்கில் அழிந்துவிடக் கூடிய ஆபத்து நிலையில் காணப்படுகின்றன.

**பட்டம் விடும் கலை**

அழகானதும்,பல்வேறு வடிவங்களைக் கொண்டதுமாக பட்டங்களை முதன் முதலில் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள்,அவர்களை அடுத்து யப்பானியர்கள் பட்டம் விடும் கலையை அற்புதமாகச் செய்து வந்தார்கள். பட்டம் விடும் கலை முதன் முதலில் கி.மு. 468-376 காலப்பகுதியில் சீனாவின் மவுன்ற் லூ என்ற இடத்தில் வாழ்ந்த தத்துவஞானிகளான, மோசி (Mozi) Y/பான் (Lu Ban) ஆகியோரினால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தயாரிப்பதற்கு உடனடியாகக் கிடைக்கக்கூடிய பாரம்குறைந்த மூங்கில்கள் , பப்ரிக் துணி , மற்றும் வர்ணக் கடதாசிகள் ஆகியவற்றைக் கொண்டு சீனர்களால் பட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அதனை அடுத்தே யப்பான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது.


ஆரம்ப காலங்களில் இராணுவ தேவைகளுக்காகவும் பின்னர் செய்திப் பரிமாற்றம்,தூரத்தை அறிதல் போன்ற காற்றின் திசையை அறிதல் போன்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த பட்டக் கலை இன்று சிறந்த அழகை இரசிக்கும் பொழுது போக்குக் கலையாக எமது நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இது பரவலாக எல்லா இடங்களிலும் பேணப்பட்டு வந்தாலும் வல்வெட்டித்துறையிலும் , பருத்தித்துறையிலும் இக்கலையை வளர்ப்பதற்காகப் பட்டம் விடும் போட்டிகளை நடத்தி இக்கலையை மெருகூட்டிவருவதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தின் மார்கழி , தை மாதங்களில் வாடைக்காற்று வீசும் காலங்களில் பட்டம் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. வல்வெட்டித்துறை , பருத்தித்துறை பிரதேசங்களில் நகரப்புறங்களிலும் , புறநகர் பகுதிகளிலும் அழகானதும்,வெவ்வேறு வடிவமைப்புக்களையும் கொண்ட பட்டங்கள் வானில் பறக்கவிடப்படுகின்றன. தைப்பொங்கல் பண்டிகையை அடையாளப்படுத்தும் வகையில் வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினரால் பலவருடங்களாக நடைபெற்றுவரும் பட்டம் ஏற்றும் போட்டியில் பல நூற்றுக்கணக்கான வகை வகையான பட்டங்களைப் பறக்கவிட்டனர். இதில் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் திரண்டு வரும் காட்சியும் மிக அற்புதமாக இருக்கும். அதே போன்று பருத்தித்துறை இந்து இளைஞர் மன்றத்தினரால் கடற்கரையில் பட்டம் ஏற்றும் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பெட்டிப்பட்டம், மனிதஉரு, விமானங்கள், கட்டுக்கொடி, சதுரப்பட்டம், நட்சத்திரங்கள், வெளவால், கார், கொக்கு, பருந்து, டைனோசர் போன்ற பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்ட பட்டங்கள் பறக்கவிடப்படுகின்றன.

**வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் இடம் பெற்றபட்டம் ஏற்றும் போட்டியில் பறக்கவிட்பபட்ட பல்வேறு பட்டங்களும் கலந்து கொண்ட மக்களும்**



**புகைக் கூண்டுகள்**

முதலாவதாக கடதாசி புகைக் கூண்டு பிரான்சின் தென்கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அனோனி என்ற இடத்தில் வாழ்ந்த மொன்ர்கோல்பியர் (Montgolfier) சகோதரர்களால், 1783 ஜூன் 4 ஆம் திகதி வடிவமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவை கோள வடிவமாக அமைக்கப்பட்டது. இதனுள் சூடான வளியை நிரப்பி அதன மேலுதைப்பு காரணமாக உயரத்தில் பறக்க விட்டனர். இக்கலை பின்னர் யப்பான், சீனா ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது போன்று, பின்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறையின் கடலோடிகளால் வடமராட்சிக்கும் அறிமுகப்படுத்தப் பட்டது.

வல்வெட்டித்துறையில் கப்பல் கட்டும் தொழிலுடன், கப்பலோட்டி வணிகம் செய்த காலப்பகுதியில் வல்வெட்டித்துறை மாலுமிகளினால் கடல்கடந்த நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட புகைக்கூண்டுகள் வல்வெட்டித்துறைக்கே உரிய ஒரு ஒரு கலாசார சின்னமாகக் காணப்படுகின்றன. இவை வர்ணக் கடதாசிகளினால் செய்யப்பட்டு, அதன் திறந்த முனைப்பகுதியி னூடாகப் சூடான புகையை நிரப்பி வானத்தில் பறக்கவிடும் காட்சி அற்புதமாக இருக்கும். இன்றும் வல்வெட்டித்துறை மக்களால் திருவிழா காலங்களில் பல நூற்றுக் கணக்கான புகைக் கூண்டுகள் பறக்கவிடப்படுகின்றன. சுமார் ஏழு அடி தொடக்கம் நூறு அடி வரை உயரமான புகைக்கூண்டுகள் பறக்கவிடப்படுகின்றன.

**வல்வெட்டித்துறை நெடியகாட்டு இளைஞர்களால் பறக்கவிடும் புகைக் கூண்டுகள்**



**தமிழ் புலமையாளர் பாரம்பரியம்**

கிறிஸ்தவ மதப் பிரசாரம், மற்றும் மதமாற்றங்களுக்கு எதிராக தமிழையும், இந்து மதத்தையும் பேணிப்பாதுகாக்கும் வகையில் மிகச் சிறந்த புலமைப் பாரம்பரியத்தை நிலைநாட்டியதில் வடமராட்சி வடக்கில் வாழ்ந்த புலவர்களான இயற்றமிழ் போதகாசிரியர் ச.வைத்தியலிங்கம் பிள்ளை, சதாவதானி கதிரைவேற்பிள்ளை, கந்தமுருகேசனார் ஆகியோர் ஈழத்தில் மட்டுமல்லாது, இந்தியாவுக்கும் சென்று ஈழத்தின் புகழை நிலைநாட்டியிருந்தமை வடமராட்சியின் புலமைப் பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளது. இம் மூன்று புலவர்களும் கிறிஸ்தவ மத பிரசாரத்திற்கு எதிரான கண்டன நூல்கள் மற்றும் தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்களை வெளியிட்டிருந்தனர்.

**தமிழ்தாத்தா கந்தமுருகேசனார்**

வடமராட்சியில் அமைந்துள்ள தென்புலோலியில் புற்றளை என்னும் கிராமத்தில் கந்தப்பர், தெய்வானைப்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக 27.04.1902 ஆம் ஆண்டு பிறந்தவர்தான் “உபாத்தியாயர்” என்றும், “தமிழ்தாத்தா” என்றும் அழைக்கப்பட்ட அறிஞர் கந்தமுருகேசனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒரு சிறந்த தமிழ் அறிஞராக இருந்தபோதும், ஈழத்தின் மிகச் சிறந்த பகுத்தறிவுச் சிந்தனாவாதியாகவும், சமூக சீரிதிருத்தவாதியாகவும், தர்க்கவாதி யாகவும், பல்துறை விற்பன்னராகவும் விளங்கியதற்கும் மேலாக மனித நேயம் கொண்ட ஒரு மனிதனாக வாழ்ந்த கலைப் பொக்கிசமான கந்தமுருகேசனார் 14.06.1965 இல் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

### சதாவதானி கதிரைவேற்பிள்ளை (1844-1907)

யாழ்ப்பாணம்,வடமராட்சியில் அமைந்துள்ள மேலைப்புலோலியில் 1884 ஆம் ஆண்டு பிறந்த கதிரைவேற்பிளளை அருகில் இருந்த மேலைப் புலோலி சைவப் பிரகாச விததியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். குடும்பத்தின் வறுமை காரணமாக அவரால் ஆறாம் வகுப்பிற்கு மேல் கல்வியைத் தொடர முடியாது போகவே மிக இள வயதிலேயே தமிழகத்திற்குச் சென்று தனது கல்வியை மேற்கொண்டார். தமிழின் மீதான ஆர்வத்தினால், சென்னைக்குச் சென்ற கதிரைவேற்பிள்ளை அவர்களை, வித்துவான் தி.த.கனகசுந்தரம்பிளளை அவர்கள் மாணவராக ஏற்றுக்கொண்டார். வடமொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்ற கதிரைவேற்பிள்ளை, தமிழகத்தின் சைவ மடங்களாலும், குறுநில மன்னர்களாலும், புரவலர்களாலும் வழங்கப்பட்ட நாவலர், சைவசித்தாந்த மகாசரபம், அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், மகாவித்துவான், பெருஞ்சொற்கொண்டல் ஆகிய பட்டங்களைப் பெற்று வடமராட்சி மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் கவிராயர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் மற்றும் புரவலர்கள் முன்னிலையில் கதிரைவேற்பிள்ளை சதாவதானம் செய்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தி "சதாவதானி" என்ற உயர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். சென்னைத் தமிழறிஞர்கள் பலரின் வேண்டுகோளை ஏற்ற கதிரைவேற்பிள்ளை அவர்கள்,தமிழ் அகராதியைத் தயாரித்து வெளியிட்டார்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராகத் திகழ்ந்த கதிரைவேற்பிளளை அடிக்கடி சென்னையில் இருந்து நீலகிரிக்குச் சென்று வந்தார்.இதே போன்று ஒரு தடவை நீலகிரிக்குச் சென்றபோது, 1907 ஆம் ஆண்டில் அங்கு கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டு,உடல் நலிவுற்ற நிலையில் இறைவனடி சேர்ந்தார். திரு.வி.க தமது குருவின் நினைவாக அவரது வாழ்க்கையை அரியதொரு நூலாக வெளிட்டு தனது நன்றிக் கடனை நிறைவு செய்தார்.

### இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை.ச.வைத்திலிங்கம் (1843-1901)

தமிழ்கூறும் உலகில் இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை.ச.வைத்திலிங்கம் பேசப்படும் புலவர், 1843 இல் வல்வெட்டித்துறையில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் சங்கரப் பிள்ளை. உடுப்பிட்டி சிவசம்பு புலவரின் மாணாக்கர். இவர் பாரதி நிலைய முத்திராட்சகசாலை என்ற அச்சகத்தை வல்வெட்டித்துறையிலேயே நிறுவியதோடு,ஒரு தமிழ் பாடசாலையையும் நடத்தி வந்தார். 1878 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்பியகப்பொருள்" என்ற இலக்கண நூலுக்கு விளக்கம் எழுதலானார். "சைவஅபிமானி" என்ற பத்திரிகையை பாரதி நிலையத்தினூடாக மாதமொரு தடவை வெளியிட்டு வந்தார்.

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் எழுதிய "சைவமகத்துவம்" என்ற நூலுக்கு கிறிஸ்தவர்களால் எழுப்பப்பட்ட கண்டனங்களை மறுத்து,"சைவமகத்துவ பானு" என்ற மறுப்பு நூலை வெளியிட்டு சைவத்தின் மகத்துவத்தை உணரவைத்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் இவருக்கு "இயற்றமிழ் போதகாசிரியர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இவர் சைவத்தையும் , தமிழையும் முன்னிலைப்படுத்தும் வகையில் சமய நூல்கள், தலவரலாறுகள், கண்டன நூல்கள், உரை நூல்கள் எனப்பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் குறிப்பாக , செல்வச்சந்நிதி முறை , சநிதாமணி நிகண்டு(1876),வல்வை வைத்திசேர் பதிகம், வல்வை வைத்தியேசர் ஊஞ்சல், சாதி நிரணய புராணம், சைவ மகாத்மியம், போன்றவற்றையும்,உரை நூல்களாக சிவராத்திரி புராணம், கந்தபுராணத்து அண்டகோசப் படலவுரை, தெய்வயானை திருமணப்படலவுரை,சூரபத்மன் வதைப்படலம் ஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

**உலக சாதனையாளர்கள் வரிசையில் வடமராட்சியின் மைந்தர்கள்**

ஏனைய பிரதேசங்களில் இல்லாத ஒரு பெருமையாக உலக சாதனைகளை நிலைநாட்டி வடமராட்சியின் பெருமையை உலகறியச் செய்த பல சாதனையாளர்களை வடமராட்சி மண் கொண்டிருந்தபோதிலும், இக்கட்டுரையின் விரிவஞ்சி ஒரு சிலர் மட்டும் நினைவு கூரப்படுகின்றனர்

**நீச்சல் வீரன் நவரத்தினசாமி**

தொண்டைமானாற்றைச் சேர்ந்த நீசசல் வீரர் நவரத்தினசாமி முதன்முதலில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனையாளர் என்ற பெயரைப் பெற்றவர். இவரது சாதனையை பிரித்தானிய மகாராணியும் பாராட்டிக் கௌரவித்தமை வடமராட்சிக்குக் கிடைத்த கௌரவம். அதேவேளை அவரது சாதனையை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் 1958 ஆம் ஆண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அவரது சாதனையையும், வரலாறையும் நினைவு கூரும் வகையில் 4ஆம் தர பாடநூலின் ஒரு அலகாகச் சேர்த்துக்கொண்டது. பருத்தித்துறையில் நீச்சல் தடாகம் அமைப்பதற்காக நினைவுக்கல் ஒன்று நாட்டப்பட்டுள்ளபோதும் அது தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

**ஆழிக்குமரன் ஆனந்தன்**

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்ததுடன், நீண்ட நேரம் தொடர்ச்சியாக நடத்தல்,தொடர்ச்சியாக 135 மணித்தியாலங்கள் வரை ருவிஸ்ற் நடனம் போன்ற பல்வேறு வகைப்பட்ட ஏழு உலக சாதனைகளைப் படைத்து கின்னஸ் சாதனைப் பதிவேட்டில் பெயர் பொறித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு இலங்கை அரசாங்கம் "பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த குமார் ஆனந்தன்" என்ற குறிப்புடன் ஒரு முத்திரையை வெளியிட்டுக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீச்சலுக்குத் தயாரகும் ஆழிக்குமரன் ஆனந்தனும், நீச்சலை முடித்துச் சாதனையுடன் திரும்பும் நீச்சல்வீரன் நவரத்தினசாமியும் (படங்கள்)*






ஆழிக்குமரனுக்கு அரசு வெளியிட்ட முத்திரை(படம்) கலைஞர் ஸ்ரீசங்கர் நடித்த திரைப்படத்தின் சுவரொட்டி(படம்)




**கலைஞர் ஸ்ரீசங்கர்:**




பருத்தித்துறையைச் சேர்ந்த கலைஞர் ஸ்ரீசங்கர் சிறந்த நாடகக் கலைஞராகவும், சினிமா நடிகராகவும் புக்ழ் பெற்று பருத்தித்துறை மண்ணுக்கும் ஈழத்திற்கும் பெருமை சேர்த்தவர். இவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிறந்த திரைப்படங்களான, மஞ்சள் குங்குமம், குத்துவிளக்கு ஆகிய படங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்துப் புகழ் பெற்றதால், தமிழகத்தில் ஏ.பி.நாகராஜனின் சிறந்த பிரமாண்டமான தயாரிப்பான "இராஜராஜ சோழன்" திரைப்படத்தில், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் இணைந்து ஈழத்துப் புலவராக நடித்துப் பாராட்டைப் பெற்றவர். குத்து விளக்கு திரைப்படத்தின் வெளிப்புறக் காட்சிகள் பல பருத்தித்துறையிலும், அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் படமாக்கப் பட்டமை குறிப்பிடத் தக்கது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**தற்காப்புக் கலையில் சாதனை படைத்தவர்கள்:**

பெரிய பாறாங் கற்களைத் தூக்குதல்,பாரம் தூக்குதல்,மோட்டார் காரை வாயினால் இழுத்தல், மோட்டார் காரை நெஞ்சின் மேல் ஏற்றுதல,50 கிலோ கிராம் நிறைகொண்ட சீமெந்துப் பையை வாயினால் தூக்குதல் கர்லாக்கட்டை வீச்சு,உடல் வலுவூட்டும் சாகசங்கள், கம்படி சிலம்படி, மல்யுத்தம்,குத்துச் சண்டை போன்ற மயிர்க் கூச்செறியும் சாதனைகளைப் படைத்த பல சாதனை யாளர்கள் வடமராட்சி மண்ணுக்குப் பெருமை சேர்த்திருக்கின்றனர்.அவர்களுள் பருத்தித்துறையைச் சேர்ந்த மலாயன் சாண்டோ வ.நடராசா, சாண்டோ. எம்.துரைரத்தினம் ஆகியோரையும் கம்படி சிலம்படியில் சாதனைபுரிந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.சோதிசிவம், ஆகியோரின் அன்றைய சாதனைகள் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கவேண்டுமானால், இன்றைய எமது இளைஞர்கள் அத்தகைய சாதனைகளைப் படைப்பதற்கு முன்வரவேண்டும்.

**பறவைகள் சரணாலயத்தின் தேவைகள்:**

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்கு முன்பாக ஆற்றங்கரைப் பகுதியில் உள்ள கடல் நீரேரியில் காலத்திற்குக் காலம் பல நூற்றுக்கணக்கான அரிய குடிபெயரும் பறவைகள் வந்து போவதால் அவற்றிற்கான சரணாலயம் அமைக்கப்பட்டு அவற்றை ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை சுற்றாடல் மத்திய அதிகார சபை மேற்கொள்ள வேண்டும். இவை பல ஆயிரக் கணக்கான கிலோ மீற்றர் தூரங்களுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் இருந்து “குடிபெயர்ந்து” வருகின்ற காட்சி மிகவும் அற்புதமாக இருக்கும்.

**ஆற்றங்கரையில் இரைக்காகக் காத்திருக்கும் பெலிக்கன் இனப் பறவையும், தூரத்தில் தெரியும் வெளிக்கள நிலையக் கட்டடமும்**




**வடமராட்சியின் சிறப்பு வாய்ந்த உணவுகள்:**

வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை வடையும்,வல்வெட்டித்துறையில் உள்ள எள்ளுருண்டையும், மிகவும் பிரபலம் வாய்ந்த உணவுகளாக இன்றும் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பருத்தித்துறையின் தட்டை வடையும், வல்வெட்டித்துறையின் எள்ளுருண்டையும்**






**பருத்தித்துறை தட்டை வடைக்கும், வல்வெட்டித்துறை எள்ளுருண்டைக்கும் உலகளாவிய ரீதியில் செல்வாக்கு இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கூட இங்கு வந்து இவற்றை வாங்கிச் செல்லும் அளவுக்கு அந்த உணவுகள் பிரபல்யமடைந்துள்ளது. இதனை நீண்ட நாட்கள் பழுதடையாமல் சேமித்துக்கூட வைக்கலாம்.**

**பிரதான போக்குவரத்துச் சாதனமான இருந்த தட்டிவான்கள்**

1940 களில் இருந்து பருத்தித்துறை கொடிகாமம் வீதி. பருத்த்தித்துறை நெல்லியடி வீதி, வல்வெட்டித்துறை யாழ்ப்பாணம் வீதி ஆகிய பாதைகளில், பிரதானமான பொதுமக்களின் போக்குவரத்துச்சாதனமாக அன்று தட்டிவான்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அன்றைய எமது மக்களின் தொழில் நுட்பத் திறன் விருத்தியை இந்த வாகனங்களை உருவாக்கிய முறையைக் கொண்டு அறியமுடிகின்றது. அன்று யாழ்ப்பாணத்தில் பிரபலமான போக்குவரத்துச் சாதனமாக இருந்த "செவர்லெற் மோட்டார் கார்" கடினமான பாவனைக்கும், பொதுமக்களின் பாவனைக்கும் ஏற்றதாக இருந்ததால் அவை சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னர் அதன் வடிவத்தை தமது தொழில் நுட்ப ஆற்றலினால், முற்றாகவே மாற்றியமைத்து பிரயாணிகளுக்கான பொதுப் போக்கு வரத்துச் சாதனமாக எம்மவர்களால் மாற்றி அமைக்கப் பட்டது. அதன் முகப்பு கடினமான இரும்பினால் செய்யப்பட்டு, வெளியே கோள வடிவில் தள்ளிக் கொண்டிருக்கும். அதன் உடற்பகுதி (Body) மரப்பலகை யினால், இரும்புச் சட்டங்களினால் பிணைக்கப் பட்டிருக்கும். அதனுள்ளே மரப்பலகையினால் செய்யப்பட்ட ஆசனங்கள், குறைந்த உயரமுடைய தாழ்வான கூரை, எந்தக் கரடு முரடான பாதையையும் இலகுவில் தாண்டி ஓடக்கூடிய சில்லுகள், கண்ணாடிகள் அற்ற யன்னல்கள் என்பவற்றுடன், அதனுடைய சாரதிப் பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ள விசேட "பாம்..பாம்.." என்று ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும் காற்றை அமுக்கி இயக்கும் ஒலி எழுப்பி (Horn) ஆகியவையே தட்டிவான்களின் சிறப்பியல்பாகக் காணப்பட்டன. 1960 களில் வல்வெட்டித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் கச்சேரிவரை காலை 7.30 மணிக்கு வல்வெட்டித்துறையில் இருந்தும், பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். கச்சேரியில் இருந்தும் தினசரி அரச அலுவலர்களை ஏற்றி இறக்குவதற்கான போக்குவரத்துச் சேவை தட்டிவான் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*( தட்டிவானின் படம்- புகைப்பட உதவி :விக்கிப்பீடியா - வலைத்தளம்)*



**முடிவுரை**

வடமராட்சியின் பண்பாடுகளும் மரபுகளும்,உணவுப்பழக்கவழக்கங்களும் ஏனைய பிரதேசங்களை விடத் தனித்துவமானவையாக இருந்தபோதும், அவற்றுள் இன்று புதிய தலைமுறையினர் அறிந்து கொள்ளமுடியாத அளவுக்கு ஒரு பாரிய தலைமுறை இடைவெளி காணப்படுவதால், அவை அடுத்த சந்ததியனரால் அறிந்து கொள்ளமுடியாது போகின்ற ஒரு நிலை இன்று காணப்படுகின்றது. அவற்றை எழுத்துருவாகவோ, ஒலி, ஒளி வடிவத்திலோ ஆவணப்படுத்தவேண்டிய ஒரு தேவை இன்றுள்ளதால், இன்றும் அந்த மரபுகளையும் பாரம்பரியங்களையும் அறிந்து வைத்துக் கொள்கின்ற கலைஞர்கள்,எழுத்தாளர்கள்,மற்றும் அறிவு ஜீவிகள் ஒன்றிணைந்து அதனை சிறந்த முறையில் ஆவணப்படுத்தும் வகையில் ஒரு அமைப்பாகச் செயற்பட முன்வரணேண்டும். தமிழனின் அடையாளத்தைக் காட்டுகின்ற வரலாறுகளை ஆவணப்படுத்துவதனூடாக இந்த மண்ணில் தமிழர்கள் என்ற ஒரு தேசிய இனம் வாழ்ந்து வருவதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்தலாம்.

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கின் குடிநீர் இடர்பாடுகள் ஒரு எந்திரியலாளனின் பார்வை

எந்திரி. எஸ். எஸ். சிவகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொறியியல் பீடம்,
கிளிநொச்சி,
யாழ் பல்கலைக்கழகம்.

## அறிமுகம் :


யாழ்ப்பாணம் 1000சதுரகி.மீ$^2$ நிலப்பரப்பளவு கொண்ட ஓர் குடாநாடாகும். இதில் வடமராட்சி நீரேரி, உப்பாறு நீரேரி, வழுக்கையாறு மற்றும் ஆனையிறவு நீரேரி ஆகியவை முறையே 752,515,100சதுர கி.மீ$^2$ நிலப்பரப்பை பரப்பாலும் 287,212,104,907சதுர கி.மீ$^2$ நீரேந்து பகுதியாலும், 160சதுர கி.மீ.$^2$ கொண்ட இந்து சமுத்திரக் கரையாலும் சூழப்பட்டிருப்பதுடன், குடாநாட்டின் சகல தரைப்பிரதேசங்களும் கரையிலிருந்து 10 கி.மீ தூரத்திற்கு மேற்படாத எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளன. இதனால் தரைப் பிரதேசத்திற்குள் உப்பு நீர் இலகுவாகப் புகுந்து விடும் ஏதுநிலை வலுவாக உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளம், குறிப்பாக நிலத்தடி நீர்வளம். தொண்டைமானாறு, அரியாலை மற்றும் அராலி ஆகிய இடங்களிலுள்ள தடுப்பணைகளின் நீண்ட காலப் பராமரிப்பின்மையாலும் சீரற்ற முகாமைத்துவத்தாலும், முற்றாக மாசடைந்துள்ளது. உப்பு நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கென அமைக்கப்பட்ட அணைகளை (SWE bunds) பராமரித்துக் கொள்ளாமல் விட்டதன் விளைவாகவே உப்பு நீர் உட்புகுதல் தடையின்றித் தொடர்ந்திருக்கிறது. இத்துடன் குப்பை கூளங்களின் தேக்கமும், மலசலகூடக் குழிகளும், அதிகளவு இரசாயனப் பசளைப் பாவனையுமென,இவை எல்லாமே நிலத்தடி நீரின் தரத்தைப் பாதிக்கின்றன. இவற்றின் விளைவாக மக்கள் தங்கள் கிணறுகளிலிருந்து நல்ல தரமான நீரைப் பெறுவதில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. உப்பு நீர் உட்புகுவதால் பலநூறு ஏக்கர் நிலமும், நூற்றுக்கணக்காண கிணறுகளும் கைவிடப்படும் நிலைக்கு வந்துள்ளன.

மண்ணின் தர அடிப்படையில், யாழ்ப்பாணக் குடாநாடு இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்குப்பிரிவு சுண்ணைக்கற்களும், அங்குள்ள மண்ணியல்வழிப்பட்டு தூளாகிப்போன சுண்ணப் படிவுகளாலும் ஆனது. கிழக்குப் பிரிவு சுண்ணக்கற்களை அடிப் பாராகக் கொண்ட மணல் பகுதியாகும். இந்த இரண்டு பகுதிகளும், வடக்கு-தெற்காக ஓடி,அரியாலையில் யாழ்ப்பாண நீரேரிக்குள் விழும் உப்பாறு நீரேரியால் பிரிக்கப்படுகின்றன. மேற்குப் பக்கத்தில், தெல்லிப்பளையின் மேற்கே உற்பத்தியாகும் வழுக்கை ஆறு என்ற மாரிகால நீரோடை தெற்கு நோக்கி ஓடி அராலியில் யாழ்ப்பாண நீரேரிக்குள் விழுகிறது. கிழக்குப் பகுதியில் தாளையடியில் உற்பத்தியாகும் 'வடமராட்சி' என்ற இன்னொரு நீரேரி கடற்கரைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாகவும் சமாந்தரமாகவும் ஓடி கரவெட்டியைச் சென்றடைகிறது. தொடர்ந்து மேற்கு நோக்கித் திரும்பி வாவியாக விரிந்து இறுதியாக தொண்டைமானாறு என்னும் ஒடுங்கிய கால்வாய் வழியே கடலைச் சென்றடைகிறது. இந்திய மன்னன் தொண்டைமானால் அகழப்பட்டதால் இது தொண்டைமானாறு என்ற பெயரைப் பெற்றது.




**யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளம், குறிப்பாக நிலத்தடி நீர்வளம் மாசடைந்தமைக்கான காரணங்கள்:**

❖ தொண்டைமானாறு, அரியாலை மற்றும் அராலி ஆகிய இடங்களிலுள்ள தடுப்பணைகள் சீராகப் பேணி, ஒழுங்காக முகாமைத்துவம் செய்யப்படாதமை.

❖ கடந்த காலத்தில், திட்டமிடப்பட்ட மீள்வலுவூட்டல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாமை.

❖ உப்பு நீரை வெளித் தள்ளும் அணைகள் (SWE) பராமரித்துக் கொள்ளாமை.

❖ குப்பை கூளங்களின் தேக்கம் மற்றும் மலசலகூடக் குழிகளால் ஏற்படும் மாசாக்கம்.

❖ இரசாயன பசளையின் மிதமிஞ்சிய பாவனை.

இவற்றின் விளைவாக மக்கள் தங்கள் கிணறுகளிலிருந்து நல்ல தரமான நீரைப் பெறுவதில் பிரச்சனைகள் தோன்றியுள்ளன. உப்பு நீர் உட்புகுவதால் பலநூறு ஏக்கர் நிலமும், நூற்றுக்கணக்கான கிணறுகளும் கைவிடப்படும் நிலைக்கு வந்துள்ளன.

**2. கருதுகோள்**

யாழ்ப்பாண நீரேரிகள் கடலுடன் சங்கமிக்கும் மூன்று முக்கிய முகத்துவாரங்களான தொண்டைமானாறு, அரியாலை மற்றும் அராலி ஆகிய இடங்களிலுள்ள தடுப்புக் கதவுகள் உப்பு நீர் ஊடுருவுவதற்கும் இடையே தாக்கம் செலுத்தும் நேரடித் தொடர்பொன்று உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. எண்பிப்பு சரியென நிறுவுதல் (தகுந்த காரணம் தருதல்)

விவசாயம் சார்ந்த , அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு, உணவு உற்பத்தியில், யாழ்ப்பாணக் குடாநாடு கணிசமான பங்களிப்பை வழங்குகிறது. நிலமும் நீரும் உவர்த்தன்மையடைவதே இப் பங்களிப்பு தாராளமொன்றில்லாமல், மட்டுப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாகும். இந்த வகையில் உவரடைந்த நிலத்தைச் செப்பனிட்டு மீட்டெடுப்பதும், நீர் உவராவதைத் தடுப்பதுமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முன்னுரிமை நடவடிக்கைகளாகும்.

இருக்கும் பத்து மில்லியன் ஹெக்டயர் (ha) நிலத்தில் 20 வீதம் ஏரிகளாக உள்ளதுடன் 25 வீதம் உவர்த் தன்மையால் உற்பத்தித் திறனற்றதாகவும் இருக்கின்றது. நீர் வளத்தில் 35 வீதம் உற்பத்திக்குப் பயனற்ற உவர்தன்மையடைந்தும் உள்ளது. ஏரிகளை அண்மித்த நிலங்களையும் நீர்வளத்தையும் உற்பத்தித் திறனுள்ளதாக மாற்றுவதற்கு, விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைத் தரமுயர்த்தும் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

நீரேரிகளில் நீர்வாழ் உயிரின அபிவிருத்தியைக் கவனத்தில் எடுப்போமாயின் அது சாதகமான அளவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாக இல்லை. ஏரிகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து, நண்டு(கொழுக்க வைத்தல்), இறால் , கணவாய் உற்பத்தியைப் பெருக்கினால் ஏரிகளை ஜீவனோபாயத்திற்கு நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரம் உயர்வதுடன் ஏரி சார்ந்த பிரதேசத்தின் பல்லுயிர் தன்மையை அதிகரித்து அந்த வளர்ச்சியையும் பேணி வரலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தளவில் நிலத்தின் தன்மை சார்ந்த இன்னுமொரு முக்கிய விடயம் என்னவெனில் சுண்ணக்கற்கள் நிறைந்திருக்கும் காரணத்தால் 'புரமை' (Porpsity) எனப்படும் நீர் பொசிந்து உள்ளீர்க்கப்படும் தன்மை நிறைய உள்ளது. இந்த துவார அமைப்பு கடற்கரையோர நிலத் தொடருடன் இணைவதால் நிலப்பகுதிக்குள் சுண்ணக்கற்கள் வழியே உப்பு நீர் உட்புகுதல் நிகழ்கிறது. காலப்போக்கில் இது உப்புத்தன்மையை நீடித்து நிலைக்கச் செய்துவிடும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் பயிர்ச் செய்கையையும் மனித உயிர் வாழ்வையும் மிகக் கடுமையாகப் பாதிக்கும். ஆக, நீரேரிகளின் முகத்துவாரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வான் கதவுகளை நீரோட்டத்தின் தன்மைக்கேற்பத் திறந்து -மூடி,உப்புநீர் உட்புகுவதனை , ஒழுங்கைப் பேணுவதன் மூலமே மேற்கூறிய பேராபத்தைத் தவிர்க்க முடியும்.

இந்தத் தாக்கங்களைத் தவிர்ப்பதற்குகந்த ஆய்வின் மூலம் எய்தப்படும் விஞ்ஞான ரீதியான எண்பியப்பு (Justification), நீரேரிப் பகுதித் தடுப்பணைகளைப் பேணி, ஒழுங்காக பராமரித்துக் கொள்வதனை வலியுறுத்துவதுடன் நீரோரிகளின் சுற்றயலிலுள்ள உவரடைந்த நிலங்களை மீளப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலத்தடி நீரின் மிதமிஞ்சிய பாவனை**

உயிரினங்களின் உயிர்வாழ்வுக்கு நீர் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். உலகிலே மொத்தமாக 1400 மில்லியன் கனகிலோமீற்றர் நீர் உள்ளது. உலக சமநிலையில் இதன் அளவை கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியாது (ஆனால் இதன் இருப்பின் விகிதத்தையே மாற்ற முடியும்).

மேலே குறிப்பிட்ட அளவு நீரில் 97.4% நீரானது உப்பு நீராகும். இதில் 2% ஆன நீரானது பனிக்கட்டியாக துருவங்களிலும் அண்டிய பகுதிகளிலும் உள்ளது. எஞ்சிய 0.6% ஆன 8.4 மில்லியன் கனகிலோமீற்றர் நிலத்தடியில், நிலத்தடி நீராக 8 மில்லியன் கனகிலோமீற்றரும், மனிதனால் உண்டாக்கப்பட்ட குளங்கள், மற்றும் இயற்கை ஆறுகள் ஏரிகளில் 0.4 மில்லியன் கன கிலோமீற்றர் நீரும் உண்டு. இருந்தாலும் இந்த நீர் இருப்புக்கூட சரிசமனாக எல்லா இடமும் பரம்பி இல்லாது சில இடங்கள் நிரந்தர பாலைவனமாகவும், சில இடங்கள் நீர் கூடிய சோலைகளாகவும் இயற்கையின் படைப்பில் உள்ளது.

இலங்கையில் நீர்ப்பாவனையானது மனிதனால் உண்டாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் இருந்தும், இயற்கை ஆறுகளில் இருந்தும் மற்றும் நிலத்தடி நீரில் இருந்தும் பெறப்படுகின்றது. அண்மைய காலங்களில் இலங்கையில் உள்ள அனேகமாக எல்லா நீரூற்று பிரதேசங்களும் நீர்த்தேக்கங்களாக மாற்றப்பட்டு விட்டதனால் வீட்டுப்பாவனை மற்றும் சனத்தொகைக்கேற்ப அதிகரித்து வரும் விவசாய நடவடிக்கைகளுக்கு நிலத்தடி நீரை பாவிக்கும் தன்மை அதிகரித்து வருகின்றது.

நிலத்தடி நீரானது மூன்று வகையில் நிலத்தில் இருக்கின்றது.

- ❖ மிக ஆழமான இரட்டை ஊடுபுகவிடா பாறைகளுக்கிடையில் உள்ள நீர்.
- ❖ ஊடு புகவிடா பாறையில் மேல் தொங்கியுள்ள நீர்.
- ❖ மழை நீர் நிலத்தினுள் சென்று மண்ணில் உள்ள இடைவெளிகளில் தேங்கி இருக்கும் நீர்.

இம்மூன்றிலும் மூன்றாவது நீரானது ஒரு தற்காலிக இருப்பேயாகும். இரண்டாவது ஓரளவிற்கு நம்பகத் தன்மையுள்ள இருப்பாகும். இந்த நீர் நம்மால் அனேகமாக கிணறுகளில் ஊற்றின் மூலம் பெறப்படும் நீராகும். முதலாவது வகை நீரானது மிகவும் பாரிய நிலத்தடி நீர்த்தேக்கங்கள் போன்றதாகும். இந்நீரானது நிலத்தின் கீழ் தொடர்ச்சியாக ஆறுகளால் மீள் செலுத்தப்படக் கூடிய நம்பகத்தன்மை கொண்ட நீராகும். இது ஆழ் துளைக் குழாய்க் கிணறுகளில் பெறப்படும் நீராகும்.

இவ்வாறாக இருப்பில் உள்ள நீரை முக்கியமாக இரண்டு வகைகளில் நாங்கள் நிலத்தில் இருந்து பெறுகின்றோம்.

- ❖ வாளி மூலம் அள்ளுதல்
- ❖ பம்பிகள் மூலம் வெளியே எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறைகளில் வாளி மூலம் வெளியே எடுக்கும் நீரின் அளவானது மிகவும் குறைவாகவும் நீர் அள்ளும்போது நீர்ஊற்றிலிருந்து கிணற்றிற்கு செலுத்தப்படும் நீரின் அளவிலும் குறைவாக இருப்பதால், இதனால் எந்த ஒரு பாதிப்பும் நிலத்தடி நீரிற்கு ஏற்படாது.

பம்பிகள் மூலம் நீர் எடுக்கும்போது இரண்டு முறைகள் கையாளப்படுகின்றது. ஒன்று கைப்பம்பிகள் மற்றையது மின்சார அல்லது எரிபொருள் பம்பிகள். கைப்பம்பிகள் மூலம் நீர் வெளியே எடுக்கும்போது வாளி மூலம் எடுப்பது போல இருப்பதால் நிலத்தடி நீரின் இருப்பில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது. ஆனால் மின்சார மற்றும் எரிபொருள் பம்பிகள் மூலம் நீர் எடுக்கும்போது நீர் பம்பும் விகிதமானது நீர் ஊறும் விகிதத்திலும் கூட இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்து செல்லும்.

இவ்வாறாக நீர்ப்பயன்பாடு நிலத்தடி நீரின் இருப்பில் தாக்கங்களை உண்டு பண்ணுவதுடன் மட்டுமல்லாமல் நிலத்தின் பலத்தைக் குறைப்பதால் நீண்ட காலக்கண்ணோட்டத்தில் இப்பகுதிகளில் உள்ள கட்டிட அத்திவாரங்கள் இறங்குதல் மற்றும் சில சமயங்களில் மிகவும் நுண்ணியதாக பூமி அதிர்வுக்குக்குக் கூட இட்டுச்செல்லலாம்.

மேலும் மித மிஞ்சிய நீர் பம்புதலால் ஏற்படும் மிகப் பெரிய தாக்கம் நீரின் குணாதிசயத்திற்கு உட்பட்ட தாக்கமாகும். நிலத்தடி நீரானது பொதுவாக நன் நீராகவும் கடலை நோக்கிச் செல்லும்போது அதன் உவர்த்தன்மை சற்று அதிகரித்துக் கொண்டு செல்லும். இத்தன்மையானது மாரி காலத்தில் குறைவாகவும் கோடை காலத்தில் சற்று கூடியதாகவும் சாதாரண சூழ்நிலையில் ஒரு சமநிலையிலும் இருக்கும். அதாவது நிலத்தடி நீர் சமநிலையில் கடல் நோக்கிய ஒரு நாட்டம் எப்போதும் காணப்பட்டுக் கொண்டிருக்கும். மிகவும் வரண்ட கோடை காலங்களில் மிக மிகச் சிறிய அளவில் எதிர்த் திசை ஓட்டம் இருக்கலாம்.

ஆனால் நீர்மட்டம், நீர்பரப்பும் விகிதம் கூடினால் தாமதமாக எதிர் ஓட்டத்தை தூண்டி நிலத்தடிச் சமநிலையைக் குழப்புகின்றது. இந்நிலையானது நிலத்தடி நீரை உப்பு நீராக மாற்றுவதனால் காலப் போக்கில் இப்பிரதேசம் உவர் நீர்ப் பிரதேசமாக மாறிவிடும். இவ்வாறான அபாயம் அநேகமாக குடாநாடுகள் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட வாய்ப்புண்டு. கரையோரப் பிரதேசம் என்று கூறும்போது கடற்கரைகளில் இருந்து 50 கிலோ மீற்றர் உள்ளே உள்ள பிரதேசங்கள் கூட இவ்வாறான பாதிப்பிற்கு உட்படக் கூடிய ஏதுவாக உள்ளது.

இருந்தாலும் சனத் தொகைப் பெருக்கத்திற்கேற்ப எமது உணவுத்தேவை அதிகரித்துக் கொண்டு செல்வதால் பொது விவசாயத் தேவைகட்டு நில மேல் நீர் வளம் குறைவாக உள்ளதால் நிலத்தடி நீர்ப் பாவனை தவிர்க்க முடியாத ஒன்றாக வருவதால் நிலத்தடி நீரை நாங்கள் கோடை காலங்களில் தொடர்ச்சியாக பாவிக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாதிருப்பின் மழை காலங்களில் இயற்கையான நிலத்தடி நீரிற்கு மழை நீரின் பங்களிப்பினை கூட்டக்கூடிய மாற்று வழிகளை கையாள வேண்டும். அதாவது மழை நீரை இயலக்கூடியளவிற்கு தேக்கி வைத்து நிலத்தில் ஊறவிடுதல், கடலுக்கு மழை நீர் செல்லாது தடுத்து நிலத்தில் ஊறவிடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சில சிறிய குளங்களை நீர்ப்பாசனத் தேவைகட்கு அல்லாது நிலத்தில் ஊறவிடுவதற்காக மட்டும் பாவித்தல் ஆகிய முறைகளைக் கையாளலாம்.

பண வசதி படைத்த நாடுகளில் செயற்கை முறையில் மாரி காலங்களில் நீர் நிலத்தின் கீழ் பம்பிகள் மூலம் பாய்ச்சும் மீள்பாய்ச்சல் முறையும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

## நிலநீர் -கேந்திர முக்கியத்துவமான வளம்

நீர்ப்பாசனத்திற்கான மேற்பரப்பு நீர் ஒரு மட்டுப்படுத்தப்படும் வளமாக விளங்குவதனால், இணைப்பிலான உபயோகம் உட்பட இன்னொரு வளமாக நிலநீரின் உபயோகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் கேந்திர முக்கியத்துவமான வளமாக அதன் நிலைத்திருத்தல் மற்றும் உற்பத்தித்திறனான உபயோகம் ஆகியவற்றைத் தடுக்கக்கூடிய மறுதலையான எடுத்துக்காட்டல்களை பாகுபாடான சுரண்டல் வழங்குகின்றது.

பாரம்பரிய கமத்தொழில் பகுதிகளில், விசேடமாக உலர் வலயத்தில் ஏனைய துறைகளிலான போட்டித் தன்மையான கிராக்கி ஏற்கனவே நீர் பற்றாக்குறையை விளைவிக்கின்றது. வளப்பட்டியலுக்கு வழிவகையின்றி ஒழுங்குபடுத்தப்படாத சுரண்டலின் காரணமாக இரண்டாந்தர மூலமாக நிலநீரின் இணைப்பிலான உபயோகம் ஆரம்பநிலை மட்டங்களைப் படிப்படியாக அடைகின்றது. தற்போது நோக்கப்படுவது போல், நீரின் பகிரங்க சிறப்புத் தன்மையைக் கருத்திற்கு எடுக்கும்போது, மேற்பரப்பு நீரைப்பெறுவதற்கான அடைதல் தோன்றும் போது பிரித்தெடுப்புக்கு பௌதீக ரீதியான இடர்பாடுகள் இல்லை எனத் தோன்றும் உண்மையினால், அது இந்தப் பொதுவான சிறப்பின் தன்னிச்சையான சுரண்டலை ஊக்கப்படுத்துகின்றது. ஆற்றுப்பாய்வுகள் உட்பட மேற்பரப்பு நீருக்கான அதன் தொடர்புகளின் கரிசனை இல்லாமையுடன் அதன் நிலைத்திருத்தற் தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு வளத்தின் தரக்குறைவு கடுமையாக விளங்கக்கூடும். இது தொடர்பில் கமக்கிணறுகள் பாரிய பயமுறுத்தலாகக் கருதப்படுகின்றது. நீர் கிடைக்கும் உலர் வலயத்தில் கூட மிகையான பிரித்தெடுப்பு விசேடமாக கரையோரப் பகுதிகளில் கைத்தொழில்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் தாக்கங்கள் மாசுபடுத்தல் மற்றும் மேற்பரப்பு தர விடயங்கள் ஆகியவற்றில் இருந்து கண்கூடாகும்.

**பின்வரும் முறையில் நில நீரின் பரந்த வகைப்படுத்தல் சாத்தியமானதாகும்.**

- ஆழமற்ற காகித்து நீர்தாங்கு படுக்கை - யாழ்ப்பாண குடாநாடு
- கரையோர மண்களின் ஆழமற்ற நீர் தாங்கு படுக்கை.
- புத்தளத்தில் இருந்து முல்லைத்தீவு வரையில் நீடிக்கும் மயோசின் சுண்ணக்கல் வலயத்தின் ஆழ் கட்டுப்பட்ட நீர்தாங்கு படுக்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தென்மேற்கு இலங்கையில் செம்பூரான்கல் பிராந்திய நீர்தாங்கு படுக்கை.
- உலர் வலயத்தின் உருமாறிய கடும்பாறை பிராந்தியத்தில் ஆழமற்ற நிலநீர், நீர்வீழ்ச்சி உள்நாட்டுப் பள்ளத்தாக்குகள்.
- உலர்வலயத்தின் உருமாறிய அடித்தள பாறைகளின் இணைப்புக்கள், பிளவுகள், மற்றும் முறிவு வலயங்கள் ஆகியவற்றின் ஆழமான, பரவலான மற்றும் அங்கொன்றும் இங்கொன்றமான நிலநீர்.

இவற்றிற்கு மேலதிகமாக உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முழுநாட்டிலும் பரவலாகப் பரம்பியுள்ள ஆழமற்ற திறந்த கிணறுகள் உள்நாட்டுப் பள்ளத்தாக்குகளில் உள்ள நெல் வயல்களின் தாழ்ந்த, மற்றும் நடுத்தர ஆறுதின்ற சமவெளியில் உள்ள "பாறைத்தொடர்" மற்றும் பள்ளத்தாக்கு. நிலவுருக்கள் ஊடாகப் பரம்பியுள்ள ஆழமற்ற பீடத்தில் இருந்து தமது வழங்கலைப் பெறுகின்றன.

மேட்டுநில நீர்ப்பீடத்தில் இருந்த வெளியேற்றத்தின் உயர் அளவுள்ள அமைவிடங்களில் ஊற்றுப்பாய்வு இடம்பெறுகின்றது.

அடியிலுள்ள பாறையின் படுக்கைகள் மலைநாடு முழுவதும் இடம்பெறும் வேறுபட்ட வெளியேற்றத்தின் ஊற்றுக்களின் மேற்பரப்பு இடவிளக்கவியலை ஊடறுக்கின்றன. படிகைப்பாறை மற்றும் பளிங்குப்பட்டறைப்பாறை ஆகியவற்றில் உள்ள ஊற்றுக்கள் பிளவிலான உலர் வலயத்தை விட ஈரவலயத்தில் உயர்வான விளைச்சலைக் கொடுக்கின்றன. முறையிலான சிறந்த மீள் சுழற்சியே இதற்கான காரணமாகும்.

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள ஆழமற்ற காசித்துரீதியான நீரே நாட்டில் நன்கு மதிப்பாயப்பட்டதும், ஆராயப்பட்டதுமான நிலநீர் வளமாகும். ஈரமழைக் காலத்தின்போது நன்னீருடன் முழு நீர்தாங்கு படுக்கைகள் மீள் சுழற்சிப்படுத்தப்படுகின்றது. ஆனால் இந்நீரில் 50 சதவீதமானது அடித்தள சுண்ணாம்புக்கல்லில் இடம்பெறும் காசித்து கடத்திகளின் விளைவாக உலர் சிறுபோகத்தின் போது கடலுக்கு இழக்கப்படுகின்றது. மீதியான 50 சதவீதம் தீவிரமான ஏற்று நீர்ப்பாசனம் மற்றும் உள்ளூர் தேவைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றது. உள்நாட்டில் இருந்து கடலுக்கான நன்னீரின் பாய்வு காங்கேசன்துறை கரையோரத்தில் பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டது.

நாட்டின் பெருமளவு கரையோரத்தின் வழியே மிகவும் பொதுப்படையாகவுள்ள கூழாங்கன்னாக்குகள், தடைகள் மற்றும் உயர்த்தப்பட்ட கடற்கரைகள் ஆகியனவற்றின் திரண்டிருக்காத மணல் மீது சில ஆய்வுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இந்த நீர்தாங்கு படுக்கைகளின் தன்மையினதும், குணாதிசயத்தினதும் சிறந்த புரிந்துணர்வு 1960களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முந்திய ஆய்வுகளில் இருந்து பெறப்பட்டுள்ளது. நெருக்கமான உவர் நீரில் மெலிந்த குழிவுகளில் இருந்து பெறத்தக்க நன்னீரின் மட்டுப்படுத்தப்பட்ட தொகை இந்த ஆழமற்ற நீர்தாங்கு படுக்கையின் அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பரப்பு நிலநீரின் கூட்டுச்சார்பின் மிகவும் நெருக்கமான பரிசீலனையும், வளத்தளத்தின் பட்டியல்படுத்தலும் அவசரமானது எனத்தோன்றுகிறது. வளத்தளத்திற்கு சுரண்டலானது சீர்படுத்த முடியாத சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்துத்துறைகளின் இனங்காட்டல் அவசியமானதாகும்.

ஊக்கமளிப்புத் திட்டங்கள் ஊடாக கமக்கிணற்று அபிவிருத்தி அல்லது கைத்தொழில் பிரயோகங்கள் போன்ற கட்டுப்படுத்தமுடியாத விஸ்தரிப்பின் பாரிய தாக்கங்கள் கிடைக்கும் நீர் வளங்கள் மீதான அடிப்படையிலான உள்ளூர் திட்டங்களாக கவனமாக அமுல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் முதலீடு மட்டும் இழக்கப்படுவது அன்றி எதிர்பார்க்கப்படும் மீள்வலியுறுத்தல் மேற்பரப்பு விநியோகங்களை மறுதலையான தாக்கங்களைக் கொண்டிருக்க முடியும். நீர்ப்பீடங்களின் குறைப்பு காரணமாக பாரதூரமாகப் பாதிப்படைந்துள்ளன. இங்கு நோயை விட அதைக்குணப்படுத்தலே பாரதூரமானது. பொருளாதாரங்கள், இடராபத்து காரணிகளின் அடிப்படையிலான சமநிலை கட்டுப்பாட்டை எடுக்கின்றபோதிலும் செய்யப்பட்ட மூலதனங்களையும் அதன் சந்தர்ப்ப ஆகுசெலவுகளையும் நாடு இழப்பதுடன் இதன் பலாபலன்களை கமக்காரர்களே தாங்கிக்கொள்ளவேண்டியுள்ளது. இலங்கையைப் பொறுத்தளவில், நாட்டின் நீர் வளங்களின் உள்ளகப் பாகமாக நிலநீரின் பரிகரிப்புத்தேவை அவசியமானதாகும். நிலநீரின் சூழலியல் ரீதியில் நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவத்திற்கான சிறப்பியல்பின் பிரக்ஞை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் உபயோகங்களிலும், செயன்முறைகளிலும் நிபந்தனையைக் கோரும் வகை தளத்தின் சீர்கேட்டுக்கு இட்டுச்செல்லும் செயன்முறைகள் மந்த நிலையை அடைவதுடன், விநியோகத் தளத்தின் மாசுபடுத்தல் அல்லது கலப்படம் சாத்தியமாகும் போது மூடப்பட்ட அமைப்புக்கள் கோரப்படுகின்றது. இல்லாவிடில் சிறந்தரக விநியோக குடிநீர் போன்ற அடிப்படை சமூகத்தேவைகளுக்கு ஆதரவளிக்கும் முக்கியமான திட்டங்கள் கூட தாக்கத்தைக் கொண்டிருப்பதுடன், மாற்றீடுகளாக உயர் ஆகுசெலவு விருப்புக்கள் தேவைப்படும். குறிப்பிட்ட உவர் நிலை மட்டங்களைக்கோரும் இறால் பண்ணைகள் உள்ள வடமேல் கரையோர வலயங்களில் இத்தகைய சூழ்நிலைகள் ஏற்கனவே தோன்றியுள்ளன. இது கட்டுப்பாடின்றி வெளியேற்றப்பட்டால், மென்மையான நீர் குழிவுகளுக்கு ஊறுவிளைவிக்கின்றது. இத்தகைய தருணங்களில் பாரிய குடிநீர், மற்றும் கமத்தொழில் பிரச்சனைகளின் ஆபத்தை கவனத்தின் இல்லாமை கொண்டிருப்பதால் சூழலுக்கு வெளியேற்றாத மூடப்பட்ட அமைப்புக்களுக்கான அவசியம் வற்புறுத்தப்படவேண்டும்.

தோதான உத்தரவுப்பத்திரத்தைப் பெறுதலையும், கண்காணித்தலையும் உறுதிப்படுத்துவதற்கான அவசியமான கட்டுப்படுத்தல், சட்ட கட்டமைப்புக்கள், நிறுவக ரீதியான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் நில நீரை உபயோகிப்பதற்கான தெளிவான கொள்கைக்கும், வழிகாட்டலுக்குமான அவசியத்தை உச்சப்படுத்துகின்றது.

**நிலத்தடி நீர் வளம் காத்து நில வளம் காப்போம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியை இணைத்து வைத்த வணிக வழிகள்

**பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராசா**
வரலாற்றுத்துறை,
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வரலாற்றில் வணிகம் வகித்த பங்கு

ஓரிடத்தினைச் சென்றடைதல் என்பது ஆரறிவு படைத்த மனிதர்களுக்கு மாத்திரமன்றி, ஐந்தறிவு படைத்த ஜீவராசிகளுக்கும் உரித்தான ஒரு பண்பாகக் காணப்படுகின்றது. மேட்டுநிலத்திலிருந்து பள்ளத்தாக்கிற்கு நீர் செல்வது போல் வளமற்ற ஓரிடத்திலிருந்து செழிப்பான - வளம் நிறைந்த பிரதேசங்களை நோக்கி மக்கள் இடம்பெயர்வினை காலத்திற்குக் காலம் மேற்கொண்டு வந்துள்ளமையை பல சம்பவங்கள் வாயிலாக அறிகின்றோம். உலக மக்கட்பரம்பல் முறையின் செறிவு, மக்கள் இனங்களின் பரம்பல், மதங்களின் பரம்பல், நாடுகாண்படலங்கள் போன்றவை குறிக்கப்பட்ட ஊடுருவல் மார்க்கங்களினூடாகவே நிகழ்த்தப்பட்டுக் கொண்டு வந்திருந்தமையினை பல்வேறு சான்றுகள் வாயிலாக உறுதிப்படுத்து கின்றோம். நிலவழிகளும், நீர்ப்பரப்பும் காலத்திற்குக் காலம் அறிவியலில் எட்டப்பட்ட அனுபவத்திற்கேற்ப போக்குவரத்து மார்க்கங்களை வகுத்துக் கொடுத்திருந்தமைக்கான சந்தர்ப்பங்கள் வரலாற்றில் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளன. கடற்போக்குவரத்துஅதிகரிக்கத் தொடங்கியிருந்த கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து மேலைத்தேயத்தவர்கள் கீழைத்தேயத்திலும், கீழைத்தேயத தவர்கள் தூரகிழக்கிலும் தத்தமது வாணிபக் குடியேற்ற முறைமையை ஏற்படுத்திக்கொண்டு பண்பாட்டுக்கலப்புக்கான, மக்களினங்களின் குடியேற்றவாத நகர்வுக்கான மார்க்கங்களை இருவழிகளிலும் ஏற்படுத்தக் காரணமாக விளங்கினார். மக்கள் வாழ்வில் ஏற்பட்ட இப்பரிமாண நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பால் இப்புவியின் இயற்கையான செயற்பாடுகள் காரணமாகவும் குறிப்பாக கண்டநகர்வு, கடல்மட்டம்தாழ்தல்/ உயர்தல், எரிமலைவெடிப்பு, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் புதிய பண்பாட்டுஅழிவுகள், புதிய பண்பாட்டுக்கூர்ப்புக்கள் முதலானவை ஏற்படுவதனைக் காணமுடியும். இவ்வாறான நிகழ்வுகளை- மாற்றங்களை புராதன உயிரியல் ஆய்வுகள் என்பன தற்காலத்தில் எடுத்து விளங்குகின்றன. தொல்லியல் ஆய்வு நெறிமுறையும் மேலே கூறப்பட்ட அறிவியற்துறைகளுடன் இணைந்து புராதன பண்பாட்டு வழித்தடங்களை தனித்துவமாக வெளிப்படுத்திக்காட்டி நிற்பதனைக் காண்கின்றோம். யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் வடமராட்சிப் பிராந்தியப் பண்பாட்டுவழித்தடங்கள் பற்றிய இவ்வாய்ப்பில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வணிக நடவடிக்கைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேறுகள் எந்தளவிற்கு வடமராட்சியின் பண்பாட்டுவளர்ச்சிக்கான தரவுகளை வழங்கியுள்ளன என்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மயோசின் காலத்தின் இறுதிக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட யாழ்குடாநாட்டில் காலத்திற்கு காலம் உருவான வாணிப-பண்பாட்டு முனைப்புக்கள் வடமராட்சியை வன்னிப் பிராந்தியத்துடனும், கடல் கடந்து தென்னிந்தியாவுடனும் தென்கிழக்காசிய நாடுகளுடனும் இணைத்து வைத்துபண்பாட்டுப் பரிவர்த்தனையை ஏற்படுத்திக் கொண்டமையை காண்கின்றோம். வணிகத்தடங்களூடாக யாழ்ப்பாணக்குடாநாடு ஏற்படுத்திக் கொண்ட பண்பாட்டுத் தொடர்புகளை நாம் இரு காலகட்ட நிகழ்வுகளாக முதலில் வகுத்துக் கொள்ள முடியும். அவையாவன:

1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொடர்புகள்.
2) வரலாற்றுக் காலத் தொடர்புகள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தொடர்புகளை எடுத்துக்கொண்டோமாயின் இலங்கையில் அதன் காலவரையறை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் சற்று முற்பட்ட ஒரு காலகட்டத்திற்கு முன்னோக்கிய நிலையில் உள்ள காலப்பரப்பினை உள்ளடக்கிக்கொண்டிருப்பதனைக் காணலாம். வரலாற்றுக்காலமானது கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தற்காலம் வரையுள்ள காலப்பரப்பினை உள்ளடக்கி யிருப்பதனைக் காண்கின்றோம். இவ்வகையில் பண்பாட்டு வழித்தடங்களை வடிவமைப்பதற்கு அடிப்படையாக அமைந்த வாணிக நிகழ்வுகள் தரைமார்க் கத்திலும், நீர்ப்பரப்பிலும் அமையும் போது அதனை பௌதீகவியற் கூறுகள் நிர்ணயம் செய்வதனைக் காணலாம். குறிப்பாக கடற்பரப்பில் தொடர்ந்து பிரயாணம் செய்வதற்கு வசதியாக குடிப்பதற்கான நன்னீர் அவசியமாகின்றது. இதனால் கடற்கரையோரமாக காணப்படும் நன்னீர் ஊற்றுக்களே பிரதானமாக முதலில் தரை- கடல் மார்க்கத்தில் ஒன்றுகூடும் மையங்களாக நாளடைவில் மாற்றம் பெற்று, நகரமாகவோ அல்லது கோவிலாகவோ அல்லது சந்தையாகவோ வடிவமாற்றம் பெறுவதனைக் காணலாம். இந்நிலையில் கடல் முகப்புத்தளங்கள் உருவாகி பண்பாட்டடிப்படையில் மக்கள் வாழும் பிரதேசமாக மாற்றமடைந்தன. இவ்வாறு உருவான பல்வேறு குடியிருப்புக்களுக்கிடையே தோற்றம் பெற்ற போக்குவரத்துப் பாதைகள் நாளடைவில் பிரதான வாணிப மார்க்கங்களாக மாற்றமடைந்து பல்வேறுவகையான பண்பாட்டுக்கோலங்களை துறைமுகங்களினூடாக உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் ஊடுருத்திச் செலுத்தி வந்தமையைக் காண்கின்றோம். இவ்வியல்பான செயல்முறையினூடாகவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சிப் பிரதேசத்திற்கும் வன்னிப்பெருநிலப் பரப்பிற்கு மிடையிலான மையங்களை இணைத்து வைத்த பண்பாட்டு வழித்தடங்களாக வளர்ச்சியடைந்து கொண்டன. இவ்வகையில் வடமராட்சியில் ஒல்லாந்தர் காலம் வரைக்குமான ஒரு காலகட்டத்தில் இப்பண்பாடு - வாணிப வழித்தடங்கள் எவ்வாறு அமைந்திருந்தன. என்பதனை ஆராய்வதாகவும் இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுக்கு முற்பட்ட கால வாணிப வழித்தடங்கள்**

யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் வன்னிப்பிரதேசத்திலும் மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்ட பண்பாட்டுவழித் தடங்களை இனங்காட்டியுள்ளன. இரணைமடுப் பண்பாடு (Iranaimadu Culture) தொடர்பாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்து தொல்லியளாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வந்துள்ளமையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தொல்லியலாளர்கள் இரணைமடுப் பண்பாட்டினை பல்வேறு நிலைகளில் ஆராய்ந்து வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாட்டிற்குரிய அதாவது கற்காலப் பண்பாட்டின் பல நிலைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்து புதிய முடிபுகளை எட்டியுள்ளமையைக் காணலாம். வரலாற்றுக்கு முற்பட்டகால இப் பண்பாட்டுப்பரவலுக்குரிய வழித்தடங்கள் இரணைமடு நீரேந்து பரப்புடன் இணைக்கப்பட்ட பல்வேறு திசைகளில் காணப்படுகின்றன. வடமராட்சி கிழக்குப்பரப்புடன் இரணைமடுவினை இணைத்து வைத்த வழித்தடம் தொடர்புகள் இன்னும் மிகத்தெளிவாக அடையாளம் காணப்படாத போதிலும் வரலாற்றுக்கு முற்பட்டகால வாழ்வியல் தொடர்புகள் இவ்விரு பிரதேசங்களுக்கிடையே காணப்பட்டிருந்தமையினை மறுக்கமுடியாதுள்ளது. எமது தொல்லியலாளர்கள் இரணைமடுப்பண்பாட்டின் பரவலை தெற்கே கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் வரைக்கும் மேற்கே கிளிநொச்சியிலிருந்து மாந்தை வரைக்கும் பரவியிருந்தமையை தொல்லியலாதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணகுடா நாட்டுடனான இரணைமடுப் பண்பாட்டுத் தொடர்புகளை எவருமே இதுவரையில் தெளிவாக எடுத்துக்காட்டவில்லை. வட இலங்கையில் காலத்தினால் முற்பட்ட ஒரு பண்பாட்டு வணிக மையமாக இரணைமடுப்பிராந்தியம் விளங்கி வந்திருந்தது என்பதற்கு அங்கிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்காலத்து எச்சங்கள் மாத்திரமல்ல, வரலாற்றின் தொடக்ககால சுடுமண்சிற்பங்கள், வெளிநாட்டு பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உள்நாட்டு மட்பாண்டங்கள் என்பன சிறந்த தொல்லியல் சான்றுகளாகும்.

வடமராட்சியின் வரலாற்றுக்கு முற்பட்டகால இரண்டு அடிப்படைகளில் அடையாளப்படுத்தி வெளிப்படுத்திக் கொள்ள முடியும். அவையாவன :
(1) தொண்டமானாற்றின் வடிகாலமைப்பிற்குட்பட்ட கண்டல் காட்டுப்பரப்பு-முள்ளி என அழைக்கப்படும் மையத்திற்கு மேலுள்ள பள்ளத்தாக்குப்பரப்பு.
(2)மாயக்கை - சக்கோட்டை-காக்கைத்திடல் பிராந்தியம் இந்த இரண்டாவது பிரிவில் மாயக்கை - சக்கோட்டை மையங்கள் ஏற்கனவே பழங்கற்கால வாழ்வுக்குரிய கற்கருவிகளை கொண்டிருந்தமையினை இக்கட்டுரையாசிரியரும் இவருடன் இணைந்து இலங்கைத் தொல்லியல் திணைக்களமும் உறுதிப்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. வடமராட்சிக் குகைவாழி மக்கள் முதலில் ஏற்படுத்தியிருந்த போக்குவரத்து மார்க்கங்கள் தென்னிந்தியாவை யாழ்ப்பாணக்குடாநாட்டுடன் இணைத்து வைத்தமையைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமானாறு வடிகாற்பரப்பானது யாழ்ப்பாணக்குடாநாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட கால, மற்றும் வரலாற்றுக்கால வணிக- பண்பாட்டு வழிகளை கட்டுப்படுத்தியிருந்த ஒரு பிரதான பௌதீக நிலவுறுப்பாகும். இப் பிரதான பௌதீக நிலவுறுப்பின் உருவாக்கமும் மக்கள் வாழ்வின் மீதான அதன் செல்வாக்கு உரிய முறையில் இன்னும் ஆராயப்படாததன் காரணத்தினால் குடாநாட்டின் மிதான பண்பாட்டுச் செல்வாக்குப்படிவமங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.எமக்கு மிகக் கிட்டிய அண்மைக்காலத்தில் அதாவது ஒல்லாந்தரது ஆட்சிக்காலத்தில் தொண்டமானாறு நீர்வழியானது பொருளாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்திருந்தமையினையும் இக்கடனீரேரியின் உவர்தன்மை மீட்கப்பட்டு பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது என்பதனை ஒல்லாந்தரது பதிவுகள் உறுதிப்படுத்துகின்றன. தொண்டமானாறு கடல்முகப்பிலிருந்து நாகர்கோவில் மணற்காடு வரைக்கும் ஒல்லாந்தரது நீர்வழிப்போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்நாட்டு சந்தை நடவடிக்கைகளுக்கான தொடர்புகள் மேற்கொள்ளபட்டிருந்தன. டச்சுறோட்டுக்கள் எனத் தற்காலத்தில் அழைக்ப்படும் பிரதான வீதிகளின் புராதன வடிவங்கள் ஓல்லாந்தரால் முதலில் உபயோகிக்கப்பட்டவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தென்மராட்சியிலிருந்தும் வடமராட்சியிலிருந்தும் வரும் டச்சுறோட்டுக்கள் தொண்டைமானாறு நீர்வழியுடன் இணைக்கப்பட்டிருப்பதனையும் இவ்வாறு இணைக்கப்பட்ட நீர் நில வழிகள் முள்ளிக்குளத்தினூடாக பழைய வட்டக்கச்சிப்பிரதேசத்தினை ஊடறுத்துச் சென்று இரணைமடுக்குளத்திற்கு கிழக்காகவுள்ள இராமநாதபுரத்தினூடாக பழைய முறுகண்டிப்பாதையை சென்றடைவதனை இன்றும் காணலாம். மன்னாரிலிருந்தும் ஒட்டுசுட்டானிலிருந்தும் கொண்டுவரப்பட்ட மாடுகள், யானைகள் போன்ற மிருகங்களை வரலாற்றுக்கு முற்பட்டகால மையங்களுக்கு துறைமுகங்களுக்கும் எடுத்தச் சென்ற பிரதான பாதையாக இது விளங்கியது என்பதனை தொல்லியல் தடயங்கள் விளக்கி நிற்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள காங்கேசன் மாட்டுச்சந்தையிலிருந்து இறக்குமதியான வடக்கன் மாடுகள் இலங்கைத்தீவிற்கு இரு மார்க்கங்களில் எடுத்துவரப்பட்டன. அவற்றுள் ஒன்று மாந்தைத்துறைமுகத்திற்கு கொண்டுவரபட்டு மன்னாரூடாக யாழ்ப்பாணக்குடாநாட்டிற்குள் எடுத்துவரப்பட்டவையாகும். மற்றைய பாதையானது காங்கேயன் துறைமுகம் மற்றும் கௌத்தன் துறைமுகம் போன்றவற்றினூடாக யாழ்ப்பாணக்குடாநாட்டிற்குள் கொண்டுவரப் பட்டமையாகும். தென்னிந்தியாவில் மிகத் தொன்மைவாய்ந்த மாட்டுச்சந்தை மிகப்பிரதானமானது என்பது பலரும் அறிந்திராத ஒரு விடயமெனலாம்.

### வடமராட்சிப்பிரதேசத்துடனான வணிக வழிகள் பற்றிய மூலங்கள்

எமக்குக் கிட்டிய காலத்திற்குரிய வாணிபப் பாதைகளை அடையாளம் கண்டுகொள்வதற்கு போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்திற்குரிய பதிவுகளும், டச்சுறோட்டுக்களும் முதலில் உதவி நிபந்தனை காணமுடிகிறது. வடமராட்சியில் தமது வர்த்தக ஏகாதிபத்தியத்தைப் பரப்பிய முதலாவது ஐரோப்பிய இனத்தவர் போர்த்துக்கேயரே ஆவார். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய நாடுகளுள் கப்பல் கட்டும் கலையிலும் கப்பலோட்டும் கலையிலும் முதலில் தேர்ச்சி பெற்ற நாடாக போத்துக்கல் மிளிர்ந்தது. இதற்குச் சமகால ஐரோப்பி சூழலில் நிலவிய அகக்காரணிகளும் இந்து சமுத்திரக் கரையோர மற்றும் தூரகிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட வர்த்தக வளம் நோக்கிய தேடல் என்ற புறக்காரணியும் போர்த்துக்கேயரது இந்துசமுத்திரத்தின் மீதான ஆதிக்கத்திற்கு உந்துதலாக அமைந்து காணப்பட்டது. இதை விட ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட கடல்சார் பயணங்களில் அதீத நாட்டம் கொள்வதற்கு வேறும் பல தனித்துவ காரணங்களும் தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறு ஒருங்கு சேர்ந்த பல சாதக அம்சங்களின் பெறுபேறாக கீழைத்தேசங்களை நோக்கி கடல் மார்க்கமாக வந்த முதலாவது ஐரோப்பியன் என்ற பெருமையை வாஸ்கொடகாமா என்ற போர்த்துக்கேயன் பெறுவதற்கு வழிவகுத்தது. இவ்வாறு பதனைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் இந்து சமுத்திர வர்த்தகத்தின் பெரும்பகுதி போர்த்துக்கேயரது ஆதிக்கத்தின் கீழேயே இருந்தது. இவர்களை அடுத்து இந்துசமுத்திரப் பிரதேச வர்த்தக நடவடிக்கைகளில் தலையிட்ட இனத்தவர் ஒல்லாந்தர் ஆவார்.

பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக பல வகையிலும் முன்னேற்றமடைந்த ஒல்லாந்தர் கீழைத்தேசங்களுக்கு வருவதற்குப் பல வழிகளிலும் முயன்றனர். மேலும் போர்த்துக்கேயரது கத்தோலிக்கத்திற்கு எதிராகத் தமது புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்புவதும் இவர்களது ஆவலுக்குத் தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறு ஐரோப்பாவில் எழுச்சி பெறவும் போர்த்துக்கேயருக்கு இருந்த கடலாதிக்கம் வீழ்ச்சி கண்டது. 1595 ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் வலிமை பெற்ற குடியேற்றவாதிகளாகத் திகழத் தொடங்கினார். இது முதல் தமது கப்பல்களைக் கீழைத்தேசங்களுக்கு அனுப்ப ஆரம்பித்தனர். முதன் முதலில் அவர்களது கப்பல்கள் 1602 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தன.

இவ்வாறாக 1658 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியதோடு யாழ்ப்பாணத்தில் டச்சுக்காரரின் ஆதிக்கம் நிலைபெறலாயிற்று. அதாவது 1658ஆம் ஆண்டில் கரையோரப்பகுதி முழுவதும் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சி ஏற்படும் வரை இங்கு நீடித்து நிலைத்தது.

இவ்வாறு 138 ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஒல்லாந்தரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக வர்த்தகம் இருந்தது. எனினும் காலப்போக்கில் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து அரசியல் நிர்வாக , சமூக சமயத்துறைகளில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் ஏற்பட்டது. இலங்கையில் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை நிர்வகிக்க டச்சுக்கிழக்கிந்திய கம்பனியின் கீழ் கொழும்பில் ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டார். இவ் ஒல்லாந்த ஆள்பதிக்கு அடுத்த நிலையிலேயே யாழ்ப்பாணம் காலி ஆகிய கொமாண்டர்களின் படைத்தளபதிகள் தமது அங்கத்துவப் பதவிகளை வகித்தனர். ஒல்லாந்தர் நிர்வாக நோக்கத்திற்காக கொழும்பு கொமாண்டரி, யாழ்ப்பாணக்கொமாண்டரி, காலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமாண்டரி என மூன்று பிரிவுகளாகவும் இலங்கையைப் பிரித்தனர். ஒல்லாந்தர் கால இலங்கையின் முழு நிர்வாகத்திற்கும் மையமான ஆள்பதிவு மைய ஆட்சிப்புலமாக கொழும்பு விளங்கியிருந்த போதும் யாழ்ப்பாணம் காலிக் கொமாண்டரிகளின் நீதிநிர்வாக அதிகார வரம்பானது கொழும்பினை விடவும் அதிகரித்தே காணப்பட்டிருந்தது. கொமாண்டரிக்கு அடுத்து ஒப்பர்கூவட் (Opepehoofed) என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண நீதி நிர்வாகக் கொமாண்டரியின் பரப்பானது புத்தளத்தின் வடக்கிலிருந்து வடமேற்காக வளர்ந்து சென்று வடகிழக்கு இலங்கையின் கடற்கரைப்பரப்புக்களை உள்ளடக்கிய வண்ணம் சென்று மட்டக்களப்புக் கோட்டையின் தெற்கு வரை அதன் பரப்பு விரிவடைந்திருந்தது. யாழ்ப்பாணக் கொமாண்டோரின் ஆள்புலத்திற்குரிய கேடயச் சின்னத்தில் ஒல்லாந்தக் கம்பனியை குறிக்கும் "V.O.C." எழுத்தோடு யாழ்ப்பாணக் கற்பகதருவான பனைமரம் வரையப்பட்டிருந்தது. (Phillipusbaldaeus - 1959) இவர்களது வர்த்தகம், நெசவு, நெல், பருத்தி சாயத்துக்குரிய மரச்செய்கை, நெசவு, குதிரைவளர்ப்பு, முத்துச் சங்கு குளித்தல் உப்பு, சுண்ணக்கல், மரம் முதலியவற்றில் தங்கி இருந்தது.

**வடமராட்சியிலுள்ள ஒல்லாந்தர் காலத் தெருக்கள்**

வாணிபப் பயணம் செய்வதற்கு உகந்த ஊடகமாக பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. அவை மனிதனையும் பொருட்களையும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு உதவிய அலகுகளாகும். இதனை மார்க்கம், வழி, தெரு, நெடுஞ்சாலை எனவும் அழைக்கலாம். ஆதிகால மனிதன் காட்டிலே தனது உணவுத் தேவை கருதியும், விவசாய நடவடிக்கைகள் கருதியும் தனது வதிவிடத்திலிருந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டியிருந்ததால் ஒற்றையடிப்பாதைகளை உருவாக்கினான். மிருகங்களால் இழுக்கப்படும் வண்டில்களைப் பயன்படுத்தத் தொடங்கியதும் ஒற்றையடிப் பாதைகள் சற்று அகலமாக்கப்பட்டு அவை கைஒழுங்கைகள் ஆயின. பின்னர் அவை வரலாற்றுக் காலங்களில் தெருக்களாகவும், சாலைகளாகவும் உருமாற்றம் பெற்றன.

மனிதன் தனது உற்பத்தியில் விசேட கவனம் செலுத்தி தனது பொருட்களை ஏனைய இடங்களிலுள்ள பொருட்களுக்குப் பதிலாக பண்டமாற்றம் செய்து கொள்ள வழிசமைத்தது. இப்பண்டமாற்று முறையானது வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே நிலவி வந்ததெனினும் பொருட்களைக் கொண்டு செல்வது மிக மந்தகதியிலேயே நடைபெற்ற காரணத்தால் விரைவில் பழுதடையாதவையும், அதே நேரம் அதிக பெறுமதி மிக்கவையுமான பொருட்களை மாத்திரமே வணிகத்துறையினரால் கையாளமுடிந்தது. பின்னர் விவசாயப் பொருட்களாயினும் சரி கைத்தொழில் உற்பத்திப் பொருட்களாயினும் சரி சில குறிப்பிட்ட பொருட்களை மிகப் பரந்த பிரதேச அளவில் விசேடமாக செய்யக் கூடியதாக உள்ளது. இதனால் ஒரே விதமான பொருளாதார அபிவிருத்தி நோக்கத்தைக் கொண்ட பரந்த பிரதேசங்கள் உருவாகியுள்ளதோடு முன்னர் புவியியலாளர்களால் வெறுமனே இயற்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களாகக் கணிக்கப்பட்ட நிலை மாறி இன்று மனித நடவடிக்கையின் காரணமாக அவை பொருளாதார பிரதேசங்களாக மாறியுள்ளமை குறித்தும் கவனம் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எங்கெங்கே உற்பத்தி செலவு குறைவாக இருக்கிறதோ அங்கே அதிகமாக உற்பத்திகளை மேற்கொள்வதற்கு போக்குவரத்து வசதிகள் உதவுகின்றன. அதுமட்டுமன்றி கூடுதலான வலையைப் பெற்றுத்தர கூடிய சந்தைகளுக்கு உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்லவும் அது உதவுகிறது. போக்குவரத்தின் வளர்ச்சி பாரிய அளவிலான வணிக முயற்சிகளை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் கலாசார சமூக நடவடிக்கைகளுக்கும் ஊக்கம் அளிக்கின்றது. இன்று நாம் சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்கவும் சிறந்தவைத்திய உதவிகளைப் பெறவும் சிறப்பான முறையில் வாழ்க்கை நடத்துவதற்கும் அவை உதவுகின்றன. போக்குவரத்தில் ஏற்பட்ட துரித வேகம்காரணமாக நமக்குச் சற்று அதிகமாகக் கிடைக்கும் ஒய்வு நேரத்தை எத்தனையோ பயனுள்ள வழிகளில் செலவிடக்கூடியதாக நவீன நகரங்கள் இன்று போக்குவரத்து வசதிகளிலேயே தங்கியிருக்கின்றன. போக்குவரத்துப் பாதைகள் தடைப்படுமானால் ஒரு நாட்டின் பொருளாதாரமே முடங்கிப் போகலாம். இதனாலேயே போர்க்காலத்தில் போக்குவரத்து வழிகள் தாக்குதலுக்கு இலக்காகின்றன. நகர விரிவாக்கத்திற்கும் போக்குவரத்தே உதவுகின்றது.

இவ்வாறு போக்குவரத்தின் அவசியத்திற்கு பெரும்பான்மையான மூலகாரணமாய் விளங்குவது தெருக்களே. வடமராட்சியில் இன்றைய கால கட்ட தெருக்களின் வளர்ச்சியைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆதி மனிதன் ஒற்றையடிப் பாதைகளாகவும் மண் ஒழுங்கைகளாகவும் பயன்படுத்திய சில தெருக்களை ஒல்லாந்தர் தமது அரசியல் மத பொருளாதார நோக்கத்திற்காக அவற்றை அபிவிருத்தி செய்திருந்தனர்.

தெருக்களுடனான போக்குவரத்து தொடர்புகள் ஏற்பட்டிருக்காவிட்டால் பூங்காக்கள் நிரம்பிய பரந்த நகர்ப்புறங்கள் மற்றும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட உபநகரங்கள் முதலியவை தோன்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்காது. கிராமங்கள் நகரங்களை இணைத்து ஒரு நாடு முழுவதையும் ஒரே அலகாக ஆக்குவதற்கு தெருக்கள் பெரிதும் உதவுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார நிலமை சரியான நிலையில் இருக்க வேண்டுமென்றால் போக்குவரத்து இன்றியமையாதாகும். இந்த வகையில் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தெருக்களுடனான போக்குவரத்தின் முக்கியத்துவத்தை அறியலாம்.

ஒல்லாந்தர்கால இலங்கைப் பண்பாட்டியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைந்தது வீதிகளாகும். மனித சமுதாய வளர்ச்சியிலே "டச்சுறோட்" என்ற சொல் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை பெறுகின்றது. வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கையில் வீதிகள், வண்டிற்பாதைகள், நெடுஞ்சாலைகள் என்பன அமைக்கப்பட்டிருப்பதும் ஒல்லாந்தர் காலத்திலேயே அவை காத்திரமான தோற்றத்தையும் பங்களிப்பினையும் பெற்று மக்கள் வாழ்வில் பிரதான ஊடகமாகத் திகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



இந்த வகையில் வடமராட்சியிலுள்ள டச்சுவீதிகளைச் சிறப்பாக எடுத்து நோக்குமிடத்து வல்லிபுரம் தேவஸ்தானம் அமைந்துள்ள இடத்திலிருந்து வெற்றிலைக்கேணிக்கண்மையிலுள்ள மண்டலாய்ப்பிள்ளையார் ஆலயத்தின் பின் வரைக்கும் கடற்கரையோரமாக டச்சு வீதி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்தது மாசிவன் சந்தியில் இருந்து எழுதுமட்டுவாலூடாக கிளாலி வரைக்குமான ஒரு பிரதான டச்சுவீதி அமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர கௌத்தன்துறையிலிருந்து தென்கிழக்குப்பக்கமாக நல்ல தண்ணீர்த் தொடுவாய் வரை (சுண்டிக்குளம் வரைக்கும்) டச்சுவீதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரணியையும் வல்லிபுரமூடாக கௌத்தன்துறையை இணைத்த வகையிலும் மேலும் வடமராட்சியில் உள்ள டச்சுவீதிகளை இணைத்து தொடர்புபடுத்தும் வகையிலும் பல டச்சுவீதிகள் அமைக்பட்டுள்ளன.

அந்த வகையில் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணமூடாக மன்னாருக்கு டச்சுவீதி அமைக்கப்பட்டிருந்தது. இவ்வீதி பூநகரியூடாக மன்னாரைச் சென்றடைந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கச்சாய்- கிளாலி ஊடாக பழைய முறுகண்டிக்கு ஒரு டச்சு வீதி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வீதி பழைய வட்டக்கச்சியூடாக இராமநாதபுரத்தை இணைத்தவண்ணம் காட்டு மார்க்கமாக பழைய முறுகண்டி நோக்கிச் செல்கின்றது. இன்றைவரைக்கும் இப்பாதையின் ஊடாக மாடுகளை, எருதுகளை கால்நடையாக கொண்டு வரும் முயற்சிகள் நடைபெற்றவண்ணமேயுள்ளன. வடமராட்சியிலுள்ள மற்றுமொரு டச்சுவீதி இப்பொழுது நாச்சிமார் வீதி என நாமிடப்பட்டுள்ளது. இவ்வீதி ஒல்லாந்தர் காலத்தில் பொலிகண்டித்துறைமுக நகரத்தையும் வல்வை உப்புக் கழிவையும் எள்ளங்குளம் என்ற கிராமத்தினூடாக இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை வெளிச்சவீட்டுப்பரப்பிலிருந்து ஆரம்பிக்கும் கரையோரப்பரப்பாதை சுண்டிக்குளம் ஊடாகச் சென்று, பின்னர் கரைச்சி, முல்லைத்தீவு பின்னர் அங்கிருந்து கதிர்காமம் வரைக்கும் உள்ள முக்கியமான துறைமுகநகர்களையும் கிராமங்களையும் இணைத்திருப்பது ஒல்லாந்தர் காலத்திற்கு முன்நிகழ்ந்த வாணிப பண்பாட்டு நடவடிக்கைகளின் விளைவினால் ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டாலும், ஒல்லாந்தர் காலத்தில் அவை மீண்டும் புதுப்பொலிவு பெற்று விளங்கின என்றால் அது தவறாகாது.

வடமராட்சியில் ஒல்லாந்தரால் அமைக்கபட்ட வீதிகள் மக்களது மனைகளையும், சந்தைகளையும், சவஅடக்கமையங்களையும் இணைத்திருந்ததோடு கடற்கரையோரத்துறைமுகப்பட்டினங்களையும் அவை தொடுத்திருந்தன. பருத்தித்துறை துறைமுகநகர் இவை எல்லாவற்றிற்கும் உயிர்ப்பினை ஊட்டுகின்ற வாணிப நகராக ஒல்லாந்தர் காலத்திலிருந்தே வளரச்சி பெற்றுவிட்டிருந்தமையைக் காண்கின்றோம்.

ஒல்லாந்தர்களது காலகட்டத்திலே வண்டிகள், குதிரைகள்,பல்லக்கு, யானை முதலியன போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. வாணிகப் பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியாவதில்லை. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருள்கள் உற்பத்தியானபடியால் அப்பொருள்களை யெல்லாம் ஓரிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு வண்டிகள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன. மக்கள் பலர் கால்நடையாகவும் போக்குவரத்துச் செய்தனர். குதிரைகளை ஒல்லாந்தர் தமது நாடுகளிலிருந்து கொண்டு வந்து இங்கு போக்குவரத்திற்காகப் பயன்படுத்தினார்.

இவை தவிர மாட்டுவண்டிகளில் வாணிகப் பண்டங்களை- பொருட்களை வாணிகர் பலர் ஒன்று சேர்ந்து பொருள்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். ஒல்லாந்தர் போக்குவரத்துச் தேவைகள் சிலவற்றைத்திருத்தி அமைத்தார்கள். சில புதிய தெருக்கள் அமைக்கப்பட்டன. சிற்றாறுகளை கடத்தற்குப் பாலங்கள் அமைக்கப்பட்டன. தரைமார்க்க போக்குவரத்துச் சேவைகள் ஓரளவு சீர்படுத்தப்பட்டமை பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி அவர்களின் ஆதிக்கத்தினை வலுப்படுத்துவதற்கும்,பொருளாதாரத்தை தன்வயப்படுத்தவதற்கும் உதவிற்று. வர்த்தக நோக்கத்தினாலும், மதம் பரப்பும் நோக்த்தினாலும், அரசியல் நோக்கத்தினாலும், வீர தீர செயல்களினாலும் இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர் எண்ணியநோக்கத்தை அடைவதற்கு வழிகாட்டியாக டச்சுவீதிகள் இவர்களால் அமைக்கப்பட்டன.

**சோழர்கால வடமராட்சியில் வாணிபத்தெருக்கள்**

வடமராட்சியில் பரவலாக குடியிருப்புக்களும், மனைகளும், தெருக்களும் ஏற்படுத்தப்பட்டஒரு காலப்பரப்பாக சோழர் காலம் அமைந்து கொண்டமைக்கான தொல்லியற்சான்றுகள் எமக்கு கிடைத்துள்ளன. குறிப்பாக நகரங்கள், கோயில்கள், பெருந்தெருக்கள் என்பன சோழர்காலத்தில் வடமராட்சியின் பிரதான உறுப்புக்களாக அமைந்து கொண்டன. (திருப்) பெருந்துறைமுகத்திலுள்ள (பருத்தித்துறை துறைமுகத்திலுள்ள) நகரக்கட்டமைப்பு சோழர்காலத்திலேயே தொடங்கப் பெற்றிருந்தமை காரணமாகவே யாவாவிலுள்ள கடாரத்துடனான நெல் வாணிபத்தொடர்புகள் இத்துறைமுகத்துடன் மிகநெருக்கமாக பிணைக்கப் பட்டிருந்தமைக்கான காரணங்களாக அமைந்திருந்தது. கற்கோவளத்தில் கண்டுபிடிக்கப்பெற்ற சுடுமண்வளையக் கிணறு மற்றும் நாகர்கோவிலுக் கண்மையிலுள்ள கௌத்தன்துறைமுகமும் கண்டுபிடிக்கப்பெற்ற செங்கட்டிக் கிணறும் சோழர் காலத்திருக்குரியவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் பருத்தித்துறைப்பிரதேசத்தின் நகரதிட்டமிடல் மற்றும் பெருந் தெருக்களின் உருவாக்கம் என்பன சோழர்களது அரசியல் நடவடிக்கைகளுடனும், அவர்களது பண்பாட்டு நடவடிக்கைகளுடனும் தொடர்புபட்டவையாகவே இருப்பது இங்கு தெளிவாகின்றது. இப்பின்னணியிலேயே பருத்தித்துறை சிவன் கோவிலது தோற்றம் தொடர்பாக ஆராயவேண்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோட்டைத் தெருவும் சோழர்களது வாணிப நடவடிக்கைகளும்**

வடமராட்சி, லாதிரியில் (வதிரி) உள்ள கோட்டைத்தெரு என்னும் புராதனம் வாய்ந்த கிராமத்தில் தொல்லியல் முதனிலையாய்வுகளை மேற்கொண்ட நிலையில் பழமை வாய்ந்த புராதனமான புளியமரத்தின் அடித்தளத்திலிருந்து மட்பாண்டத் தொகுதிகளுடன் இணைத்து காணப்பட்ட நீள்சதுரமான ஐம்பொன்னாலான ஒரு வெட்டுக்காசினையும் மீட்டெடுக்க முடிந்தது. இந்த வெட்டுக்காசில் பதிக்கப்பட்டடுள்ள ஒரு பெண் தெய்வத்தினுடைய உருவமானது தமிழர் பண்பாட்டுஆய்வுக்குரிய ஒரு மூலமாகவும் இப்பொழுது அமைகின்றது. அத்தோடு மிக நீண்ட தலைமுறைகளுடாக இங்குள்ள மிகப் புராதனம் வாய்ந்த புளியமரத்தினைப் பற்றிய ஐதீகங்கள் நிலவி வருவதனையும் இங்கு காணலாம்.

இப் புளியமரத்தின் தோற்றம் பற்றிய கதை, அதன் முதிர்வுத் தன்மை- அது அக்கிராமத்தின் சமூக-சமயசார சடங்குமுறைகள் ஊடாகக் கொண்டிருக்கும் தொடர்புகள் போன்றவை அப்பிராந்தியத்து பண்பாட்டு வரலாற்றுக்கு உதவும் சான்றுகளை வழங்குபவையாகக் காணப்படுகின்றன. மிகவும் உயர்ந்த ஒரு மேட்டு நிலப்பரப்பினை நன்கு ஆழமாக ஊடறுத்துச் செல்லும் வெள்ளம் வடியும் வாய்க்காலாக அமைந்த ஒரு தெருவின் விளிம்பிலே உள்ள மேட்டு நிலத்தில் இப்புளியமரம் இன்றுவரை நிலைத்து நின்று அப்பிராந்தியத்து மக்கள் வாழ்வின் தொன்மத்தினை உணர்த்தி நிற்கும் ஓர் உயிரோட்டமான வடிவமாகவும் திகழ்ந்து வருவதையும் காணலாம். 'முதலியவள்', 'முனீஸ்வரர்', 'முருகன்', 'வைரவர்' என்று பல குலதேவதைகள் இம்மரத்தில் உறங்குவதாகவும், காலத்துக்கு காலம் இத்தெய்வங்கட்குக் குறிப்பிடப்பட்ட பொருத்தமான நாட்களில் சமயச்சடங்குகளை நடாத்தி வருவதாகவும் அவ்வூரைச் சேர்ந்த முதியவர்கள் குறிப்பிடுகின்றனர். நாக மர்பு கூட அப்புளியமரத்துடன் இன்றுவரை இணைத்து எடுத்துக்காட்டப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. புளியந்தீவு-நயினாதீவு நாகமரபுகள் பற்றிய ஐதீகங்கள் புளியமரத்துடன் இணைத்துக் காட்டப்டுவது போன்ற கோட்டைத் தெருவிலும் அப்புளியமரத்துடன் நாகவழிபாடு இணைந்துள்ளமையை அங்கு நிலவும் ஐதீகங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. இரும்பு உலோகத்தாலான பழைமையான நாகத்தலை ஒன்றும் அம்மட்பாண்டத்தொகுதியுடன் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளமையானது ஆய்வுக்கெடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு மூலமாகின்றது.

**புளிய மரத்தின் தோற்றம் பற்றிய ஐதீகம்**

கோட்டைத் தெரு புளியமரத்தின் கதைமிகச் சுவாரசியமானது. முன்பொருகாலத்தில் இப்புளியமரத்தடியைக் கொண்ட மையமானது நீதி விசாரணை மன்றமாக தொழிற்பட்டிருந்தது எனவும், காலத்திற்குக் காலம் அம்மன்றில் சேர்ந்த தண்டப் பணமும் ஒரு வயோதிப மாதுவினால் பெரிய குடம் ஒன்றினுள் இடப்பட்டு நிலத்தினுள் புதைக்கப்பட்டது எனவும் அங்கு வழங்கும் ஐதீகம் நீண்டு செல்கிறது 'கோட்டடி'யாகத் தொழிற்பட்டமை காரணமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தெரு (அகன்ற வெள்ளவாய்க்கால்) கோட்டுத்தெரு என வழங்கப்பட்டதாகவும், அது பின்னர் கோட்டைத்தெரு என மருவி இன்றுவரை அவ்வாறே வழங்கி வருவதாகவும் எடுத்துக் காட்டப்படுகின்றது.

அம்மரத்தடியில் இருந்து எமக்குக் கிடைத்த மட்பாண்டங்கள் யாவும் பிற்பட்ட சோழர் கால கட்டத்திற்குரியவை என்பதனை வகை மாதிரியிலான (Typology) காலக்கணிப்பீட்டு முறை வெளிப்படுத்தி நிற்கின்றது. யாழ்ப்பாணக் கோட்டையின் தெற்குப் பக்கச் சுவருக்குள் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பெருமளவிலான சோழர்கால மட்பாண்டங்களுடன் (எழுத்துக்கள் பொறிக்கப்பட்டவை) ஒத்த தன்மையை உடையவையாகக் கோட்டைத்தெரு மட்கலங்கள் காணப்படுகின்றன. மிகவும் தடித்த கழுத்து வளையங்கள் சோழர்கால வெண்கல சிற்பங்களில் இடம் பெறும் கழுத்தலங்கார முறைகளை ஒத்ததன்மை இம்மட்பாண்டங்களிலும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது மிகக் கூர்மையான 'வெட்டுக்கள்' இம் மட்பாண்டத்தொகுதியில் காணப்படும் சிறப்பியல்புகளாகின்றன. எனவே சோழர் காலத்திலிருந்தே ஊரின் நடுவேயுள்ள இப்புளியமரத்தடி 'மன்று' ஆகத் தொழிற்பட்டு வந்திருக்க வேண்டும் என்பதை இச் சான்றுகள் நன்கு எடுத்து நிரூபிக்கின்றன. கூடவே கிடைத்த நாணயமும் அக்கருத்தினை மேலும் உறுதி செய்யும் சான்றாக அமைவதோடு இப்பிராந்தியத்துடன் சோழர் கொண்டிருந்த வாணிபத் தொடர்புகள் பற்றி ஆராய்வதற்கு அடிப்படை மூலமாகவும் அமைந்து கொள்வதனைக் காணலாம். அண்மைக் காலங்களில் சோழ மன்னரது நாணயங்கள் பல குடாநாட்டின் உள்ளும், புறமும் கிடைத்திருப்பது தமிழர் பண்பாட்டு வரலாற்றுக்கு உதவும் மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கு மேலும் வழித்தேடித் தந்துள்ளன எனலாம்.

**நாணயமும் வாணிபப் பண்பாடும்**

நாணயங்கள் வரலாற்றுக்காலந்தொட்டுமக்கட் கூட்டத்தினரின் மத்தியில் பரிமாற்ற ஊடகங்களாக விளங்கியது மட்டுமல்லாமல் நில ஆதிக்க வரம்பினை உச்ச வரையறைகளை வெளிப்படுத்தும் அரச ஆணையாகவும் செயற்பட்டிருந்த முறையினைக் காணலாம். அரச முத்திரைகள், கொடிகள், சின்னங்கள், குலதேவதைகள் ஆகியவை தாங்கிய நிலையில் அவற்றை மக்கள் மத்தியில் புழக்கத்திற்காக அதிகாரிகள் அமைந்திருந்தனர். புராதன காலங்களில் தோற்றம்பெற்று வளர்ச்சி கண்ட பேரரச வம்சங்கள் யாவும் வெளியிட்டு வைத்த நாணயங்கள் அத்தகைய தன்மை வாய்ந்தன. ஈழத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்திய வணிக கணங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த இலச்சினைகளும், நாணயங்களும் ஆய்வின் போது கண்டுபிடிக்கப் பெற்று வெளிப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய நாணயங்களில் அல்லது இலச்சினைகளில் வணிகக் குழுக்களின் குழுக்குறியீடும், சில வேளைகளில் வாசகங்களும் இடம்பெறுவதுண்டு. வாசகங்கள் இன்றி தனித்துவமான இலச்சனைகளுடன் கிடைத்த நாணயங்களும் முத்திரைகளும் இப்பொழுது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பின்னணியிலேயே கோட்டைத்தெரு என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையத்தில் கிடைத்த ஐம்பொன்னினாலான நீள்சதுரமான 'வெட்டுக்காசு' (ஈழக்காசு) மத்தியகால வடமராட்சி பிராந்தியத்துடனும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும் சோழர்கால வணிக கூட்டுக்களில் ஒன்றான நானாதேசிகள் என்றழைக்கப்பட்ட சாத்துக்கள் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பு பற்றியும், அப்பின்னணியில் சோழப் பண்பாடு இப்பிராந்தியத்தில் பரந்து கொண்டிருந்த முறைமை பற்றியும் அறிந்துகொள்வதற்கேற்ற வரலாற்று மூலமாகின்றது.

**நாணயம் அடையாளம் காணப்பட்ட வகை**

கோட்டைத் தெருவில் கிடைத்த தனித்துவம் வாய்ந்த இந்நாணயமானது நீள்சதுரமான அமைப்பினையுடையது. இதன் நீளம் 3 சென்ரி மீற்றர், அகலம் 2 சென்ரி மீற்றர் ஆகும். நாணயத் தகட்டின் உலோகம் ஐம்பொன் ஆகும். தகடுமிகவும் கனதியாகவும் உறுதிமிக்கதாகவும் காணப்படுகின்றது. நாணயத்தின் முற்பக்கத்தில் காணப்படுகின்ற உருவமானது சமபங்க நிலையில் சுகாசன இருக்கை முறையில் (இடது பாதம் இருக்கையில் சமாந்தரமாக மடிக்கப்பட்டும், வலது பாதம் பீடத்திலிருந்து கீழே தொங்கிய வகையிலும்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒடுங்கிய இடை, அகன்ற மார்புப்பகுதி, தலைக்கேசம் கீழே தொங்கி நிற்கும் வகை (தலைவிரி கோலம்?) ஆகியன திட்டவட்டமான ஒரு பெண்ணின் உருவ அமைதியை வெளிப்படுத்துவதாக உள்ளது.

முன்னிரு கரங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பின்னிரு கரங்களை ஓரளவுக்கு வெளிப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னிரு கரங்களும் வலது கீழ்க் கரத்தில் முச்சூலக் குறியுடனான ஒரு கருவி காணப்படுகிறது. அச்சூலக் கருவியின் நடுக்காம்பானது மற்றைய இரு காம்புகளையும் விட சற்று உயரமானதாகவும், கூடவே மகுட மட்டத்திற்குச் சற்று மேலாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் காணலாம். இடது கீழ்க் கரம் தாங்கியிருக்கும் பொருள் தெளிவற்றதாக உள்ளது.காரணம் அக்கரத்தின் முழங்கையுடனான பகுதி நாணய வெட்டுக்கள் அகப்பட்டு விட்டமையே ஆகும். பொதுவாகக் குறிப்பிடும் போது இவ்வுருவமானது உருவ அமைதியில் சமபங்க நிலையை தெளிவாகக் கொண்டிருப்பதனை எடுத்துக்காட்ட முடிகிறது.

இவ்வாறான தோற்றப்பாடுடைய உருவ அமைதியுடனான முத்திரை ஒன்று அம்பாந்தோட்டையில் 1986 இல் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அம்முத்திரையில் காணப்படுகின்ற உருவம் துர்க்கையின் ஒரு வடிவமான பரமேஸ்வரியாக வரலாற்றாசிரியரியால் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த வட்டமான முத்திரையின் பின்புறத்தில் 'நானாதேசிகள் சகை' என 11 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் எழுத்துக்களினால் வாசகம் ஒன்று பொறிக்கப் பட்டுள்ளமையும் எடுத்தக்காட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் அம்முத்திரை யானது சோழர் கால வணிக கணங்களுள் ஒன்றான 'நானா தேசிகள்' என்பவர்களது சின்னமாக விளங்கியதைப் போன்றே கோட்டைத் தெருவிலிருந்து கிடைத்த இந் நாணயமும் நானாதேசிகளுடையது என்பதை ஒப்பீட்டு அடிப்படையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. முச்சூழக்கருவியுடனான பரமேஸ்வரி நானாதேசிகளுடைய காவல் தெய்வம் என்பது சான்றுகள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**சோழ மரபும் வடமராட்சியும்**

ஏற்கனவே வடமராட்சிப் பிராந்தியத்தில் சோழ மரபுடன் இணைந்த வகையில் சில அம்சங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. பொலிகண்டிக் கண்மையில் உள்ள கங்கை கொண்டான் கிராமம், பாலாவிக் குடியிருப்பு, பாலாவியிலுள்ள பத்திரகாளியின் உருவ அமைதி, வதிரியிலுள்ள ஆலங்கட்டை, வீரணம்கல்(வீராணன் கல்), சக்கோட்டை(சாக்கோட்டை) ஈகியன சோழப் பண்பாட்டின் செல்வாக்கு நிலைகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. கங்கை கொண்டான் கிராமத்தில் சோழ நாணயங்கள் மீட்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. சோழக் கல்வெட்டுக்களில் உடுத்துறை பற்றிய குறிப்பும் வருவதனைக் காணலாம். செம்பியன்பற்று என்ற இடப்பெயர் சோழமரபின் செல்வாக்கினடியாகத் தோற்றம் பெற்றதாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இதே போன்று சோழ குல வல்லிபுர நாதர் என்ற விஸ்ணு கோயில் பற்றிய செய்தி தென்னிந்தியத் தமிழ்க் கல்வெட்டொன்றினூடாக அறியப்பட்டுள்ளது. இவ்வாறாக வடமராட்சிப் பிராந்தியத்துடன் சோழப் பண்பாடு ஏற்படுத்தியிருந்த செல்வாக்கு நிலைகளை மெல்ல.மெல்ல அடையாளம் காணக்கூடியதானவகையில் இப்பொழுது எமக்குச் சான்றாக கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

**'கங்கை கொண்டான்' கிராமமும் கங்கை கொண்ட சோழபுரமும்**

தென்னிந்தியாவிலே தமிழகத்தின் கண் இமைந்து காணப்படும் கங்கை கொண்ட நேரிபுரம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம் இற்றை வரையிலே பேரரசச் சோழர்களது பெருமையினை பல்வேறு வழிகளிலே பறை சாற்றிக் கொண்டிருக்கின்றது. இப்பேரரசர் சோழர் பரம்பரைக்கு வித்திட்டவன் வியஜபாலன் என்பவனாவான். இவனது சேர் பரம்பரையிலே வருகை தந்தவனே முதலாம் இரரிராழனாவான். இம்மன்னன் கி.பி.985 முதல் 1014 வரையுள்ள காலப்பகுதியிலே சோழப் பேரரசினைவழி நடத்திச் சென்றான். இவனது காலத்திலிருந்து தனது சுயபண்பாட்டுப் பெருமையினையும், தன்னாதிக்கத்தினையும் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளிடையே பரப்பி வைத்தது. தென்னிந்தியாவிலே துங்கபத்ரா நதிக்கு தெற்கேயுள்ள முழு நிலப்பரப்பினையும், இலங்கையின் வடபகுதியான இராஜரட்டைப் பிரதேசம் உள்ளிட்ட முழு நிரப்பரப்பினையும் , சோழப் பேரரசின் மாகாணங்களாக முதலாம் இராஜராஜன் வகுத்திருந்தான். சுருங்கக் கூறின் சோழ ராஜ்யம் என்ற நிலையிலிருந்து சோழ சாம்ராஜ்யம் என்ற நிலைக்கு அப் பேரரசின் ஆள் பலத்தினை முதலாம் இராஜஇராஜன் வகுத்திருந்தான். இனைத் தொடர்ந்து இவனது மகனான முதலாம் இராஜேந்திரன் சோழ சாம்ராஜ்யத்தினை முன்னெடுத்துச் செல்லும் பணியிலே கி.பி. 1044 வரையுள்ள காலப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருந்தான். இம்மன்னன் தனது தந்தையின் கொள்கைகளையே பின்பற்றி சோழ சாம்ராஜ்யத்தின் ஆள்புலப்பரப்பினை மிகவும் உச்சமான நிலைக்கு இட்டுச் சென்றான். தரைப் படையின் வலிமையால் தக்கணத்திலே கிருஸ்ணா நதியின் தென்பகுதி உள்ளிட்ட முழு நிலப்பரப்பும் சோழப் பேரர ஆதிக்க வாதத்துக்குட்படுத்தப்பட்டது. கடற்கரையின் பெரும் வலிமையினால் வங்காள விரிகுடா சோழவாவி ஆக்கப்பட்டு இந்து சமுத்திரப் பிராந்தியநாடுகளையும், தீவுக் கூட்டங்களையும் சோழர்களது மேலாதிக்க வாதத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்ப்பட்டமையினையும் காண்கின்றோம். இலங்கை, மாலைதீவுகள், பழந்தீவு பன்னீராயிரம் (லட்-தீவுகள்) என்பன இராசேந்திரன் காலத்திலே சோழ இராணுவ நடவடிக்கைகளுக்குரிய கேந்திர நிலையங்களாக மாறப்பட்டிருந்தன. முஸ்லிம், அராபிய வர்த்தகர்களுக்கு அவர்களது இந்து சமுத்தரப் பகுதி விளங்கியது. அவர்களது இந்து சமுத்தரப் பிராந்திய வர்த்தக ஏகபோக உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு சோழ வணிக கூட்டங்களுக்கு (கணங்களுக்கு) கைமாற்றப்பட்ட ஒரு காலப்பகுதியான விளங்கியது. அது தென்கிழக்காசிய நாடுகளுக்குப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டு சோழர்களது வர்த்தக ஏகபோக நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்ட நிலைநாட்டப்பட்ட ஒரு காலப்பகுதியாகவும் விளங்கியது. தென்னிந்தியாவிலே தொண்டை மண்டலத்திலிருந்து வடக்கே கங்கை நதியின் கழிமுகம் வரை படையெடுப்பு மேற்கொள்ளப்டடு மரபுரீதியான சத்திரிய கேந்திர கோட்பாடு அதாவது பேரரசனுக்குரிய ஆள் புலக் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு காலப் பகுதியாகவும் இக் காலம் விளங்கியது. இவ்வாறான பன்முனை நோக்கிய நிகழ்வின் அடிப்படையிலேயே முதலாம் இராஜேந்திரன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி முரசம் முழங்கி படை நடத்தி வந்தமையினால் கொண்டான் என்ற விருதுப் பெயரினையும் தென்கிழக்காசியாவிலே கடாரம் வரை படையெடுததுச் சென்று வந்தமையினால் கங்கையும் கடாரமும் கொண்டசோழன் என்ற விருதுப் பெயரினையும் சூடிக் கொண்டான் என்பதையும் அறிகின்றோம். அம் மன்னன் கங்கைவரை படையெடுப்பு மேற்கொண்டு வெற்றியுடன் திரும்பிவந்தமையை நினைவு கொள்ளும் முகமாக சோழ மண்டலத்திலே கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதியதொரு தலை நகரத்தினை உருவாக்கி,கங்கை நதியிலிருந்து கொண்டுவரப்பட்டபுனிதமான தீர்த்தத்தினை அந்நகரின் மத்தியிலே அமைக்கப்பட்டிருந்த தடாகத்திலே கலந்து தனது வெற்றியை மக்களுடன் பகிர்ந்துகொண்டான். அம் மன்னர்களால் வெளியிட்டு வைக்கப்ட்ட மெய்க்கீர்த்திகளிலிருந்தும் மிகத் தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

**சோழரும் இலங்கையில் பெருந்தெருக்களும்**

இலங்கையைப் பொறுத்தவரையில் சோழப்பெரும் பேரரசின் ஏழு மாகாணங்களுள் மூன்றாவது மாகாணமாக "ஈழமான மும்முடிச் சோழ மண்டலம்" என்ற பெயரிலே அவர்களுடைய இராணுவ, சிவில் நிர்வாகத்திற்குள் உட்பட்டிருந்தது என்பதனை அறிகின்றோம். கி.பி.993 அளவில் அனுராதபுரம் உட்பட இராஜரட்ட என அழைக்கப்டும் இலங்கையின் வட பகுதி முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேந்திரனாலும் பின்பு கி.பி.1017 காலப் பகுதியில் இருந்து தீவின் முழுநிலப்பரப்பும் முதலாம் இராஜேந்திரனாலும் சோழ இராணுவ சிவில் நிர்வாக முறைகளுக்குட்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையானது கி.பி.1070 வரையுள்ள காலப்பகுதி மட்டுமே அதாவது முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் தொடக்கம் வரை நீடித்துக் காணப்பட்டிருந்தது. புலநரி அல்லது பொலநறுவை என்று வழங்கப்பட்டநகரமே ஜனநாத மங்கலம் என்ற பெயரில் தலைநகரமாக்கப்பட்டு சோழருடைய சிவில் நிர்வாகம் இங்கு பரவலாக்கப் பட்டிருந்தது. திருகோணமலை சோழருடைய பிரதான கடற்படைத் தளமாக இராணுவ நடவடிக்கைகளின் கேந்திர நிலையமாக, தென்கிழக்காசிய நாடுகளை இராணுவ அடிப்படையில் கட்டுப்படுத்துகின்ற மையமாக தொழிற்பட்டிருந்தது. மாந்தைத்துறைமுகம் பிரதான ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளுக்குரிய மையமாகவும் ஓரளவுக்கு இராணுவ நடவடிக்கை களுக்கரிய மையமாகவும் தொழிற்பட்டிருந்தது.

அவ்வகையில் மாந்தை மாந்தோட்டமான இராஜராஜபுரம் என அழைக்கப்பட்டது. அங்கிருந்து ஒரு பெரிய வீதியமைக்கப்பட்டு புலநரியான ஜனநாத மங்களத்துடன் இணைப்பு ஏற்பட்டிருந்தது. இப் பெருந்தெரு இராஜாஜைப் பெருந்தெரு என அழைக்கபட்டது. கந்தளாய் சதுர்வேதி மங்கலமாக விளங்கியது. ஸ்ரீபார்வதி புரமான பதவியாகூட அதனுடன் தொடர்புடையதாக காணப்பட்டது. இதேபோன்றே ஒரு பிராமணக் குடியேற்றம் பெருந்துறைமுகத்திற்கண்மையிலுள்ள தும்பளையில் (திருத்தாம்பாளை-வெற்றிலைச் செய்கை மையம்?) காணப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தும்பளை யாழ்ப்பாண இராச்சியபபரப்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முகாமைத்துவ மையமாக விளங்கியிருந்தது என்பதும் நினைவு கூரப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளிலே சோழர் கால கட்டிடங்களையும் சிவன் கோவில்களையும் சோழமயமாக்கப்பட்ட பெயர்களையும் காண முடிகிறது. ஆனால் குடாநாட்டைப் பொறுத்தவரையில் சோழர் காலத் தொடர்புகள் தொடர்பான ஆய்வுகள் இன்னும் புத்தூக்கம் பெறவில்லை என்றே குறிப்பிடவேண்டும். நாரந்தானை, கமால் வீதி போன்ற இடங்களிலிருந்து தற்செயலாக கிடைத்த சோழர் காலத்துக்குரிய சிற்பங்கள், நாணயங்கள், போன்றவற்றிலிருந்து சில விபரங்களைப் பெற்றுக் கொள்வதுடன் திருப்தி அடையவேண்டியுள்ளது.

இந்நிலையிலேயே வடமராட்சிப் பகுதியிலே கரணவாய் வடக்கு கொற்றாவத்தையிலே காணப்படுகின்ற கங்கை கொண்டான் கிராமமானது ஏதோவகையில் பேரரசச்சோழ மரபினருக்கும் அவ்விடத்துக்குரிய தொடர்பினை நன்கு எடுத்துக்காட்டுவதாவே உள்ளது என்பது தெளிவாகின்றது. அலை அலையாக அமைந்த மண் மேடுகளின் மேல் முதிர்ந்த பனை மரங்களைக் கொண்டிருக்கும் அப்பிரதேசத்தினை மிக ஆழமான வாணிபத்தெருக்கள் ஊடறுத்துச் செல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை வல்வெட்டித்துறை நகரையும் பருத்தித்துறை (பெருந்துறை) நகரையும் இணைப்பவையாகக் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் அயல் கிராமமாக பொலிகண்டி, பாலாவி என்பன அமைந்துள்ளன. பொலிகண்டியிலே சோழர் காலத்துக்குரிய சில நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே கங்கை கொண்டான் என்றழைக்கப்படும் இக்கிராமத் திற்கும் , அக் குடா நாட்டின் கண் அமைந்து காணப்பட்டிருக்கக் கூடிய நோழர்களது அரசியல் பண்பாட்டு மையங்களுக்குமிடையே மிகவும் நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றன- அவை வாணிபத்தெருக்களால் ஒன்றிணைக்கப் பட்டிருந்தன என்பதனையும் இவ்விடத்திலே நாம் நினைவு கூர வேண்டும்.

**முடிவுரை**

வடமராட்சியில் காணப்படும் வாணிபப்பெருந்தெருக்கள் பற்றிய இந்த அறிமுக ஆய்வில் சில அடிப்படையான வரலாற்றுத்தகவல்களை முன்னிறுத்தி, எமக்கு அண்மித்த காலப்பரப்பிலிருந்து தொன்மையை நோக்கிச் செல்வதற்கான ஓர் ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மேலும் விரிவாக்கப்பட வேண்டியுள்ள ஓர் ஆய்வுத்தலைப்பாகவும் உள்ளது. வடமராட்சியின் வாணிப வழிகளை விரிவாக ஆராயும்போது சங்ககாலப்பரப்பிலிருந்து பல்லவர், சோழர் காலங்களுடாக போத்துக்கேயர்- ஒல்லாந்தர் காலம்வரைக்கும் உருவாகி வளர்ச்சி பெற்றிருந்த கிராமிய- நகர கட்டுமானங்களை எம்மால் விரிவாக அறிந்து கொள்ள முடியும். எதிர்காலத்தில் அவ்வாறான ஓர் ஆய்வு முயற்சியில் எதிர்காலத்தில் ஈடுபடுவோர்க்கு உதவும் நோக்கிலே இவ்வாய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புக்கள்:**

Foote Notes

1. சர்மா,R.S, இந்திய நிலமானிய முறை, NCBH வெளியீடு, *2009*, சென்னை, *பக்.304*
2. Thiagarajah, Siva, Pooples and Cultures of Early Sri Lanka, A Tamil Information Centre Publication, Greate Britain,p.49
3. Pathmanathan.S, Hindu temples in Sri Lanka, Kumaran Book House, Colombo,2006.p.36. RajaRajapperunteru was connecting the capital Anuradhapura with Matai.
4. Mathanakaran.R, 'Geographical Background of Jaffna, Appendix-I in Early Settement of Jaffna By Ragupathy.p,1987,p.189
5. கிருஸ்ணராசா.செ,'வடமராட்சியில் இனங்காணப்பட்ட தொல்லியல் சான்றுகளும் புராதன மையங்களும்', யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் *110 வது ஆண்டு நிறைவு மலர், 2004 பக்.94-113*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Deraniyagala.S,Prehistoric basis for the rice of Civilization in Sri Lanka, part.I,1992,pp10-13
7. Deraniyagala.S, the Prehistory of Sri Lanka, part.I.Colombo, 1992,p37
8. Anparasi.r, The Cultural Influences of the Dutch in Northern Sri Lanka-A Study, unpublished M.A.Thesis, universityof Jaffna,2010,p71
9. Dicouvery Channal telecasted on the caosion of Kangeyan catttle market in Thinnevely as one hour documentary programme.
10. Krishnarajah,S, History of Sri Lanka, part-II, Pirainila publication,2000 p.5
11. Krishnarajah.S, History of Sri Lanka, part-II, Pirainila publication,2000 p.7
12. Rasanayagam.S, Ancient Jaffna, New Delhi, 1999, p.184
13. Krishnarajah.S, History of Sri Lanka, part-II, Pirainila publication,2000 p.174
14. Aeganayagivalli.S, ஈழவரலாற்றப்பதிவுகள், arrowweb pulishers, Toronoto, Canada,2003,p.162
15. Phillipus,Baldaeus, temboral Conquest of Ceylon,1959.
16. Aeganayagivalli.S, ஈழவரலாற்றப்பதிவுகள், Arrowweb pulishers, Toronoto, Canada,2003,p.161
17. யாவாவிற்கும் பருத்தித்துறைக்குமிடையில் நெல் வாணிபம் 19ஆம் நூற்றாண்டுகள் நடைபெற்றமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.
18. கௌத்தன்துறைமுகமானது பல்லவ, சோழ, பாண்டியர் காலங்களில் வன்னிப்பிராந்தியத்துடனான வாணிபத் தொடர்புகளுக்கான பிரதான வாயிலாக அமைந்து காணப்பட்டது.
19. வடமராட்சியில் வதிரியிலுள்ள கோட்டுத்தெரு புளியமரம் 500 வருடங்கட்கு பழமையானது.
20. Daily News, 11th January, 1986.

**இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட சில நூல்கள்.**

1) இராசநாயகம்.செ, யாழ்ப்பாணச் சரித்திரம், ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், சென்னை 2003
2) கணபதிப்பிள்ளை, க.ஈழத்துவாழ்வும் வளமும், குமரன் புத்தக இல்லம் கொழும்பு- சென்னை 2001
3) கிருஷ்ணராசா.செ, இலங்கை வரலாறு, பாகம்-2 பிறைநிலா வெளியீடு, 2005
4) குணசிங்கம்.மு இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு, கி.மு 300 கி.பி. 2000 M.V. வெளியீடு, தென் ஆசியாவின் மையம் சிடனி,2008.
5) சிவராசாசிங்கம்.ஏ, ஈழவரலாற்றுப் பதிவுகள், Arrowweb pulishers, Toronoto, Canada,2003,p.2003
6) தியாகராஜா.எஸ், ஈழத்தமிழரின் ஆதிச்சுவடுகள், தேசம் வெளியீடு, இலண்டன் 2004,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் தற்கால கல்வி அபிவிருத்திப் போக்குகள்

ஆ. நித்திலவர்ணன்
(BSc with Education(Hons), BEdin Natural Science, MEd)
விரிவுரையாளர், கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,

## 1.0 அறிமுகம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசம், கல்விப் பாரம்பரியம் மிக்க பிரதேசமாகும். உலகளாவியரீதியில் புகழ்பெற்ற பல அறிஞர்களும் கல்விமான்களும் இங்கு வாழ்ந்திருக்கின்றார்கள். தற்போது வாழ்ந்தும் வருகின்றார்கள். நிர்வாக ரீதியில் வடமராட்சிப் பிரதேசமானது வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை), வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) மற்றும் வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) என்ற மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டள்ளது.

கல்வி நிர்வாக ரீதியில் வடமாகாணத்தில் பன்னிரெண்டு கல்வி வலயங்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களும் உள்ளன. இவற்றில் வடமராட்சிக் கல்விவலயமும் ஒன்றாகும். வடமராட்சி கல்வி வலயத்தில் பருத்தித்துறைக் கல்விக் கோட்டம், கரவெட்டிக் கல்விக் கோட்டம் மற்றும் மருதங்கேணி கல்விக் கோட்டம் என்ற மூன்று கல்விக் கோட்டங்கள் உள்ளன. வடமராட்சி வடக்குப் பிரதேசமானது கல்வி நிர்வாக ரீதியில் பருத்தித்துறை கல்விக் கோட்டத்தை உள்ளடக்குகின்றது. இக்கட்டுரையானது வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் தற்கால கல்வி அபிவிருத்திப் போக்குகள் தொடர்பாக ஆராய்கின்றது.

பிரதேசத்தின் முறைசார்ந்த கல்வி (Formal Education), முறைசாராக் கல்வி (Non-formal Education) மற்றும் சமுதாயத்துக்கான கல்வி வாய்ப்புக்கள் தொடர்பாகவும், பிரதேச கல்வி அபிவிருத்தியின் நல்ல அம்சங்கள் (Good Practices) மற்றும் கல்விச் செயற்பாடுகளில் எதிர் கொள்ளும் சவால்கள், அவற்றுக்கான தீர்வுகள் என்பன பற்றி இக் கட்டுரையில் விபரிக்கப்படுகிறது.

## 2.0 பிரதேசத்திலுள்ள பாடசாலைகளும் அவற்றின் கல்விச் செயற்பாடுகளும்

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தில் ஐந்து 1AB வகைப் பாடசாலைகளும், நான்கு 1C வகைப் பாடசாலைகளும், பதினொரு வகை-II மற்றும் பன்னிரண்டு வகை -III , பாடசாலைகளுமாக மொத்தம் முப்பத்திரண்டு அரச பாடசாலைகள் உள்ளன. பின்வரும் அட்டவணை பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், அவற்றின் வகை, மற்றும் கொண்டுள்ள ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 1:-

வடமராட்சி வடக்கு பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், அவற்றின் வகை, ஆசிரியர், மாணவர்களின் எண்ணிக்கை

| பாடசாலையின் பெயர் | முகவரி | பாடசாலை வகை | ஆசிரியர் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1) யா/ஹாட்லிக்கல்லூரி | பருத்தித்துறை | 1AB | 52 | 1105 |
| 2) யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | பருத்தித்துறை | 1AB | 61 | 1126 |
| 3) யா/வட இந்து மகளிர் கல்லூரி | பருத்தித்துறை | 1AB | 56 | 1019 |
| 4) யா/சிதம்பராக் கல்லூரி | வல்வெட்டித்துறை | 1AB | 28 | 416 |
| 5) யா/பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயாம் | பருத்தித்துறை | 1AB | 27 | 429 |
| 6) யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி | பருத்தித்துறை | 1C | 42 | 731 |
| 7) யா/புற்றளை ம.வி | புலோலி | 1C | 38 | 441 |
| 8) யா/வல்வை மகளிர் கல்லூரி | வல்வெட்டித்துறை | 1C | 26 | 406 |
| 9) யா/தொண்டமனாறு வீரகத்தி ம.வி | தொண்டமனாறு | 1C | 39 | 639 |
| 10) யா/சென்தோமஸ் றோ.க.த.க பாடசாலை | பருத்தித்துறை | வகை - 2 | 17 | 264 |
| 11) யா/அல்வாய் ஶ்ரீலங்கா வித்தியாசாலை | அல்வாய் | வகை - 2 | 14 | 197 |
| 12) யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை | வல்வெட்டித்துறை | வகை - 2 | 19 | 283 |
| 13) யா/அல்வாய் அம்பாள் வித்தியாசாலை | அல்வாய் | வகை - 2 | 09 | 45 |
| 14) யா/புலோலி மெ.மி.த.க பாடசாலை | புலோலி | வகை - 2 | 20 | 186 |
| 15) யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை | பொலிகண்டி | வகை - 2 | 17 | 309 |
| 16) யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை | கொற்றாவத்தை | வகை - 2 | 22 | 492 |
| 17) யா/கலட்டி றோ.க.த. பாடசாலை | பருத்தித்துறை | வகை - 2 | 18 | 190 |
| 18) யா/அல்வாய் வடக்கு றோ.க.த பாடசாலை | அல்வாய் | வகை - 2 | 17 | 279 |
| 19) யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை | கற்கோவளம் | வகை - 2 | 24 | 369 |
| 20) யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் | பருத்தித்துறை | வகை - 2 | 24 | 361 |
| 21) யா/மாதனை மெ.மி.த.க பாடசாலை | மாதனை | வகை - 3 | 03 | 35 |
| 22) யா/திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம் | திக்கம் | வகை - 3 | 05 | 130 |
| 23) யா/தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை | பருத்தித்துறை | வகை - 3 | 04 | 42 |
| 24) யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை | பருத்தித்துறை | வகை - 3 | 14 | 310 |
| 25) யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க பாடசாலை | கரவெட்டி | வகை - 3 | 05 | 60 |
| 26) யா/அல்வாய் வடக்கு இ.த.க பாடசாலை | அல்வாய் | வகை - 3 | 04 | 41 |
| 27) யா/வல்வை றோ.க.த.பாடசாலை | வல்வெட்டித்துறை | வகை - 3 | 04 | 51 |
| 28) யா/புலோலி கிழக்கு அரசினர் த.க.பாடசாலை | புலோலி | வகை - 3 | 04 | 71 |
| 29) யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை | தம்பசிட்டி | வகை - 3 | 16 | 362 |
| 30) யா/கெருடாவில் இ.த.க. பாடசாலை | கெருடாவில் | வகை - 3 | 10 | 122 |
| 31) யா/வல்வை அ.மி.த.கபாடசாலை | வல்வெட்டித்துறை | வகை - 3 | 04 | 106 |
| 32) யா/வட இந்து ஆரம்ப பாடசாலை | பருத்தித்துறை | வகை - 3 | 10 | 198 |

(மூலம்:- பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதேசத்திலுள்ள பிரபலமான பாடசாலைகள்**

இப் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு இப் பிரதேசத்திலுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க கல்லூரிகளான பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வேலாயுதம் மகாவித்தியாலயம், வடஇந்து மகளிர் கல்லூரி மற்றும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி என்பன பெரும்பங்காற்றி வருகின்றன.

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். இங்கே இலங்கையின் பிரபலங்கள் கல்வி கற்றமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் சபாநாயகர் கே.பி.இரத்நாயக்கா, முன்னாள் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா, வீ.ஆனந்தசங்கரி, கே.கணேசலிங்கம் போன்ற அரசியல் வாதிகளும் கே.டி.அருட்பிரகாசம், சி.ஜே.எலியேசர், அ.துரைராஜா போன்ற புகழ் பூத்த பேராசிரியர்களும் இங்கு கல்வி கற்றிருக்கின்றார்கள்.

இப் பாடசாலை தற்போதும் வருடா வருடம் தேசிய ரீதியாக பொதுப் பரீட்சைகளில் சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. தரம்-6 அனுமதிக்கு தேசியரீதியில் உயர் வெட்டுப்புள்ளியை கல்வியமைச்சு இப்பாடசாலைக்கு நிர்ணயிப்பது இப்பாடசாலையின் தரத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் வருடா வருடம் தேசிய ரீதியில் சாதனை படைக்கும் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகக் காணப்படுகிறது. அதே போன்று க.பொ.த உயர்தரத்திலும் கணிதம் மற்றும் விஞ்ஞானத்துறைகளில் தேசிய ரீதியில் முதனிலை வரிசைகளை இக்கல்லூரி பெறுவது வடமராட்சி மண்ணுக்கே பெருமை தேடித்தரும் செயற்பாடாக கருதப்படுகிறது.

**3.0 வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் பொதுப் பரீட்சை அடைவுகளின் போக்கு**

## 3.1: தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

வடமராட்சிக் கல்வி வலய பாடசாலைகளின் கடந்த ஐந்தாண்டு (2009-2013) களில் தரம்-5 புலமைப் பரிசில் பெறுபேற்றை அவதானிக்கும் போது பொதுவாக அவை அதிகரித்துச் செல்லும் போக்கைக் காட்டுகின்றன. கல்விக் கோட்டரீதியில் கரவெட்டிக்கோட்டம் முதலாவதாகவும் பருத்தித்துறைக் கோட்டம் இரண்டாவதாகவும் மருதங்கேணிக் கோட்டம் மூன்றாவதாகவும் உள்ளன. அட்டவணை-2 உம் அதன் கீழாக உள்ள வரையும் கடந்த ஐந்தாண்டுகளில் வடமராட்சிக் கல்வி வலயத்தில் கல்விக் கோட்டரீதியாக தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையின் சித்தி வீதம் ஆண்டு ரீதியாக வேறுபடும் விதம் காட்டப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை-2:-

**கடந்த ஐந்தாண்டுகளில் வடமராட்சிக் கல்விவலயத்தில் கல்விக் கோட்ட ரீதியாக தரம்-5 புலமைப் பரீட்சையின் சித்தி வீதம்**

| கல்விக் கோட்டம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| பருத்தித்துறை | 10.50% | 12.60% | 09.51% | 11.76% | 13.17% |
| கரவெட்டி | 14.05% | 13.77% | 16.85% | 12.56% | 20.06% |
| மருதங்கேணி | 1.25% | 2.381% | 06.45% | 04.64% | 05.45% |
| வடமராட்சிக் கல்வி வலயம் | 11.64% | 12.33% | 11.99% | 11.21% | 14.89% |

(மூலம்:- திட்டமிடல் பிரிவு, வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.2:- க.பொ.த ( சாதாரண தரப்) பெறுபேறுகள்**

பொதுவாகப் பார்க்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் பெறுபேறுகள் முன்னைய வருடங்களை விட அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம். கல்விக் கோட்ட ரீதியில் பருத்தித்துறைக் கோட்டப் பெறுபேறுகள் மருதங்கேணி, கரவெட்டிக் கோட்டப் பெறுபேறுகளை விட உயர்வாகக் காணப்படுகின்றன. இதற்கு காரணம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பெரும்பாலான கரவெட்டிக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திலுள்ள ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பவற்றில் தரம்-6 இற்கான அனுமதி பெறுவதாகும். அட்டவணை-3 உம் அதன் கீழாகவுள்ள வரைபும் கடந்த ஐந்தாண்டுகளில் (2009-2013) வடமராட்சிக் கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் சித்தி வீதம் ஆண்டுரீதியாக மாறுபடும் விதத்தைக் காட்டுகின்றது.


**அட்டவணை-3 கடந்த ஐந்தாண்டுகளில் வடமராட்சிக் கல்வி வலயத்தில் கல்விக் கோட்டரீதியாக க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் சித்தி வீதம்.**

| கல்விக் கோட்டம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| 01) பருத்தித்துறை | 54.15% | 58.47% | 51.06% | 62.00% | 69.10% |
| 02) கரவெட்டி | 49.43% | 51.81% | 53.12% | 54.60% | 56.80% |
| 03) மருதங்கேணி | 13.04% | 35.37% | 27.69% | 26.70% | 37.14% |
| வடமராட்சி கல்வி வலயம் | 50.71% | 54.27% | 49.46% | 55.70% | 61.00% |

(மூலம்:- திட்டமிடல் பிரிவு, வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டவணை-4 ஆனது பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திலுள்ள பத்தொன்பது இடைநிலைப் பாடசாலைகளின் 2013ம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தரப் பரீட்சையின் சித்தி வீதத்தினை எடுத்துக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை-4 பாடசாலை ரீதியாக க.பொ.த(சாதாரண தரம்)-2013 பெறுபேற்றின் அடிப்படையில் க.பொ.த.உயர்தரம் கற்க தகுதி பெற்றோர் சதவீதம்**

| இல | பாடசாலை | உயர்தரம் கற்க தகுதி பெற்றோர் சதவீதம் |
|---|---|---|
| 01 | யா/ வட இந்து மகளிர் கல்லூரி | 75.3% |
| 02 | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | 93.3% |
| 03 | யா/ ஹாட்லிக்கல்லூரி | 96.4% |
| 04 | யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம் | 48.7% |
| 05 | யா/ சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை | 61.9% |
| 06 | யா/ வல்வை மகளிர் கல்லூரி | 84.6% |
| 07 | யா/ புற்றளை மகாவித்தியாலயம் | 48.6% |
| 08 | யா/தொண்டமனாறு வீரகத்தி ம.வி | 51.4% |
| 09 | யா/ தும்பளை சிவப்பிரகாச ம.வி | 57.7% |
| 10 | யா/ பொலிகண்டி இ.த.க | 65,0% |
| 11 | யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை | 46.7% |
| 12 | யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் | 00.0% |
| 13 | யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் | 53.8% |
| 14 | யா/ கலட்டி றோ.க.த. பாடசாலை | 33.3% |
| 15 | யா/ சென்தோமஸ் றோ.க.த.பாடசாலை | 33.3% |
| 16 | யா/ புலோலி மெ.மி.த. பாடசாலை | 42.9% |
| 17 | யா/ கொற்றாவத்தை அ.மி.த.க | 42.9% |
| 18 | யா/ அல்வாய் வடக்கு றோ.க.த | 43.8% |
| 19 | யா/ கற்கோவளம் மெ.மி.த.க | 25.0% |


(மூலம்:- திட்டமிடல் பிரிவு, வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்)

### 3.3 வடமராட்சிக் கல்வி வலயத்தின் க.பொ.த (உயர்தர)ப் பரீட்சைப் பெறுபேறுகள்

பின்வரும் வரைபானது கடந்த ஐந்தாண்டுகளில் வடமராட்சிக் கல்வி வலயத்தின் க.பொ.த.(உயர்தர)ப் பரீட்சையின் சித்தி வீதங்களை பாடத்துறையாக எடுத்துக்காட்டுகின்றது. பொதுவாக நோக்குகையில் முன்னைய ஆண்டுகளை விட பின்னைய ஆண்டுகளில் சித்தி வீதம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.0 பிரதேசத்தில் தொழில்நுட்பக் கல்வியும் கணனிக் கல்வியும்

க.பொ.த உயர்தர வகுப்பின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப பாடத்துறையானது பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் அணியில் 40 மாணவிகளும் அடுத்த அணியில் 60 மாணவிகளும் தற்போது கற்று வருகின்றனர். இருப்பினும் ஹாட்லிக்கல்லூரியில் 2014ம் ஆண்டு முதல் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமராட்சிக் கல்வி வலயத்துக்கான கணனிக் கற்கை நிலையமும் ஆசிரிய வள நிலையமும் புலோலியில் இயங்கி வருகின்றன. பெரிய பாடசாலைகளில் தனியான கணனி ஆய்வு கூடங்கள் உள்ளன.

### 5.0 முறைசாராக் கல்வி (Non-Formal Education)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் மனை முகாமைத்துவம் மற்றும் சிங்களம் ஆகிய கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன. அதேபோல் புலோலியிலுள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் சிங்களக் கற்கை நெறி நடாத்தப்படுகின்றது. இக் கற்கை நெறிகளை க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் சித்தியடையாத மாணவர்களும் பயில்கின்றனர். இது தவிர பிரதேச செயலகத்தால் மனைமுகாமைத்துவம், கணனிக் கற்கை நெறிகள் என்பன நடாத்தப்படுகின்றன.

### 6.0 சமுதாயத்துக்கான கல்வி வாய்ப்புக்கள்

பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றால் டெங்கு ஒழிப்பு, மது மற்றும் போதை ஒழிப்பு,குடும்ப வன்முறை ஒழிப்பு, சிறுவர் பாதுகாப்பு, அனர்த்தப் பாதுகாப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு போன்ற விழிப்பூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் கொண்டாடப்படும் முதியோர் தினம், சிறுவர் தினம், மகளிர் தினம் போன்றவற்றால் சமூக விழிப்புணர்வு ஏற்படுகின்றது. விதாதா வள நிலையம், நெனச அறிவகம் என்பன பொதுமக்களுக்கான விஞ்ஞான தொழிநுட்ப அறிவை வழங்குகின்றன.

### 7.0 பிரதேச கல்வி அபிவிருத்தியின் நல்ல அம்சங்கள் (Good Practices)

பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் பல நல்ல அம்சங்களை கட்டுரையாளர் இனங்கண்டுள்ளார். அவையாவன,

- ❖ பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் உட்கட்டுமானமும் பண்புத்தரமும் அதிகரித்துச் செல்கின்றது.
- ❖ தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும் ஒப்பிடுகையில் வடமராட்சிக் கல்வி வலயத்தின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக உள்ளன.
- ❖ பிரதேசத்தில் அறநெறிக்கல்வி, விழுமியக்கல்வி மற்றும் வழிகாட்டல் செயற்பாடுகளை வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிரதேசத்திலுள்ள கோயில்கள், தேவாலயங்கள் என்பன பல்வேறு சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

❖ சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் மாணவர்களின் சமயம் மற்றும் தமிழறிவை மேம்படுத்த பல்வேறு செயற்பாடுகளை பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக முன்னொடுக்கின்றது.

❖ கலை இலக்கிய மன்றங்கள், பாரம்பரிய கலைகளை தொடர்ந்தும் பேணிக்காத்துவருகின்றன.

❖ அஞ்சலியகம், ஞானாலயம் மற்றும் ராஜா-ராணி நிறுவனம் போன்ற சமூகத்தொண்டு நிறுவனங்கள் பிரதேசத்தின் உளச்சமூக வழிகாட்டல், ஆன்மீக நன்னெறி வழங்கல் மற்றும் முதியோர் பராமரிப்பு போன்ற நற்காரியங்களைச் செய்து வருகின்றன.

**8.0 பிரதேசத்தின் கல்விப் பிரச்சினைகள்**

கலட்டி றோ.க.த பாடசாலை, அல்வாய் வடக்குறோ.க.த பாடசாலை மற்றும் வல்வை சிவகுரு வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களில் கணிசமான தொகையினர் பாடசாலை நாட்களில் கடல் தொழிலுக்கு செல்வதனால் பாடசாலைக் கல்வியில் நாட்டம் குறைந்தவர்களாக காணப்படுகின்றனர். அதேபோல் அல்வாய் அம்பாள் வித்தியாசாலை மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகும் வீதமும் உயர்வாகக் காணப்படுகின்றது.

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் ஐம்பது வரையிலான ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ள போதும் பாடத்துறை சார்ந்து ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

**9.0 பிரதேசக் கல்வி அபிவிருத்திக்கான சில முன்மொழிவுகள்**

❖ பாடசாலைகளுக்கு வளங்களை சமனாக்கப் பங்கிடலும் பாரபட்சம் காட்டாமலிருத்தலும்

❖ பாடசாலைகளில் இருந்து மாணவர் இடைவிலகலைத்தடுக்க பொறுப்பு வாய்ந்தவர்கள் கூட்டாகப் பணியாற்றல் வேண்டும்.

❖ பொதுப்பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்களிற்கான கல்வி வாய்ப்புக்கள் தொழில் கல்வி வாய்ப்புக்கள் அதிகரித்தல் வேண்டும்.

❖ மாணவர்கள், இளைஞர்கள் தீயவழியில் செல்வதைத் தடுக்க விழுமியக்கல்வி, ஆன்மீகக் கல்வி மற்றும் கலாசாரக்கல்வி வழங்க அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து செயலாற்ற வேண்டும்.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் மூளை என வர்ணிக்கப்படும் பருத்தித்துறை பிரதேசத்தின் அச்சுக் கூடச் செயற்பாடுகள்

திரு. செ. சிதம்பரநாதன்
ஓய்வுநிலை அதிபர்

அச்சியந்திரம், வெடிமருந்து, திசையறிகருவி ஆகிய மூன்றினதும் புத்தாக்கப் புனைவானது(invention) முழு உலகத்தினதும் புறத்தோற்றம் (appearance), பண்பாட்டுநிலை (State) இரண்டினையும் மாற்றியமைத்து என்றார் பிரித்தானிய தத்துவஞானி பிரான்சிஸ் பேக்கன் இம்மூன்றும் இணைந்து ஏற்படுத்திய தாக்கத்தினால் உருவாகிய குடியேற்ற வாதம், அதன் தாக்கம் என்பவற்றை முன்னிலைப்படுத்தியே அவர் இதனைக் கூறியிருக்கக் கூடும்.

இம் மூன்று புத்தாக்கப் புனைவுகளிலும் முதனிலை வகிக்கும் அச்சியந்திரம் தனித்து நின்றும் அனைத்துலகினதும் புறத்தோற்றம், பண்பாட்டுநிலை ஆகியவற்றில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது . இங்கு புறத்தோற்றம் என்பது மனிதனின் நடை, உடை, பாவனை, உணவு, வாழ்விடம், பயன்படுத்தும் பொருள்கள் ஆகியனவற்றைக் குறிக்கும்.

புறத்தோற்ற மாற்றத்திலும் பார்க்கத் தனிமனிதனுக்கும் அவனூடாகச் சமூகத்திற்கும் ஏன் முழு நாட்டிற்கும் மிகுந்த நன்மையளிப்பது பண்பாட்டுநிலை மாற்றமே. தனிமனிதன் நல்லநடத்தை உடையவனாக மாற்றம் பெறுவதே பண்பாட்டு நிலை மாற்றமே. உள்ளத்தில் ஒளியுண்டாக்கி நல்ல நடத்தையை நல்குவது கல்வியே. அச்சியந்திரப் புத்தாக்கப் புனைவின் பின்பு கல்வி பெறுவதில் ஏற்பட்ட மாற்றம் பண்பாட்டு நிலை உயரக் காரணமாகும்.

*15, 16, 17*ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் ஏற்பட்ட மறுமலர்ச்சி பண்பாட்டுநிலை விருத்தியில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்திற்றெனலாம். *1453*ஆம் ஆண்டில் பண்டைய கிரேக்க சாம்ராச்சியத்துள் அடங்கியிருந்த கொன்ஸ்தாந்திநோபிளைத் துருக்கியர் கைப்பற்றியமையால் அங்கு வதிந்த ஞானிகள், அறிஞர்கள், கலைஞர்கள் தமது கையெழுத்துச் சுவடிகளுடன் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர் என்றும், அதனால் அவ்வந்நாடுகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்றும் வரலாறு கூறும். ஆனால் *1455*ஆம் ஆண்டில் புத்தாக்கப் புனைவினால் உருவான அச்சியந்திரம் மறுமலர்ச்சிக்கு வழங்கிய மகத்தான பங்களிப்புப்பற்றி எதனையும் கூறுவதில்லை. அச்சியந்திரசாலைகள் ஐரோப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் பரவி மறுமலர்ச்சிக்கு இட்டுச் சென்றதென்றும் பின்னர் அனைத்துலகிற்கும் பரவியது என்பதுமே உண்மை. பிறிதோரிடத்தில் அச்சியந்திரம் காற்றைப்போல் ஐரோப்பிய நாடெங்கணும் பரவி 15ஆம் நூற்றாண்டிலேயே அறுபது மில்லியன் நூல்களை அச்சிட்டுக் குவித்திருந்தன என்றும் குறிப்பிடப்படுகின்றது. மறுமலர்ச்சியானது இலக்கியம் , இலக்கணம், விஞ்ஞானம், மருத்துவம், ஓவியம், சிற்பம், கட்டடம், நாடகம், இசை ஆகிய கலைகள், அரசியற் சிந்தனை, மதச்சீர்திருத்தம் என அனைத்துத் துறைகளிலும் புத்தெழுச்சியையும் புரட்சிகர மாற்றங்களையும் ஏற்படுத்தியது. சுருங்கக் கூறுவதாயின் மொழியென்னும் மண்ணில் அறிஞர்களின் சிந்தனைகள், ஆக்கங்கள் என்னும் விதைகள் விதைக்கப்பட்டு அச்சியந்திரம் என்னும் மழைமேகத்தின் அச்சிடுதல் என்னும் மழை பொழிந்து அறிவு வளர்ச்சியென்னும் பயிர் செழித்து வளர்ந்தது. அதனால் பண்பாட்டு நிலை பெருவிருத்தி கண்டது.

விஞ்ஞான வளர்ச்சியென்னும் நீண்டகாலப் பயிர் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சியை ஏற்படுத்தி மனிதனின் புறத்தோற்ற விருத்தியில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது. பண்பாட்டு நிலை, புறத்தோற்றம் ஆகிய இருதுறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

கல்வி வளர்ச்சிக்கு அச்சியந்திரத்தின் பங்களிப்பின் அவசியத்தைப் பின்வரும் கூற்றின் மூலம் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். "சமூகம் உலக நிகழ்வுகள் பற்றிய தகவல்களைச் செய்தித்தாள்களினூடாக அறிந்து கொள்கின்றது. புதிய சந்ததிக்கு நூல்களினூடாகக் கல்வியை வழங்குவதன் மூலம் அறிவுத் தேட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யப்படுகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு வகையான நூல்கள் மூலம் கல்வி வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு கலைத்திட்டத்தினதும் அடிப்படையான பாடத்திட்ட நூல்களைப் பல்கலைக் கழகங்களும் கல்விச்சபைகளும் விதப்புரை செய்கின்றன. அச்சுத்தொழிநுட்பத்தைக் கையாண்டு பல்வேறு வெளியீட்டாளர்கள் நூல்களை வெளியிடுகின்றனர். ஆகவே அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியே புதிய சந்ததியினருக்குக் கல்வி வழங்கப்படுகிறது எனக் கூறமுடியும். அடிப்படைக் கல்வியும் புதிய புதிய தொழிநுட்பத் தகவல்களும் சேர்ந்த கலவையே முழுமையான கல்வி எனலாம். அச்சுத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதால் மட்டுமே முழுமையான கல்வியைப் பெற முடியும். கலைத்திட்டத்தின் பாடத்திட்டத்திற்கு அப்பாலான அறிவினைப் பல்வேறு மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பல்வேறு வகைத்தொழில் நுட்ப நூல்கள், பருவ இதழ்கள் மூலம் இளைஞர்கள் அறிவினைச் சம்பாதிக்க முடியும். புதிய வசதிகள் மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதங்களாகும்". இக்கூற்று கல்வி பெறுவதற்கு அச்சுத்தொழில் நுட்பத்தின் மகத்தான பங்களிப்பைப் புலப்படுத்துகின்றதன்றோ?

மாணவர்கள் மட்டுமன்றி தொழில் புரிந்து குடும்ப வாழ்வு வாழ்வோரும் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள்,கட்டுரைகள், அறிவியல் நூல்கள், பண்டைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் முதலியவற்றைப் பயனுள்ள பொழுதுபோக்காகப் படித்துப் பண்பாட்டு நிலையை மென்மேலும் விருத்திசெய்வதைக் கண்கூடாகக் காணலாம்.

இன்று கிணற்றுத் தவளைகள் போல் வாழாது நாட்டு நடப்புக்கள், உலக நடப்புக்கள் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகக் கருதப்படுகிறது. அதனாலன்றோ க.பொ.த(உ/த) பரீட்சையில், பதவிகளுக்கான ஆட்சேர்ப்புப் பரீட்டைசகளிலும் பொதுஅறிவும் பரீட்சிக்கப்படுகின்றது. பொது அறிவினை வழங்குவதில் பத்திரிகைகளின் பங்களிப்பு மகத்தானது. அச்சியந்திரப் புத்தாக்கப்புனைவால் பத்திரிகை வெளியீட்டில் திடீரென ஏற்பட்ட அதிகரிப்பு (Information Explotion) மக்களின் பொது அறிவு வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தது.

**பருத்தித்துறைப் பிரிவில் இயங்கிய பழைய முறையிலான அச்சகங்கள்**

பருத்தித்துறைப் பிரிவின் மிகத்தொன்மையான அச்சகமான “பாரதி முத்திராட்சரசாலை” யில் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரால் இயற்றப்பட்டு 1887ல் அச்சிடப்பட்ட “திருச்செந்தில் யமகவந்தாதி” என்னும் நூலின் முகப் புத்தகத்தின் நிழற்படப் பிரதி ஆவணரீதியான சான்றாதாரமாக கிடைத்துள்ளது. இவ்வச்சகம் ஆரம்பிக்கப்பட்ட, செயலிழந்த ஆண்டுகள் போன்ற வேறு எவ்விதமான விபரங்களும் தெரியவரவில்லை. ஆயினும் இற்றைக்கு 127 வருடங்களுக்கு முன்னர் வடமராட்சியில் ஒரு அச்சகம் செயற்பட்டமை வடமராட்சிக்குப் பெருமை சேர்க்கும் ஒரு நிகழ்வென்பதில் மறுப்பேதும் இருக்க முடியாது. வல்வெட்டித்துறைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இருந்த கடல் வழித் தொடர்பும் வல்வெட்டித்துறைக் கிராமத்தின் செல்வச் செழிப்பு நிலையும் இதற்குக் காரணமாக அமைந்ததெனலாம்.

**கலாநிதியந்திரசாலை**

இது வடமராட்சியில் செயற்பட்ட அச்சுக்கூடங்களுள் தொன்மையில் இரண்டாம் இடத்தையும் செயற்பாட்டில் முதலாம் இடத்தையும் வகித்தது என்பது மறுத்துரைக்க முடியாத உண்மையாகும். தும்பளை மேற்குக் கிராமத்தின் பிராமண தெருவில் பிராமணர்களாலேயே நிறுவப்பட்ட இவ்வச்சகம் ஏறத்தாழ 65 வருட காலம் வெகு சிறப்புடன் இயங்கியது, இக்கிராமத்தின் தபாற்பெட்டிச்சந்தியிலிருந்து வடக்கே சுமார் 100மீற்றர் தொலைவில் கிட்டத்தட்ட 5 பரப்புக் காணியில் தெருவுக்கு அண்மித்து அமைந்திருந்தது. வாயில் தூண்களுக்கு மேல் குறுக்காகக் கலாநிதியந்திரசாலை என்று பொறிக்கப்பட்ட வைரக்கல்லின் கீழ் வாயிற் கதவைக் கொண்டிருந்தது. கட்டிடத்தின் பின்புறம் நெல்லிமரம், விளாமரம் என்பன காணப்பட்டன. இதனுள்ளே அச்சியந்திரம் இயக்கப்படும் ஓசை வெட்டும் கத்தி மூலம் காதிதங்கள், கட்டடப்பட்ட நூல்கள், வெட்டும் ஓசை, புத்தகம் கட்டுவதற்காகத் துளையிடுவதற்காகச் சுத்தியலால் தட்டும் ஓசை கேட்ட வண்ணமிருக்கும். எம்மூரவர்களும் அயற்கிராமத்தவர்களும் இங்கு வேலை செய்து ஊதிய மீட்டியதுடன் அக்கலையும் பயின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சகத்திற்கு எதிர்பக்கமாக தெருவுக்கு மேற்குப் பக்கத்தில் 4 வாயில்களுக்குச் செல்லும் நடைபாதை களால் பிரிக்கப்பட்ட 5 உயரமான திண்ணைகள் சுமார் 6 அடி அகலத்தில் அமைந்திருந்தன. இத்திண்ணைகளில் பிராமணச் சிறுவர்களுக்குச் சுப்பிரமணிய சாஸ்திரிகள் சமஸ்கிருதம் கற்பிப்பார் என்றும் கூறப்படுகிறது. ஒரே நேர்கோட்டில் 4 அறைகளாகக் கொண்ட ஒரே கூரையின் கீழ் கீழான வீட்டுத்தொகுதியின் 3 வாயில்கள் சுப்பிரமணிய சாஸ்திரிகள், சகோதரர்களுக்கு உரியவை. வடக்கு எல்லையில் உள்ள ஒரு அறை அவர்களின் உறவினரான யோகேஸ்வர ஐயரக்குரியது. நடுவில் அமைந்த 3 திண்ணைகள் நீளத்தில் கூடியவை. இரண்டு எல்லைகளிலும் உள்ள திண்ணைகள் நீளம் குறைந்தவை.

1958ம் ஆண்டு சித்திரை மாதம் அச்சிட்டுக் கொடுக்கப்பட்ட திருமண அழைப்பிதழ்களைப் பெற எனது ஒன்று விட்ட அண்ணனுடன் சென்ற போது அச்சிடும் செயற்பாட்டை மிகுந்த ஆவலுடனும் கவனிக்க முடிந்தது.

1875.02.17ல் பிறந்து தமது 19 வயதில் 1894ல் இருந்து பஞ்சாங்கத்தைக் கணித்த வெளியிட்டவர் பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணியநாஸ்திரிகளாவார். 1897ஆண்டுவரை பிற அச்சுக் கூடங்களில் அச்சாகி வெளியிடப்பட்டமையால் விலையை உயர்த்த வேண்டியிருந்தமை மற்றும் நேரத்துக்கு அச்சிட்டு எடுத்துக் கொள்வதில் இருந்த தொல்லை ஆகிய காரணங்களால் தமது மாமனாரும் குருவுமாகிய முத்துக்குமாரசாமிக் குருக்களுடன் சேர்ந்து தமது இல்லத்தில் 1897ம் ஆண்டில் சோதிடவிலாசயந்திரசாலை என்னும் பெயரோடு ஓர் அச்சகத்தை நிறுவித் தமது பஞ்சாங்கத்தை அதிலேயே அச்சிட்டு வெளியிட்டார்.

அக்காலத்தில் சாதகரத்தனாகரம், இருது சாதகம், பாலசிசஷாமஞ்சரி, சமஸ்கிருத பிரதமபாடம்,சிவராத்திரி மகிமை, முதலிய நூல்களைப் பதித்து வெளியிட்டார். பின்னர் அச்சகத்தைப் பெருப்பிக்க எண்ணித் தமது தம்பியாராகிய சோமந்சுந்தர ஐயர் அவர்களைச் சென்னைக்கு அனுப்பி அவர் மூலமாகத் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அழகான எழுத்துக்களையும் மற்றய கருவிகளையும் வருவித்தார். சோமசுந்தர ஐயரும் தாமுமாகக் கலாநிதியந்திரசாலை என்னும் பெயருடன் ஒரு அச்சகத்தை 1904ல் நிறுவி அங்கு தமது பஞ்சாங்கத்தை அழகுற அச்சிட்டு வெளியிட்டார். இவரது பஞ்சாங்கங்களிற்கு முகவர்கள் இலங்கை இந்தியாவில் மட்டுமன்றி றங்கூன், மோல்மேன், பர்மா, பெரு, சீரியம், கியான்ஜில், பியாபொன், பிளாங்கு, சிங்கப்பூர், ஈப்போ, மொறிஷியல் ஆகிய இடங்களிலும் இருந்தனர்.(நிழற்படம்)

சைவப் பெரியார்கள் பலர் சாஸ்திரியர்களின் தமிழையும் உரையெழுதும் வன்மையையும் அறிந்து ஊர்களில் உள்ள கோயில்களில் ஆண்டு தோறும் படித்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனும் சொல்லி வரும் கந்தபுராணத்திற்குப் பதவுரையும் விருத்தியுரையும் எழுதி வெளியிட்டால் சைவ உலகுக்கு மிகவும் பயன்படுமெனக் கூறி அங்ஙனம் ஒரு உரையை எழுதித்தருமாறு அவரை வேண்டினர். சாஸ்திரியர்களும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க கந்தபுராணத்தின் முதற் காண்டமாகிய உற்பத்திக் காண்டத்தைப் பகுதி பகுதியாக உரையெழுதி அச்சிட்டு நிறைவேற்றி முழுவதும் முடிந்தவுடன் அவற்றைச் சேர்த்து ஒரு நூலாக்கி வெளியிட்டார்.

தமிழ் மொழிக்கு அழியாப் பெருந்தொண்டாற்றிய புலவருமாகிய பாண்டித்துரைத்தேவர் அவர்களும், அக்காலத்தில் சென்னைப் பிரசிடென்சிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராயிருந்து கடமையாற்றிய டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களும் சாஸ்திரிகள் இயற்றிய உற்பத்திக் காண்ட விருத்தியுரையின் தெளிவையும் வியந்து அடுத்த காண்டங்களையும் தொடர்ந்து எழுதி அந்நூல் முழுவதுக்கும் உரை செய்து தமிழுலகுக்கு உதவ வேண்டும் என சாஸ்திரியர்களை ஊக்கப்படுத்தினார். அதனால் அவரும் அடுத்த காண்டங்களாகிய அசுர காண்டத்திற்கும், மகேந்திர காண்டத்திற்கும் உரையெழுதி பகுதி பகுதியாக வெளியிடாது முழுநூல்களாகவே நிறைவேற்றி வெளியிட்டார். நான்காவதாகிய யுத்தகாண்டத்தின் முற்பகுதியை அச்சிடத் தொடங்கும் போது முதலாம் ஐரோப்பிய மகாயுத்தம் குறுக்கிட்டது. அதனால் ஏற்பட்ட காகிதத்தாள் பஞ்சத்தின் காரணமாகத் தாம் எழுதி நிறைவேற்றிய பகுதியை மட்டும் வெளியிட்டு நூலுக்கு உரையெழுதுவதைச் சிறிது ஒத்திவைத்தார். இவ்வாறு வெளியிட்ட கந்தபுராணத்தின் மூன்று காண்டங்களும் சிறு காலத்தில் செலவாகிவிடவே அந்நூல்களின் இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவந்தது.

அவர் பிள்ளையார் புராணத்திற்கும் ஓர் உரையெழுதி வெளியிட்டார். அத்துடன் நீதி வெண்பா விரிவுரை, கந்தரனுபூதி உரை, ஏகாசிப்புராணக் குறிப்பு முதலிய நூல்களையும் எழுதி அச்சிட்டு தமிழுலகிக்கு ஈர்த்தார். தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் பொருட்டு குறைந்த விலையில் ‘சொற்பொருள் விளக்கம்’ என்னும் கையடக்கமான தமிழ் அகராதி ஒன்றினையும் ஆக்கி வெளியிட்டார். விலையிற் குறைந்தது என்றும் பொருுட் செறிவிற் சிறிதும் குறைந்ததன்று இந்நூல் சங்ககாலம் முதல் அன்றைய நாள்’ வரை தமிழ்மொழியில் எழுத்துலவும் நூல்களிற் காணப்படும் தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சோதிடத்தில் தமக்கிருந்த ஆழ்ந்த அறிவையும் தமிழ்ப் புலமையையும் பயன்படுத்தி சைவ, தமிழ் உலகிற்கு அருந்தொண்டாற்றி மிகுந்த செல்வ வளத்துடன் வாழ்ந்து வந்த சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது தம்பியாராகிய சோமசுந்தர ஐயரவர்களின் புதல்வர் வைத்திய நாதஐயர் என்பவரை சிறுவயது தொடக்கம் அன்புடன் போற்றி வளர்த்து தமிழ் சமஸ்கிருதம் எனும் இரு மொழிகளையும் கற்பித்து வந்தார். வைத்திய நாதர் ஆங்கிலத்தையும் பயின்று உயர்தர வகுப்பிற் சித்தியடைந்தார். அவர்களிற்கு சாஸ்திரியர்களின் மரபில் நின்று சோதிடத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித நூலையும் பயின்று வந்தார். சில ஆண்டுகளில் வைத்திய நாத ஐயரவர்கள் தாமாகவே பஞ்சாங்கத்தைக் கணிக்கவும் முகூர்த்த நிர்ணயம் சேய்யவும் வல்லுநராயினார். இதனைக் கண்டு 1927ம் ஆண்டு முதல் பஞ்சாங்கம் அச்சிட்டு வெளிப்படுத்த அவருக்கு உத்தரவு கொடுத்தார். இது வரை சாஸ்திரிகளின் பெயர் பொறிக்கப்பட்டு வெளிவந்த பஞ்சாங்கம் பிரம்மஸ்ரீ சோ.வைத்திய நாதசாஸ்திரிகளின் பெயர் கொண்டு வெளிவந்து பரவியது, 1936 வரை அவர் பெயரிலேயே வெளிவந்த பஞ்சாங்கம் அவரது மறைவிற்குப் பின்னர் நின்று போனது.

1959ம் ஆண்டு ஒரு மாலைப் பொழுதில் சோமையர் மிகவும் உடல் தளர்ந்த நிலையில் பருத்தித்துறை நகருக்குச் சைக்கிளில் சென்றது நினைவில் உள்ளது. 1960ல் ஒரு மாலைப் பொழுதில் அவரின் உயிரற்ற உடல் கூடாரமற்ற ஒரு பாடையில் துணியால் மூடிய நிலையில் (பிராமண முறையில்) மயானத்திற்கு எடுத்துச் சென்றதும் நினைவில் உள்ளது. அவரின் மரணத்திற்கு முன்பே பாரதியந்திர சாலையும் புத்தகசாலையும் என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைப் பருத்தித்துறை நகரில் விசுவையர் ஆரம்பித்தார். எனது தந்தைக்கும் அழைப்பிதழ் கொடுத்தமையால் அதற்கு சென்று ஒரு நூலினை வாங்கி வந்ததுநினைவில் உள்ளது. எழுத்துக்கள் தேய்ந்து போயிருந்தமையால் தொழில் சிறப்புற நடைபெறாத போக விரைவிலேயே எந்திரத்தை விற்று விட்டுத் தாபனத்தை மூடும் நிலை ஏற்பட்டது. ஒரு மகோன்னத வரலாறு இவ்வாறு சோகத்தில் முடிவடைந்தது.

அவரது சோதிட விலாசயந்திர சாலையில் சு.ஏரம்பையர் எழுதிய மகாசங்கற்பம் என்னும் நூல் 1901ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. கலாநிதியந்திரசாலையில் அச்சிடப்பட்ட நூல்களும் உரைகண்டும் வெளியீட்டாளராயும் வெளியிட்ட நூல்கள்.

1) கந்தபுராணம் உற்பத்திக்காண்டம் 1907 1ம், 2ம் பதிப்புகள்
2) கந்தபுராணம் அசுர காண்டம் 1ம், 2ம் பதிப்புகள்
3) கந்தபுராணம் மகேந்திர காண்டம் 1ம், 2ம் பதிப்புகள்
4) சொற்பொருள் விளக்கம் என்னும் தமிழகராதி முதற்பதிப்பு 1924, 2ம், 3ம் பதிப்பு
5) ஏகாதசிப்புராணம் குறிப்புரையுடன்
6) திருவாதவூரர் புராணம்
7) பிள்ளையார் புராணம் உரையுடன்
8) கந்தரனுபூதி உரையுடன் (நூலாசிரியரான அருணகிரிநாதர் வாழ்க்கை வரலாற்றுடன்)
9) கந்தரலங்காரம்
10) தோத்திரத்திரட்டு
11) பிள்ளையார் கதை
12) சுப்பிரமணியசாமி காவடிச்சிந்து
13) ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரையுடன்
14) வெற்றிவேற்கை உரையுடன்
15) வாக்குண்டாம் உரையுடன்
16) நல்வழி உரையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) நன்னெறி உரையுடன்
18) வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி மூன்றும் உரையுடன்
19) நீதிவெண்பா உரையுடன்
20) திருக்குறள் அறத்துப்பால் மூலம்
21) பகவத்கீதை சமஸ்கிருத சுலோகமும் தமிழுரையும்
22) தமிழ் ஆசௌசதீபிகை

அச்சிடப்பட்ட பிறரது நூல்கள் (கிடைத்த விபரங்களின்படி)

1) தோத்திரப் பாமாலை - 1911
2) சிவராத்திரி புராணம் - வரதராசக் கவிராயர் - 1913
3) தட்சிண கைலாச புராணம் - பண்டிதராயர் - 1914
4) கோணேசர் கல்வெட்டு - கவிராயர் - 1916
5) பிரசாத தீபம் - குமாரசாமிக் குருக்கள் - 1932
6) சிரார்த்த தீபிகை - குமாரசாமிக் குருக்கள் - 1933
7) திருவாசக மணிகள் - சு.சிவபாதசுந்தரம் - 1933
8) துகளறு போதம் - திக்கம் செல்லையாபிப்பிள்ளை - 1950
9) சாதியும் சமயமும் - ச.குமாரசாமிக் குருக்கள் - 1950

சகோதரர்களாகிய எங்களின் பெயர்களை அறிந்திருக்கும் அளவுக்கு விசுவையர் தந்தையாரும் நட்புப் பாராட்டியவர். கந்தபுராணத்தின் மூன்று காண்டங்களின் பிந்திய பதிப்பு நூல்களும் சொற்பொருள் விளக்கம் என்னும் அகராதியின் இரண்டு பதிப்பு நூல்களும் தந்தையாரிடம் இருந்தன. நான் க.பொ.த(உயர்தரம்) கற்கும் போது அசுர காண்டத்தின் மார்க்கண்டேயப் படலம் தமிழ்ப்பாடத்தின் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தமையால் அந்நூலினைக் கொண்டு சென்று கற்று வந்தேன். கந்தபுராண படனத்தில் ஈடுபடுபவர்கள் அவற்றை வாங்கிச் செல்வதும் வழக்கம். தந்தையின் வயோதிப காலத்தில் அல்லது அதன் பின் அதன் பெருமை தெரியாத மருமக்களால் அது இழக்கப்பட்டிருக்கலாம். நூலின் பெறுமதியை விட உணர்வுகள் பெறுமதி அதிகமானமையால் அவற்றின் இழப்பை நினைக்கும் போது ஏற்படும் பெரிய மனவேதனை பெரிது.

நெல்லண்டையைச் சேர்ந்த சின்னையா என்பவர் அந்தக் காலப் பஞ்சாங்கம் அச்சிடும் வேலைகளில் பிரதான இடத்தினை வகித்தவரென அறிய முடிகிறது. 1954, 55களில் வயோதிப நிலையில் இருந்த திரு. சின்னையாவினை நான் அறிவேன். அவரது உறவினராகிய ராமையா என்றழைக்கப்படும் திரு.பரஞ்சோதி என்பவரும் நீண்டகாலம் காலநதியில் வேலை செய்தவராவார். காலஞ்சென்ற ஆசிரியர் திரு.போ.செல்வரத்தினம், திரு.ச.கார்த்திகேசு பிள்ளை இருவரும் இன்றும் நம்மிடையே வாழ்பவர்கள். கலாநிதியந்திரசாலையில் அச்சிடப்பட்ட சில நூல்களின் பட்டியலையும் கூறி அரிய தகவல்களையும் தந்துதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோகர அச்சியந்திரசாலை**

தும்பளை மேற்குக் கிராமத்தவரான திரு.க.சின்னத்தம்பி என்பவரால் பருத்தித்துறை நகரில் இது ஆரம்பிக்கப்பட்டது. இன்று நிலோஜன்கபே இயங்கும் அறையில் இது அமைந்திருந்தது. இவருடன் இவரின் மனைவியின் சகோதரரான திரு.வேலாயுதமும் (தாடி வேலாயுதம்) அச்சக வேலைகளிலீடுபட்டு வந்தார். கிட்டத்தட்ட பத்து வருடகாலம் இயங்கிய இவ்வச்சகத்தில் 1936ல் அச்சிடப்பட்ட நாட்டுச் சீவன சாத்திரம் நூலின் நிழற்படப்பிரதி இணைக்கப்பட்டுள்ளது. திரு.வே.சிதம்பரப் பிள்ளை என்பவர் உரை எழுதிய கந்தபுராண யுத்த காண்டம் "சூரபன்மன் வதைப்படலம்" 1938ல் அச்சிடப்பட்டதாக அறிய முடிகிறது. கிட்டத்தட்ட பத்துவருடம் இவ்வச்சகம் இயங்கியதாகவும் நிறுவுநர் கலாநிதி யந்திரசாலையில் வேலை பழகியவர் என்பதையும் அறிய முடிகின்றது.

**ஊழியன் அச்சகம்**

1950 களில் அமரர்களான நல்லதம்பி, ஏரம்ப மூர்த்தி ஆசிரியர், அருட்பிரகாசம் ஆசிரியர் ஆகியோரால் லங்காசமசமாஜக் கட்சித் தேவைகளுக்காகத் தொடங்கப்பட்டது. பின்பு நல்லதம்பி என்பவரே பொறுப்பேற்று நடத்தினார். நான் 1955ல் ஹாட்லிக் கல்லூரியில் 4ம் வகுப்பில் சேர்ந்த போது இதன் வாயிலைத் தாண்டிச் செல்வது வழக்கம். அப்போது பருத்தித்துறையில் இயங்கிய சென்றல் தியேட்டரின் திரைப்படவிளம்பர அறிவித்தல்கள் உள்ளே இரண்டாக மடிக்கப்பட்ட நிலையிலிருக்கும். இவ்வச்சகத்தின் பிரதான வேலை அவற்றை அச்சிடுவதே.

இவ்வச்சகத்தின் பிரதான வேலை சென்றல் தியேட்டரின் திரைப்படங்களுக்கான விளம்பர அறிவித்தல்களை அச்சிடுவதேயாகும். திரைப்படங்களின் பெயர் கொட்டை எழுத்துக்களில் அச்சிட வேண்டியிருந்தால் அச்சியந்திரப் புத்தாக்கப் புனைவின் முன்னர் பயன்படுத்தப்பட்ட மரச் செதுக்கல் அச்சிடும் தட்டுமுறையே பயன்படுத்த வேண்டியிருந்தது. சாதாரணமாக அச்சியந்திரங்களில் நான்கு பக்கங்களை ஒரே தடவையில் அச்சிட முடியும் இவ்வாறு பயன்படுத்தப்படும் காதிதத்தாள் முழுவதும் ஒரு விளம்பர அறிவித்தல் அச்சிடப் பயன்படுத்தப்பட்டது. இதற்காக முதலில் மரப்பலகை அழுத்தமாக சீவப்படும். பின்னர் ஓவியர்கள் அப்பலகையில் விபரங்களைப் பென்சிலால் எழுதிக் கொடுப்பர். இதற்கு வழக்கமாகச் சென்றல் தியேட்டர் பருத்தித்துறை என்பது நடுத்தர அளவில் எழுதப்படும். அடுத்த வரியில் திகதி முதல்,அடுத்து கதாநாயகன் கதாநாயகியாக நடிக்கும் நடிகர்கள் பெயர்கள்(உதாரணமாக சிவாஜிகணேசன், பத்மினி நடிக்கும், பின்பு கொட்டை எழுத்தில் திரைப்பட பெயர்) அடுத்த வரியில் தினசரி 6.30,9.30 காட்சிகள் கனி ஞாயிறு 10.30 மணிக்கு மெட்னி காட்சிகள் காண்பிக்கப்படும். இதில் நிற எழுத்துக்களாக வரவேண்டிய பகுதிகள் பலகை மட்டத்திலேயே இருக்க அறிவித்தலில் வெள்ளையாக இருக்க வேண்டிய பகுதிகள் சற்றுத் தாழ்வான மட்டத்திற்கு உளியால் வெட்டி அகற்றப்படும். இவ் வேலையை மாதனையைச் சேர்ந்த திரு.நடராசா என்பவர் செய்து கொடுத்தார். அதனை அச்சியந்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான அச்சிடும் தகட்டிற்குப் பதிலாகப் பயன்படுத்தி அச்சிடப்படும். காலப்போக்கில் முதலாவது வரித்துண்டு நிரந்தரமாகப் பயன்படுத்தப்பட்டது. திரைப்படத்தின் பெயர் மட்டும் பலகையில் வெட்டப்படட வார்ப்புரு செய்விக்கப்பட்ட ஏனைய எழுத்துக்கள் பெரியதாக வார்ப்புரு செய்'யப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

இத்திரைப்பட விளம்பர அறிவித்தல்கள் அக்காலச் சிறுவர்களின் எழுத்தறிவிற்கும் வாசிப்புத்திறன் விருத்திக்கும் பேருதவியாக அமைந்தது. நான் 1953ல் 2ம் வகுப்பில் படிக்கும்போது பெரியதாய் வீட்டிற்கு ஒன்றுவிட்ட சகோதரர்களுடன் விளையாடச் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் செல்வது வழக்கம். அப்போது சிவப்பிரகாசம் ம.வி.சந்தியில் இருந்த சங்கக் கடைக்கு கிழக்கே வசித்த பாதமுத்து நாடார் வீட்டின் முற்பகுதியில் ஒரு விளம்பரத்தட்டில் கட்டித்தொங்க தொங்க விடப்பட்டிருக்கும். அதில் நெல்லியடியில் இருந்த இரு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருக்கும் அதை நின்று வாசித்து விட்டுச் செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தேன். பின்பு ஹாட்லிக்கல்லூரிக்குச் செல்லத் தொடங்கிய பின் சென்றல் தியேட்டரின் வாயிலும் தியேட்டர் முகப்பிலும் விபரங்கள் ஒட்டப்பட்டிருக்கும். அதை போகும் போதும் வரும் போதும் பார்க்கத் தவறவில்லை. அக்காலத்து தமிழ்,ஹிந்தி, சிங்கள, ஆங்கிலப் படங்களின் பெயர்கள் இன்றும் நினைவில் உள்ளன. சிவப்பிரகாச ம.வி சந்தியில் பானுமதி நடித்த சண்டிராணி என்னும் பட்டப்பெயர் பிருட்டமிகுராணி என்று பொருள்பட எழுத்து சிறிது மாற்றி 1954ல் எழுதியிருந்தமை மறுக்க முடியாது.

ஊழியன் அச்சகத்தில் கடமையாற்றி நாகலிங்கம் என்பவர் ஆங்கில மொழியில் அச்சிடுவனவற்றைச் சரவை பார்த்து திருத்துவதில் வல்லவராக விளங்கினார். ஆகவே ஹாட்லிக் கல்லூரியின் மாணவர் தேர்ச்சி அறிக்கை மெய்வன்மை போட்டிச் சான்றிதழ்கள் என்பன ஊழியன் அச்சகத்திலே அச்சிடப்பட்டன. மாணவர் தேர்ச்சி அறிக்கையின் முகப்புப்பகுதி யாழ்ப்பாணம் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டுது. தற்போது திருநாகலிங்கத்தின் மகனால் நியூஊழியன் என்னும் பெயரில் நவீன டிஜிற்றல் முறையில் அச்சுப்பதியும் முறையில் அச்சுவேலைகள் செய்யப்படுகின்றன.

**வாணி அச்சகம்**

இதை ஆரம்பித்தவரான ராமையா என்று அழைக்கப்பட்ட திரு.பரஞ்சோதி கலாநிதியந்திரசாலையில் வேலை பார்த்தவர். 1961 அளவில் தற்போதைய அஞ்சல் அலுவலகத்திலிருந்து 3வது கடையில் இது இயங்கத் தொடங்கியது. இங்கு கலாநிதியந்திரசாலையில் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தை ஒத்த அச்சுயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இதற்கு இருவர் சேர்ந்து நின்று கொண்டு ஒவ்வொருகாலால் உதைப்புக் கொடுக்கும் போது இயந்திரம் இயங்கும். உதைக்கும் போது திறந்து திறந்து மூடும் வாயை ஒத்த பகுதியில் காகிதத்தாளை மாற்றி மாற்றி வைப்பதன் மூலம் அச்சிடும் செயற்பாடு நடைபெற்றது. அப்போது இரண்டு வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்று வரும் போதெல்லாம் அச்சியந்திரம் இயங்கிக் கொண்டேயிருந்தமை நினைவுக்கு வருகிறது. திரு பரஞ்சோதி காலமானபின் கலாநிதியந்திரசாலையில் வேலை பார்த்த திரு.கா.சி.சின்னையா என்பவரின் மகன்களான திருவாளர்கள் கா.சி.மார்க்கண்டு, கார்த்திகேசு ஆகியோர் அதனை வாங்கி நடத்திவந்தனர். அவர்களது தம்பியாகிய இரத்தினசபாபதி என்பவர் இங்கு வேலை பார்த்தார். சகோதரர்களின் ஒருவர் பருத்தித்துறை நகரின் வர்த்தகர். மற்றவர் அரச ஊழியர். இவர்களுக்கு இத்துறை அறிமுகமில்லாதது. ஆகவே விரைவில் மூடப்பட்டது.

**கலாபவன அச்சகம்**

வியாபாரிமூலையைச் சேர்ந்த ஆசிரியரும் கவிஞருமான திரு.வே.சிவக்கொழுந்து அவர்களால் இவ்வச்சகம் ஆரம்பிக்கப்பட்டது. நான் 1954ல் சிவப்பிரகாச வித்தியாசாலையில் 3ம் வகுப்பில் கற்கும்போது பயன்படுத்திய கணிதம், மனக்கணிதம், பூமிசாத்திரம் ஆகிய நூல்கள் இவர் எழுதியவையே. அவை எங்கு அச்சிடப்பட்டன என்ற விபரம் தெரியவில்லை. அவரின் மகள் திருமதி. தவத்துரைநாதன் என்பவர் தான் 1953ம் ஆண்டு பிறந்ததாகவும் 1954அளவில் அச்சகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறினார். பாலபாடம், பாலபோதினி மணிவாசகம் ஆகியவை தான் அக்காலத்தில் என்னிடம் இருந்த தமிழ்ப் புத்தகங்கள். ஆனால் திரு,வே.சிவக்கொழுந்து எழுதிய "நான் ஓர் சின்னவீரன் தானே எனது திறமையைக் கேளடி மானே" என்ற கவிதை அக்காலத்தில் மனனமாகியிருந்தது. எப் புத்தகத்தில் அது இடம் பெற்றிருந்தது என்பது தெரியவில்லை.

ஹாட்லிக்கல்லூரியினும் 4,5 ம் வகுப்புக்களில் அவர் எழுதிய கணிதம், மனக்கணிதம் ஆகிய நூல்களைப் பயன்படுத்தியமை நினைவில் உள்ளது. வேறு பல இடங்களில் அவர் எழுதிய அருமையான சிறுவர் கவிதைகளை படித்ததாக ஞாபகம். "வட்ட வட்டப் பூக்கள் வண்டுதும் பூக்கள் எடட்டுக்குப் பூக்கள் இனிய ரோசாப் பூக்கள்" என்று தொடரும் பாடலும்,

குமுக்காக் கணபதியாய் குழலண்ணா சாமியுமாய்
தமுக்குத் தமுக்கெனவே தாளம் சரி பார்த்து
இமைக்குள் பல ராகம் எழுத்தூதித் தலையாட்டி
நமக்குள் சபாஷ் போட்ட நாளுமினி வாராதோ

என்ற பாடல்கள் மறக்க முடியாதன.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது சோதிட, தமிழ் அறிவினைப் பயன்படுத்தி எழுதும் நூல்களையும் பிறரின் நூல்களையும் அச்சிடும் அச்சியந்திர சாலையை துணிந்து பெரும் முதல் விட்டு ஆரம்பித்தது போல் திரு.சிவக்கொழுந்து அவர்களும் தான் பார்த்த ஆசிரியத் தொழில் அனுபவம் மற்றும் கவிபுனையும் ஆற்றல் ஆகியவற்றின் மூலம் தான் ஆக்கிய நூல்களைத் தனது அச்சகத்திலேயே அச்சிட்டு வெளியிட்டார். பல பண்டிதர்கள் இத்தகைய ஆற்றல்களைக் கொண்டிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு இல்லாத துணிச்சல் திரு.வே.சிவக்கொழுந்துவிற்கு இருந்தமையால் பல பாடநூல்களையும் 'ஜீவ யாத்திரை' என்ற தனது கவிதை நூலையும் தனது அச்சகத்திலேயே அச்சிட்டு வெளியிட்டார். தனது அச்சகத்தை ஆரம்பிக்க முன்பும் மூன்று கவிதை நூல்களை வேறு அச்சகங்களில் அச்சிட்டு வெளியிட்டார்.

தனது சகோதரிகளுக்கு திருமணம் முடித்து வைக்க வேண்டிய பொறுப்பினை தனது அச்சகம் மூலம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு நிறைவேற்றி வைத்தார். அவரது அச்சகத்திற்குப் பருத்தித்துறையில் இருந்த வேறெந்தத அச்சகத்திற்கும் இல்லாத சிறப்புக்கள் இருந்தன. ஒன்று மற்றய அச்சகங்களில் ஒரே தடவையில் 4 பக்கங்களை மட்டுமே அச்சிடமுடியும். இங்கு ஒரே தடவையில் 8 பக்கங்களை அச்சிடும் வசதி இருந்தது. மேலும் டீசலால் இயங்கும் இயந்திரத்துடன் விசை நாடா மூலம் அச்சியந்திரம் இணைக்கப்பட்டு இயந்திரம் இயக்கப்பட்டமையால் அதிக மனிதவலு தேவையற்றதாக தொழிலை இலகுவில் விரைவாகச் செய்ய முடிந்தது. மற்றயது மற்றய அச்சகங்களில் காகிதத்தாள்களையும் அச்சிட்ட நூல்களின் ஓரங்களையும் வெட்டுவதற்கு பயன்படுத்திய கத்திக்கு அதிக மனிதவலுவைப் பயன்படுத்தி வெட்ட வேண்டியதாக இருந்தது. இவரது அச்சகத்தில் இருந்த வெட்டும் கத்தியால் (ஒரு சில்லைச் சுழற்றுவதன் மூலம்) இலகுவாக வெட்ட முடிந்தது.

நம்நாட்டின் தினசரிப் பத்திரிகைகள் இந்தியாவின் வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் யாவற்றையும் விற்பனை செய்த அன்றைய பருத்தித்துறை வடலங்காப் புத்தகசாலை இவருடையதே. அவர் எழுதிய பல நூல்களின் பெயர்கள் அடங்கிய நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன. அவரது சிறுவர் பாடல்களை அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் இன்றைய சிறுவர்களின் தமிழறிவையும் கவிதா ரசனை ஆற்றல்களை விருத்தி செய்ய முடியும். அவர்களது வாரிசுகள் அல்லது வேறு நிறுவனங்கள் அதனைத் துணிந்து செய்தல் நன்று. வாணி அச்சகத்திலும் ஊழியன் அச்சகத்திலும் வேலை செய்த திரு.குமரகுரு, தும்பளையைச் சேர்ந்த அமரர் பொ.செல்வரத்தினம் ஆசிரியர், திரு.ச.சிவஞானசுந்தரம், தங்கராசா, கணபதிப்பிள்ளை (இருவரும் நெல்லண்டையைச் சேர்ந்தவர்கள்) ஆகியோர் இங்கு வேலை செய்தனர்.

**சைவ போதினி அச்சகம்**

அன்றைய புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலையில் (இன்றைய வேலாயுதம் ம.வி) சித்திரபாட ஆசிரியராக இருந்த திரு.முருகேசபிள்ளை என்பவர் தனது வீட்டில் கையினால் இயக்கும் அச்சியந்திரத்தை வைத்திருந்தார். அதன் மூலம் தான் கற்பித்த சைவசமய பாடத்தைக் கற்பிப்பதற்கு உதவியான சைவபோதினி என்ற நூலை அவர் அச்சிட்டு வெளியிட்டார். அவரது மாணவனே ஜெயம் ஆர்ட்ஸ் ஜெயரத்தினம் ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமார் அச்சகம்**

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு.சதாசிவம் என்பவரால் பஸ் நிலையத்திலிருந்து கிழக்கே செல்லும் கழிவு நீர் வாய்க்காலுக்குப் பக்கத்தில் செல்லும் சிறு ஒழுங்கையில் 1970களில் குமார் அச்சகம் தொடங்கப்பட்டது. பின்பு இது பருத்தித்துறைச் சிவன் கோயிலுக்கு எதிரில் உள்ள பொது நூலகத்திற்கு கிழக்கே சற்று உள்ளே அமைந்த கட்டத்தில் இயங்கியது.

பின்னர் திரு.சதாசிவம் அவர்களின் மகன் காந்திதாசனால் பொறுப்பேற்று நடத்தப்பட்டு வன்னி இடப்பெயர்வின் போது அங்கே கொண்டு செல்லப்பட்டு அதை விற்ற பின் காந்திதாசன் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்.

**விநாயகர் தர்மநிதிய அச்சகம்**

வியாபாரி மூலையைச் சேர்ந்த திரு.முருகுப்பிள்ளையால் நடத்தப்பட்ட எரிந்த அம்மன் கோயிலுக்கு அண்மையில் அமைந்திருந்த அரிசி ஆலையில் இது நடத்தப்பட்டது. அவர் விநாயகர் தர்மநிதியம் என்றொரு நிதியத்தினை ஆரம்பித்து இலவசமாக நீதி நூல்கள், அறக்கருத்துக்கள், சித்த வைத்திய முறைகள் ஆகியவற்றை அச்சிட்டு இலவசமாக பாடசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் கொடுத்துவந்தார். இவர் ஆரம்பத்தில் உடுப்பிட்டி இலக்கணாவத்தை ஸ்ரீவாணி அச்சகத்தில் நூல்களை அச்சிடுவித்த போதிலும் பின்பு தனது அரிசி ஆலையில் இவ்வச்சியந்திரத்தை நிறுவி அச்சிட்டு வந்தார்.

1990களில் காகிதத்தாள் தட்டுப்பாடு ஏற்பட்ட போது மாணவர்கள் பயிற்சிக் கொப்பித்தாள்களில் அச்சிட்டார். இவரது இச் சேவை போற்றுதற்குரியது.

**அபிராம் அச்சகம்**

திரு.வே.சிவக்கொழுந்துவின் பெறாமகனும் அவரது அச்சகத்தில் வேலை செய்தவருமான அமரர் தி.சிறீதரனால் அல்வாய் பாரதிதாசன் நூல்நிலையத்திற்கு அண்மையில் 1990ல் ஆரம்பிக்கப்பட்டு 1993வரை இயங்கியது. அக்கால யுத்த சூழல், மக்களது வருமான ம் குறைவடைந்து வாழ்க்கை செலவு அதிகரிந்திருந்தமை, காதிதத்தாள் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் அவரால் தொழிலைத் தொடர முடியவில்லை. இதன் உரிமை கைமாறிச் சாரையடியில் சிறிது காலம் இயங்கியது.

**சிவன் அச்சகம்**

குமார் அச்சகத்தில் வேலை செய்த மாதனையைச் சேர்ந்த திருமதி.புஷ்பலதா என்பவருக்கு அவரது சகோதரன் அதிகாரலிங்கம் தவச்செல்வம் என்பவரால் ஆரம்பித்துக் கொடுக்கப்பட்டது. இது முதலில் தும்பளை வீதியில் சிவன் கோயிலுக்கு எதிரில் குமார் அச்சகம் இயங்கிய கட்டடத்தில் நடத்தப்பட்டு பின்பு மதுபானக் கடை ஒழுங்கைக்கு மாற்றப்பட்டது. அக்காலத்தில் பாடசாலைகளின் சோதனை வினாத்தாள்களை அச்சிடுவதை பெரும்பாலும் செய்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சுக் கலையின் இன்றைய நிலை**

ஜொஹானஸ் குட்டன் பேர்க்கின் புத்தாக்கப் புனைவினால் அச்சியந்திரத்தைக் கொண்டு அச்சிடும் கலையானது காலங்கள் தோறும் புகுத்தப்பட்ட புதுப்புது உத்திகளை உள்வாங்கி மிகக்குறைந்த மனித உழைப்புடன் விரைவாகவும் இலகுவாகவும் மட்டுமன்றி மிக நேர்த்தியாகவும் அச்சிடும் கலையாகப் பரிணமித்தது. புகுத்தப்பட்ட புது உத்திகள் பற்றிய பெயர்ப்பட்டியல்களை மட்டும் குறிப்பிட்டாற்கூட விரிவடைந்து விடும் எனும் அச்சத்தால் தவிர்க்கப்படுகின்றது.

ஆயினும் ஓவியங்களை மூன்று வர்ணங்களில் அச்சிடும் முறையான கல்லச்சுக்கலை (Lithography) பற்றி மட்டுமன்றி புகைப்படங்களை அச்சிடப் பயன்பட்ட புகைப்பட அச்சுப்பதிதகட்டு முறை ஆகியவற்றைக் குறிப்பிடுதல் அவசியமானது. இவை அச்சுக்கலையின் தரத்தினை வெகுவாக உயர்த்தின. கல்லச்சுக்கலையும் உத்திகள் பலவற்றை உள்வாங்கி உயர்கலையாக உருவெடுத்தது. இன்றும் இந்தமுறை நான்கு வர்ணங்களில் ஓவியங்களை அச்சிடப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் புகைப்படங்களை Scan செய்து கணனிகளில் நுழைவு செய்வதன் (Login) மிக இலகுவாக அச்சிட முடிகின்றது.

கிட்டத்தட்ட 500 வருடங்கள் அனைத்துலக நாடுகளிலும் ஓய்வு ஒழிச்சலின்றி இயங்க அச்சிட்டு இமயமலை போல் குவித்த அச்சியந்திரங்கள் Digital முறையில் அச்சிடும் தொழில் நுட்பமுறை மேலோங்கி ஆதிக்கஞ் செலுத்துவதனால் எழுந்துருக்களுடன் ஒரு மூலையில் தூங்குகின்றன. அல்லது பழைய உலோகங்களாக விற்பனை செய்யப்பட்டு விட்டன.

டிஜிற்றல் தொழில்நுட்பம் அச்சுக்கலையை அனைத்து வகையிலும் தரம் உயரச்செய்துவிட்டது. பழையமுறையில் ஒவ்வொரு எழுத்தாக பலதமிழ் எழுத்துக்களில் எழுத்தின் ஒரு பகுதியாக எடுத்து எடுத்து அச்சுக்கோர்க்கவேண்டிய தேவை இன்றில்லை. எழுத்துருக்களை வைத்திருக்க வேண்டிய தேவையும் இல்லை. ஒரு கணனி ஒரு Printer, ஒரு Scanner மட்டும் இருந்தால் கணனியில் தட்டச்சுப்பதிவு செய்யக்கூடிய ஒரு நூலை அச்சிட்டுவிடலாம். பிழைதிருத்துதல், ஓரிரு வசனங்களை உட்புகுத்துதல், தேவையற்றதை நீக்கிவிடல் யாவும் எளிதாகிவிட்டது. முன்பு நிலையான அச்சுப்பதிவுக்கட்டைக் கழற்றி மேற்கூறிய பணிகளைச் செய்யவேண்டியிருந்தது. மேலும் கவிதைகளை வசனநடை போல மிக விரைவாக அச்சிட்டுவிட்டுப் பின்பு வரிவரியாக ஒழுங்கமைக்கவும் முடிகின்றது.

நூலாசிரியர் ஒருவர் தனது கணனியில் தனது நூலைத் தனக்குத் திருப்திகரமாக அச்சிட்டு ஓரிரு பிரதிகளை எடுத்துக்கொள்ள முடிகின்றது. மேலும் அதனை ஒரு அத்தியாயமாகச் சேமித்துத் தேவையான போது அச்சிடவும் இயலுமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையமுறையில் எழுத்துக்களை வேறுவேறு அளவில் (Size) அச்சிட வேண்டுமாயின் அவ்வவ் அளவுகளில் எழுத்துக்களை வைத்திருக்க வேண்டியிருந்தது உதாரணமாக சிறுவர் நூலொன்றைப் பெரிய எழுத்துக்களில் அச்சிட வேண்டுமாயின் பெரிய அளவிலான எழுத்துக்களை வைத்திருக்க வேண்டியிருந்தது. இன்று கணனித்திரையில் பெருப்பித்து விட்டு உரிய அளவுக் கடதாசியில் அச்சிட்டுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

மேலும் ஒரு கணனியில் தட்டச்சிட்டு நுழைவு செய்தபின் பின்னர் மின்னஞ்சல் மூலம் வேறு கணனியொன்றிற்கு இணையம் மூலம் அனுப்பி வைக்கவும் முடிகின்றது. இதனால் ஒரு நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் வேறுவேறு தனியாள்கள் வேறுவேறு கணனிகளில் தட்டச்சுப்பதிவு செய்து யாவற்றையும் ஒரு கணனிக்கு ஒழுங்கில் அனுப்பி Pendrive இல் எடுத்து அச்சியந்திரத்திலிட்டு அச்சிட்டு ஒரு நடுத்தர நூலை ஒரே நாளில் அச்சிட்டு முடிக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு இடத்தில் இருந்து கொண்டே தான் வடிவமைத்த ஒரு விளம்பரத்தைத் தொலைவில் உள்ள ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு அனுப்பி அதைப் பத்திரிகையில் வெளியிடும்படி வேண்டி அதனை வெளியிடமுடிகின்றது. மரண அறிவித்தல் போன்ற ஒரு அவசர அறிவித்தலை விபரம் புகைப்படம் போன்றவற்றை வீட்டில் அல்லது ஊரில் இருந்தவாறே அனுப்பிவைக்க முடிகின்றது. முன்பு எனின் நேரே எடுத்துச்சென்று கொடுத்து வேண்டுகோள் விடுக்க வேண்டியிருந்தது.

பெரிய அளவிலான காகிதத்தாள்களைத் தானாகவே மடித்து வெட்டும் இயந்திரம் மட்டுமன்றிப் புத்தகம் கட்டும் இயந்திரமும் வந்துவிட்டதாக அறியமுடிகின்றது. தாள்களை ஒழுங்காக அடுக்கி இயந்திரத்துள் கொடுத்தால் ஒட்டும் பிசின் உருகிப் புத்தகமாக ஒட்டக்கூடியதாக இருக்கின்றது. இலவச பாடநூல்களின் கதிதனைப்பார்க்கும் போது பழையமுறையிலான தாள்களைப் பகுதிபகுதியாக நூல்களின் கோர்த்துத்தொகுதியாக்கிக் கட்டும்முறை மட்டுமன்றிக் குத்திக்கட்டும்முறையும் சிறந்ததாகவே உள்ளது. அன்றைய பெரியநூல்கள் கவனமாகப் பாவித்தால் நூறு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் நின்று பயன்படக்கூடியதாக இருந்தது. இன்று அந்தமுறையில் புத்தகங்களைக்கட்டக்கூடிய எவரும் நம்நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. அவசர உலகில் எல்லாமே அவசரந்தான். இதைப்பார்க்கும் போது பழைமை பொன்னானது (old is gold) என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இன்று அச்சுத்துறை பல உபபிரிவுகளைக் கொண்டதுறையாக விளங்குகின்றது. அவையாவன.

*01.* சிப்பம் கட்டுதல் (Pachaging)
*02.* இரகசியக் காப்புறுதி அச்சிடுதல் (Security Printing)
*03.* அரச அச்சகம் (Government Press)
*04.* வெளியீட்டகங்கள் (Publishing houses)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*05.* ஆய்வுகளும் அபிவிருத்திகளும் (Research and Development)
*06.* செய்தித்தாள்களும் பருவ இதழ்களும் (Newspapers / magazines)
*07.* இலத்திரனியல் வெளியீடுகள் (Electronic publishing)
*08.* டிஜிற்றல் முறையில் அச்சிடல் (Digital printing)
*09.* தகரக்கட்டுப்பாடு (Quality Control)
*10.* அச்சகங்கள் (Printing houses)

இவ்வொவ்வொரு பிரிவும் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவனவாக பரிணமித்துள்ளன.

எது எவ்வாறாயினும் புதிய அச்சிடும் முறைக்கும் குட்டன் பேர்ச்சின் அச்சியந்திரமே அடிப்படையாக உள்ளதென்பது மறுக்க முடியா உள்ளமையாகும்.

**உசாத்துணை நூல்கள்:**

*1.* How did the printing press change History History of Printing ஆகிய இணையத்தளக் கட்டுரைகள்.

*2.* பிரம்மஸ்ரீ.சுப்பிரமணிய சாஸிதிரிகள் அவர்களிந் சரித்திரச் சுருக்கமும் அன்னாரின் தேகவியோகத்தைக் குறித்த இரங்கற் பாக்களும் என்னும் கைந்நூல்.

*3.* பிரம்மஸ்ரீ.சுப்பிரமணிய சாஸ்திரிகளால் கணிக்கப்பட்ட *1918, 1919, 1923 & 1924* , *1936 & 1937* ஆண்டு பஞ்சாங்கங்கள்.

*4.* ஓய்வுநிலை அதிபர் திரு.ச.சிவப்பிரகாசம் , தும்பளை

*5.* ஓய்வுநிலை அதிபர் திரு.மு.வேலாயுதம், தும்பளை

*6.* திரு.ச.கார்த்திகேசு, கற்கோவளம்

*7.* திரு.பா.குமரகுரு, ஐயனார் கலட்டி ஒழுங்கை

*8.* திருமதி.தங்கமணி ரவிச்சந்திரன், மாதனை

*9.* அமரர் வே.சிவக்கொழுந்து மகள் திருமதி.சிவதேவி தவத்துரை நாதன், வியாபாரிமூலை

*10.* திரு.தி.மாணிக்கவாசகர், தும்பளை

*11.* திரு.பா.இரவீந்திரநாதன், தும்பளை

*12.* அமரர் தி.சிறீதரன் மனைவி (பெயர் தெரியவில்லை), வியாபாரிமூலை

*13.* திருமதி புஷ்பலதா - மாதனை (தற்போது கரணவாய்)

*14.* பா.மீனாட்சிசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்குப் பிரதேச இலக்கியப் பாரம்பரியம்: குறிப்பான ஆளுமைகளும் சில அவதானிப்புகளும்

**கலாநிதி த. கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்தோர் அநேகர். அவர்களைப் பிரதேச ரீதியாகக் கூறுபோட்டு நோக்குவதன் பொருத்தப்பாடு சர்ச்சைக்குரியது. பிரதேச ரீதியாக ஈழத்து இலக்கிய வளர்ச்சியை நோக்கத்தலைப்படும் வேளை, திட்டமிட்ட மிகைப்படுத்தல்களும் அநாவசியமான இடைச்செருகல்களும் இடம்பெறுவதற்கும் வாய்ப்புண்டு. ஆனாலும், ஈழத்து இலக்கியம் பற்றிய மொத்தத்துவ நோக்கில் (Totality view), பிரதேச ரீதியாக முதன்மை பெறும் ஆளுமைகள் சில 'அடிபட்டுப் போவதும்' பெயரளவிலேயே வாய்பாடாக அவர்களுட் சிலரின் பெயர்கள் சுட்டப்பெறுவதும் இயல்பு. இதனால், பிரதேச ரீதியான ஆய்வு முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது இன்றைய காலத்தின் தேவையாக எழுந்துள்ள ஒரு சிந்தனையாகும்.

பிரதேச ரீதியான ஆய்வுமுயற்சிகளின் அவசியம் பற்றிய புரிதலுடனேயே 'வடமராட்சி வடக்குப் பிரதேச இலக்கியப் பாரம்பரியம்' குறித்த கட்டுரையொன்று பிரதேச மலரில் இடம்பெறவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் குறிப்பான சில ஆளுமைகள் பற்றிய அவதானிப்புகளே இக்கட்டுரையில் பதிவு செய்யப்படவுள்ளன. இவ்வாறான பிரதேசம் சார்ந்த பதிவுகளில், வழமையாகப் பெயர்ப்பட்டியல்கள் இடம்பெறுவதுண்டு. ஆனால், இக்கட்டுரையின் நோக்கம் அதுவன்று. வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த இலக்கிய ஆளுமையுள்ள குறிப்பானவர்கள் ஈழத்து இலக்கியத்தில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியுள்ளார்கள் அல்லது பதிவுகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள் எனச் சுருக்கமாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வகையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, பண்டிதை இ.பத்மாசனி அம்மாள், அருட்தந்தை தாவீது அடிகள், தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார், யாழ்ப்பாணக்கவிராயர் கே.பசுபதி, புலோலியூர் க.சதாசிவம், வல்வை ச.வயித்தியலிங்கம்பிள்ளை, தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள், புலவர் வ.கணபதிப்பிள்ளை, யாழ்ப்பாணன் வே.சிவக்கொழுந்து, இலக்கியக்கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன் ஆகிய பதின்மூவரின் பங்களிப்புகள் சுருக்கமாக இங்கு இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சிக்குப் பெருமை சேர்த்தோர் பலர் உள்ளனர். ஆயினும், அவர்கள் யாவருள்ளும் முதன்மையாகக் குறிப்பிடப்படவேண்டியவர் **பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை (1903 - )** ஆவார். தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தில் நவீன ஆய்வுத்துறைகளில் வழிகாட்டியாக இருந்து பின்னைய தலைமுறையை உருவாக்கியவர் என்ற வகையிலும், ஈழத்துத் தமிழர் வாழ்வியலையும் வரலாறு பற்றிய தகவல்களையும் பதிவுசெய்து வைத்தலைத் தனது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தவர் என்ற வகையிலும், தமது சமூக நாடகங்களில் பேச்சுத்தமிழை, குறிப்பாக வடமராட்சியின் பேச்சுத்தமிழை அறிமுகம் செய்ததன் மூலம், முதன் முதலாகத்தமிழ் நாடகங்களில் புகுத்தியவர் என்ற வகையிலும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடியாகவுள்ள ஒருவராவார்.

தும்பளைக் கிராமத்திற் பிறந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள், அவர் வாழ்சூழலில் தமிழ் மரபுவழிக் கல்வியைப் பெற்றவர். பாடசாலை, பல்கலைக்கழகம் என்பனவும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், பாளி, சிங்களம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிரெஞ்ச் ஆகிய மொழிகளை அறியவும் அவற்றில் தேர்ச்சி பெறவும் அவருக்கு வாய்ப்பு வழங்கின. இதனால் மொழி ஆய்வுத்துறையில் அவருக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. இவர் வழியே பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் போன்றோர் மொழி ஆய்வுகளைத் தொடர்ந்தனர்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் புலமைப்பரிசில் பெற்று நான்கு ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், அதன் பின்னர் லண்டன் பல்கலைக்கழக கீழைத்தேய ஆபிரிக்க ஆய்வுப்பள்ளியிலும் உயர்கல்வி பயின்றார். லண்டன் பல்கலைக்கழக கீழைத்தேய ஆபிரிக்க ஆய்வுப் பள்ளியில் பிரவேசித்த முதலாவது தமிழ்ப் புலமையாளர் என்ற சிறப்பும் இவருக்குரியதாகும். இந்த ஆய்வுப்பள்ளியில் ‘ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் தமிழ்ச் சாசனங்களின் மொழிபற்றிய ஆய்வு’ என்ற தலைப்பில் ஆய்வுசெய்து லண்டன் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1936 இலிருந்து தமிழ்த்துறைத் தலைவராக நியமனம் பெற்ற கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்கள், 1942ஆம் ஆண்டில் சுவாமி விபுலானந்தர் அவர்கள் முதலாவது தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்றவேளையிலும் தமிழ்த்துறைத்தலைவராகத் தொடர்ந்து பணியாற்றினார். பின்னர், 1947ஆம் ஆண்டில் சுவாமி விபுலானந்தர் அவர்களின் மறைவின்பின், தமிழ்ப்பேராசிரியராக அவர் நியமனம் பெற்றார். தமிழ்ச் சாசனவியலில் ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் கணபதிப்பிள்ளைஅவர்கள், பல்கலைக்கழத்தில் அப்புலம் தொடர்பான ஆய்வுகளை ஊக்குவித்தார். தமிழ்த்துறையில் சிறப்புப்பட்டப்பாடநெறிக்கான கலைத்திட்டத்தில் தமிழ்க் கல்வெட்டாய்வியலைப் புகுத்தினார். இத்துறையில் கலாநிதி கா.இந்திரபாலா, கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை போன்றோரை ஈடுபடவைத்து, பயிற்சி அளித்தார். இவர்கள் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கல்வெட்டாய்வில் தொடர்ந்து ஈடுபட்டு, பல பங்களிப்புகளையும் வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் ஓர் ஆய்வாளர் மாத்திரமன்றி சிறந்தவொரு இலக்கியப் படைப்பாளியும் ஆவார். **தூவுதும் மலரே, காதலியாற்றுப்படை** ஆகிய செய்யுள் நூல்கள் மூலம் இவர் தமது கவித்துவ ஆற்றலை வெளிப்படுத்தி உள்ளார். 'தூதுவும் மலரே' என்ற நூல், இவர் எழுதிய நீண்ட கவிதைகளின் தொகுப்பு நூலாகும். 'காதலியாற்றுப்படை' என்பது வடமராட்சிப்பிரதேச மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் அற்புதமான ஆற்றுப்படை இலக்கியமாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் **பூஞ்சோலை, வாழ்க்கை விநோதங்கள்** ஆகிய இருநாவல்களையும் எழுதினார். இவை இரண்டும் முறையே ஜேர்மன், பிரெஞ் மொழியிலான நாவல்களைத் தழுவியவை ஆகும். டானிஸ் மொழியிலான நீண்ட கவிதை ஒன்றைத் தழுவி, **நீரர மகளிர்** என்ற சிறுகதையையும் இவர் புனைந்துள்ளார்.

தமிழ்நாடக இலக்கிய வரலாற்றில் சமூக உள்ளடக்கத்தையும் பேச்சுமொழியையும் அறிமுகம் செய்தவர் என்ற சிறப்பு பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். சரித்திர நாடகமான **சங்கிலி,** மொழிபெயர்ப்பு நாடகமான மாணிக்கமாலை ஆகியன வரலாற்றிலும் இலக்கியத்திலும் அவருக்குள்ள புலமையைக்காட்டுவன. **இருநாடகம், நாநாடகம்** ஆகிய நாடகத்தொகுப்பு நூல்களிலுள்ள நாடகங்கள் சாதாரணமக்களைக் கதாமாந்தராகக் கொண்டு பேச்சுத் தமிழில் எழுதப்பட்ட நாடகங்களாகும். **ஈழத்து வாழ்வும் வளமும், இலங்கைவாழ் தமிழர் வரலாறு** ஆகிய இருநூல்களும் யாழ்ப்பாணத்தமிழரின் வாழ்வியலையும் வரலாறையும் கூறும் நூல்களாகும்.

இவ்வாறாக, கவிதை, நாடகம், நாவல், கட்டுரை என பல்வகை ஆக்க இலக்கியங்களைப் படைத்தளித்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள், **'இலங்கை இலக்கியம்'** என்பதை தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிக்கக் காலாயிருந்தவருமாவார். அவர் வடமராட்சிப் பிரதேசத்தின் ஒரு சொத்து என்பதைவிட, ஈழத்துத்தமிழரின் சொத்து எனக்கூறுதலே பொருத்தமானது.

'யாழ்ப்பாணம்' என்ற பெயரைத் தென்னிந்தியாவில் நிலைநாட்டிய பெருமைக்குரியவரான **சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் *(1871-1907)*** வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் மேலைப்புலோலியிற் பிறந்தவராவார். தமது இருபத்தியிரண்டாம் வயதில் கல்வியறிவைத் தேடி தமிழ்நாடு சென்ற கதிரைவேற்பிள்ளை அவர்கள், நாவலர் வழிநின்று சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்டவர்; சென்னையிலுள்ள சாந்தோம் உயர்நிலைப்பள்ளி, வெஸ்லிக் கல்லூரி, ஆயிரம் விளக்குப்பள்ளி ஆகிய கல்விநிறுவனங்களில் ஆசிரியப் பணிபுரிந்ததோடு, தேவார திருமுறைகளுக்கும் ஏனைய புராணங்களுக்கும் உரையும் எழுதினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் தமிழ்ப்பணியும் இலக்கியப்பணியும் அவர் தொகுத்த தமிழ்ப்பேரகராதியினால் துலக்கம் பெறுவனவாகும். முதற்றமிழ் அகராதியாக மானிப்பாய் அகராதி 1842 இல் வெளிவந்தபோதும், நா.கதிரைவேற்பிள்ளை அவர்களால் 1899இல் தொகுத்து வெளியிடப்பட்ட தமிழ்ப்பேரகராதியே, தமிழ்மொழி அகராதி என அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் முதலில் வெளியிடப்பட்ட அகராதியாகும். ஒப்பியல் ஆய்வுக்கான அரிய துணைநூலாக இது இன்று விளங்குகின்றது.

சென்னையில் அறிஞர்கள் கூடியிருந்த சபையொன்றிலே, பலராலும் பலதிசைகளிலுமிருந்து விடுக்கப்பட்ட வினாக்களுக்கு நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் விரைவாக விடையளித்த காரணத்தினால், அன்றுமுதல் 'சதாவதானி கதிரைவேற்பிள்ளை' என்ற நாமத்தை இவர் பெற்றுக்கொண்டார். நாவலர், மாயாவாத துவம்ச கோளரி, அத்துவித சித்தாந்த மாகோத்தாரணர், சித்தாந்த மகாசரபம், பெருஞ்சொற்கொண்டல், மகாவித்துவான் போன்ற பட்டங்களும் சதாவதானி கதிரைவேற்பிள்ளைக்கு உரியவை.

தமிழக அறிஞர் திரு வி.கலியாணசுந்தரனார் அவர்கள், சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் மதிப்புக்குரிய மாணவர் என்பதும், இராமலிங்க அடிகளாரின் அருட்பா தொடர்பாக எழுந்த அருட்பா மருட்பா வாதத்தில் திரு வி.க.அவர்கள் தமது குருவிற்காகச் சாட்சி சொன்னார் என்பதும் குறிப்பிடற்குரியவை.

மேலைப்புலோலியில், சதாவதானி நினைவுதினம் ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதும், இன்றும் மொழி ஆய்வாளர்களுக்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் **தமிழ்ப்பேரகராதி** ஆதாரமூலமாக விளங்கிவருவதும், சதாவதானி அவர்களின் புகழையும் அவர் தமிழுக்கு ஆற்றிய அரும்பணியையும் என்றும் நிலைநிறுத்துவனவாகும்.

வடமராட்சி வடக்கு இலக்கியப்பாரம்பரியத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று 'ஈழத்தின் முதற்பெண்கவிஞர் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பண்டிதை **இ.பத்மாசனி அம்மாள்**' என்பதாகும். பத்மாசனி அம்மாள் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள் இம்முடிபை வெளிக்கொணர்ந்துள்ளன.

பத்மாசனி அம்மாள் (1903 - 1978) புலோலியிற் பிறந்தவர். சிறந்த கல்விப்பாரம்பரியமும் சைவப்பாரம்பரியமும் கொண்ட பின்னணி, திண்ணைக் கல்வி மூலம் அறிவையும் கவித்துவ ஆற்றலையும் அவர் வளர்த்துக்கொள்ளக் காரணமாயிற்று. உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் இலக்கியங்களையும் கற்றுக்கொண்ட பார்வதி அம்மையார் தமது பேர்த்தியான பத்மாசனிக்குக் குருவாக விளங்கி, தமது பேர்த்தியை மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதையும் ஆக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதை பத்மாசனி அம்மாள் 1925ஆம் ஆண்டில் தமது இருபத்திரண்டாவது வயதிலேயே **புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதியைப்** பாடியுள்ளார் என்ற தகவல் அண்மையில் வெளியாகியுள்ளது. இதனால், 1930களில் கவிதைகளை எழுதிவந்த மலையகத்தைச் சேர்ந்த திருமதி மீனாட்சி நடேசையர் அவர்களையே ஈழத்தின் முதலாவது பெண் கவிஞராகக்கொள்ளும் மரபு கைவிடப்பட்டு, பண்டிதை பத்மாசனி அம்மாள் அவர்களே முதற்பெண் கவிஞராக இன்று மதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. சமய இலக்கியங்களிலும் தேவார, திருவாசகங்களிலும் பரிச்சயமுள்ள பத்மாசனி அம்மாளின் கவித்துவ ஆற்றல் அவரது முதலாவது அந்தாதியிலேயே வெளிப்பட்டிருப்பதாக ஆய்வாளர் குறிப்பிடுவர்.

பண்டிதை பத்மாசனி அம்மாள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அவரின் வேறு சிறப்புகளையும் வெளிக்கொணர்ந்துள்ளன. தோமஸ் கிரே என்பவரின் கவிதையொன்றை மொழிபெயர்த்ததன் மூலம் 'ஈழத்தின் முதற்பெண் மொழிபெயர்ப்பாளர்' என்ற மதிப்பையும் பண்டிதை பத்மாசனி அம்மாள் பெறுகிறார். மொழிபெயர்ப்பின்போது இவர் கடைப்பிடித்த நியமங்கள் இன்றும் வியப்பைத்தருவன.

பண்டிதை பத்மாசனி அம்மாள் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் **'செந்தமிழ்'** சஞ்சிகை இதழ்களிலும் யாழ்ப்பாணம் **'சிவதொண்டன்'** நிலையத்தினரின் வெளியீடுகளிலும் பல கட்டுரைகளையும் எழுதினார். ஓலைச்சுவடியாக இருந்த **'செய்யுட் பொருத்த இலக்கணம்'** எனும் நூலையும் **'செந்தமிழ்'** சஞ்சிகை மூலம் வெளியிட்டார். 'பெண் கல்வி' மறுக்கப்பட்டிருந்த காலத்திலேயே வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் இத்தனை சாதனைகளை ஆற்றியுள்ளார் என்பது இப்பிரதேசத்துக்குப் பெருமை சேர்ப்பதே.

வடமராட்சிப் பிரதேசம் பெருமை கொள்ளத்தக்க மற்றுமோர் ஆளுமை **பன்மொழிப்புலவர் அருட்தந்தை தாவீது அடிகள்** (1907-1981) ஆவார். தாவீது அடிகளார், உண்மையில், 'கல்வியே சிறந்த தானம்' என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்து வாழ்ந்துவந்த ஓர் ஆசிரியரும் துறவியும் ஆவாராயினும், தமிழுக்கு அவர் ஆற்றிய பணிகள் சிறப்புக்குரியன.

ஹயசிந் சிங்கராயர் என்ற திருமுழுக்குப் பெயர்கொண்ட தாவீது அடிகள் தும்பளையிற் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிற் பெற்றுக் கொண்ட இவர், 'இலண்டன் மற்றிக்குலேசன்' பரீட்சையில் சித்தியெய்தி, பின்பு லண்டன் பல்கலைக்கழகத்திலேயே கலைமாணிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தமது இருபத்து நான்காவது வயதில் கத்தோலிக்கத் துறவியாகத் திருநிலைப்படுத்தப்பட்ட தாவீது அடிகளார், யாழ்.புனிதபத்திரிசியார் கல்லூரியிலேயே 1936 ஆம் ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகளின் மொழி ஆய்வுகளாலும் வரலாற்று ஆய்வுகளாலும் ஈர்க்கப்பட்ட தாவீது அடிகள், சுவாமி ஞானப்பிரகாசருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு, அவரின் கோரிக்கைக்கு இணங்க, முப்பதுக்கு மேற்பட்ட மேலைத்தேய, கீழைத்தேய மொழிகளில் தேர்ச்சியும் பெற்றார். இத்தேர்ச்சியானது, சுவாமி ஞானப்பிரகாசரின் மறைவின் பின்னர், மொழி ஆய்வுகளின் பேறாக, '**சொற்பிறப்பியல் பேரகராதியை** அவர் வெளியிட்டு வைப்பதற்கு உதவியது. தாவீது அடிகள் தாம் வாழும் காலத்திலேயே தாம் எழுதிய சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதியை ஆறுபாகங்களாக வெளியிட்டார். மொழி ஆய்வுகளில் தாவீது அடிகள் கொண்ட ஈடுபாட்டையும் அவரது புலமையையும் எடுத்துக் காட்டுவனவாக சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதிகள் விளங்குகின்றன.

கத்தோலிக்கத் துறவி ஒருவர், இறைபணிக்கும் சமூகப்பணிக்கும் அப்பால் மேற்கொண்ட மொழியியல், வரலாற்று ஆய்வுகளும் அவற்றின் பேறாக எமக்குக் கிடைத்த சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதிகளும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. தாவீது அடிகளாரைப் 'பன்மொழிப்புலவர்' எனப் போற்றுதல் பொருத்தமானதே. தமது மொழி ஆய்வுகளினூடாக, தமிழ், சிங்களமொழிகளின் தோற்றம், வரலாறு என்பன குறித்து, தாவீது அடிகள் தெரிவித்த கருத்துகள், தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் பரஸ்பர உறவையும் தோற்றுவிக்கவிழைபவர்களால் சிந்திக்கப்படவேண்டியவை.

தமது இலக்கண, இலக்கியப் புலமையினால், தேர்ந்த புலமையாளர்களையும் கல்வியாளர்களையும் உருவாக்கிய பெருமைக்கு உரியவர் **தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார்** *(1902-1965)* ஆவார். தமிழைச் சிறப்புப்பாடமாகக் கொண்டு பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்தவர்களும் கூட இவரிடத்தில் வந்து கற்றுச் சந்தேகம் தெளிந்து சென்றுள்ளனர். இவரின் மாணவர்கள் பலரும் பண்டிதர்களாகவும் வித்துவான்களாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் பேராசிரியர்களாகவும் உயர் பதவிகள் வகிக்கும் பட்டதாரிகளாகவும் உள்ளனர்.

புலோலியிற் பிறந்த முருகேசனார், தமது தமிழ்ப் புலமையினால் நாடறிந்த அறிஞராக விளங்கினார். இவர் தனித்துவம் வாய்ந்த ஒருவராகக் கொள்ளப்படுவதற்கு வாழ்க்கை முழுவதும் இவர் கடைப்பிடித்து வந்த கொள்கைகளே காரணமாயின. இவர் தமது வாழ்வில் சமதர்ம நீதியைப் பேணி வந்தார். தமது மாணவரிடையே வேறுபாடு காட்டாது அனைவரையும் சமமாக மதித்துவந்தார். 'தமிழகம்' என முருகேசனாரால் பெயர் சூட்டப்பட்ட அவரது குடில், சாதி, சமய பேதம் காட்டாது அனைத்து மாணவர்களையும் அரவணைத்துக் கொண்டது.

கந்தமுருகேசனார் தமது வாழ்வில் சமதர்மத்தைப் பேணுவதற்குக் காலாய் அமைந்தது தமிழகத்தில் ஈ.வே. இராமசாமிப் பெரியாரால் தொடக்கி வைக்கப்பட்ட பகுத்தறிவு இயக்கமே ஆகும். அறியாமையையும் மூட நம்பிக்கைகளையும் தகர்க்கும் வகையிலமைந்த பகுத்தறிவுப் போராட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டு தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் தீண்டாமையை ஒழிப்பதற்குப் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டார். பல்வேறு தத்துவஞானிகளின் சிந்தனைகளை உள்வாங்கி பொதுவுடைமையைத் தத்துவவாதியாகவே மிளிர்ந்தார். தமிழகத்திலும் ஈழத்திலும் பிற அறிஞர்களுடன் தொடர்புகளைப் பேணினார்.

தமிழகத்தில் மறைமலை அடிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தனித் தமிழ் இயக்கத்துக்கு ஆதரவாய் ஈழத்திற் செயற்பட்ட கந்தமுருகேசனாரின் மீது கொண்ட பற்றுக் காரணமாக அவரின் மாணவர்கள், தமது பிள்ளைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர்களையே சூட்டி மகிழ்ந்தனர். 'தங்கத்தாத்தா' கந்தமுருகேசனாரிடத்து இலக்கண, இலக்கியம் படித்தோம்" என்றுசொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டனர். ஆறுமுகநாவலரின் வரலாற்றுப் பெருமை கூறும் **'நல்லை நாவலன் கோவை'** எனும் செய்யுள் நூலை இயற்றிய கந்தமுருகேசனார், 'செந்தமிழ்ச் செல்வி, சமூக முன்னேற்றம், ஈழமணி போன்ற சஞ்சிகைகளிலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கால்கள்இரண்டும் வலுவிழந்த போதிலும் தமது கற்பித்தற் செயற்பாடுகளை மேற்கொண்டு 'நன்றியுள்ள' மாணவர் பரம்பரையினரைத் தோற்றுவித்த பெருமை தங்கத்தாத்தா கந்தமுருகேசனாருக்கே சிறப்பாக உரியது.

வடமராட்சிப் பிரதேசம் செய்யுள் இலக்கியப் பாரம்பரியத்தில் சிறந்து விளங்கிய வேளை அறுபதுகளிலே முற்போக்குக் கவிதைப் பாரம்பரியமொன்று ஈழத்திலே முகிழ்க்கத் தொடங்கியது. மனித விடுதலையை முன்னிறுத்தி முற்போக்குக் கவிதைகளைப் படைப்பதற்கு முற்போக்கு இலக்கியவாதிகள் சிலர் முன்வந்தனர். இவர்களுள் கே.கணேஷ், அ.ந.கந்தசாமி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். ஈழத்து இலக்கிய வரலாற்றில் இவர்களின் பெயர்களே முற்போக்கு முன்னோடிக் கவிஞர்களின் பெயர்களாகக் குறிப்பிடப்படுவண்டு. ஆனால், இவர்களை ஒத்தவராக அல்லது இவர்களிலும் சற்று மேம்பட்டவராக வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர் கே.பசுபதி அவர்கள் (1925-1965) விளங்கினார். உண்மையில் ஈழத்தில் முதன் முதலாக பசுபதியின் கவிதைகளுக்கூடாகவே முற்போக்குக் கவிதைகள் முதன்மை பெறத் தொடங்கின.

பசுபதி அவர்கள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் பருத்தித்துறையிலுள்ள வராத்துப்பளை எனும் கிராமத்திற் பிறந்தவர். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் மிக்கவராக விளங்கிய பசுபதி அவர்கள், யாழ்ப்பாண மண்ணின்மீது கொண்ட பற்றுக் காரணமாக **யாழ்ப்பாணக் கவிராயர்** என புனை பெயர் சூட்டிக் கொண்டு பல கவிதைகளை எழுதி வந்தார். பழைமையிலும் மரபுகளிலும் மூழ்கிக் கிடந்த மக்களிடையே புதிய சமுதாயம் படைக்க விழைந்தவர்களுள் ஒருவராகப் பசுபதி திகழ்ந்தார். பழைமையின் மூடக்கருத்துக்களை எள்ளி நகையாடி, அங்கதச் சுவை ததும்ப, தன் கவிதைகளைப் படைத்தார்.

பசுபதி அவர்கள் படைத்த கவிதைகள் மரபுக் கவிதைகள் ஆகும். தமிழறிஞர் கந்த முருகேசனாரிடம் கற்றுக் கொண்ட இலக்கண இலக்கியங்கள், இலக்கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவின்றிக் கவிபாடும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள உதவின. ஆரம்ப காலத்தில், திராவிட முன்னேற்றக்கழகத்தின் பகுத்தறிவு வாதக் கோட்பாட்டினால் ஈர்க்கப்பட்ட பசுபதி அவர்கள், பின்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கட்சிக்கு விசுவாசமாக உழைத்தார். சமூக விடுதலைப் போராட்டங்களிலும் மனித உரிமைப் போராட்டங்களிலும் பங்காளியானார்.

நாற்பதாண்டு காலம் மாத்திரமே வாழ்ந்த கவிஞர் பசுபதி எழுதிய கவிதைகளின் பாடுபொருள் எப்போதும் சமூகமாற்றத்திற்கான வித்தாகவே விளங்கியது. இவரின் கவிதைகளிற் சிலவற்றைத் தொகுத்து எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகமானது **"புதுஉலகம்"** என்ற தலைப்பில் கவிதை நூலொன்றை 1966 இல் வெளியிட்டு வைத்தது. இந்நூலில் 'புதுஉலகம்' என்ற தலைப்பிலேயே அமைந்த கவிதையில் அவர் காணவிழைந்த புது உலகத்தின் நோக்கினைப் பின்வரும் வரிகளில் பிரகடனம் செய்கிறார்.

"காணுகின்ற புதுஉலகம் கற்பனைக்கே யெட்டாக்
கதையல்ல, கடலல்ல, கன்னியுந்தான் அல்ல!
பேணுகின்ற பொருளெல்லாம் தனியுடைமையாகா;
பொதுவுடமை, பொதுமக்கள் பொதுச் சொத்து ஆகும்!"

இப் பிரகடனமானது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கி, வரவேண்டும் இந் நாட்டில் பொதுவுடைமை' என்ற பிரகடனத்தை வலியுறுத்துகின்றது.

கவிஞர் பசுபதி அவர்கள் தன் இறுதிக் காலம் வரை பாட்டாளி மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டோர் உரிமைக்காகவும் குரல் கொடுத்து சமூக விடுதலைப் போராட்டங்களிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். **"சாதியெனும் கொடுமையினால் தமிழர் கூட்டம் சஞ்சலத்தில் வீழ்ந்ததடா சக்கியாகி"** என்று பாடிய கவிஞர், **"வீர இனமென்று வீராப்புப் பேசுங்கால், சாரம் தனைவிடுத்துச் சச்சரவுக்காளானீர்"** என்று தமிழரின் வீழ்ச்சிக்கான காரணத்தையும் முன்வைக்கின்றார். "சாதிப் பிரச்சினையைச் சாகடித்த பாம்பென்று, ஓதிமுடிக்கும் ஒரு கூட்டம் வாழுகின்ற சேதிதனைக் கேட்டுச் சிரிக்கின்றேன் ; அழவில்லை!" என்று இவர் கூறும் வரிகள் இன்றும் சிந்தனைக்குரியன.

ஈழத்துத்தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் மானுடப் பண்புக்கு முதன்மை தந்து கவிபாடிய கவிஞர்களுள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர் பசுபதி அவர்களே முன்னணியிலுள்ளார் என்ற செய்தி எமக்கெல்லாம் மகிழ்ச்சி தருவதே.

ஈழத்தின் இலக்கியப் பாரம்பரியத்தில் அறிவியற் பின்புலத்தோடு ஆக்க இலக்கிய கர்த்தாக்களாக விளங்கியவர்கள் குறிப்பிட்ட ஒரு சிறு எண்ணிக்கையினரே. அத்தகையோருள் ஒருவராக விளங்கிய **புலோலியூர் க.சதாசிவம்** அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1942-2004) வடமராட்சி வடக்குப் பிரதேசத்திலிருந்து முதன் முதலில் அறிவியற் பின்புலத்தொடு புனைகதை படைத்த படைப்பாளி என்ற பெருமைக்குரியவர் ஆவார்.

புலோலியைச் சேர்ந்த புற்றளையிற் பிறந்த சதாசிவம் அவர்கள் புற்றளை மகாவித்தியாலயத்திலும் புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் ஹாட்லிக் கல்லூரியிலும் பாடசாலைக் கல்வியைப் பெற்றார். பின்னர் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்றுமருத்துவரானார். இளமைக்கால வாழ்வியலில் அவர் எதிர் கொண்ட நெருக்கடிகளும் சமூக தரிசனமும் அவரை எழுதத் தூண்டின. 1961 இல் அவர் எழுதிய முதற் சிறுகதையான 'புதுவாழ்வு', சிறுகதைப் போட்டியோன்றில் பரிசைப் பெற்றுத் தந்தது. அன்று முதல் தனது ஊரின் பெயரையும் சேர்த்துக் கொண்டு புலோலியூர் சதாசிவம் என்ற பெயரில் சிறுகதைகளையும் நாவல்களையும் ஓரங்க நாடகங்களையும் கட்டுரைகளையும் எழுதினார்.

புலோலியூர் சதாசிவம் அவர்கள் மலையகத்தில் வைத்தியராககத் தொழில் புரிந்து வந்ததனால் பெருந்தோட்டங்களிலும் சுற்றுப் புறக் கிராமங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைத் தரிசித்து தமது அனுபவங்களை இலக்கியத்தில் வடித்தார். பல்வேறு போட்டிகளிலும் பரிசுகளைப் பெற்றுக் கொண்ட இவர் **யுகப்பிரவேசம், ஒரு அடிமையின் விலங்கு அறுகிறது, ஒரு நாட்பேர், புதிய பரிமாணம், அக்கா ஏன் அழுகிறாள்?** ஆகிய ஐந்து சிறுகதைத் தொகுதிகளையும் **நாணயம் , மூட்டத்தினுள்ளே** ஆகிய இரு நாவல்களையும் எழுதி வெளியிட்டு வைத்தார். இவற்றுள் **'ஒரு நாட்பேர்'** என்ற சிறுகதைத்தொகுதி, மலையகத்தைச் சேராத எழுத்தாளர் ஒருவரினால் வெளியிடப்பட்ட ஒரேயொரு மலையகச்சிறுகதைத் தொகுதி என்ற சிறப்புக்குரியது. 'மூட்டத்தினுள்ளே' என்ற நாவல் மலையக மக்களின் வாழ்வைச் சித்திரிப்பது, இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றுக் கொண்டது.

'யதார்த்த வாழ்வியல் நோக்கே தமது புனைவுகளின் அச்சாணியான அம்சம்' எனக் குறிப்பிட்டுள்ள புலோலியூர் சதாசிவம் அவர்கள் நாற்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக இலக்கியம் படைத்தார். வைத்தியராகப் பணிபுரிந்த அனுபவமும் அறிவியற் பின்னணியும் அவரின் படைப்புகளுக்கு வளம் சேர்த்தன. எல்லாவற்றுக்கும் மேலாக 'ஒரு நல்ல மனிதனாக வாழ்ந்த இலக்கியப்படைப்பாளி' என்ற மகுடம் இவருக்கு மட்டுமல்லாமல் இவர் பிறந்த மண்ணுக்கும் பெருமை தருவதாகும்.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தின் மூத்த உரையாசிரியர் என குறிப்பிடப்படும் **வல்வை சி.வயித்தியலிங்கம்பிள்ளை** அவர்கள் (1843-1900) **'இயற்றமிழ்ப் போதகாசிரியர்'** என்ற பெயரினாலேயே அறியப்படுபவர். சென்னைத் தமிழறிஞர்கள், ஈழத்து அறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தலைமையிலே கூடி இப்பட்டத்தை அவருக்கு வழங்கினர். அன்றிலிருந்து இயற்றமிழ் போதகாசிரியர் என்பது வல்வை சி.வயித்தியலிங்கம் பிள்ளை அவர்களையே சுட்டி வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் இலக்கண, இலக்கியங்களைத் துறைபோகக் கற்ற வயித்தியலிங்கம் பிள்ளை, தென்னிந்தியா சென்று சமஸ்கிருத நூல்களையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். நாவலர் கையாண்ட முறையைப் பின்பற்றி அச்சுக் கூடம் ஒன்றினைத் தாபித்து முதன் முதலில் வடமராட்சியில் சைவாபிராணி என்னும் பத்திரிகையையும் சில வெளியீடுகளையும் வெளியிட்டு வைத்த வயித்தியலிங்கம் பிள்ளைஅவர்கள் வடமராட்சிப் பிரதேசத்தின் மூத்த போதகாசிரியர் எனும் சிறப்புக்கும் உரியவராவார்.

வல்வை வயித்தியலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றிய **சிந்தாமணி நிகண்டு** எனும் நூல் ஈழநாட்டில் நிகண்டு செய் ஒரேயொரு புலவர் இயற்றமிழ்ப் போதகாசிரியர் வயித்தியலிங்கம் பிள்ளை அவர்களே என்ற பெருமையையும் தந்துள்ளது. அதே வேளை கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப்படலத்திற்கு அகப் பொருள் நோக்கில் முதன் முதலில் விளக்கம் கொடுத்த வகையில், ஈழத்துத் தமிழ் உரைமரபில் இப் படலத்திற்கு அகப்பொருள் விளக்கம் கொடுக்கும் மரபைத் தோற்றுவித்தவர் என்ற சிறப்பையும் இவர் பெறுகின்றார்.

இயற்றமிழ்ப் போதகாசிரியர் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் சிந்தாமணி நிகண்டு, நம்பியகப் பொருள் உரை, கந்தரலங்காரம் உரை, கல்வளையந்தாதி உரை, கந்தபுராணம், அண்டகோசப் படலவுரை, கந்தபுராணம் தெய்வயானைஅம்மை திருமணப்படலவுரை, இவற்றோடு கள்ளுக் குடிச்சிந்து, மாதரொழுக்கத் தங்கச் சிந்து, சாதி நிர்ணய புராணம், போன்ற சமூகம் சார்ந்த நூல்களும் வல்வை வைத்திய ஊஞ்சல், வைத்தியபதிகம், நல்லூர் பதிகம், மாவைப் பதிகம், வல்வை நெடியகாட்டுப் பதிகம், சந்நிதி முருகன் திருப்பள்ளி எழுச்சி , தோத்திர மாலை போன்ற கடவுள் மீது பாடப்பட்ட நூல்களும் குறிப்பிடப்பட வேண்டியவை. அதேவேளை, சைவத்தின் மேன்மைக்கு இழுக்கெனக் கருதிய வகையில் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதக் கருத்துகளுக்கு மறுப்புரைகளாகவும் கண்டனங்களாகவும் எழுதிய சிறு பிரசுரங்களும் கூட குறிப்பிடற்குரியன.

**தென்புலோலியூரைச் சேர்ந்த திரு.மு. கணபதிப்பிள்ளை** அவர்கள் வரமராட்சி வடக்கைச் சேர்ந்த மற்றுமோர் ஆளுமை ஆவார். திரு. மு.கணபதிப்பிள்ளை அவர்களின் சிறப்பு, 1940களிலிருந்தே தமிழ் ஆராய்ச்சித்துறையில் சிறப்புற மிளிர்ந்தமையாகும்.

காலத்துக்குக் காலம் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வந்த தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் ஊரின் மீத கொண்ட பற்றுக் காரணமாக எப்போதும் தன் பெயருக்கு முன்னால் ஊரின் பெயரையும் சேர்த்து எழுதி வந்தார். தமிழுலகிலே நன்கு மதிக்கப்பட்டு வந்த அறிஞர்களின் கருத்துகளைக் கூட, தனது ஆராய்ச்சித் திறத்தாலே மறுத்து, தனது கருத்துகளை ஆதாரங்களுடன் நிறுவி வந்தார். சுவாமி ஞானப்பிரகாசர், டக்தர் தானியேல் போன்ற அறிஞர்களினது கொள்கைகளையும் கருத்துகளையும் மறுத்து தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிய போது அவற்றால் கவரப்பட்டு, அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதற்கு தென்னிந்தியாவிலுள்ள பாரி நிலையம் போன்ற பதிப்பகங்கள் முன்வந்தன. உலகத் தமிழாராச்சிக்கே அடி கோலி உரமளித்து வரும் ஆராய்ச்சியாளர் அவர் என அவரைப் பற்றி எழுதிச் சிறப்புச் செய்தன.

தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய நூல்களில் முக்கியமானவையென, ஈழ நாட்டின் தமிழ்மணிச் சுடர்கள், அன்னை தயை, மொழியும் மரபும், வான்மீகியார் தமிழரே, தமிழன் எங்கே?, பயிற்சித் தமிழ் ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். பன்னிரு திருமுறைத் தோத்திரத் திரட்டு, மகாதேவ சுவாமிகள் நினைவுமலர் போன்ற தொகுப்பு நூல்களையும் அவர் வெளியிட்டு வைத்தார். தமிழன் எங்கே என்ற நூலுக்கு சால்புரை வழங்கிய பன்மொழிப்புலவர் திரு.கா.அப்பாத்துரை எம்.ஏ.எல்.டி.அவர்கள் மு.கணபதிப்பிள்ளை அவர்களின் மொழிநடை பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அவரின் ஆராய்ச்சியானது 'இருபதாம் நூற்றாண்டின் தமிழின ஆராய்ச்சிப் படைப்புக்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்றது' எனவும், 'ஆராய்ச்சிகளில் எளிதில் காணமுடியாத தெளிவும் கவர்ச்சியும் ஏட்டின் நடையிலேயே மிளிர்கின்றன.' என்றும் புனைகதைக்கேயுரிய உயிரோட்டத்தை அவர் தம் ஆராய்ச்சிப் போக்குக்கு அளித்து, அதை மணமும் உயிர் வளர்ச்சியும் பெற்ற பொன்மலரோ எனும்படி அரும்படைப்பாக்கியுள்ளார்' என்றும் பலவிதமாக விதந்துரைக்கின்றார்.

மு.கணபதிப்பிள்ளை அவர்களின் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் பல்வேறு பழந்தமிழ் இலக்கியங்களின் அடிச் சொற்களின் ஆதாரங்களுடன் எழுதப்பட்டவை ஆகும். 'சொல்லாராய்ச்சி என்பது ஏதோ ஒரு பொழுபோக்கு விளையாடல் என்ற நிலைக்கு வந்து விட்டது' என்று மனம் வருந்தும் அறிஞர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள், சொல்லாராய்ச்சியின் முடிவுகளை ஆதாரபூர்வமாக நிறுவிய பின்பு, 'யான் கூறுவனதாம் முடிந்த முடிபுகள் எனக் கூற அறியேன். அறிஞர்களும் ஆராய்ச்சியாளர் களும் நடுநின்று ஆராய்ந்து கூறுவனதாம் எனக்கும் ஒப்ப முடிந்ததாகும்' என அவையடக்கத்துடன் எழுதிச் செல்வதும் 'ஆய்வுக் கலாசாரத்தை'ப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகும். வீரகேசரி இதழ்களில் நவாலியூர் சோ. இளமுருகனார் எழுதிய சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளுக்கு மறுப்பாக எழுதிய 'அலக்கழிதல்', 'கொழுகொம்பு' ஆகிய இரு கட்டுரைகளும் நவில் தொறும் இன்பம் பயப்பவையாகும். இக் கட்டுரைகள் 'அன்னை தயை' என்ற நூலில் இடம்பெற்றுள்ளன.

'அறிவானது ஆராய்ச்சியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும்' என்ற இக்கால சிந்தனைக்கேற்ப சொல்லாராய்ச்சியை முன்னெடுத்தவர் என்ற வகையிலும் ஆய்வு நாகரிகத்தைக் கடைப்பிடித்து ஒழுகியவர் என்ற வகையிலும் இருபதாம் நூற்றாண்டின் தமிழின ஆராய்ச்சிப் படைப்புகளுக்குப் புதுத்திசை காட்டி, திருப்புமுனையாய் அமைந்தவர் என்ற வகையிலும் தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் முக்கிய தடம் பதித்தவராகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண இதிகாசங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த உரைகளை எழுதிய ஈழத்து அறிஞர்களுள் **பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள்** குறிப்பிடக்குரியவர் ஆவார். இவர் பருத்தித்துறையிலுள்ள தும்பளைக் கிராமத்திற் பிறந்தவர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் மாணாக்கரான பிரம்மஸ்ரீ முத்துக்குமார சுவாமிக் குருக்கள் அவர்களே சுப்பிரமணிய சாஸ்திரிகளின் குரு ஆவார்.

கந்தபுராணத்தின் முதல் மூன்று காண்டங்களுக்கும் முதன் முதலில் விருத்தியுரை எழுதிய ஈழத்துத் தமிழறிஞர் என்ற பெருமைக்குரியவர், சுப்பிரமணிய சாஸ்திரிகளே ஆவார். யுத்த காண்டத்தின் ஒரு பகுதிக்கு அவர் எழுதிய உரையும் வெளிவந்துள்ளது. ஆயினும், யுத்த காண்டம் முழுவதற்குமே அவர் உரை எழுதினார் என்றும் அவ்வுரை அச்சாகவில்லை என்றும் கூறுவோரும் உளர்.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் கந்தபுராணத்துக்குமாத்திரமன்றி பிள்ளையார் புராணம், நீதி வெண்பா, கந்தரநுபூதி, ஏகாதசிப் புராணம் ஆகியனவற்றுக்கும் உரைகள் எழுதியுள்ளார். இவ்வுரைகளிலே சங்க இலக்கியங்களிலிருந்தும் மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம், மகாபாரதம், நைடதம், கலிங்கத்துப் பரணி ஆகிய தமிழ் இலக்கியங்களிலிருந்தும் மேற்கொள்களைப் பயன்படுத்தியுள்ளமை இந்த இலக்கியங்களில் அவருக்கிருந்த தெளிவான அறிவைச் சுட்டுவதாகும். கந்தபுராணச் செய்யுள்களிலே உள்ள இலக்கணக் கூறுகளை விளக்குவதற்காக தமிழ்மொழி இலக்கண விதிகளை மாத்திரமன்றி வடமொழி இலக்கண விதிகளையும் சுப்பிரமணிய சாஸ்திரிகள் எடுத்தாள்வது அவரின் இலக்கண நூற்பயிற்சிக்கான ஆதாரமாகவும் உள்ளது.

சமயதத்துவ விளக்கத்துக்காக சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவானுபூதி விளக்கம், சிவானந்தமாலை, கந்தரனுபூதி, பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், குமாரதேவர் பாடல்கள், வள்ளலார் பாடல்கள் போன்றவற்றை மேற்கோள்களாகச் சுட்டும் வழக்கத்தையும் சுப்பிரமணிய சாஸ்திரிகள் கொண்டிருந்தார் என்பது உதாரணங்களுடன் விளக்கமாக எடுத்துக் காட்டப்படக் கூடியதாகும். குறிப்பாக வள்ளலார் பாடல்களை மிகுந்த ஈடுபாட்டுடன் மேற்கோள்களாக இவர் கையாள்வது வள்ளலார் மீதான இவரது அபிமானத்தைச் சுட்டுவதாகும். பொதுவாகவே, வள்ளலாரின் பாடல்களை ஈழத்து அறிஞர்கள் மதித்துப் போற்றவில்லை என்ற குறைபாடு இந்தியத் தமிழறிஞர்களிடத்தே உண்டு. இது நாவலருக்கும் வள்ளலாருக்கும் இடையே ஏற்பட்ட அருட்பா-மருட்பா வழக்கினால் எழுந்ததாகும். இவ்வழக்கில் சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்கள் நாவலருக்கு ஆதரவாக இருந்தார் என்பதும் தென்னகத்தார் குறிப்பிடும் குறைபாட்டுக்கு வலுச் சேர்ப்பதாக இருந்தது. அவ்வாறன்றி, வள்ளலாரின் அருட்பாடல்களை விதந்து சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது விருத்தியுரைகளிலே அவற்றை அடிக்கடி கையாண்டுள்ளமையானது வள்ளலாரின் பாடல்களை ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் மதித்துப் போற்றினார்கள் என்பதற்கான ஆதாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'சோதிடவிலாச யந்திர சாலை' எனும் பெயரில் அச்சுக் கூடம் ஒன்றை நிறுவி தமது அச்சுக் கூடத்தினூடாக ஆண்டுதோறும் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுவந்தார் என்பது அவருக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும். இவர் செய்த சொற்பொருள் விளக்கத் தமிழகராதி மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். கந்தபுராணத்தில் பெருமளவுக்கு வடசொற்களே பயின்றுவரும் நிலையில், வடசொற்கள் தமிழிலே வழக்குமாற்றைச் சிறப்பாகப் புலப்படுத்த வல்ல இவரது இருமொழிப் புலமையானது அவர் கந்தபுராணத்துக்கு விருத்தியுரை செய்வதற்கும் சொற்பொருள் விளக்கத் தமிழகராதியைச் செய்வதற்கும் நன்கு உதவிற்று எனலாம். பாண்டித்துரைத்தேவர், உ.வே.சாமிநாதையர் போன்ற தமிழ்நாட்டு நல்லறிஞர்களிடையே சுப்பிரமணிய சாஸ்திரிகளின் கந்தபுராண விருத்தியுரை நன்கு செல்வாக்கு பெற்றிருந்தமையும் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை போன்ற ஈழத்துப் பிற்காலத் தமிழ் அறிஞர்களிடத்து மதிப்புப் பெற்றிருந்தமையும் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் ஆற்றலைப் புலப்படுத்துவனவாகும். முன்னர் தோன்றிய உரைகளிலுள்ள உரைமுரண் சுட்டி, உரை மறுப்பாக மாத்திரமன்றி, கண்டனங்களாகவும் அம் மறுப்புக்களைத் தெரிவித்தவர் என்ற வகையிலும் சுப்பிரமணிய சாஸ்திரிகள் சிறப்புப் பெறுகின்றார்.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்திலுள்ள புலோலி என்னும் ஊரைச்சேர்ந்த மூத்த இலக்கியப் புலமையாளர் **வ.கணபதிப்பிள்ளை** *(1845-1895)* ஆவார். புலோலி வல்லிபுரநாதபிள்ளை என்பவரின் புதல்வரான இவர் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார்.

தமிழ் இலக்கியங்களையும் வடமொழி இலக்கியங்களையும் துறைபோகக் கற்ற புலவர் வ.கணபதிப்பிள்ளை அவர்கள் இந்தியாவுக்குச் சென்று காஞ்சிபுரம், திருவனந்தபுரம் முதலிய இடங்களில் ஆசிரியராயிருந்து தமிழ்ப்பணி புரிந்தார். தமது வடமொழிநூற் புலமை காரணமாக, வடநூல்கள் சிலவற்றை தமிழில் மொழிபெயர்க்கும் ஆர்வங்கொண்டு, அந்நூல்களைத் தமிழில் இயற்றினார்.

புலவர் வ.கணபதிப்பிள்ளை அவர்கள் வடநூல் மொழிபெயர்ப்புகளாகத் தமிழில் இயற்றிய நூல்களாகக் குறிப்பிடப்படுபவை வில்கணீயம், இரகுவமிசச்சுருக்கம், இந்திரசேனை நாடகம், மார்க்கண்டேய புராணம் என்பனவாகும். தருக்க சாஸ்திர வினாவிடை என்ற நூலையும் இவர் தந்துள்ளார்.

ஈழத்துப்பூதன்றேவனார் காலந்தொடக்கம் கலாநிதி நடேசபிள்ளை காலம்வரையும் இலங்கையில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப்புலவர்களின் கவிதைக்களஞ்சியமொன்றை 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்ற பெயரில் கொழும்பு சாகித்திய மண்டலம் 1966 இல் வெளியிட்டு வைத்தது. இந்நூலின் தொகுப்பாசிரியர் கலாநிதி ஆ.சதாசிவம் ஆவார். இந்நூலில் வடமராட்சி வடக்குப்பிரதேசத்தைச்சேர்ந்த ஐவரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவருள் மூத்தவர், புலமையாளர் வ.கணபதிப்பிள்ளை ஆவார். இந்நூலில் இடம்பெற்றுள்ள ஏனைய நால்வரான ச.வயித்தியலிங்கம்பிள்ளை, நா.கதிரைவேற்பிள்ளை, வ.குமாரசுவாமிப்புலவர், கந்தமுருகேசனார் ஆகியோருள் வ.குமாரசாமிப்புலவர் என்பவர் வ.கணபதிப்பிள்ளை அவர்களின் தம்பியார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலவர் வ.கணபதிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல்கள் வடநூல் மொழிபெயர்ப்புகளாயினும், எளிமையான தமிழ்க்கவிதைகளாக உள்ளன. இதற்கு, யாமினிபூரணதிலகைக்கு வில்கணன் தன் கருத்தைக் கூறுவதாய் அமைந்த,

"மானே மடக்கொடியே மாரவேள் சாயகமே
தேனே சுரரமுதே தித்திக்குஞ் செங்கரும்பே
ஊனோ டுயிருருகி யுள்ளமெலாஞ் சோருகின்றேன்
யானோர் செயலறியேன் யாதுபுரிவேன் மதியே" (வில்கணீயம்)

என்ற பாடல் சிறந்த உதாரணமாகும்.

வடமராட்சி வடக்குப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்த முக்கியமான கவிஞர்களுள் ஒருவர் 'யாழ்ப்பாணன்' வே.சிவக்கொழுந்து (1908-1968) ஆவார். இவர் பருத்தித்துறை வியாபாரிமூலையில் பிறந்தவர். ஈழத்தின் மூத்த பத்திரிகையான 'ஈழகேசரி'யில் அந்நாளில் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தவர். 1948 ஆம் ஆண்டிலேயே 'மாலைக்கு மாலை' எனும் பெயரில் தமது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டு வைத்து தமிழக அறிஞர்களிடத்தும் நன்மதிப்புப் பெற்றவர்.

கவிஞர் வே.சிவக்கொழுந்து அவர்கள் ஆசிரிய கலாசாலைப் பயிற்சி பெற்ற ஓர் ஆசிரியர் ஆவார். இவர் கவிஞராக அறியப்படுவதற்கு முன்னதாகவே கணித நூல்களை எழுதி, பாடசாலை மாணவர்களுக்காக வெளியிட்டு வைத்துக் கொண்டிருந்த ஓர் அறிஞராக, கல்விமான்களிடமும் ஆசிரியர்களிடத்தும் மாணவர்களிடத்தும் மதிப்புப் பெற்றிருந்தார். எண்கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம் ஆகிய கணிதபாட விடயங்களில் மாத்திரமன்றி பூமிசாத்திரம், சுற்றாடல் போன்ற பாடங்களுக்கும்அரச பாடவிதானங்களுக்கு ஏற்ற வகையில், ஒவ்வொரு வகுப்புக்குமுரிய நூல்களை எழுதி வெளியிட்டு வைத்த பெருமை வே.சிவக்கொழுந்து அவர்களையே சாரும். இம்முயற்சிகளுக்கு அவர் நிறுவிய கலாபவனம் அச்சகம் பெரிதும் உதவியது.

ஆரம்பத்தில் சொந்தப் பெயரில் சஞ்சிகைகளிலும் வாராந்த இதழ்களிலும் கவிதைகளை எழுதிவந்த வே.சிவக்கொழுந்து அவர்கள், பின்பு 'யாழ்ப்பாணன்' என்ற புனைபெயரில் கவிதைகளை எழுதத் தொடங்கினார். இவரது முதலாவது கவிதைத் தொகுதியான 'மாலைக்கு மாலை' என்ற நூலை சென்னை சக்தி அச்சுக்கூடம் வெளியீடு செய்தது. இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் டாக்டர்.க.கணபதிப்பிள்ளை அவர்கள், "உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுதல் கவிக்கு அழகு; இந்நலத்தோடு இவரது கவிதைகளில் இலகுவான சொற்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைப்பு, புத்தம் புதிய பொருட்கள், உயரிய எண்ணக்கருத்துகள் ஆகியனவும் நிரம்பியிருப்பதை நாம் காண்கின்றோம். மேலும், பழையன போற்றிப் புதியன புகுத்தும் பண்பும் இவரிடத்தில் நன்கு அமைந்திருக்கின்றது" என யாழ்ப்பாணனின் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

கவிஞர் யாழ்ப்பாணனின் இரண்டாவது கவிதைத் தொகுதியான கவிதைக் கன்னி எனும் நூல் நாமாக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் அவர்களின் முன்னுரையைத் தாங்கி வெளிவந்தது. கல்கி, இராஜாஜி, கி.வா.ஜகந்நாதன், கே.சுப்பிரமணிய முதலியார், டாக்டர்.மு.வரதராஜன், ரா.பி.சேதுப்பிள்ளை ஆகிய அறிஞர்கள் இந்நூலுக்குப் பாராட்டுகளும், வாழ்த்துகளும் வழங்கியுள்ளனர்.

கிராமிய வாழ்க்கையில் யாழ்ப்பாணன் திளைத்து மகிழ்ந்தவர் என்பதை அவரது கவிதை வரிகளிலேயே காணலாம். கிராமியக் கூத்துகளும், இசை நாடகங்களும் அவரை வெகுவாக ஈர்த்திருந்தன என்பதைப் பின்வரும் இரு பாடல்களும் நிரூபிக்கின்றன.

**இலக்குவனாய் இராமனுமாய் இலங்கை சுடும் அனுமானாய்**
**சிலைக்குரியன் விசயனுமாய் திரௌபதியாய் சீதையுமாய்**
**மலைக்குயர்வில் வசிக்குமொரு மங்கையவர் பாகனுமாய்**
**கலைக்குரிய கோலங்கள் காட்டிய நாள் வாராதோ?**

**மருத்துவனாய் மந்திரியாய் மறலிவிடு தூதுவனாய்**
**விருத்தனாய் வேடனாய் வேல்பிடித்த வேலவனாய்**
**பருத்த தொந்தியுடன் பார்நடுங்கும் பூதமுமாய்**
**தரித்த பல கோலங்களை தாங்கிய நாள் வாராதோ?**

('அந்தநாள் வாராதோ' - **கவிதைக் கன்னி**)

யாழ்ப்பாணன் எழுதிய கவிதைகள் ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. **மாலைக்கு மாலை, கவிதைக்கன்னி, முல்லைக்காடு, பாலர் கீதம், கண்ணன் பாட்டு, அன்னை** ஆகிய இந்த நூல்களில் யாழ்ப்பாணனின் கவியுள்ளத்தை நன்கு தரிசிக்கலாம். குழந்தைகளுக்காக அவர் எழுதிய பாடல்கள் பல போதனைகளை வழங்குவதுடன், துள்ளல் இசையுடன் பாடக்கூடிய சந்தப் பாடல்களாகவும் விளங்குகின்றன.

கணிதநூல்கள், கவிதைநூல்கள் பலவற்றைத் தந்த யாழ்ப்பாணன் வே.சிவக்கொழுந்து அவர்கள் நவீனம் ஒன்றையும் எழுதியுள்ளார். இருபத்தேழு ஆண்டு நிகழ்சிகளை இருபத்தேழு அத்தியாயங்களில் சித்திரித்து, 'ஜீவயாத்திரை' என்ற பெயரில் 1965 இல் இந்நாவல் வெளிவந்தது.

ஈழத்து அறிஞர்களையும் தமிழக அறிஞர்களையும் இந்தியத் தலைவர்களையும் மதித்துப் போற்றியதோடு மட்டுமல்லாமல், தமது கவிதைகளினூடாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராதனை செய்த கவிஞர் யாழ்ப்பாணன் அவர்கள் தமது எளிமையான கவிதைகளால் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இடம்பிடித்து வடமராட்சி வடக்குப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்தவர் ஆவார்.

வடமராட்சி வடக்குப் பிரதேச இலக்கிய ஆளுமைகள் பற்றிய இக் கட்டுரையானது மதுரைப் பண்டிதர், **இலக்கிய கலாநிதி க.சச்சிதானந்தன் (1921-2008)** அவர்களின் வரலாற்றை உள்ளடக்காவிடின் முழுமை பெறாது.

பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்களின் தந்தையார் சோதிட வல்லுநர் தும்பளை கணபதிப்பிள்ளை அவர்கள் ஆவார். காங்கேசன்துறை மாவிட்டபுரத்தை சேர்ந்த தெய்வானைப் பிள்ளையை கணபதிப்பிள்ளை அவர்கள் மணம் முடித்த காரணத்தினால் மாவிட்டபுரத்திற்பிறந்தது, ஆரம்பக்கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் பெற்றாரெனினும், இடைநிலைக் கல்வியைப் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்திலும் ஹாட்லிக் கல்லூரியிலும் பெற்றவர் பண்டிதர் க.சச்சிதானந்தன். அது மாத்திரமன்றி, தமது இறுதிக்காலம் வரை தும்பளையில் வசித்தும் வந்தார். இதனால் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் ஒரு 'முதுசொம்' ஆவார்.

பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள் உயர்கல்வியை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் பரமேஸ்வர பண்டித ஆசிரிய கலாசாலையிலே பெற்றார். இங்கு மூன்றாண்டுகளிற் பண்டிதராகி பயிற்றப்பட்ட ஆசிரியர் தரம் பெறும் வாய்ப்பும் இருந்தது. மூன்றாண்டு காலப் படிப்பை இரண்டாண்டுகளிலேயே முடித்துக்கொண்டு மதுரைப் பண்டித பரீட்சைக்குத் தோற்றி திறமைச் சித்திபெற்ற சச்சிதானந்தன் அவர்கள் மதுரைப் பண்டிதருமானார். பரமேஸ்வராக் கல்லூரி அதிபரின் அனுமதியுடன் ஆங்கிலம் கற்றுபீ.ஏ.சிறப்புப் பட்டமும், லண்டன் Inter Science பரீட்சைச் சித்தியும் பெற்றார். பின்னர் லண்டன் முதுகலைமாணிப் பட்டத்தையும் இவர் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கி தன்னைப் பெருமைப் படுத்திக் கொண்டது. நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியிலும் உடுவில் மகளிர் கல்லூரியிலும், யாழ் மத்திய கல்லூரியிலும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கணித ஆசிரியராக விளங்கிய பண்டிதர் சச்சிதானந்தன் பலாலி ஆசிரியர் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகவும் உப அதிபராகவும் விளங்கியுள்ளார்.

தமது தந்தையாரிடம் வானியலும் சோதிடக்கலையும் கற்றுத்தேர்ந்ததோடு சிவப்பிரகாச தேசிகரிடரும் சுப்பிமணிய சாஸ்திரிகளிடமும் சமஸ்கிருதத்தையும் கற்றுத்தேர்ந்த பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் , தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சிபெற்று மும்மொழி வித்தகராக விளங்கினார். பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள், சாகும் வரை எழுத்துத்துறையில் பிரகாசித்தவர். ஆனந்தன், யாழப்பாணன், பண்டிதர், சச்சி முதலான புனைபெயரில் கவிதைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளையும் நாடகங்களையும் சித்திரங்களையும் காவியங்களையும் எழுதி வந்தவர் இவர். நாவல் ஒன்றையும் இவர் படைத்துள்ளார். இவர் எழுதிய பாடலின்,

"சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும்-என்றன்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்"

என்ற வரிகள் இன்றும் எங்கள் உணர்வை உசுப்புவன.

பண்டிதர் க.சச்சிதானந்தன் எழுதிய நூல்கள் ஒரு பெரும் பட்டியலில் அடங்குவன. அவற்றுள், ஆனந்தத்தேன்(கவிதை) தியாக மாலை வரலாறு, யாழ்ப்பாணக் காவியம், தமிழர் யாழியல், மஞ்சுகாசினியம், இயங்கு தமிழியல், Fundamentals of Tamil Prosody இலங்கைக் காவியம் : பருவப் பாலியர்படும் பாடு, மஞ்சு மலர்க்கொத்து (சிறுவர் பாட்டு), எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் என்பன குறிப்பிடற்குரியன.

பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் யாழ் நூல் தந்த சுவாமி விபுலானந்தரின் படியெடுக்கும் மாணவராக இருந்துள்ளார் என்பதும் பல ஆய்வரங்குகளிலே தமிழ் இலக்கணம், உளவியல், வானியல் ஆகிய விடயத்தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் படித்தவர் என்பதும் இவருக்குச் சிறப்புத் தருவன. சாகித்திய ரத்னா விருது, சம்பந்தன் விருது, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விருது, தந்தை செல்வா நினைவு விருது, இலக்கியப் பேரவை விருது, கலாகீர்த்தி தேசிய விருது போன்ற பல்வேறு விருதுகளையும் கவிதைக்காகப் பல பரிசுகளையும் பெற்ற ஒரே ஒரு முதுபெரும் கவிஞராக விளங்கியவர் பண்டிதர் க.சச்சிதானந்தம் அவர்களே என்பது வடமராட்சி வடக்குப் பிரதேசத்துக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

இக் கட்டுரையில் எடுத்தாளப்பட்ட இலக்கிய ஆளுமைகள் அனைவரும் அமரத்துவம் எய்தியவர்கள் ஆவர். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் வீச்சுள்ள இலக்கிய கர்த்தாக்கக்களையும் படைப்பாளிகளையும் இக் கட்ரையிற் குறிப்பிடாமைக்கு அவர்கள் குறித்த பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போனமையே காரணமாகும். இதே போல வடமராட்சி வடக்குப் பிரதேசத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் படைப்பாளிகளின் பெயர்களையும் இங்கு குறிப்பிட முடியவில்லை. ஆனால் இவர்கள் அனைவரும் இக் கட்டுரையிற் குறிப்பிட்ட இலக்கிய ஆளுமைகளின் வழிவந்தவர்களே. இவர்கள் மரபு இலக்கியத்துக்கும் நவீன இலக்கியத்துக்கும் வளம் சேர்த்து வருகிறார்கள். 'கருவிலே திருவுடையார்' எனச் சிறப்பிக்கப்படும் வடமராட்சி மண்ணின் மைந்தர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்குச் செய்த பங்களிப்புக்கள் கணிசமானவை. அப்பங்களிப்புகளுள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த இக் கட்டுரையிற் குறிப்பிட்ட பதின்மூன்று ஆளுமைகளும் முதன்மையான பங்களிப்புகளை வழங்கியுள்ளார்கள் என்பதை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு நன்கு பதிவு செய்து கொள்ளும்.

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் பாரம்பரிய ஆற்றுகைக் கலைகள்

பா. இரகுவரன்
ஆசிரியர்,
யா/ஹாட்லிக்கல்லூரி

வடமராட்சிப் பகுதியானது கடல் நீரால் எல்லைப்படுத்தப்பட்டு தனித்துவமான புவியியல் பின்னணியைக் கொண்ட, பல்வேறு சிறப்புக்கள் மிகுந்த, புகழ் பெற்ற பிரதேசமாக விளங்கி வருன்றது.

வடமராட்சியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை என்பன துறைமுகப் பட்டினங்களாகும். தொண்டமானாறும் முற்காலத்தில் துறைமுகப்பட்டினமாக இருந்ததாக அறியப்படுகிறது.

மேற்படி துறைமுகங்களினூடாக தமிழ்நாட்டுக் கலைஞர்கள் வடமராட்சிக்கு வந்து தமது கலைகளை ஆற்றுகை செய்து தொழில் முறையாக உழைத்தது மட்டுமன்றி வடமராட்சிக் கலைஞர்களுக்குத் தமது கலைகளையும் அவற்றின் இசைக் கருவிகளையும் வாசிக்கவும் பழக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு பழக்கப்பட்ட பன்னெடுங்கால வடிவமாக உடுக்கடிகதை, கரகம், காவடி, கும்மி,குடமூதல், கோலாட்டம்,வசந்தனாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம்,பொம்மலாட்டம்,நாட்டுக் கூத்து, விலாசக்கூத்து, இசை நாடகம் போன்றவை வடமராட்சிப் பகுதிகளில் சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டு வந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட கலைகளில் சில இன்று வடமராட்சியில் வழக்கொழிந்து விட்டன. இவை தொடர்பான தகவல்களை எமது மக்கள் பெற்றிருத்தல் அவர்களின் பாரம்பரிய கலைகள் தொடர்பான எதிர்காலச் செயற்பாடுகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இக் கலைகள் தொடர்பான விழிப்புணர்வும், இவற்றை ஆற்றுகை செய்யும் விருப்பு நிலையும் மேவும். அரச அல்லது தனியார் நிறுவனங்களின் உறுதியான உதவிகள் கிடைக்கும் போது இக்கலைகளை ஆற்றுகை செய்ய இக் கட்டுரைகள் ஓரளவேனும் கலைஞர்களுக்கு உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுக்கடி கதை

எமது பாரம்பரிய இசைக் கருவிகளில் ஒன்றான உடுக்கை இசைத்தபடி பாடல்களில் குறிப்பிட்ட தொரு கதையை எடுத்துக்கூறுதல் உடுக்கடி கதையாகும். உடுக்கடி கதை, வில்லுப்பாட்டு என்பன "கதைப் பாடல்"என்ற தொரு பிரிவுக்குள்ளும் அடக்கப்படலாம். எடுத்துக்கூறல் முறையில் (Narrtive) அமைந்த உடுக்கடி கதையானது தனி ஒருவரால் கதையில் இடம் பெறும் பாத்திரங்கள் போல அபினயித்துப் பாடப்படும். நாடகக் கலையின் வளர்ச்சிக்கும் இவ்வாறான உடுக்கடி கதைகள் பெரிதும் பயன்பட்டுள்ளன.

மாரியம்மன் தாலாட்டு, காத்தவராய சுவாமிகதை, கண்ணகி கதை என்பன உடுக்கடி கதையாகப் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. பண்டத்தரிப்பு பனிப்புலம் கிராமத்தைச் சேர்ந்த பண்டாரம் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் வடமராட்சிப் பகுதியில் உடுக்கடி கதை பெரும்பாலும் தொழில்முறையாக நிகழ்த்தப்பட்டது. உள்ளூர் கலைஞர்களாலும் உடுக்கடி கதை நிகழ்த்தப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் சின்ன முத்து, பொக்கிளிப்பான் ஆகிய தொற்று நோய்கள் ஏற்பட்டால் நேர்த்திக்காக உடுக்கடி கதையை நிகழ்த்தவர். குறிப்பாக மாரியம்மன் தாலாட்டு பாடுதலே வழக்கமாகும் (கலாநிதி.காரை.செ.சுந்தரம் பிள்ளை) காத்தவராயசுவாமி கதை, மாரியம்மன் தாலாட்டு என்பவற்றினூடாக காத்தவராயன் கூத்து வளர்ச்சி பெற்றது என ஆய்வாளர் குறிப்பிடுவர்.

## கரகாட்டம்

முன்னுரை:- கரகம் என்றால் கமண்டலம்,பூக்குடம் என்று பொருள் கூறப்படும். இந்து சமயத்தவர்களினால் சமயச் சடங்குகளில் பயன்படும் "கும்பம்" தான் கரகமாக உருப்பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. தமிழ்நாட்டில் சில கிராமங்களில் கரகாட்டத்தைக் கும்பஆட்டம் என்று கூறுவர். முன்னாளில் மண்பானையுள் (குடம்) நீர்விட்டு அதனுள் வேப்பிலை கொண்ட அமைப்பே கும்பம் எனப்படும். பின்னாளில் தான் தேங்காய், மாவிலையும் இதனுடன் இணைக்கப்பட்டது.

கரகாட்டமானது முத்துமாரியின் வழிபாட்டுச் சடங்குகளில் இருந்து தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அதே வேளை ஏனைய பெண் தெய்வங்களான பத்திரகாளி, கண்ணகி, காளி, சக்தி,முதல்வி அம்மன், திரௌபதி போன்ற பெண் தெய்வக் கோயில்களில் கரகாட்டம் அதிகமாக நிகழ்த்தப்படுகின்றது. முத்துமாரி, திரௌபதி போன்ற தெய்வங்களுக்கு கரகாட்டம் மிகவும் பிடித்ததொரு கலையாக உள்ளது.

வடமராட்சியில் பெண்தெய்வக் கோயில்களின் வேள்வி நாளில் கரகாட்டம் நேர்த்திக்காக இன்றும் ஒரளவு ஆடப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துமாரி- மழைத்தெய்வம்

முத்துமாரி மழைக்குரிய பிரதான தெய்வமாகக் கருதப்படுகிறாள். அத்துடன் கோடை உஷ்ணத்தில் அதிகமாக பெருகும் நோய்களான சின்னமுத்து, அம்மை, பொக்கிளிப்பான் போன்ற நோய்களில் இருந்து காக்கும் தெய்வமாகவும், பஞ்சம் ஏற்படாமல் காக்கும் தெய்வமாகவும் நம்பப்படுகின்றாள். பொதுவாக நோய்களில் இருந்து காப்பாற்றுதல், போதிய மழை பொழியச் செய்தல், நல்ல விளைச்சலைக் கொடுத்தல் போன்றனவற்றிற்காக நேர்த்தி செய்து கரகம் எடுப்பதை தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் காணலாம்.

## கரகாட்டமும் ஆண்களும்

கரகாட்டம் பெண்களுக்குரிய ஆட்டமாகக் கருதப்பட்டாலும் வடமராட்சியில் ஆண்களாலே பெரிதும் ஆடப்படும் நடைமுறையே காணப்படுகிறது. பெண்களுக்கு நேர்த்திக்குரிய நாளில் தீட்டுவருவதால் கரகாட்டம் அதாவது நேர்த்தி தடைப்பட்டு விடும். இதனாலேயே ஆண்கள் பாவாடை, இரவிக்கை போன்ற பெண்களுக்குரிய ஆடை அணிந்து பெண்களாகப் பாவனை செய்து கரகாட்டம் நேர்த்திக்காக ஆடப்படுகிறது.

பாடசாலைகள், சமூக மன்றங்கள் மற்றும் தொழில் முறைரீதியாக கரகம் பெண்களினால் ஆடப்படுவதை நாம் காணலாம். மாதனை, கற்கோவளம் போன்ற கிராமங்களில் பெண்கள் நேர்த்திக்கு கரகம் எடுத்தாடியதை நேரடியாக அவதானித்து பதிவு செய்துள்ளேன்.

## கரகமும் சமநிலையும்

எமது பிரதேசத்தில் தலையில் உள்ள கரகம் ஆடும் போது விழுந்து விடாமல் ஒரு கையால் கரகத்தைப் பிடித்தும், மறுகையால் வேப்பிலைகளை வைத்திருந்த படியும் கரகாட்டத்தை ஆண்கள் நிகழ்த்துகின்றனர். தமிழ்நாட்டில் தொழில் முறையாகக் கரகமாடுவோர் கரகத்தை கைகளால் பிடிக்காமல் தலையில் சமநிலையில் இருக்கத்தக்கதாக நன்கு பயிற்சி பெற்று பல்வேறு வகைகளில் அசைந்து ஆடி கரகாட்டக்கலையை வளர்த்துள்ளனர்.

தமிழ் நாட்டில் கரகத்தை இரண்டு வகைகளாகப் பிரித்துக் கூறுவர்.

1) சக்திக் கரகம்
2) ஆடு கரகம்

சக்திக் கரகம் சடங்கு முறையிலான நேர்த்திகளை நிறைவேற்றும் பொருட்டு ஆண்களால் மட்டும் ஆடப்படும் கரகமாகும். ஆடு கரகம் தொழில்முறை ரீதியாக பெண்களால் ஆடப்படும் கரகமாகும். பெண்கள் சிறப்பான முக ஒப்பனை மற்றும் உடை அலங்காரங்களுடன் காலில் சலங்கை கட்டி பல்வேறு இடங்களிலும் ஆடிப்பணம் சம்பாதிப்பர். இருவர் அல்லது மேற்பட்ட பெண்களால் ஆடு கரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடப்படுகிறது, இலங்கையில் அலங்காரக் கரகம், ஆட்டக்கரகம் என்ற வேறுபட்ட கரகங்கள் உள்ளன.

## கரகமும் பழந்தமிழ் நூல்களும்

கரகம்என்ற சொல் எமது பழந்தமிழ் நூல்களான கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பிங்கல நிகண்டு போன்ற நூல்களில் சிறுகுடத்தையே குறித்து நிற்பதை அறியமுடிகின்றது.

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு(11) வகையான ஆடல்களில் குடக்கூத்து என்ற ஆடல் இடம் பெறுகிறது. குடக்கூத்தை சில அறிஞர்கள் கரகத்துடன் ஒப்பிட்டும், மூலாதாரமாகவும் பார்க்கின்றனர். அநிருத்தன் என்பவன் வாணன் என்ற அசுரனின் மகளான "உழை" என்பவளைக் காதலித்தான். இதைக் கண்ட வாண சூரன் கோபம் கொண்டு அநிருத்தனைச்சிறையில் அடைத்தான். அநிருத்தனைக் காப்பாற்றுவதற்காகத் தலையில் குடம் கொண்டு ஆடினார். குடக்கூத்தின் தொடர்ச்சியாகவே சிலர் கரகாட்டத்தை நோக்குகின்றனர். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள கிராமங்களின் சிறு தெய்வக் கோயில்களில் இன்றும் குடக்கூத்து ஆடப்படுவதாகக் கூறப்படுகிறது.

## கரகக் கூடு

கரகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் அலங்கரிக்கப்பட்ட கூடு கரக் கூடு என அழைக்கப்படும். இது கரகத்தின் உயர, அகலங்களைக் கூட்டியும், அழகுபடுத்தியும் காட்டும். தமிழ்நாட்டில் தொழில்முறைக் கலைஞர்கள் கரகக் கூட்டின் நூலில் கட்டப்பட்டிருக்கும் செயற்கைக் கிளியை சுழன்றாடும் போது பறக்க வைத்து பார்வையாளரின் பாராட்டினைப் பெறுவர்.

## கரகாட்டக்காரர்

எமது பகுதிகளில் கரகம் எடுப்போம் எந்தவித முன்பயிற்சிகளும் இன்றி கரகத்தை எடுத்துமனம் போன போக்கில் உடுக்கிசைக் கேற்ப ஆடுவர். முன்னாளில் மாதனை, கற்கோவளம், அல்வாய், வதிரி, தும்பளை, புலோலி போன்ற கிராமங்களில் நாட்டுக் கூத்துடன் தொடர்புடையவர்கள் கரகாட்டத்தைப் பயிற்றுவித்து ஆட வைத்தனர். இவர்களை 'கரகாட்டக்காரர்' என்று கூறலாம். தற்போது முறைமையான ஆட்டங்களுடன் பயிற்சி பெற்ற கரகாட்டக்காரர் எவரும் எமது பிரதேசத்தில் இல்லையென்றே கூறும் நிலை உருவாகியுள்ளது. எமது பிரதேசத்தில் முறையான கரகாட்டக்காரர் சிலரையாவது உருவாக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாக நாமுள்ளோம் என்பதைக் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். மலையகத்தில் கரகாட்டக்காரர்கள் இன்றும் காணப்படுகின்றார்கள். கரகாட்டம் தொடக்க நிலை, வேக நிலை, அதிவேக நிலை என மூன்று கட்டங்களையும் கொண்டது. ஆடல், பாடல், இசையுடன் இடையிடையே உரையாடலும் கரகாட்டத்தில் இடம் பெறுவதாக அறியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவடி ஆட்டம்

முருகக் கடவுளுக்கு மிகவும் உவப்பான ஆட்டமாகக் கூறுவர். வடமராட்சி காவடியாட்டத்திற்குப் பெயர் போன இடமாக இன்று வரை திகழ்கின்றது. காவடியாட்டமானது முருகப் பெருமானை வழிபடும் ஒரு ஆட்டமுறையாக விளங்குகின்றது.

## காவடி ஆட்டத்தின் தோற்றம்

"காவுதடி" என்ற சொல்லில் இருந்தே காவடி என்ற சொல் தோன்றியுள்ளது. முன்னாளில் முருகனை வழிபடச் செல்லும் அடியவர்கள் தோளில் வைக்கப்படக் கூடிய காவுதடியின் இருமுனைகளிலும் பாற்குடம், பழவகைகள், பூக்கள், பன்னீர், மயிலிறகுகள் போன்றவற்றைக் கொண்டு செல்லும் போது பக்தி மேலீட்டால் ஆடிப்பாடிச் செல்வர். இவ்வாறு காவுதடியில் உள்ள பொருட்களுடன் தொடங்கப்பட்ட ஆட்டமே பின்னாளில் காவடி ஆட்டமாகவும் வளர்ச்சியடைந்து காவடியின் அமைப்பிலும் வளர்ச்சி கண்டுள்ளது.

## காவடியின் வகைகள்

காவடியின் நடுப்பகுதியை காவடித்தண்டு என்றும் அழைப்பர். முருகக் கடவுளுக்குத் தாம் காணிக்கை செலுத்த விரும்பும் பொருட்களை காவடித் தண்டின் இரு முனைகளிலும் கட்டி விடுவர். இவ்வாறு கட்டிக் கொண்டு செல்லப்படும் பிரதான பொருளை வைத்து சாதாரண காவடியின் பெயர்கள் பல்வேறாக அமைந்து கொள்ளும்.

பாற்காவடி
பன்னீர்காவடி
புஷ்பக் காவடி-பூக்காவடி
பழக்காவடி
இளநீர்க் காவடி
அன்னக் காவடி

இரு முனைகளிலும் சமைத்த உணவு மற்றும் தானியங்களைச் சுமந்து செல்லும் காவடி "அன்னக்காவடி" என்று பெயர் பெறும்.

வடமராட்சியில் முருகன் கோயிலில் மட்டுமன்றி முத்துமாரி, பத்திரகாளி, கண்ணகை மற்றும் தாம் நேர்த்தி வைக்கும் தெய்வக் கோயில்களுக்கும் காவடி எடுப்பர். சாதாரண காவடியுடன்

1) செடில் காவடி
2) தூக்குக்காவடி
3) துலாக் காவடி
4) பறவைக் காவடி

போன்றவற்றை எடுப்பர். இதில் தூக்குக் காவடி, தூலாக் காவடி, பறவைக்காவடி என்பன மிக குறைவாகவே எடுக்கப்படும். இக் காவடிகளை எடுத்தலில் உள்ள சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக மிக மிக சிக்கலான உயிராபத்து நிறைந்த நோய்கள், பிரச்சினைகளுக்கே மேற்படி காவடிக்கான நேர்த்தி வைப்பர்.

**காவடிக் கந்தன்- சந்நிதி கோயில்**

வடமராட்சியில் சந்நிதி கந்தன் ஆலயம் காவடிக்குப் பெயர் போனது. கோயில் வீதியிலேயே கடையில் காவடிகளை வைத்திருப்பர். பறை இசைக் கலைஞர்கள் சுற்றுப் பகுதிகளில் காத்திரப்பர். சுலபமாகக் காவடி எடுப்பதற்கு இவை வசதியாக இருந்தன. கூடிய மேளத்தை சந்நிதியில் காவடி மேளமாக பயன்படுத்துகின்றனர். சந்நிதிக்கந்தனுக்குக் "காவடிக் கந்தன்" என்ற சிறப்புப் பெயரும் உள்ளது.

கதிர்காமத்தில் ஆடிமாதத் திருவிழாக்காலத்தில் அன்னக் காவடி, சேவற்காவடி, செடிற்காவடி போன்ற பல வித காவடிகள் எடுக்கப்படுகின்றன. நல்லூர் முருகன் கோயிலில் தேர், தீர்த்தத்தருவிழா தினங்களில் பாற்காவடி எனப் பலவித காவடிகள் ஆடப்பட்டு வருகின்றன.

**செடில் காவடி**

பெரும்பாலும் நேர்த்திக்கு செடில்காவடி எடுப்போரே அதிகமாக உள்ளனர். செடில் காவடியில் செடில் கயிறு பிடித்து காவடி ஆடுபவரை நெறிப்படுத்துவது தனியானதொரு அனுபவக் கலையாகும். செடில்கயிறு பிடிப்பவரும் தனக்கேற்றதான தொரு ஆட்டத்தை ஆடுவதும் கலைத்துவ அழகுடைய தொன்றாகும். காவடி ஆடுபவருக்குத் துணையாகப் பல இளைஞர்கள் ஆடி உற்சாகப்படுத்துவர். இவர்களில் சிலருக்கு கலை வந்து ஆடுவதையும் காணலாம்.

ஒரு கோயிலில் இருந்து நேர்த்தி செய்யப்பட்ட கோயிலும் வீதி வழியாக காவடி ஆடியபடி செல்வர். வீதிக்கு அண்மையில் உள்ள இந்துக் கோயிலடிக்கு சென்று ஆடி விட்டும் தமது இலக்கைத் தொடர்வர். வீதிகளில் காவடி ஆட்டத்தைக் காண மக்கள் கூடி நிற்பர். காவடி ஆட்டக்காரருக்கும், உதவியாக ஆடுபவர்களுக்கும் வாளி தண்ணீரால் முழுகவைப்பர். இதனால் ஆட்டத்தால் உடல் சூடேறுவது குறைக்கப்படும். இரத்த ஓட்டமும் கட்டுப்படுத்தப்படும். களைப்படைவதும் கட்டுப்படுத்தப்படும்.

**காவடியின் அமைப்பு**

காவடியானது மிக அழகானதாக அமைக்கப்பட்டிருக்கும். காவடித் தண்டுத்தடி,பிரம்பு, வர்ணப் பட்டுத்துணி, மணிமாலை, மலர்மாலை, மயிலிறகுத் தோகை, வண்ணக்கடதாசிகள் போன்றவற்றினால் காவடி அமைக்கப்டும். காவடியின் நான்கு மூலைகளிலும் நிலை நிறுத்தப்படும் மயில் தோகை மிக வசீகரமானது. அழகுடன், முருகனின் மயில்வாகனத்தையும் காவடி பக்திப் பெருக்குடருன் நினைவு கொள்ளவைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவடிப்பறை

காவடி ஆட்டத்துக்கு மிகப் பொருத்தமான கருவி பறை இசைக் கருவியாகும். காவடி மேளம் கலகலக்கும் என்பர். பறை இசையின் உன்னத அடி ஆடாதவரையும் ஆடவைக்கும் வலுக் கொண்டது. காவடி ஆட்டக் காரர்பறை இசைக்கு உன்மத்தம் கொண்டு ஆடுவர். யாழ்ப்பாணப்பகுதியில் தற்போது உடுக்கு, தவில், நாதஸ்வரம் என்பனவற்றைக் காவடி ஆட்டத்துக்குப் பயன்படுத்துகின்றனர். ஆனாலும் காவடிக்கு உகந்தவாத்தியம் பறையாகும் என்பதை உணர்ந்தவர் அறிவர்.

செல்வச் சந்நிதியில் தற்போது பறை இசைக் கலைஞர்களின் பற்றாக் குறையினால் தவில்,நாதஸ்வரம் சிலரால் பயன்படுத்தப்படுகிறது. டோலக் போன்ற இசைக் கருவியுடன் கூடிய மேளத்தை தற்போது காவடிக்கு பக்க இசையாகப் பயன்படுததினாலும் அதில் பறை இசையின் உன்னதத்தை காண முடியாமல் உள்ளமை வருத்தப்படக் கூடிய தொன்றாகும்.

சாதியத்துக்கு அப்பால் தெளிவான சிந்தனையுடன் பறை இசையை எமது கலைக்கல்லூரிகளும், பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரும் பயிற்று விக்க வேண்டும். பறை இசைக் கலையை ஒருக்கு விசேட சலுகைகளுடன் மாதாந்த சம்பளம் கொண்ட தொழிலாக மாற்றப்பட வேண்டும். கோயில்களில் காவடி ஆட்டத்திற்கும் உத்தியோகத்தில் இருக்கும் பறை இசைக்கலைஞர்களும் பணம் வசூலிக்க இடமளிக்க வேண்டும்.

## காவடி-சடங்கும், கலையும்

காவடி ஆட்டத்தை தமிழ்நாட்டில் பின்வரும் இரண்டு பிரிவாக வகைப்படுத்திக் கூறுவர்.

1) முருகன் மற்றும் கடவுளைத் தொடர்புடையது.

2) கலை தொடர்பானது.

முதலாவது சடங்கு நிலைப்பட்ட காவடி ஆட்டத்தைக் குறிக்கும். இரண்டாவது தொழில் நிலையில் காவடி ஆடிப் பணம் சம்பாதிக்கும் முறைக்குள் அடங்கும். பல்வேறு ஆட்ட முறைகளை உள்வாங்கி கலை தொடர்பான காவடி ஆட்ட நிலை வளர்ச்சிப் போக்கில் அமைந்து காணப்டுகின்றது.

## ஆட்டக் காவடி

எமது வடமராட்சிப் பகுதியில் நாட்டுக் கூத்துடன் ஆடப்பட்ட காலத்தில் சுமார் 70,75 வருடங்களுக்கு முன்னர் நாட்டுக் கூத்து அண்ணாவிமார்களால் காவடிக்குரிய ஆட்டங்கள் பல மாதங்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு சிறந்த முறையில் காவடிக் கலை வளர்ச்சியுற்றிருந்தது. ஆட்டக் காவடி, தாளக் காவடி என்பன குறிப்பிடத்தக்கன.

எமது பிரதேசத்தில் நேர்த்திக்கடனுக்காக காவடியானது குறிப்பிட்ட கோயிலில் இருந்து எடுக்கப்பட்டு (பெரும்பாலும் குலதெய்வக் கோயில்) வீதி வழியாகச் சென்று நேர்த்தி வைக்கபட்ட கோயிலுக்குச் சென்று ஆடிய பின் காவடி இறக்கம் நிகழ்ச்சி கோயில் பூசாரியால் நிகழ்த்தப்பட்டு முடித்து வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முடிவுரை

காவடியின் ஆட்ட முறைகள், காவடிக்குரிய பறை மேள இசை என்பனவற்றை எதிர்காலத்தில் மேம்படுத்தி எமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்போம் என உறுதி கொள்வோம் வாருங்கள்.

### கும்மியடித்தல்

கும்முதல் என்ற சொல்லின் வழியாகப் கும்மி என்ற சொல் பிறந்தது என்பர். இரண்டு கைகளாலும் கும்முதல்-தட்டுதல் கும்மியில் ஒரு பிரதான அம்சமாகும். பாடலுக்கு ஏற்ப பெண்கள் வட்டமாக அசைந்தும் குனிந்தும், நிமிந்தும் கைகளைத்தட்டி ஆடும் ஆட்டமாகும்.

கும்மியாட்டம் பெண்களுக்குரிய தொன்றாகும். முன்னாளில் விசே பண்டிகைகளில் பெண்கள் ஒன்று கூடி பாட்டிற்கேற்ப கும்மியடித்து மகிழ்வர். இன்றும் கற்கோவளம் கிராமத்துப் பெண்கள் கும்பி அம்மன் கோயிலிலும்,வல்லிபுர ஆழ்வார் கோயிலிலும் கும்மியடிக்கும் விடயம் பலர் அறியாததொன்றாக இருந்து வருகிறது.

கற்கோவளம் கிராமத்தில் பேச்சி அம்மன் கோயிலில் சித்திரா பௌர்ணமியை அண்மித்த காலங்களிலும் நவராத்திரி காலங்களிலும் கும்மியடித்தல் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. மாதனைப் பெண்களும் ஏறத்தாழ 50 வருடங்களுக்கு முன்புமாதனைக கண்ணகி அம்மன் கோயிலில் கும்மிஅடித்து வந்துள்ளனர். இவர்கள் கும்மியடித்தலைக் கைவிட்டாலும் கற்கோவளத்துப் பெண்கள் கண்ணகை அம்மன் கோயிலின் குறித்ததொரு நாளில் (பெரும்பாலும் வேள்வி நாளின் இரவுப் பொழுதில்) குமியடித்து வருகின்றனர்.

கற்கோவளத்துப் பெண்கள் வல்லிபுரக் கோயிலிலும் வேறு விசேட நாட்களின் இராப்பொழுதில் தற்போது கும்மியடித்து வருகின்றனர். கற்கோவளத்தில் இளம் பெண்களை விட ஓரளவு வயதான பெண்களே அதிகம் கும்மியடித்து வருகின்றனர். புலோலி திகிரிப் பகுதியில் வாழும் சலவைத் தொழிலாளர்கள் மத்தியிலும் 40 வருடங்களுக்கு முன்னர் கும்மியடித்தல் இடம் பெற்றுள்ளது. ஆனி மாதத்தில் திகிரி கோயில்களின் வேள்வி கால இராப் பொழுதிலும், விசேட தினங்களிலும் கும்மியடித்தல் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது.

புலோலி திகிரிப் பகுதியில் ஆண்களே பெண் வேட மிட்டு கும்மியடித்து வந்துள்ளனர். எல்லோரும் பச்சைநிறமுழுப்பாவாடையும் சிவப்பு ரவிக்கையும் அணிந்து, பிற்குடுமி கொண்ட டோப் தலைமுடியைத் தரித்து கும்மியடித்தனர். மேலும் கழுத்துச்சங்கிலி, காப்பு, காற்சலங்கை அணிந்து, முகத்துக்கு முத்து வெள்ளை பூசி, குங்குமப் பொட்டிட்டு இரவு 10 மணியளவில் கும்மியடிக்கத் தொடங்கி நள்ளிரவு 12 மணி வரை கும்மியடிப்பர். இதன் பின் சாமப் பூசை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மியடிக்கும் போது குனிந்து கீழடி, நிமிர்ந்து நடுவடி, கைகளை உயர்த்தி மேலடி, இருபக்கமும் பக்க அடிகள் என அமையும். ஆனாலும் பொதுவில் கீழடியும், நடுவடியுமே அடிப்பதை அவதானிக்க முடிகிறது.

பொதுவாக வட்ட வடிவில் வட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு கோலங்களிலும் கும்மிஅடித்தலின் அசைவுகள் இடம்பெறும். கும்மியடித்தலின் இறுதியில் புலோலி திகிரியில் காலமேற்றி ஆடி முடிப்பது வழமையாக இருந்தது. கற்கோவளம் கடற்கரையில் மீன்படித்தலில் சிக்கல்கள் ஏற்படும் போது கற்கோவளம் பெண்கள் கூடி கும்பி அம்மனுக்குக் கும்மியடித்து வணங்கி பின் வல்லிபுர ஆழ்வார் கோயிலும் கும்மியடித்து வணங்குவர். இவ்வாறான வணக்கத்தின் மூலம் மீன்பிடித்தொழிலின் தடைகள் நீங்கி சிறந்த முறையில் மீன்கள் பிடிபடும் தொழில்வளம் பெருகும் என்பது அவர்களின் அனுபவபூர்வமான உணமையாக உள்ளது.

**கண்ணகை அம்மன் கும்மி சில பாடல்கள்**

தந்தெனத் தந்தெனத் தானானே தன
    தந்தெனத் தந்தெனத் தானானே தன
தந்தெனத் தந்தெனத் தானானே தன
    தந்தெனத் தந்தெனத் தானானே தன

கும்மியடி பெண்கள் கும்மியடி
    கரம் கொட்டித் தொழுது நீர் கும்மியடி
தம்மை தயந்த பூநாயகி கண்ணகை
    அம்மன் அருள் பெறக் கும்மியடி
        (தந்தென)

வேண்டும் தவத்தின் விளைவாக பூர்வ
    பாண்டிய மன்னன் மகளாக
பூண்ட காற்சிலம்பாட வந்தாள்
    பூவுலகெங்கும் மிழ்ந்து
        (தந்தென)

மன்னவன் உள்ளம் மிக வாடி
    எங்கள் அன்னையே பேழைதனில் மூடி
பின்னமில்லாமல் கடல் தேடி
    இடம் பின்னது சேர்ந்த கனதநாடி
        (தந்தென)

ஆனகரையில் அதைக்கண்டு
    வைசியமான மாநாயகன் மகிழ்பூண்டு
வானமுதே என விண்டு சென்று
    வைத்து வளர்த்தனரே மிக நன்றாக
        (தந்தென)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடமூதல்

எமது வடமராட்சிப் பிரதேசத்தின் பல இடங்களில் குடமூதல் கலை சிறப்பு நிலையில் இருந்து இன்று அருகி விட்டது. ஆயினும் கற்கோவளம் கிராமத்தில் 10 வருடங்களுக்கு முன்பு குடமூதற்கலை கண்டு களித்துள்ளேன் வன்னியில் புதுக்குடியிருப்புப் பகுதியிலும் இக்கலை இன்றும் நடைமுறையில் உள்ளது குடமூதல் கலை பருத்தித்துறை சலவைத் தொழிலாளர் மத்தியிலும் 40 வருடங்களுக்கு முன்னர் சிறப்பாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

குடமூதலில் பல பெண்கள் கலந்து கொள்வர். குடத்தின் வாயருகே தமது வாயைக் கொண்டு சென்று ஊதி ஒலியெழுப்பி கடவுளை வழிபடும் ஒரு கலையாக இது திகழ்ந்துள்ளது.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயிலில் அழகிய மண்குடத்துக்குள் பாரமற்ற பாக்குகளை இட்டு தாளத்துக்குஏற்பக் கும்மியாட்டம் நடைபெறும். பானையுள் உள்ள பாக்குகள் அசைந்து பானையுடன் முட்டி மோதி எழுப்பும் ஒலி தாளக்கட்டுடன் சேர்ந்தொலித்து கலை மகிழ்வை ஏற்படுத்தும். பொதுவாக வரவேற்பு நிகழ்வுகளில் பொதுவாக குடமூதல் கும்மி பயன்பட்டதாகக் கூறப்படுகிறது. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயிலுடன் வடமராட்சிப்பகுதி நெருங்கிய தொடர்புள்ளது. இங்குள்ள கலைகள் மற்றும் சிறப்புத்தன்மைகள் வடமராட்சியூடாகவே இங்கு சென்றடைந்ததாகக் கூறுவர். இங்கு பாடப்படும் குடமூதல் கும்மிப் பாடல்கள் வடமராட்சியின் குடமூதல் கும்மியுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்க அதிகவாய்ப்புள்ளது.

### குடமூதல் கும்மிப் பாடல்கள் சில

தானென்னை தானன்ன தானானே தன
    தான தந்தன தன்னானே
தான தந்தன தன்னானே
    தாநன்ன நாதன்ன நானானே தன்ன
தான தந்தன தானானே

முத்துச் சரமடி நானுனக்கு பெண்ணே
    மூக்குத்தி முத்தடி நீ யெனக்கு
முச்சரத்துக்கும் மூர்க்குத்தி முத்துக்கும்
    மோகமுண்டோ முத்து வீராசி

பூலோகம் எங்கும் எமைக் காக்கும்
    பூபதியாம் எங்கள் மாரியம்மன்
சீரானதும் எங்கள் சந்தேழுகன்னிகள்
    சேர்த்திடக் குமமி சொரியுங்கடி

முத்தமிழ் செவ்விள நீரும் நல்ல
    முப்பொரி அப்பமும் தான் பொரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கூட்டுப் பிள்ளையைத் தான் நினைத்து
சேர்த்து நீர் கும்மி அடியுங்கடி
வண்ணாரப் பெண்ணையும் கொள்ளை கொண்டார்
அவர் மாமி தன்னையும் உறவானார்
ஆயிரம் கண்ணுள்ள மாரி அம்மன் பாதம்
சேர்த்திடக் கும்மி அடியுங்கடி

குறிப்பு:- மேற்படி கும்மிப் பாட்டில் முத்துமாரி, காத்தவராயன் பற்றிய புகழ்ச்சிகள் காணப்படுவதை அறிந்து கொள்க.

## வில்லுப்பாட்டு

வில்லினை ஒரு இசைக் கருவியாக்கி அதனை நிகழ்த்துவோரின் முன்னால் வைத்து அதன் நாணில் சிறு கோல்களால் தட்டிப் பாடலுடன் கூடிய கதை கூறும் நிகழ்வு "வில்லுப்பாட்டு" என்று அழைக்கப்படுகிறது. இதனை வில்லுப்பாட்டு, வில்லடிச்சான்பாட்டு என்றும் நாகரீகமாக வில்லிசை என்றும் அழைக்கப்டும். வில்லுப்பாட்டு என்ற பெயரே, பெரு வழக்கில் இருந்து வருகிறது.

பண்டைய சோழ மன்னன் ஒருவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்று பின் ஓய்வெடுத்த நேரத்தில் வில்லில் அடித்த போது ஒரு வித இசைத்தொனி ஏற்பட்டதாகவும் சோழ மன்னன் அந்த இசையுடன் பாடல் பாட, உடனிருந்தவர் வீரர்கள் தங்கள் கேடயத்தில் தட்டித்தாளம் இசைக்க அது வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாக அமைந்ததென்றும், பின்னர் அம்மன்னன் தனது அரண்மனை ஆஸ்தான கவிஞர்கள், வித்து வான்கள் மூலமாக இக்கலையை விரிவுபடுத்தியதாகவும் கூறப்படுகிறது.

வில்லிசை வில்லுக்கு முந்திய கருவியாக வில்போல் வளைந்த யாழிசைக் கருவியைக் குறிப்பிடுகின்றன. பெரும்பாயபற்றுப்படை என்ற பழந்தமிழ் நூலில் இது பற்றிக் கூறிப்பிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் கள்ளிக் கோட்டையில் அருகில் உள்ள பெருத்தல் மன்னார் என்ற சிற்றுரை அடுத்துள்ள காட்டுப் பகுதியில் வசிக்கும் "புள்ளுவர்" என்ற இன மக்கள் மாடுகளை மேய்க்கும் போதும், பச்சை எடுக்கும் போதும் "வில்யாழை" இசைத்த படி இவர்கள் பாடும் பாட்டு வில்லுப்பாடடு என்று அழைக்கப்படுகிறது. இப் பாட்டு மொழியில் 70% தமிழ்ச் சொற்களாகவே இருப்பதாகவும் "பாணர் கை வழி" எனப்படும் யாழ் நூல் குறிப்பிடுகின்றது.

வில்லுப்பாட்டில் வில், குடம், உடுக்கு, தாளம், ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. வில், குடம், உடுக்கு என்பன முதன்மையான இசைக்கருவிகளாகும். காவடிச் சிந்து, தெம்மாங்கு, கப்பற்பாட்டு, கும்மி போன்ற நாட்டார். மெட்டுக்கள் வில்லிசைக்கு பயன்படுகின்றன. தமிழ் நாட்டில் பின்வரும் கதைகள் பலகாலமாக வில்லுப்பாட்டில் எடுத்துரைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளன. அவையாவன, முத்துப்பட்டன் கதை, பார்வதியம்மன் கதை, சுடலைமாடன் கதை, மன்மதன்ரதி சனைகாணர்டம்... எனப் பல வகைப்பட்டன. அத்துடன் இராமாயணம், மகாபாரதக் கதைகள், புராணக்கதைகள் என்பனவும் வில்லிசையாகப் பாடப்பட்டன.

கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் அவர்களே வில்லுப்பாட்டில் நகைச்சுவையும் சேர்த்து ஜனரஞ்சக மாக்கினர். இதனால் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

இலங்கையில் முதன் முதலில் வில்லுப்பாட்டை அறிமுகமாக்கியவர் மட்டக்களப்பைச் சேர்ந்த கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் ஆவார். இவரைப் பின்பற்றி வடமாகாணத்திலும் பின்னர் இலங்கையின் பல வேறு பகுதிகளிலும் வில்லிசையை பிரபலமாக்கியவர் ஆசிரியர் திரு. வி. வி. ஆறுமுகம் ஆவார்.

இவரது குழுவில் 1963ம் ஆண்டு பருத்தித்துறையில் மாதனைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னமணி என்று அழைக்கப்படும் திரு. க. கணபதிப்பிள்ளை என்பவர் நகைச்சுவையூட்டுபவராகவும் உடுக்கிசைப்பவராகவும் இணைந்து கொண்டார். சின்னமணியை இக்குழுவில் இணைக்க அறிமுகப்படுத்மதி வைத்தவர் ஆர்மோனியச்சக்கரவர்த்தி எஸ்.எம். சோமசுந்தரம் அவர்களாவார். வில்லிசைக்கலைஞரும் திரைப்பட (நகைச்சுவை) நடிகருமான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் இலங்கைக்கு வந்து கொழும்பில் தங்கியிருந்த போது கலாவிநோதன் சின்னமணியவர்கள் இவருடன் மூன்று மாதங்கள் பழகி வில்லிசை, நகைச்சுவை என்பவற்றின் நுணுக்கங்களை நன்கு அறிந்து கொண்டார்.

1968ம் ஆண்டு சின்னமணியவர்கள் தனியான வில்லுப்பாட்டுக்குழுவை உருவாக்கி கலைவாணர் வில்லிசைக் குழு என்று பெயரிட்டார். இந்த ஆண்டில் தைப்பூச தினத்தன்று செல்வச்சந்நிதி ஆலயத்தில் இவரது குழுவின் வில்லிசை அரங்கேற்றம் பருத்தித்துறைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. அன்று முதல் 45 வருடங்களுக்கு மேலாக சின்னமணியவர்கள் வில்லிசையில் விற்பனராக. இலங்கையின் பல பாகங்களிலும் வில்லிசையை அரங்கேற்றினார். வில்லிசைப்புலவர் என்ற பட்டமும் பெற்றார். அவரால் வடமராட்சியும் பெயர் பெற்றது.

## பொம்மலாட்டம்

நூறு வருடங்களுக்கு முன்பு வடமராட்சியில் ஒரு சில இடங்களில் பொம்மலாட்டக் கலைஞர்கள் இருந்தனர் என அறிய முடிகிறது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் ஆய்வின் போது தான் பொம்மலாட்டம் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நடை பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

கலாநிதி காரை செ. சுந்தரம் பிள்ளையவர்களின் ஆய்வின் போது வடமராட்சியில் புறாப்பொறுக்கியில் பொம்மலாட்டக் கலைஞர்கள் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் பின் வரும் பொம்மலாட்டங்களை நிகழ்த்தியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தோற்பொம்மலாட்டம்

2) மரப்பொம்மலாட்டம்

3) நிழற் பொம்மலாட்டம்

என்பனவாம். நிழற்பொம்மலாட்டம் இலகுவாக 10 வருடங்களுக்கு முன்பும் சிலரால் செய்து காட்டப்பட்டுள்ளது. இவர்கள் இன்றும் செய்தும் காட்டக் கூடிய நிலையில் இருந்தாலும் நிகழ்த்துவதில்லை என்பது கவலையான விடயமாகத்தான் இருக்கிறது.

புறாப்பொறுக்கியில் கலைஞர்கள் நாட்டுக் கூத்தில் அதிக கவனமெடுத்து ஆடத் தொடங்கியதும் பொம்மலாட்டக் கலை படிப்படியாக் கைவிடப்பட்டுள்ளது என்று புறாப்பொறுக்கியின் பழைய தலைமுறையினரிடம் நேர்முகத்தின் போது அறிய முடிந்தது.

இன்று மலைநாட்டுத் தமிழர்கள் மத்தியில் பொம்மலாட்டம் ஆடப்படுகிறது. மாரியம்மன் திருவிழாவிலும், தைப்பூச விழாவிலும் மலையகத்தில் இது ஆடப்படுகிறது.

## பொய்க்கால் குதிரையாட்டம்

பொய்க்கால் குதிரையாட்டம் வடமராட்சியில் தற்போது எனக்குத் தெரிந்த அளவில் இல்லை என்ற நிலையில் தான் உள்ளது. சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் பொய்க்கால் குதிரையாட்டம் சிறப்புப் பெற்ற கலையாக வடமராட்சியில் ஆடப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சொந்தக் கால்களினால் ஆடாது மரத்தினால் செய்யப்பட்ட பொய்க் கால்களினால் ஆடுவதால் பொய்க்காலாட்டம் எனவும் அழகிய குதிரைக் கூட்டைச் செய்து அதனுள் நின்று பொய்க்கால்களினால் ஆடப்படுவதால் பொய்க்கால்க் குதிரை ஆட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.

புறாப் பொறுக்கி, ஊறணி, இமையாணன் மற்றும் சில பகுதிகளில் முன்னர் பொய்க்கால் குதிரையாட்டம் சிறப்பு நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதைவிட பருத்தித்துறையின் சில கிராமங்களிலும் ஆடப்பட்டதாக அறியமுடிகிறது.

பெரும்பாலான கலைவடிவங்களின் கலைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர துறைமுகங்களினூடாக வருகை தந்து சுற்றுப் புறக் கிராமங்களில் ஆடியும், உள்ளூர்க் கலைஞர்களுக்கு பழக்கியும் சென்றுள்ளனர். பின்னாளில் பொய்க்கால் இல்லாமல் குதிரையாட்டம் பல இடங்களில் ஆடப்பட்டுள்ளது. குறிப்பாக சூரன் போர் நடக்கும் போது இந்தக் குதிரையாட்டம் பருத்தித்துறையின் பல கோயில்களில் ஆடப்படுவதையும் பார்த்திருக்கிறேன்.

ஒரு சில வருடங்களின் முன் (2012) பருத்தித்துறை சாமுண்டீஸ்வரி ஆலயக் கப்பல் திருவிழா பருத்தித்துறைக் கடற்கரையில் நடைபெற்றபோது பண்டத்தரிப்பு கலைஞர்களே வந்து சுவாமி வீதியுலா வாகச் செல்லும் போது வீதிகளிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் கடற்கரையிலும் சிறப்பாக ஆடினர்.எமது பகுதியில் தற்போது குதிரையாட்டத்திற்கான கலைஞர்கள் இல்லையே என்ற ஆதங்கமும் ஏற்பட்டது.

வடமராட்சியில் நாட்டுக் கூத்துக்களில் அரசன், சேனாதிபதி போன்றோரின் குதிரையாட்டம் கூத்துக்களரியில் நிகழ்த்தப்பட்டுள்ளது. பருத்தித்துறைப் பகுதியில் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில், புற்றளைப் பிள்ளையார் கோயில், புலோலி திகிரிப் பகுதிக் கோயில்களிலும் நாட்டுக்கூத்தை ஆடிய புலோலி திகிரி, புற்றளைக் கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

## கோலாட்டம்

கையில் சிறிய கோல்களை வைத்து ஒருவர் மற்றவரின் கோல்களில் தட்டி ஒலியெழுப்பிக் குழுவாக ஆடும் ஆட்டம் கோலாட்டமாகும். இன்று பெண்களுக்குரிய ஆட்டமாகவே கருதப்படுகிறது. அகராதிகளிலும் பெண்கள் ஆடும் ஆட்டமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. வடமராட்சியில் முன்னர் ஆண்களுக்குரிய ஆட்டமாகவே இருந்துள்ளது.

கோயில் விசேட தினங்களிலும் பண்டிகை நாட்களிலும் ஆண்களே முன்னர் கோலாட்டம் ஆடினர். குறிப்பாக சலவைத்தொழிலாளர் மத்தியில் இந்த ஆண்கள் ஆடும் மரபு செழிப்பாக இருந்துள்ளது. சாமப்பூசைக்கு முன்பாக இரண்டு மணித்தியாலங்கள் வரை இவர் கோலாட்டம் ஆடியுள்ளனர். வட்டமாக நின்று ஆடும் கோலாட்டமே பொதுவானதாகும். இந்த வட்ட அமைப்பில் இருந்து அசைந்து பல்வேறு கோலங்களை எடுத்து ஆடுவர். பக்கவாட்டில் நின்ற படியும், இருவர் இருவராக நேருக்கு நேர் நின்றும், முட்டுக் காலில் அமர்ந்தும் என பல வகைகளில் ஆடுவர். கோலாட்டத்திற்கெனப் பாடப்படும் பாடல்கள் கோலாட்டப் பாடல்கள் என்றும் சிறப்புப் பெற்றன.இதை நெறிப்படுத்துபவர் பாட ஏனையோர் (பொதுவாகக் பாடிய படி) கோலாட்டம் ஆடுவர். பக்க இசையாக உடுக்கும் தாளமும் பின்நாளில் சுருதிப் பெட்டியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கோலாட்டத் தடியினால் அடிக்கும் வகைகள்

1) கீழ்ப்புற அடி

2) மேற்புற அடி

3) பக்க அடி என்றவாறு அமையும். கோலாட்டத்தை படிப்படியாகக் காலமேற்றி விரைந்து ஆடும் போது பார்வையாளரின் கண்களுக்கும், செவிகளுக்கும் இனிய விருந்தாக அமையும்.

கோலாட்டத்தில் பின்னல் கோலாட்டம் சிறப்பானதாகும். கோலாட்டக்குழுவின் நடுவில் வர்ண நாடாக்கள் (கயிறுகள்) தொங்கவிடப்பட்டு ஆட்டத்தின் போது வர்ண நாடாக்களாளக் கோல்களால் தட்டி பின்னி எடுத்தும், பின்னலைக் கலைத்தும் ஆடுவது கலைத்துவம் மிக்கதாக அமையும்.

தற்காலத்தில் பெரும்பாலும் நடன ஆசிரியைகளால் மாணவிகளுக்கே கோலாட்டம் பழக்கப்பட்டு அரங்கேற்றப் பட்டாலும். ஆங்காங்கே மாணவர்கள் மூலமும் கோலாட்ட அரங்கேற்றங்களைக் காணக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தனாட்டம் / வசந்தன் கூத்து

கோலாட்டத்தின் ஒரு வளர்ச்சி நிலையாக வசந்தனாட்டத்தைக் கூறலாம். பொதுவாக ஆண்கள் குழுவாக (6தொடக்கம் 12 பேர்வரையில்) கையில் சிறு கோல்களைப்பிடித்து அவற்றை ஒன்றோடு ஒன்று தட்டி ஆடுவர். ஒரு கதையை இந்த ஆட்டத்தில் பாடல்களால் வெளிப்படுத்தும் போது அது வசந்தன் கூத்துஎன அழைக்கப்படுகிறது.

வடமராட்சியில் தற்போது வசந்தனாட்டம் வழக்கத்தில் இல்லை. முன்னர் ஆடப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அல்வாய், தம்பசிட்டிப் பகுதிகளில் முற்காலத்தில் வசந்தன் கூத்து ஆடப்பட்டுள்ளது. குறிப்பாக அல்வாய் கிழக்கு மாயக்கை விறுமர் கோயில் வசந்தனாட்டத்துக்கு பிரசித்தமாக இருந்துள்ளது.

இக் கூத்து வேளாண்மைத் தொழிலுடன் சம்பந்தப்பட்டது. கோயில் வீதியில் வட்ட அரங்கில் இக் கூத்து ஆடப்படும். மழை பெய்யாவிடின். வசந்தன் கூத்து ஆடினால் மழை பொழியும் என்ற நம்பிக்கையில் ஆடப்படும். மேலும் தொற்று நோய்கள் ஏற்பட்டால் சிலரின் நேர்த்திக்காகவும் வசந்தன் கூத்து ஆடப்பட்டுள்ளது.

இக் கூத்துக்கு மத்தளமும் சல்லரியுமே(தாளம்) பக்க வாத்தியங்களாகப் பயன்படும் சொற்கட்டுக்களை "னன்னனன்ன" என்று உச்சரித்த பின்னரே பாடலைப் பாடுவர். வசந்தன் கூத்தில் பாடப்படும் பாடலின் இராகங்களை சிறுதெய்வ வழிபாட்டின் போது பாடப்படும் காவியம், குளுத்தி, சிந்து என்பனவற்றில் பாடப்படும் இராகங்களை ஒத்தவை. இக் கூத்தில் ஆடல் பாடல்களுடன் சிறிய கதை அம்சமும் காணப்படுமென முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவட்டம் போடுதல் (வீசாணம்), எட்டுப் போடுதல், மாறி ஆடுதல்,பெருவட்டம்.... என ஆடல் வகைகளும் உள்ளன.

## ஏந்தல் ஆட்டம்

பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தில் நெல்லண்டை என்னும் இடத்தில் உள்ள நெல்லண்டைப் பத்திர காளியம்மன் கோயில் மிகவும் பிரபல்யமானது. இக் கோயிலின் "மடை" யின் போது (இது வெளிமடை எனப்படும்) ஆரம்பத்தில் மடைப்பண்டம் எடுத்துவரப்படும் வேளையில் ஏந்தல் ஆட்டம் இடம் பெறும்.

மடைப்பண்டங்களைத் தாம்பாளத்தில் எடுத்து வருபவர்கள் தாம்பாளத்தை கையில் ஏந்தியபடி ஆடும் ஆட்டத்தை ஏந்தல் என்று குறிப்பிடுகின்றார்கள். இந்த ஆட்டத்துக்கு பறை இசை பின்னணியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரு ஆட்டம் / கலை ஆட்டம்

பெரும்பாலும் சிறு தெய்வக் கோயில்களில் ஒருவரில் (அல்லது மேற்பட்டோரில்) தெய்வம் ஏறி ஆடப்படும் ஆட்டம் உரு ஆட்டம் எனப்படும். சந்னதம் ஆடுதல் எனக் கூறுவர். பத்திரகாளி, கண்ணகி, முத்துமாரி, வைரவர்,ஐயனார்,நரசிம்மர், சக்தி, முதல்வி, அம்மன்... போன்ற பல்வேறு சிறுதெய்வக் கோயில்களில் உரு ஆட்டம் இடம் பெறும்.

உருவேறி ஆடும் போது "வாக்குச் சொல்லுதல்" நிகழ்வும் சிலவேளை நிகழ்கின்றது. இவ் வேளையில் உண்மையில் தெய்வம் ஏறி ஆட்டம் இடம் பெறுகிறதா அல்லது உளவியல் சார்ந்த காரணிகளால் ஆட்டம் ஆடப்படுகிறதா என்ற கேள்விகளும் உண்டு. பொதுவாக பறை மேளத்துக்கு ஏற்ப உரு ஆட்டம் நிகழும்.பறை அடிப்போரும் அவ்வேளை வீறு கொண்ட நிலையில் பறையை அடிப்பார்கள். கற்கோவளம் கும்மி அம்மன் கோயிலடியில் உள்ள பேச்சி மடையின் போது குறிப்பாக பெண்களில் உரு ஏறிய ஆட்டம் இடம் பெறும் இங்கு பல உடுக்குகளின் இசைக்கேற்பவே உரு ஆடப்படும்.

## சிலம்பாட்டம்

இது போர் முறையில் அமைந்ததொரு ஆட்டமாகும். கையில் நீண்ட தடியைக் கொண்டு இருவருக்கிடையில் நடைபெறும் யுத்த ஆட்டமாகும். மந்திகைக் கண்ணகி அம்மன் கோயில் பொங்கலில் சிலம்பாட்டம் வருடா வருடம் திரு.கணேசமூர்த்தி குழுவினரால் நிகழ்த்தப்பட்டு வருகிறது. சிலம்பாட்டத்துடன் தொடர்பாக தீப்பந்தங்களை சிலம்புக்கம்பின் நுனியில் பொருத்தி ஆடும் மரபும் காணப்பட்டுள்ளது. சூரன்போரின் போதும் வேறு விழாக்களின் போதும் சிலம்பாட்டம் மரபு இருந்து வருகிறது.

## பாரம்பரிய நாடக மரபுகள்

வடமராட்சிப் பகுதியில் இருந்து வந்த பாரம்பரிய நாடக மரபுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1) நாட்டுக்கூத்து
2) விலாசக்கூத்து/ விலாசநாடகம்
3) இசை நாடகம்
4) காத்தவராயன் கூத்து

## நாட்டுக்கூத்து

கூத்து என்ற சொல் "குதி"- "குதித்தாடல்" என்ற சொல்லின் பொருள் வழியாகத் தோன்றியதாகும். கூத்தில் ஆட்டமே பிரதானமாகும். உணர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப ஆட்டங்களும், இந்த ஆட்டங்களுக்கு ஏற்ற உணர்ச்சி வெளிப்பாட்டுடன் பாடல்களும் பாடப்படும் கூத்தின் பாடல்கள் இலக்கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக்கமைய பண்டிதத்துடன் கூடிய தாக இருந்தமையால் பாமர மக்கள் விளங்குவதற்காக பாடலைப் பாடிவிட்டு வசனத்தில் இழுத்து நீட்டி உரைக்கப்படும்.

நாட்டுக்கூத்துக்கள் இரவிரவாக நேரத்திக்கு கோயில்களின் வீதிகளில் ஆடப்பட்டன. மின்சாரமில்லாத அந் நாளில் தீப்பந்த ஒளியிலேயே கூத்தாடப்பட்டது. மங்கிய தீப்பந்த ஒளியில் கூத்தர்களை தெளிவாகப் பார்ப்பதற்காக கூத்தரை உயர்த்தியும் அகட்டியும் தெரியத்தக்கவாறு கிரீடங்கள், புஜகீரிடங்கள், வில்லுருப்பு என்பன பயன்படுத்தப்பட்டன. மங்கிய ஒளியில் நுட்பமான நடிப்பிற்கு இடமிருக்கவில்லை. ஆடலும் பாடலும் வசனம் உரைத்தலுமே கூத்தின் நடிப்பென ஆனது.

வடமராட்சியில் நாட்டுக்கூத்துக்கள் 1800களில் இரண்டு முழும் உயர்த்தப்பட்ட வட்டக்களரி அரங்கிலியே ஆடப்பட்டன. பின்னர் சாதகமான வெறும் தரையில் வட்ட அரங்கில் ஆடப்பட்டன. அடுத்தகட்டமாக சதுர அரங்கு உருவாகியது. இச் சதுரவடிவமானது பின்னாளில் இசை நாடகங்கள் ஆடப்பட்ட கொட்டகை அரங்கின் சதுரத்தன்மையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும்.

வட்டக்களரியிலும், சதுர களரியிலும் சுற்றிவர (நான்கு பக்கமும்) பார்வையாளர்கள் அமர்ந்திருந்து பார்த்தனர். இதனால் கூத்தர்களும் ஒரே காட்சியை நான்கு பக்கங்களுக்கும் ஆடிக்காட்ட வேண்டிய தேவை காணப்பட்டது. மேற்படி எல்லாப்பக்கமும் திறந்த அரங்கில் ஆட்டங்களும் வட்டவடிவமாகச் சுற்றியிருக்கும் பார்வையாளருக்கு ஏற்ப வட்டத்தன்மை கொண்டனவாக இருந்தன. இவற்றில் சிறுவட்டம், பெருவட்டம், எட்டுப்போடல், சுழன்று ஆடல் என்பன குறிப்பிடத்தக்கன.

இங்கே எட்டுப்போடுதல் என்பது களரியில் எட்டு வடிவமான கற்பனைக் கோட்டின் வழியே ஆடப்படும் ஆட்டமாகும். நாட்டுக்கூத்தின் பிரதான இசைக்கருவி மத்தளம் ஆகும். தாளமும் பயன்படுத்தப்படும். இந்த மத்தளம் கூத்துமத்தளம் எனப்படும். கூத்துமத்தளம் வடமராட்சிப் பகுதியில் தற்போது பாவனையில் இல்லை. வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்தில் இந்த கூத்து மத்தளம் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. கூத்துமத்தளம் இல்லாத குழுக்கள் " டோலக்" ஐ அடித்து வருகின்றனர்.

கூத்தைப் பழகுபவர் "அண்ணாவியார்" என்று அழைக்கப்படுவர். அண்ணாவியரை இன்றைய நாடகங்களின் நெறியாளருக்கு ஒப்பானவர் எனக் கூறலாம். கூத்தைப் பழுகுவதிலிருந்து கூத்துக் களரியில் கூத்தாடும் போது இடுப்பில் கட்டிய மத்தளத்தை அடித்து கூத்தரை நெறிப்படுத்துவார். பின்னாளில் பருத்தித்துறைக் கூத்தில் தாளத்துடன் களரியில் நின்று நெறிப்படுத்தியுள்ளார். வடமராட்சியில் குறிப்பதாக பருத்தித்துறைப் பகுதியில் நாட்டுக் கூத்தை "நாட்டை" என்று அழைப்பர். பருத்தித்துறையின் நாட்டுக் இறுதிவரை கூத்தைப் பேணிப் பாதுகாத்தவர்கள். இப் பகுதிச் சலவைத் தொழிலாளர்கள் ஆவார். புலோலியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகிரி, புற்றளை, தும்பளை ஆகிய பகுதிகளின் சலவைத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து இந்தக் கூத்தை ஆடி வந்துள்ளார்கள். ஏறத்தாள 1960ம் ஆண்டு காலப்பகுதி வரை இக் கூத்து சிறப்பாக ஆடப்பட்டு வந்துள்ளது.

1994ம் ஆண்டளவில் புலோலி திகிரிப் பகுதியில் மீண்டும் செட்டிவர்த்தகன் என்ற கூத்தை ஆடினார்கள். இதில் இளையதலைமுறைக் கலைஞர் கே.எஸ் ஆனந்தன் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். மட்டக்களப்பில் நாட்டுக் கூத்தானது இன்றும் பயில் நிலையில் காணப்படுகின்றது. அதாவது அங்கு இன்றும் நாட்டுக்கூத்து ஆடப்பட்டு வருகிறது. அங்கே வடமோடி, தென்மோடி என்ற இரு நிலைப்பட்ட கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன.

வடமராட்சியில் குறிப்பாகப் பருத்தித்துறையில் ஆடப்பட்ட கூத்துக்கள் "கலப்பு மோடி" யாகவே காணப்படுகின்றன. அதாவது வடமோடி, தென்மோடி ஆகிய கூத்துக்களின் கலையாகவே காணப்படுகின்றன.

நாட்டுக் கூத்து தமிழரின் தேசிய நாடகமாகக் கருதப்படுகின்றது. ஆயினும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியின் வெவ்வேறு கிராமங்களில் ஆடப்படும் கூத்துக்களில் பல்வகைப்பட்ட மாறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழரின் தேசியக் கூத்து என தனி ஒரு வகையை உருவாக்க வேண்டுமா? அல்லது பிராந்தியங்களிற்கிடைப்பட்ட வேறுபாடுகளுடன் பல்வகைத் தன்மை கொண்ட தேசியத்துக்கு இடமளிப்பதா என்ற வினா நம்முன் எழுதுவது நியாயமானதே. முதலில் தமிழ் பிரதேசங்களில் ஆடப்பட்ட கூத்து மரபுகளை பேணி வளர்க்க வேண்டும். எதிர் காலம், தேசியக் கூத்து என்பதற்கான வரைவிலக்கணத்தை எமக்கு உணர்த்தும். அதற்கு கூத்துக் கலைக் கலைக்கும், கலைஞர்களுக்கும் உரிய "அந்தஸ்து" கொடுக்கப்பட்டு கூத்துக்களில் தற்போது உள்ள பல வகை வேறுபாடுகளுடன் புத்தாக்கங்களும் பெருக்கிட வேண்டும். தமிழ் மக்களின் பண்பாடு, பாரம்பரியம் பற்றி அக்கறை கொள்வோருக்கு இக் கூற்று சமர்ப்பணம் ஆகட்டும்.

1995ல் புலோலியில் திகிரி கலைஞர்களாக இருந்தவர்களின் (சலவைத் தொழிலாளிகளின்) உதவியுடன் செட்டி வர்த்தகன் என்ற நாட்டுக்கூத்தை மூன்று மணித்தியாலங்களுக்குள் சுருக்கி ஆடினோம். கே.எஸ். ஆனந்தன் இந்த களரியேற்றத்தில் மிக முக்கியமானவர். 1995ல் சுருக்கப்பட்ட செட்டிவர்த்தகன் நாட்டுக்கூத்து புலோலி கிழக்கு நீலவாசா திரு.K.குலசிங்கம் அவர்களின் வீட்டுவளவில் சாதாரண தரையில் அமைத்த மூன்று பக்கம் திறந்த களரியில் ஆடப்பட்டது. பின் பக்கம் மூடப்பட்ட டொக்கரா/பிக்கிதம் எம்.கே முருகானந்தன் தலைமை தாங்க யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தினர் பேராசிரியர் கா.சிவத்தம்பியவர்களுடன் வந்து பெருமை சேர்த்தனர். செங்கை ஆழியான், டொமினிக் ஜீவா போன்ற இலக்கிய கர்த்தாக்களும் வருகை தந்திருந்தனர். பேராசிரியர் நா.ஞானகுமாரன் நன்றியுரை ஆற்றினார்இந்த நாட்டுக் கூத்தில் இவர்களின் சமூகத்துடன் இணைந்து நான் கட்டியக்காரன் பாத்திரத்துக்கு பாடி,ஆடி, நடித்தேன். அண்ணாவி சிவக்கொழுந்து அவர்கள் களரியில் நின்று தாளம் தட்டி தேவையான உதவிகள் செய்து கூத்தை சிறப்பாக நெறிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிறகு நாடகத்துறையில் பருத்தித்துறைக் கூத்து பேசப்படும் கூத்தாக ஆடியதில் இன்று பெருமையுடன் நினைத்து மகிழ்வடைகின்றேன். இக் கூத்தானது திக்கமுனையிலும் கூத்துக்களரி அமைத்து பல நூறு பார்வையாளர்களின் முன் அரங்கேறிப் பாராட்டுப் பெற்றது.

## விலாசக் கூத்து

விலாசம் என்பது வடமொழிச் சொல்லாகும். விலாசம் என்றால் விளையாட்டு என்று பொருள் பெறும். தமிழ் நாடக மரபிலும் கூத்து விளையாடுதல், நான் அந்தப்பாத்திரமாக விளையாடினேன்.(நடித்தேன்) என்றெல்லாம் கூறும் மரபு காணப்படுகிறது. 09ம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தி வடமொழியில் "மத்த விலாச பிரகசனம்" என்ற நாடகத்தை எழுதியுள்ளமையும், அதில் உள்ள விலாசம் என்ற சொல்லையும் கவனம் கொள்ளுதல் போதிய விளக்கமளிக்கக் கூடியதொன்றாகும்.

நாட்டுக் கூத்துக்கள் சிறப்பாக வடமராட்சிப் பகுதியில் ஆடப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் 1880களில் இலங்கையில் வடமராட்சியில் விலாசக்கூத்துக்கள் அறிமுகமாயின. 1980கள் வரை வடமராட்சியில் விலாசக்கூத்தக்கள் சிறப்பாக ஆடப்பட்டன. வடமராட்சியில் குறிப்பாகப் பருத்தித்துறைப் பகுதியில் விலாசக் கூத்தை நன்கு அறிந்த கலைஞர்கள் ஐந்தாறு பேர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

விலாசத்தை
1) விலாசக் கூத்து
2) விலாச நாடகங்கள் என இரு வகையாக இங்கு குறிப்பிடுவர். கர்னாடக சங்கீதப் பாடலுடன் விலாசக் கூத்தில் ஓரளவு ஆட்டம் காணப்படும். "விலாச நாடகத்தில்" ஆட்டம் ஏதுமின்றி கர்னாடக சங்கீதப் பாடல்கள் மட்டும் இருக்கும். ஆரம்பத்தில் நாட்டுக் கூத்தை ஆடிய கலைஞர்கள் விலாசத்தில் ஓரளவு ஆட்டங்களைப் புகுத்தி ஆடியதால் இதனை விலாசக் கூத்து என்றும் பின்னாளில் ஆட்டத்தை விடுத்து பாடல்களால் நிகழ்த்திய போது விலாச நாடகம் என்றும் அழைக்கப்பட்டது.

தும்பளையைச் சேர்ந்த அண்ணாவி தம்பையா அவர்கள் விலாசக் கூத்தில் மிகச் சிறந்த கலைஞனாகக் குறிப்பிடப்படுகிறார். இவர் கப்பல் மூலம் மட்டக்களப்புக்குச் சென்று விலாசத்தை பழகியுள்ளார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் தான் எழுதிய காதலியாற்றுப் படை என்ற பருத்தித்துறை பற்றிய பல தகவல்கள் கொண்ட கவிதை நூலில் அண்ணாவி தம்பையா பற்றியும் குறிப்பிட்டுள்ளார். புலோலி கிழக்கில் அறுபதுபாகக் கிணற்றடியை அண்மித்து வாழ்ந்த அண்ணாவி தாமோதரம்பிள்ளையின் விலாசக் கூத்தில் அண்ணாவி தம்பையா பிரதான பாத்திரம் ஏற்பார். வருடா வருடம் புற்றளைப் பிள்ளையார் கோவிலில் இவர்களின் விலாசக் கூத்து அரங்கேறி வந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து அரங்கேற்றத்திற்குப் பெயர்போன தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலின் எத்தனையோ குழுக்களின் விலாசக் கூத்துக்கள் அரங்கேறியுள்ளன. அண்ணாவி தம்பையாவின் விலாசக் கூத்தே பெரும்பாலும் ஒவ்வொரு வருடமும் முதலில் அரங்கேறும் கூத்தாகவும் (பொதுவாக சிவராத்திரி தினத்தில் மார்க்கண்டேய விலாசம்) அமையும். அத்துடன் அண்ணாவி தம்பையா பழக்கிய கூத்துக்கள் அடிக்கடி (கிழமையில் இரண்டு மூன்று தடவைகள் கூட) நடைபெற்றுள்ளது.

தும்பளை மேற்குப் பகுதியைச் சேர்ந்த மணியம்சுப்பர் என அழைக்கப்பட்ட சுப்பிரமணியம் என்பவரும் விலாசக் கூத்து அண்ணாவியாராக 1950களில் திகழ்ந்துள்ளார். தும்பளை மேற்கில் உள்ள பிள்ளையார் கோயில் வீதியில் இவர் பழக்கிய கூத்துகள் அரங்கேற்றப்பட்டன. ஒரு காலத்தில் தும்பளை மேற்குப் பகுதி ஆண்கள் பலரும் விலாசக் கூத்தை ஆடியவர்களாக இருந்துள்ளனர்.

விலாசக் கூத்தானது ஆரம்பத்தில் நாட்டுக் கூத்துக்குரிய களரியிலே (ஒரு பக்கம் மூடிய,மூன்று பக்கங்கள் திறந்த சமதரை அரங்கில்) ஆடப்பட்டது. பின்னர் கூத்துக் கொட்டகையில் உயர்த்தப்பட்ட பலகை அரங்கில் ஆடப்பட்டது. அண்ணாவி தம்பையா சமதரை அரங்கிலும் உயர்த்தப்பட்ட கொட்டகையின் பலகை அரங்கிலும் விலாசம் ஆடியுள்ளனர். அண்ணாவி மணியம் சுப்பர் (சுப்பிரமணியம்) கொட்டகையின் பலகையின் அரங்கில்மட்டும் விலாசம் ஆடினார். மணியம்சுப்பர் அண்ணாவி தம்பையாவின் குழுவில் இருந்து விலாசக் கூத்தை ஆடப் பழகியவர் ஆவார்.

நாட்டுக் கூத்திலும் விலாசக் கூத்திலும் ஒவ்வெரு பாத்திரத்தின் வரவு ஆட்டத்தின் பின் "கட்டியம் கூறல்" என்ற சிறப்பு நிகழ்ச்சி இடம் பெறும். இவ்வேளை பார்வையாளர் களரியுள் வந்து கூத்தருக்கு அவரின் ஆட்டச்சிறப்பிற்கும் பரிசுகள் வழங்குவர். (பவுன்மாலை, மோதிரம்,பணம்....) உதாரணமாக இவ்வேளை கூத்துடன் தொடர்பான ஒருவர் அகோயினா.....இரகுவரன் ஆசிரியர் கட்டியக்காரன் பாத்திரத்திற்கு ஆடிய சந்தோசத்தினாலும் நெல்லண்டை அம்மாள் பார்த்து மகிழ்ந்த சந்தோசத்திற்காகவும் வேலாயுதம் அவர்கள் ஒன்று,பத்து, நூறு, ஆயிரம்..... போடுகிறார் அகோயினா.....இன்னும் போடுவார் இவ்வாறு பார்வையாளர்களில் பலர் வந்து கூத்தரைச்சிறப்பிப்பர். கூத்தரும் பார்வையாளரும் சங்கமிக்கும் ஒரு சமூக நிகழ்வாக இந்தக் கட்டியங் கூறல் அமைகின்றது. இன்றைய நவீன நாடகங்களில் நடிகர்-பார்வையாளர் தொடர்புபற்றிய சிந்தனைகளும், நடிகர்-பார்வையாளர் தொடர்புகளை அதிகப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கு நாடுகளில் அதிகம் நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

வடமராட்சியில் விலாசக் கூத்தை நன்கு அறிந்தவர்கள் ஒரு சிலர் உள்ளனர். அவர்களில் புலோலி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த அண்ணாவி அமரசிங்கம் முக்கியமானவர். 1995க்குப் பின் வீரகுமாரன், பாஞ்சாலி சபதம் ஆகிய விலாசக் கூத்துகள் எனது வேண்டுகோளுக்காக இரண்டு மணி நேரங்களுக்குச் சுருக்கி புற்றளைப் பிள்ளையார் கோயிலில் ஆடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக் கூத்துக்களில் நானும் பாத்திரமேற்று நடித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் வீரகுமாரன் விலாசக் கூத்து புலோலி கிழக்கு நீலவாசா-திரு. குலசிங்கம் அவர்களின் வீட்டில் 1996ல் யாழ் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் பரீட்சைத் தேவைக்காக ஆடப்பட்டது. இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நா.ஞானகுமாரன், கலாநிதி. குழந்தை. ம. சண்முகலிங்கம், திரு. பா. அகிலன், நவதர்சினி, சிவரஞ்சினி, கலாநிதி. த. கலாமணி ஆகியோர் முக்கிய பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். கூத்தர்களில் ஒருவராக நானும் ஆடினேன். திரு. சிவக்கொழுந்து அவர்கள் "சிந்தாமணி" பாத்திரம் ஏற்று ஆடியது அனைவராலும் பாராட்டப்பட்டது. நல்ல நடிகன் ஒருவரை தரிசித்தோம் என்று கலாநிதி. குழந்தை. ம. சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

**நேர்முகம் தந்தோர்**

1) திரு. S. சிவப்பிரகாசம்
2) திரு. S. இராஜகோபால்
3) திரு. K. சிவக்கொழுந்து
4) திருமதி. B. கமலாம்பிகை
5) திரு. S. கந்தசாமி
6) திரு. K. அமரசிங்கம்
7) திரு. K.S. ஆனந்தன்
8) திரு. K. கணேசமூர்த்தி

********

**1658 இல் ஒல்லாந்தபாதிரியார் பருத்தித்துறைக்கு வந்த போது வரையப்பட்ட துறைமுகம், புளியமரம், சந்தைப்பகுதி என்பவற்றின் ஆவணப்படம்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு வாழ்வியலோடு கலந்த வடமராட்சி வடக்கு மண்ணின் கரகாட்டமும் இசைப்பாடல்களும்

பொலிகையூர் சு.க.சிந்துதாசன்
திரு. க. முருகதாஸ்
பொலிகண்டி

மரபு சார் செயல் நெறியிலிருந்து வழுவாத ஒரு வாழ்வியலை பண்பாட்டு வாழ்வியல் என்று சுருங்கக் கூறலாம். அவ்வாறானதொரு வாழ்வியல் எமது வடமராட்சி வடக்கு மண்ணின் சிறப்பையும் தனித்துவத்தையும் இன்றும் வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த வகையில் பல்வேறுபட்ட கலைப்பாரம்பரியங்கள் எம்மிலிருந்து பிரிந்து விட முடியாதபடி ஆழவேரோடியுள்ளது. அவ்வாறான பாரம்பரியக் கலைகளின் முக்கிய அலகுகளில் கரகாட்டமும் கரக இசைப்பாடல்களும் முக்கியத்துவம் பெறுவதோடு எமது மண்ணின் வாழ்வியலோடும் கலந்துறைகிறது.

கரகாட்டம் மற்றும் உடுக்கை,பறை இசைகளோடு பாடல்களும் சேர்ந்து ஒரு உன்னதமான கலை வெளிப்படுத்துகையை ஆன்மீகம் சார்ந்தும் சாராமலும் நிகழ்த்திவருகிறது. ஒப்பீட்டடிப்படையில் நவீனத்துவம் எமது வாழ்வியலின் அனைத்துக் கூறுகளையும் விழுங்கிவிட்ட சமகாலச்சூழலில் இக்கலைகளின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. ஆனாலும் அவற்றின் தார்ப்பரியத்தை நன்குணர்ந்து அவற்றின் மரிப்பு நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் வடமராட்சி வடக்கு மண்ணின் பல பிரதேசங்களில் இருந்தும் தனியாகவும் குழுக்களாகவும் இயங்கும் கலைஞர்கள் பாராட்டுதலுக்குரியவர்கள். என்றுமே எம்மிலிருந்து பிரிந்துவிட முடியாத உச்ச அம்சங்களைக் கொண்ட குறித்த கலைகளின் இருப்பு எல்லோர் நலனையும் நோக்கம் சார்ந்து உயர்த்தும் தன்மை கொண்டது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

## கரகாட்டம்

தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்றாகக் கரகாட்டம் விளங்குகின்றது. அதாவது தலையில் கரகம் வைத்து ஆடும் ஆட்டம் இதுவாகும். கரகம் என்பது ஒரு பானை வடிவக் கமண்டலத்தைக் குறித்து நிற்கின்றது. சங்க இலக்கியங்களில் கரகாட்டம் "குடக்கூத்து" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்தபடி சமநிலை பேணி இது ஆடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரிக்கப்பட்ட செம்பு அல்லது பித்தளைக் குடத்தை தலையில் வைத்துக் கொண்டு நையாண்டி மேள இசைக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாமல் பெண்கள் இவ்வாட்டத்தை ஆதிகாலத்தில் ஆடினார்கள். இந்தியாவிலே இன்றும் கரகாட்டத்திலே ஈடுபட்டு வரும் கலைஞர்களாக ரெட்டிப்பாளையம் தேன்மொழி, பொன்அமராவதி, கல்யாணி, R.K விசித்திரா, R.G.ஜெகதாம்பாள் போன்றோர் விளங்குகின்றனர்.

கரகம் என்ற வார்த்தைக்கு கமண்டலம், பூக்குடம், கும்பம், ஆலங்கட்டி , நீர், கங்கை, நீர்க்குடம் என்ற பல அர்த்தங்கள் உண்டு. கரகாட்டத்தில் மூன்று கிலோ எடையுள்ள செம்பினுள் மூன்று அல்லது நான்கு கிலோகிராம் மண்ணோ அரிசியோ இட்டு ஒரு ரூபாய் நாணயமும் வைத்து கரகச் செம்பு தயாரிக்கப்படும். செம்பின் வாய்ப் பகுதியை தேங்காயால் மூடுவதற்கென்றே கட்டை வைக்கப்படும். இதன் பின் “டோப்பா” எனப்படும் குடையை இதன் மேல் பொருத்தி வைப்பர். குடையின் மேலே கிளி, அன்னம்,புறா போன்ற தக்கைப் பறவை உருவம் வைக்கப்படும். இவ்வாறு அமைக்கப்படும் கரகம் ஆடப்படும் போது நையாண்டி மேளம், சிறிய உடுக்கை, பெரிய உடுக்கை, தட்டுக்குழல், செண்டை, பறை போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுவதோடு பல்வேறு பாடல்களும் இசைக்கப் படுவது வழமை.

**பயன்பாடு**

காற்றைப் பிடிக்கவும் கரகத்தடைக்கவும்
கட்டி வைத்தருள் புரியவும்
கரகந்தனை காற்று உருத்தி உடையாமலுங்
காப்பாற்றி அருள் புரியவும்.

இராகம்-மட்குடம்
குணங்குடியார் பாடற்கோவை

**கரகாட்ட வகைகள்**

கரகாட்டம் ஒரு தெய்வீகக் கலை. கிராமிய வழிபாட்டு முறைகளோடு கலந்த இந்தத் தொன்மைக்கலை தஞ்சாவூர் இராமநாதபுர மாவட்டங்களில் கரகச் செம்பு என்றும் மதுரை, திருநெல்வேலிப்பகுதிகளில் கரகாட்டம் என்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால் ஈழத்திருநாட்டில் பொதுவாக பல்வேறுபட்ட கரக வகைகளையும் கரகாட்டம் என்றே அழைப்பர். நாட்டார் வாழ்வியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக கருதப்படும் இக்கரகம் இரு பிரதான பிரிவுகளைக் கொண்டியங்குகின்றது.

*01.* சக்திக்கரகம்
*02.* ஆட்டக்கரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வவழிபாட்டுக்கு ஆடும் கரகம் அல்லது பக்தி கலந்து கோயில்களில் ஆடப்படும் கரகம் சக்திக்கரகம் எனப்படுகிறது. சக்தி வழிபாட்டுக்கும் கரகக்கலைக்கும் நிறைய தொடர்பு உண்டு. தமிழர் சமய வழிபாடுகளில் இயற்கையை முன்னிறுத்துவது இயல்பு. அவ்விதம் இயற்கைக்குத் தந்த முக்கியத்துவத்தை பெண்களுக்கும் வழங்கினான் ஆதித்தமிழன். நதி, மலை, இயற்கையின் அற்புதங்களுக்கு பெண்களின் பெயரையிட்டு மதிப்புச் செலுத்தியது தமிழர் பண்பாடு. இந்த வகையில் தான் சக்தி வழிபாடும் உதயமானது.

சக்தி வழிபாட்டில் அம்மனை சேவிக்க நீர் நிலையிலிருந்து குடத்தில் தண்ணீர் சுமந்து வரும் போது அருள் வந்தாடுவதுண்டு. இதுவே கரகக் கலையின் தொன்ம வடிவம். மழைத் தெய்வமான மாரியம்மன் வழிபாடு தொடர்பானதே கரகக் கலையென்று அறிஞர்கள் மதிப்பிடுகிறார்கள்.

பஞ்சம் ஏற்படல், கொள்ளை நோய் பரவுதல், மழை பெய்யாதிருத்தல் போன்ற குறைகள் நிலவும் போது இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டுகரகம் சுமந்து அம்மனை வழிபடுவது ஒரு சடங்கு. இது தவிர நேர்த்திக்காகவும் கரகமெடுக்கும் முறை பல பிரதேசங்களிலும் காணப்படுவதோடு எமது பிரதேச மக்கள் இம்முறையினையே அதிகம் கைக்கொள்கின்றனர். பொதுவாக நினைத்த ஒரு காரியம் நிறைவேறியமைக்காகவே அதிகம் இவ்வகைக் கரகம் எடுக்கப்படுகிறது.

தேவாங்க செட்டியார்கள் இனத்தைச் சேர்ந்த மக்கள் செளடாம்பிகை யென்ற அம்மன் தங்கள் தெய்வத்தை நீர் நிலைகளில் இருந்து கரகம் சுமந்து அழைத்து வந்து ஆலயங்களில் இருத்துவதை இன்றுவரை ஒரு வழிபாட்டு முறையாக வைத்துள்ளார்கள். அது போல எமது பிரதேசத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களிலும் மற்றும் சிறு(குலதெய்வ) ஆலயங்களிலும் வருடாவருடம் நேர்த்திக்காகவும் ஆனந்தத்துக்காகவும் இவ்வகையான கரக வழிபாட்டு முறைகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தெய்வீகசாரமுள்ள கரகம் சுமத்தலை சக்திக்கரகம் எனப் பெயரிட்டு அழைப்பதை இன்றும் காணமுடிகிறது. ஆனாலும் ஆலயங்களில் எடுக்கப்படும் கரகங்களினை நேர்த்திக்கரகம் என்றும் ஆனந்தக் கரகம் என்றும் அழைப்பது எமது பிரதேச வழமை.

சக்திக்கரக வழிபாட்டின் துணை நிகழ்வாக உருவானதே ஆட்டக்கரகம் ஆகும். இக்கலை கடந்த இருபது ஆண்டுகளில் பலத்த பின்னடைவையும் சந்தித்துள்ளது. ஆரம்பத்தில் பெண்களே இத் தெய்வீகக் கரகங்களை ஆடி வந்தார்கள். ஆனால் காலப்போக்கில் தெய்வீகக் கரகங்களை ஆண்களும் ஆட்டக்கரகங்களை பெண்களுமாய் ஆடத் தொடங்கினர். இந்நிலை இன்றுவரை தொடர்கிறது. ஆனால் ஆட்டக் கரகத்துக்கான வரையறைகள் அதிகம் இல்லை.

எமது பிரதேச ஆலயங்களில் நேர்த்திக் கரகம் ஆண்களால் எடுக்கப்படும் போது பெண்கள் பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்றவற்றை எடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத்தில் ஆண்களைக்கவரும் பொருட்டு ஆண்கள் பெண்வேடமிட்டு கரகமாடினர். தற்போது 12 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் ஆட்டக்கரகத்தில் பங்கெடுத்து வருகிறார்கள். சக்திக் கரகம், ஆட்டக்கரகம் போன்றவற்றின் போது பயன்படுத்தப்படுகின்ற கரகங்கள் பல்வேறு வகை சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. அவை தோண்டிக்கரகம், செம்புக்கரகம், பூக்கரகம், வேப்பிலைக்கரகம்(பத்திரிக்கரகம்) என்பனவாகும்.

மண்ணால் செய்யப்படுவது தோண்டிக்கரகம் என்றும் பித்தளையால் செய்யப்படுவது செம்புக்கரகம் என்றும் பல்வகை மலர்களைப் பயன்படுத்தி தயாரிப்பது பூக்கரகம் என்றும் வேப்பமிலைகளால் தயாரிப்பது வேப்பிலைக்கரகம் என்றும் அழைக்கப்படுகிறது.

கரகாட்டக் கலைக்கு அரங்கு பற்றிய வரையறை எதுவுமில்லை. கோயிலையொட்டி திறந்த வெளியில் கயிறுகளைக் கட்டி நடுவில் களம் அமைத்து இவ்வாட்டத்தையாடுவார்கள். தற்போது கோவில் வீதிகளிலும் போக்குவரத்துப் பாதைகளிலும் விழாக்களின் போது மேடைகளிலும் ஆடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆதியில் பல்வேறு ஜாதியினரும் இக்கலையில் பங்கேற்றாலும் தற்போது தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களே இக்கலையைக் பின்பற்றி வருகின்றனர். எமது மண்ணில் பாகுபாடற்ற ஒரு கலைப் பாரம்பரியம் நிலவி வருவது உலகின் கவனத்தைக் கோரி நிற்கிறது.

சாதாரண ஒரு கரகாட்டக் குழுவில் ஆட்டக்காரர் இருவரும் இசைக்கலைஞர்களும் சேர்ந்து இடம் பெறுவர். இவ்வாட்டமானது கரகாட்டத்தின் துணையாட்டமான குறவன் குறத்தி ஆட்டமென அழைக்கப்படுகிறது.

பல்வேறு விதங்களில் அலங்கரிக்கப்பட்ட ஆட்டக்காரர் தமது ஆட்டங்களை முறைப்படி மேற்கொள்வார்கள். முதலில் ஆடப்படுவது கலைமரியாதையாட்டம் ஆகும். தெய்வத்துக்கும் இசைக்கருவிகளுக்கும் மக்களுக்கும் வணக்கம் செய்வதே இதுவாகும்.

ஒண்ணாங்காட்டம், சிறிராமச்சந்திர ஆட்டம், ராஜபார்ட் ஆட்டம், சதுர வல்லி ஆட்டம், காவடியாட்டம், மகுடியாட்டம், கள்ளப்பார்ட் ஆட்டம், முளைக் கோட்டுக்கும்மி போன்ற ஆட்டங்கள் உண்டு.

தலையிலுள்ள கரகம் விழாமலும் ஒருவருக்கொருவர் இடித்துக் கொள்ளாமலும் ஆடுவர். இசைப்பாட்டுக்கு எற்ப ஆட்டத்தின் வேகம் அதிகரிக்கும் மூன்றாவது நிலை அதிவேக ஆட்டமாகும். இதன் போது வலது புறமாகச் சுழன்று ஆடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் இக்கலையில் ஈடுபடுவோர் தெய்வாம்சம் பொருந்தியவர்களாகவும் மரியாதைக்குரியவர்களாகவும் காணப்பட்டனர். பட்டுடுத்தி சதங்கை அணிந்து கரகம் சுமந்து கூடுதலாக அம்மன் ஆலயங்களில் இவ்வாட்டத்தையாடுவார்கள். அம்மனுக்கு மஞ்சள் நீருற்றி அபிஷேகம் செய்வது போல் கரகமாடுபவர்களுக்கு அபிஷேகம் செய்வார்கள். இம் முறைமை இப்போது எமது பிரதேசத்தில் இருந்து வருகிறது.

மொத்தத்தில் கரகாட்டம் என்ற தெய்வீகக் கலை பாரம்பரிய இசைக்கருவிகள் மற்றும் பாடல்களின் பின்னணியோடேயே இயங்கி வருகிறது. அந்த வகையில் இசைப்பாடல்களின் பங்கு மிகவும் இன்றியமையதாத ஒன்றாக விளங்குவதோடு ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாத தன்மை வாய்ந்ததாகவும் காணப்படுகிறது.

**இசைப்பாடல்கள்**

பொதுவாக கரகாட்டத்தின் போது இசைப்பாடல்கள் முக்கியமான தொன்றாக காணப்படுகிறது. இதில் ஈடுபடுபவர்கள் கரகாட்டக்குழுவில் இடம் பெறுவதோடு இசைக் கலைஞர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை கரகாட்டத்தின் போது பறை, உடுக்கு போன்ற வாத்தியங்களே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. காவடியாட்டத்தின் போது மட்டும் நையாண்டி மேளம் பயன்படுத்தப்படுகிறது. இதனை எமது பிரதேசத்தில் அமைந்துள்ள செல்வச்சந்நிதி ஆலயத்தில் இப்போதும் தரிசிக்கலாம். ஆனால் கரகாட்டத்தின் போது பறை, உடுக்கை போன்ற இரண்டு பாரம்பரிய வாத்தியங்களுமே பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு கரகாட்டத்தின் போது பறை, உடுக்கை இரண்டும் மாறிமாறிப் பயன்படுத்தப்படும். அதற்கேற்ப கரகாட்டம் இடம்பெறும். கரகாட்டத்தின் போது உடுக்கை கலைஞர்கள் தமது பாடல்களை கரகத் தேவைக்கு ஏற்ப பாடுவது வழமை. இப்பாடல்களில் முக்கியமாகப் பின்பற்றப்பட வேண்டியவை.

(i) காப்பு
(ii) உச்சாடனம்
(iii) காவியம்
(iv) தாலாட்டு
(v) கும்மி
(vi) வாழ்த்து
(vii) மங்களம் போன்றவையாகும்.

காப்பு என்பது பிள்ளையாருக்கு வணக்கம் செய்து பாடுகின்ற பாடல். இது கரகம் தலையில் ஏற்றமுன் பாடப்படுவது.

பூதலத்தில் யாவர்களும் பேராதரவாய் எந்நாளும்
மாதரசி யென்று வாழ்த்துகின்ற மாரியம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதரனார் சிறப்பான தாலாட்டை
காதலுட னோதக் கணபதியும் காப்பதாமே.
(இக்காப்பானது மாரியம்மன் தாலாட்டுப் பாடப்பட முன்னர் பாடுவது வழமை. அது போல கரகப்பாட்டுக்காரர்களும் இதைப் பின்பற்றி வருகின்றனர்.)

பிள்ளையாருக்கு வணக்கம் செய்த பின் கரகாட்டக்காரருக்கு அலகு சங்கலி போட்டு முள்ளுக்குற்றும் போது உச்சாடனம் சொல்லப்படும். இவ்வுச்சாடனம் ஓதப்படும் போது உடுக்கை ஒற்றையடியில் வாசிக்கப்படும். இது மிக வேகமாகச் சொல்லப்படும் ஒரு மந்திரம் போல ஒவ்வொரு தெய்வத்துக்கும் இந்த உச்சாடனம் உண்டு. இது அகவல் வடிவிலமைந்தது பெரும்பாலும் முத்துமாரியம்மன் உச்சாடனமே கலையேற்றும் போது சொல்லப்படுவது வழமை. ஒரு உச்சாடனம் சொல்லி முழுமை பெறுவதற்குள் கரகாட்டக்காரருக்கு கலையேறிவிடுவது வழமை.

## விநாயகரகவல்

சீதக்கபளச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வண்ண மருகில் வளர்தழ கெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாவிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
.............................................
.............................................
.............................................
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் டன்னை
நெஞ்சக் கருத்தில் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தைனெ யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

## முத்துமாரியம்மன் அகவல்

ஓம் பூவினிய மாதே கேளாய்
உன் பொன்னடி காண வந்தேன்
மேவிய மாரியம்மா
திருவுளம் பொறுத்தொண்ணாதோ?
ஆதியாய் அரசன் முடியாய்
அண்டப் பகிரண்டமாய்
ஐம்பத்தோர் அட்சரமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியாய் வெட்ட வெளிச்சமாய்
சொரூபமாய் நின்றவளே;
ஊத்துக் காட்டமர்ந்தவளே;
உதிர பலி கொண்டவளே;
சக்தி நூற்றியிருபதும் சமயம் பதினாறும்
மிச்சம் மிச்சமாய் மேலாயிருந்தவளே!
கெந்தம் பர்வதம் சடாமுடியும்
மானொருகை மழுவொருகை
சங்கொருகை சக்கரமொருகை
பச்சைத் திருவில்லும்
பறந்ததோர் வேப்பிலையும்
இச்சையுடன் சென்று
ஏகவரம் பெற்றவளே! ஆதிபராபரியே!
..............................................
..............................................

-மாரியம்மன் உற்பத்தி-

பொதுவாக கலையேறிய பின் உடுக்கையிசையோடு விநாயகர் பாடல்களைப் பாடுவார்கள். இதன் போது பாட்டுக்காரர்கள் ஒருவர் மாறி ஒருவராகப் புதுப்புது அடிகளை குறித்த தெய்வத்தின் மீது பாடுவார்கள். இது பார்வையாளரையும் ஆடவைக்கும் மகிமை பொருந்தியது.

"பேளை வயிறுடைய பிள்ளையாரே! ஐயா
பெருச்சாலி வாகனனே பிள்ளையாரே!"

"கந்தனுக்கு முன் பிறந்த பிள்ளையாரே!- ஐயா
கணபதியே முன் நடவாய் பிள்ளையாரே!"

"ஒற்றைக் கொம்பு மால்மருகா பிள்ளையாரே! -ஐயா
உமையாள் திருமகனே பிள்ளையாரே!"

"கற்றைச் சடையணிந்த பிள்ளையாரே- ஐயா
கெங்காதரன் புத்திரனே பிள்ளையாரே."

(ஒற்றையடித் தாளம்)

தொடர்ந்து கரகம் தலையில் ஏற்றப்பட்டு ஆலய உள் வீதியை வலம் வரும் போது காவியம் பாடப்படும். இந்தக் காவியமானது இரண்டு வகைப்படும். அவை சின்னக் காவியம், பெரிய காவியம் என்பனவாகும். பெரும்பாலான பாட்டுக்காரர்கள் சின்னக்காவியத்தைப் பாடுவதையே வழமையாகக் கொண்டுள்ளனர். ஒரு சில பாட்டுக் காரர்கள் பெரிய காவியத்தையும் சிலர் வேறுபாடின்றி இரண்டு வகைக் காவியங்களையும் கலந்து பாடுகின்ற தன்மையும் காணப்படுகிறது. இவ் வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு காவியங்களும் மாரியம்மன் உற்பத்தி என்ற சிறு கைநூலில் இடம்பெற்றுள்ளது.

அரியும் கிரியும்ஆன திரு சூலி
ஆதியுடனே நடன மாடும் மகமாரி
கரியவளர் தங்கையென வந்த திரிசூலி
காரணி பதம் பணிந்தே தமிழ் வளர்த்த
உரியதொரு கரிமுகனைக் கூடவாயீறும்
ஒதரிய நற்கிருபை தாருமென் தாயே.
-பெரிய காவியம்-

இக் காவியமானது முதற்காவியமாகப் பாடப்படும் தொடர்ந்து ஏனைய காவியங்கள் பாடப்படும்.

"ஆச்சி நீ அபிராமி யாகவந்தாயே
ஐயனொடு பரிகலஞ் சூழ வந்தாயே
பேச்சி நீ பெருமாளுடன் பிறந்தாயே
பேரான மீனாட்சி யாகவந்தாயே"
-சின்னக் காவியம்/ மாரியம்மன் உற்பத்தி-

தெந்தெனத நாதெனத நாதெனத நானம்
தெனநாதி நாதெந்தி நாதெந்தி நானம்
(இரட்டையடித் தாளம்)

"காத்து நீ சேரி கனல் மாற்ற வந்தாயே
கட்டாரி சொட்டையம் கையம்பு சவளம்
மாத்திரைக் கோலுடன் சாற்றுப்பரி வட்டம்
மத்தள முடுக்கை தவில் முக்க வருதூத"

"நாற்றிசைக ளெங்கணும் கீர்த்தியொலி பாட
நான்மறைக ளோதவெண் சாமரமிரட்ட
போற்றி செய்தே புஸ்ப மாரி மழைபொழிய வரு
பூலோக ராசனே! ஈஸ்வரி பாலனே!"

தொடர்ந்து பரிவாரத் தெய்வங்கள் மீது பாடல்கள் பாடப்படும். கரகம் எத்தெய்வத்தைத் தரிசனம் செய்கிறதோ அத் தெய்வத்தின் மீது பாடல்கள் பாடப்படும் வெவ்வேறு மெட்டுக்களில் கரகம் ஆடக் கூடிய வகையிலே பாடல்களை பாட்டுக்காரர் முன்வைப்பார். இதன் போது அவர்கள் பாடும் பாடல்கள் பெரும்பாலும் சூழ்நிலையை வெளிப்படுத்தும் பாடல்களாகவே அமையும். தொடர்ந்து ஆலய உள் வீதியின் வடக்கு பகுதிக்கு வந்ததும் மாரியம்மன் தாலாட்டு பாடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாரி மக மாரி மணி மந்திர சேகரியே
ஆதியுமையானவளே ஆஸ்தான மாரியம்மா"

"பத்திரிக்கு உள்ளிருக்கும் பாவனையை யாரறிவார்
வேப்பிலைக்கு உள்ளிருக்கும் வித்தைகளை யாரறிவார்"

"அனலிற் பிறந்தவளே! அரிராமன் தங்கையம்மா
நெருப்பிற் பிறந்தவளே! நீலவண்ணன் தங்கையம்மா.
-மாரியம்மன் தாலாட்டு-

கரகம் ஆலய வெளி வீதிக்கு வந்ததும் கும்மிப்பாட்டு ஆரம்பிக்கும். கும்மி பல்வகைப்பட்ட பாடல்களைக் கொண்டது. திறமை வாய்ந்த பல பாட்டுக்காரர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப புதிய கும்மிகளையும் உருவாக்கிப் பாடுகின்ற நிலைமையையும் காணக் கூடியதாகவுள்ளது. ஆனாலும் பொதுவாக காத்தவராயன் கும்மி, முருகன் கும்மி, மாரியம்மன் கும்மி போன்றவற்றையே அதிகமாகப் பாடுவது வழமை.

கரகாட்டத்தின் போது கரகாட்டக்காரர், பாட்டுக்காரர்,இரசிகர் என அனைவரையும் உணர்வின் உச்ச நிலைக்கு கொண்டு செல்கின்ற ஒரு பாடல் வகையாக இந்தக் கும்மிப் பாடல்கள் அமைந்துள்ளன. இக் கும்மியின் துரித நிலையில் கரகங்கள் சுழன்றாடுவதைக் கட்டுப்படுத்தவே முடியாது. இது கர காட்டத்தின் மூன்றாவது ஆட்ட நிலையெனக் குறிப்பிடப்படுகிறது.

கும்மிகளில் அதிகம் காத்தவராயன் கும்மியே பாடப்படுவது வழமை. சில கும்மிகள் வேடிக்கையாகவும் மனதைக் கவரும் வகையிலும் பாடப்பட்டு வருகின்றன.

"நந்தவனம் தனைக் காத்தாண்டி -அவன்
நாலாறு பெண்களைப் பார்த்தாண்டி
அந்த மொடு சிவன் புத்திரன் காத்தானை
நேசித்து பூசித்துக் கும்மியடி.
(காத்தவராயன் கும்மி)

"கூந்தலுக்கே மலர் மாலைகட்டி-நல்ல
கோலவர்ணப் பட்டுச் சேலைகட்டி
வாருங்கள் பெண்களே கும்மியடிப்போம்
மாரியம்மனுடைய பேராலே."
-மாரியம்மன் கும்மி-

"முத்தமிழ் பித்தலும் முருகனடி -அவன்
மேலான வேங்கடன் மருகனடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமி உமையாளின் பிள்ளையடி- அவன்
ஓங்கார நாதத்தின் கிள்ளையடி”
-முருகன் கும்மி-

மூளும் பகைதனை வேரோடு மாய்த்திட
முந்தி வந்தோ மென்று பாடுங்கடி
நாளும் நற்பண்புகள் நம்மில் நிலைத்திட
நாடி வந்தோமென்று பாடுங்கடி”
-பொதுக் கும்மி-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஊரைச் சுற்றி வருகின்ற போது எதிர்ப்படும் ஒவ்வொரு ஆலயத்திலும் கரகமாடும் அதன் போது பொருத்தமான பாடல்கள் பல்வேறு மெட்டுக்களில் பாடப்படும். இது தவிர கரகம் தாளத்துக்கு ஏற்ப நடையில் ஊரைச் சுற்றி வரும் போது காத்தவராயன் கூத்துப் பாடல்களில் வரும் மெட்டுக்களைப் பயன்படுத்தி பாடல்கள் பாடப்படும். ஈற்றில் கரகம் இறக்கப்படும் போது காவிய வாழ்த்தும் கரகம் இறக்கப்பட்ட பின்பு மங்களமும் பாடி கரகாட்டத்தை நிறைவு செய்வார்கள்.

இந்தவகையில் இக்கலைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து இயங்கும் ஆலயங்கள், ஊர்களின் விபரங்கள் சில வருமாறு. வல்வை முத்துமாரியம்மன், வேவிலந்தை முத்துமாரியம்மன், நெல்லண்டை பத்திரகாளி அம்மன், முத்துமாரி அம்மன், கும்மியம்மன், அரசம் புலம் மாதா, பொலிகண்டி பத்திரகாளியம்மன், தொண்டைமானாறு வீரமாகாளியம்மன், சந்நிதி முருகன், நெடியகாட்டுப் பிள்ளையார், உப்புக் கிணற்றடிப் பிள்ளையார், கந்தவனக்கடவை, சல்லிப் பிள்ளையார், நீர்வளைப்பிள்ளையார், மடத்துவாசற் பிள்ளையார், தூவாப்பிள்ளையார், இன்பர்சிட்டிப் பிள்ளையார், எரிஞ்சம்மன், சுப்பர்மடம் முனியப்பர், கோட்டு வாசல் அம்மன், மந்திகை அம்மன்,தும்பளை முருகன், பண்டாரியம்மன்................

இக் கோயில்களுடன் தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், இன்பர்சிட்டி,சுப்பர் மடம்,கற்கோவளம், பருத்தித்துறை..... போன்ற பல பிரதேசங்களிலும் கரகாட்டக்காரர்களும் இசைப் பாடற் கலைஞர்களும் இக் கலையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு கலைப் பாரம்பரியம் வடமராட்சி வடக்கு மண்ணின் பண்பாட்டுவாழ்வியலோடு கலந்துறைவதானது எமது மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்த்து நிற்கிறது.

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கால மாமி இருள் தனிலே........

கலைப்பரிதி இ.சச்சிதானந்தம்
'ஆனந்தன்'
தும்பளை.

**ஆ**ரிய மாலை மேல் ஆசை கொண்டு காத்தான்
அம்பிகை காமாட்சி தன்னைக் கண்டு
காரிய மாக வரங்கள் பெற்று- எங்கள்
காத்தான் வாறதைப் பாருங்கெடி.....

ஈழத்தமிழர்களின் கூத்து மரபுகளில் வடமோடி,தென்மோடி,வடபாங்கு, தென்பாங்கு,நாட்டை, விலாசம் போன்ற பலதரப்பட்ட கூத்துக்கள் களரி கண்டு வருகின்றன.

இருந்தாலும் மரபுரீதியாக ஈழத்தமிழர்களிடை காத்தவராயன் சிந்துநடைக் கூத்து காலம் காலமாக எல்லாப் பிரதேச மக்களாலும் பெரிதும் விருப்பத்துடன் பக்தி பூர்வமாக சமய ஆசாரத்துடன் மேடை ஏற்றப்பட்டு வருகின்றதொன்றாகும். குறிப்பாக வட பகுதி மக்களிடையே இதன் சிறப்பு இன்றும் திருவிழாக் கண்டு வருகின்றது.

பூமா தேவியின் வேண்டுதலுக்கிணங்க தங்கையான மாரி அம்மன் பூமியில் பாரம் குறைப்பதற்காக ஆங்காரம் கொண்ட அகோர மாரியாகப் புறப்பட்டு, சிவனிடம் பல சக்திகளையும் கொண்ட கண்ட சுர மாலையும் பெற்று வைசூரன் பட்டணத்தில் பலவித நோய்களைப் பரப்பி ஆணவத்தையும் அழிக்கின்றாள்.

மாரியின் கோபத்தை மேலும் வளர விட்டால் கைலாசம், வைகுந்தம், சத்திய லோகங்களையும் தகனம் செய்து விடுவாள் என்பதனை உணர்ந்த சிவனும், மகாவிஷ்ணுவும் மாரிக்குப் பிள்ளை இல்லை எனச் சாபமிடுகின்றனர். ஏன் என்றால் இதை மாரி எப்படியாவது அறிவாள். அறிந்ததும் தனக்கு ஒரு பிள்ளை வேண்டும் என வருவாள் அவளுக்கு ஒரு குழந்தை கிடைக்கச் செய்தால் அதன் மேல் கொண்ட பாசத்தல் கோபம் தணிந்து விடுவாள் என்பதே சிவனின் நோக்கம்.

"நரசிம்மனின் கோபம் தணிய பிரகலாதன்
அவர் மடியில் அமர்ந்தது போல்"

நாரதர் மூலம் தான் பெற்ற சாபத்தை மாரி அறிந்தாள்.

புத்தி வலிமையினால் பெற்றவளே தாயே -ஒரு
புத்திரனைக் கேளேனம்மா பெற்றவளே தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நாரதர் கூற மாரி தனக்கொரு புத்திரன் வேண்டும் என்று சிவபெருமானை வேண்டி மகாதவம் புரிகின்றாள். மாரியின் தவத்தில் மனம் மகிழ்ந்த சிவன் தான் ஒரு ஆண்மானாகவும் மகாவிஷ்ணு ஒரு பெண் மானாகவும் உருமாறி வந்து மாரியின் தவசின் முன்னால் ஓர் ஆண் மகவை ஈன்று போய் விடுகின்றார்கள்.

"கூவா, கூவா, கூவா என்றெல்லவோ- அங்கு
கூச்சலிட்டோ குழந்தை தானழுமாம்".

குழந்தை அழும் சத்தம் கேட்ட மாரியானவள் தன் சினம் தணிந்து கோபம் தீர்ந்து அந்தக் குழந்தையை வாரி எடுத்து மடி மேல் வைத்து தாலாட்டும் போது ஒரு நாள் கங்கை பெருக்கெடுத்து ஊழிக்காலம் போல் உலகை அழிக்க வருகின்றது.

"ஆணையிட்டேன் கெங்கா நில்லும் நில்லும்- எந்தன்
அம்மா மேலே சும்மா தீண்டாதே ............"

எனப் பாடி உலகத்தையும், தாயாரையும் அந்த அழிவில் நின்று காத்தபடியால் அந்தக் குழந்தைக்கு மாரியானவள் "காத்தான்" என பெயர் சூட்டுகின்றாள்.

பாட்டனார் பாடசாலை சென்று படித்த காத்தான், ஆரிய மன்னனின் ஒரே மகளான ஆரியமாலாவைக் கண்டு காதல் கொள்கின்றான். அவளை மணப்பதற்கு தாயார் மகனுக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கின்றாள்.

தாயின் சொல் தட்டாமல் பல்வேறு தடைகளையும் தாண்டி ஈற்றில் கழு மரத்தில் ஏறி அரச குமாரியான ஆரிய மாலாவை மணம் முடிப்பதைக் கருவாகக் கொண்டது இந்த காத்தான் கூத்து.

நாட்டார் வழக்கில் உள்ள சம்பவங்கள் போன்ற ஒரு கதை கூத்தானதற்கு இது சிறந்ததோர் உதாரணமாகும்.

ஆதியில் ஒருபக்கப் பார்வையாளரைக் கொண்ட, உயர்த்தப்பட்ட மேடையில் விளையாடப்பட்ட கூத்தானது பிற்காலங்களில் ஈழம் வந்து சேர்ந்த பார்ஸி நாடக முறையின் செல்வாக்கினைப் பெற்று திரைச்சீலைகள், காண்பியங்கள் என்பனவற்றைத் தனதாக்கிக் கொண்டது.

துள்ளல் ஓசையுடன் வரும் இந்த சிந்து நடைப்பாடல்கள், இந்த நாடகத்திற்கு ஒரு துள்ளல் ஆடலைக் கொடுத்து கூத்தாக்கிக் கொண்டன.

ஆர்மோனியம், உடுக்கு, தாளம் என்பனவற்றைப் பின்னணி வாத்தியங்களாகக் கொண்ட காத்தான் கூத்து மக்களின் வாழ்க்கையுடன் இறுக்கமாக ஒன்றிப்போனதற்குப் பல காரணங்கள் உள.

அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கை முதல் காரணமாக இருக்கின்றது. நோய் நொடி வராமலிருப்பதற்கும், வந்த நோய்கள் தீர்ந்து போவதற்கும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை வரம் கிடைப்பதற்கும், தாம் தாம் விரும்பிக் கேட்ட வரங்கள் கிடைப்பதற்கும் காத்தான் கூத்தை விளையாடினால் கேட்ட வரம் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை மக்களிடம் உண்டு.

பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் முதலிடமாக நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்திலேயே அதிகளவு காத்தான் கூத்து விளையாடப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் முத்துமாரி அம்மன்,மாதனை கண்ணகை அம்மன், கற்கோவளம் கும்மி அம்மன் போன்ற ஆலயங்களில் பெரும் பாலும் காத்தான் கூத்து விளையாடப்பட்டு வருகின்றன.

இன்றும் கற்கோவளம் கும்மி அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு சித்திரா பௌர்ணமி தினத்திற்கும், பறுவத்திற்கும் அவ்வூர் மக்களால் காத்தான் கூத்து விளையாடப்பட்டு வருகின்றது.

கலை கலாசாரங்களையே தமது பண்பாடாகக்கருதும் யாழ் மண்ணில் ஒவ்வொரு பிரதேசமும் தனக்கே உரித்தான கலை வடிவங்கள் பலவற்றை தன்னகத்தே கருவுற்றுப் பிரசவித்து வருகின்றது.

இவைகள் அனைத்தும் அந்தக் கிராமத்தின் தனித்துவமான கலை பாரம்பரியத்தை அடையாளப்படுத்தி நிற்பதைக் காணலாம். கூத்துக்கள் மட்டுமல்லாமல் கரகம், காவடி, கும்மி, குட மூதல் தாலாட்டு, ஒப்பாரி, ஊஞ்சல், கோவில் பூசை முகப்பாடல்கள், விளையாட்டுப்பாடல்கள், வைபவப்பாடல்கள், கோலாட்டம், குதிரையாட்டம் போன்ற பலதரப்பட்ட கிராமியக் கலைகளும் இன்றும் உயிரோட்டமுள்ள நிகழ் கலையாக இருக்கின்றன.

இவைகள் கற்றவர் மட்டும் விழுங்கும் கற்பகக் கனியல்ல, மற்றவர் அறியா மாணிக்கமாக, வாய் மொழி முத்துக்களாக கிராமத்து மண்ணில் புதையுண்டு கிடக்கின்றன.

அரங்கு இன்றும் ஒரு கற்கை நெறியாக வளர்ந்து கொண்டு வருகின்றது. இந்த மட்டத்தில் இக் கற்கை நெறி மனிதர் அவர்களது சுக துக்கங்களையும் சீர்திருத்தம், வாழ்வியல் மேம்பாடு என்பனவற்றைத் தம்மகத்தே காவி நிற்கும் கலைகளை ஆய்வு செய்யாது, அணுகாது புறம் தள்ளிவிட முடியாது.

மரபுரீதியான அண்ணாவிமார்களால் இக் கலைகள் அவைக் காற்றுகைப்படுத்தி வருவதினால் இன்னமும் உயிர் காவி மூச்சுப் பிடித்து வாழ்ந்து வருகின்றன.

இன்றைய நெறியாளரின் புதிய சிந்தனைகளாலும், கூத்துக்கள் புத்தாக்கம் பெற்று ஆற்றுகைக்கு வருகின்றன.

நவீன வடிவம் பெற்று வரும், வளரும் கூத்துக்கள் இவற்றின் ஆணிவேரான பாரம்பரிய மண்ணில் ஓடிய பழைமையைத் தொலைத்து ஆட்டம் கண்டு விடுமோ என்ற நிலையில் பயம் உருவாகத்தான் செய்கின்றது.

காத்தான் எல்லாக் கிராம மக்களாலும் பெரிதும் விரும்பி ஆற்றுகைப் படுத்தப்பட்டு வரும் சிந்து மெட்டைக் கொண்ட காத்தவராயன் கூத்தானது இன்று தன் சிந்து நடையை இழந்து சினிமா மெட்டுக்கள் பல வற்றைச் சுவாசித்து உயிர் வாழ்கின்றது. இதனால் சிந்து மெட்டுக்களின் பாரம்பரிய வேர்கள் கருகிப் போய், சினிமா தழைத்து கூத்தின் வடிவம் மாறி விடும் ஒரு நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணளவாக முப்பத்திரண்டு (32) கதை மாந்தர்களையும், நாற்பத்தெட்டு (48) வரையிலான சிந்து நடைப் (மெட்டு) பாடல்களையுமுடைய காத்தவராயன் சிந்துநடைக் கூத்து ஒரு முழு இரவு ஆடப்பட்டு வரும் கூத்தாகும்.

இதை பத்து நிமிடம் தொடக்கம் முப்பது நிமிடம் வரையிலாகச் சுருக்கி, வளைத்து, உருட்டி அதன் கட்டமைப்பயையே மாற்றி வருவது வருந்தத்தக்க செயலுடன் விரும்பத் தக்கது மன்று.

காலத்தின் தேவைக்கேற்ப இதைச் சுருக்கிக் கொள்வதை நான் குறை கூறவில்லை. கூத்தின் வடிவம், அதன் கட்டமைப்பு பேணப் பட வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

மொத்தத்தில் ஓர் ஆரிய , திராவிட முரண்பாட்டைக் காவி நிற்கும் அக் கூத்தானது முற்பகுதி புராணக்கதை சார்ந்ததாகவும், ஆதி காத்தான் வருகைக்குப் பின்னதாக ஒரு சமூக சீர்திருத்தத்திற்குக் களம் அமைத்துத் தந்து செல்வதையும் காணலாம்.

திராவிட காலத் தெய்வங்களான மாரி அம்மன், காத்தான் போன்ற சிறு தெய்வங்கள் மேம்படுத்தப்பட்டும், சிவபெருமான், மகாவிஷ்ணு, மகா இலட்சுமி போன்ற தெய்வங்கள் தாழ்த்தப்படுவதையும், வசை கூறப்படுவதையும் இதில் காணலாம்.

**மாரி**

அத்த மதம் அத்தாருக்குப் பித்தம் பித்தம் - அங்கே
அதி வெறியோ அத்தாருக்குக் கொள்ளுறது.
கஞ்சாத்தின்ற அத்தாருக்கு வெறி அல்லவோ- அங்கே
கனவெறியோ அத்தாருக்கு கொள்ளுறதே.
அபின் தின்ற அத்தாருக்கு வெறி அல்லவோ- அங்கே
அதிவெறியோ அத்தாருக்குக் கொள்ளுறதே.....

என்ற பாடல் மூலம் மாரி சிவனையும்

மழைக்கால மாமி இருள் தனிலே- அம்மா
மார்பளவோ சேற்றுத்தண்ணீரிலே
கணைக்காலின் மேல் மாமி சேலை கட்டி
காதவழி தூரம் போவாவெணை
சேலை எல்லோ மாமியவ சிணிநாற்றம்
அவ சிற்றுடம்போ அம்மா புண்நாற்றம்
ஆடை எல்லோ மாமியற்கு அழல் நாற்றம்
அங்கே அண்டலிக்க அம்மா கூடுதில்லை.....

என்ற பாடல் மூலம் காத்தான் மகா இலட்சுமியையும்,

உறியில் வெண்ணை அம்மான் தான்திருடி
அவர் உரலோடை அம்மான் கட்டும்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தில் வெண்ணை அம்மான் தான் திருடி- அவர்
மத்தாலே கொண்ணர் அடியும் பட்டார்.

என்ற பாடல் மூலம் காத்தான் விஷ்ணுவையும் இகழ்ந்துரைப்பதைக் காணலாம்.

இறுதியாக திராவிடரைத் தண்டிக்கும் கழு மரத்தை அழித்து, ஆரிய மன்னனை வென்று அந்நாட்டு இளவரசியான ஆரியமாலாவைத் திருமணம் செய்து திராவிட வம்சத்தின் பெருமையையும் , புகழையும் உலகிற்குக் காட்டுவதாக இக் கூத்து அமைந்திருப்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். திருஞானசம்பந்தர், அப்பர் காலத்தில் நடந்த சைவ, சமண யுத்தத்தை இங்கு நினைவு கூரலாம்.

ஆதிகாத்தான் வருகைக்குப் பின் காத்தவராயன் கூத்து ஒரு சமூக சீர்திருத்தக் களமாக விரிந்து செல்வதைப் பார்ப்போம்.

பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் அவர்களுக்குரிய மனித நிலையில் நின்று பார்த்தால் , அங்கு செய்யப்படும் சீர் திருத்தங்கள் எமக்காகவே என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மந்திர, தந்திர மாயத்தால் மக்கள் வாழ்வாரத்தைச் சீர்கெடுத்து வந்த சின்னானை,தெய்வ சக்தியால் வென்று அவன் தீய குணத்தை அழித்து, அவனை நண்பனாக்கி, எதிரியையும் மன்னித்து நண்பனாக ஏற்கும் நல்ல பண்பான பாங்கைத் தாங்கி நிற்கின்றது அந்தப் பாத்திரங்களும் காட்சியும்

தாயின் கட்டளைப்படி சம்மங்கித் தேவடியாள் வீடு சென்ற காத்தான், பல குடும்பங்களைச் சின்னாபின்னப்படுத்திய விபச்சாரத்தை ஒழித்து அதன் அடையாளமாக அவளின் வீட்டுச் சாவியைத் தாயாரிடம் கொடுக்கின்றான். இதன் மூலம் விபச்சாரம் என்னும் சமூகச் சீர்கேடு அழிக்கப்படுவதைக் காணலாம்.

அடுத்துத் தாயின் ஆணைப்படி சாராயப்பூதி வீடு சென்று சாராய, மதுபானக்கலசங்களை உடைத்து மதுபானம் விற்காமல் செய்து ஒரு சீர்திருத்தத்தை உருவாக்குகின்றான்.

இந்தக் காட்சியின் பின்னால் வரும் பறை சாற்றுபவன் குடிப்பதாகவும், குடித்து விட்டு மனைவியுடன் சண்டை செய்வதாகவும் வரும் நடிப்பைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் காத்தவராயன் கூத்தின் உயிர்த்துடிப்பை நாம் புரிந்து கொண்டதாக இருக்கும்.

அடுத்து வண்ணார நல்லி வீடு சென்ற காத்தான் அவளிடம் தண்ணீர் கேட்கின்றான். “நாங்கள் தண்ணீர் தரக்கூடாத சாதி” என்று நல்லி கூற “ நானும் உங்கள் சாதிதான்” எனக் கூறித் தண்ணீர் குடித்து உணவு உட்கொண்டு துறைக்குச் சென்று துணி தோய்த்து ‘ஒன்றே குலம்’ என்ற சமத்துவத்தை எங்கள் கடவுளான காத்தலிங்க சாமி அன்றே சொல்லி வைத்ததை இந்தக் கூத்து எமக்கு உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

ஆனால் தேவடியாளை மானபங்கப்படுத்துவதும், சாராயப்பூதியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியைப் பிடிப்பதும், வண்ணார நல்லியின் மண்டையை உடைப்பதும் மிகையான நடிப்பாக வந்து புகுந்து கொண்டதேன்? புரிய வில்லை, புரிந்து கொள்ள வேண்டும்.

எங்கள் குல தெய்வம் இப்படியான தீய காரியங்களைச் செய்வாரா? என்பதை நாம் சிந்தித்து, கூத்தின் சாராம்சம் கெடாமல் நெறிப்படுத்த வேண்டியது இன்றைய அண்ணாவிமாரின் கடமையாகும்.

"பீசுவேட்டி நானுடுத்து-ஒரு
பீத்தல் சால்வை தோளில் போட்டார் டாபர் மாமா
தாசிகளுக்கு தூசுதுடைக்கும் டாபர் மாமா"

என்ற பாடல் வரிகள் இன்று

"தாசிகளுக்கு சோப்புப்போடும் டாபர் மாமா....
ஓடாத வாச்சுக்கட்டி
ஒற்றைக் கண்ணில் கண்ணாடியும் டாபர் மாமா...."

என மருவியது போல் வேண்டாத கால வழுக்கள் சுமந்த பாடல்களும், காட்சிகளும் எப்படியோ கூத்தினுள் புகுந்து கொண்டன. இதைக் கவனித்து தவிர்க்க வேண்டிய கடமை எம்மைச் சாரும்.

சற்றேளு கன்னிகளிடம் தாயாரால் அனுப்பப்பட்ட காத்தான் அவர்களின் அழகில் மயங்கி ஆரியமாலாவை மறந்து விட வில்லை. அந்தக் கன்னிகளை ஒரு கரிக்குருவியாகவே பார்க்கின்றார். கழு மரத்தின் வேதனையும், வலியும் கூட அவன் காதலை கவ்விக் கொள்ள இல்லை. 'காதலர்கள் தோற்றாலும் காதல் தோற்பதில்லை' என்பதைச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டியதுடன் தாய் சொல்லைத் தட்டாத பிள்ளையாகக் கூத்து முழுவதும் வாழ்ந்து காட்டியுள்ளார்.

இத்தகைய பண்பாடும் சிறப்பும் மிக்க தொரு கூத்தாகவும், திராவிட தெய்வங்களின் உயிர்துடிப்பும் உள்ளதாக இக் கூத்து அமைந்தபடியால் தான் இன்றும் தமிழர்கள் மத்தியில் நிலைத்து நிற்கின்றது.

எங்கள் குல தெய்வமாக மாரி அம்மனையும், காத்தலிங்க சாமியையும் நாம் வணங்குவது உண்மையானால் அவர்களால் சொல்லப்பட்ட சீர் திருத்தங்களை எங்கள் வாழ் நாளில் கைக் கொள்ள வேண்டும்.

இதைப் பற்றி விரிவாக எழுத முயன்றால் இதுவே ஒரு புத்தகமாகி விடும். தொழில்நுட்ப யுகத்திற்குள் இயந்திர மயமாகிப் போயுள்ள மனித இனத்தை மீட்டெடுக்கும் வல்லமை இத்தகைய கலைகளுக்குத்தான் அதிகம் உண்டு. மனித குலம் வாழும் வரை இக்கலைகள் காக்கப்பட வேண்டிய தேவை இருப்பதால் இது என்றும் வாழும் கலையாக இருக்க வேண்டும்.

எனவே அறிந்தளவில் காத்தவராயன் கூத்தை அதன் தன்மை கெடாமல் மரபு காக்க வேண்டியது இன்றைய நெறியாளர்கள், அண்ணாவிமார்களின் பெரும் பொறுப்பாக உள்ளதெனக் கேட்டுக் கொண்டு நன்றியுடன் அமைகின்றேன்.

நன்றி.

********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கோவள பிரதேச பெண்களின் கும்மி அடித்தல் வழிபாட்டு முறையும் கும்பி அம்மன் வழிபாடும்

திரு. பா. இரகுவரன்
ஆசிரியர்,
யா/ஹாட்லிக்கல்லூரி.

கற்கோவளம் கிராமமானது பருத்தித்துறை நகரில் தென்கிழக்காக ஏறத்தாழ இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. தும்பளைக் கிராமத்துக்கு (தெற்காக)அடுத்துள்ள கிராமம் கற்கோவளம் ஆகும். கரைவலை மீன்பிடித்தல் இக் கிராமத்தின் பிரதான தொழிலாக உள்ளது. கல்வி கற்று பல்வேறு உயர் தொழில்களிலும் இக் கிராமத்தவர் ஈடுபட்டு வருகின்றனர்.

வல்லிபுர ஆழ்வார் கோயிலின் தோற்றத்துடன் தொடர்புள்ள கர்ண பரம்பரையில் இடம் பெறும் கிராமம் கற்கோவளமாகும். வல்லிபுர ஆழ்வார் பக்தர்களான இவர்கள் இக்கோயிலின் செயற்பாட்டில் முக்கிய பங்களிப்பு செய்து வருகின்றனர். புகழ் பெற்ற வல்லிபுர கோயிலின் சமுத்திர தீர்த்தமும் கற்கோவளம் கடற்கரையில் தான் நடைபெற்று வருகின்றது.

இக் கிராமத்தின் தீர்த்தக் கடற் கரையானது வெள்ளை மணலும், மணல் கும்பிகளும் வாவிகளும் கொண்ட அழகிய பிரதேசமாகும். இக் கிராமத்திற்கும் கடற்கரைக்கும் இடையில் பரந்த பச்சைப் புல்வெளி காணப்படுகின்றது. இவ்விடத்தில் புகழ்பெற்ற காலை மீன் சந்தையும் கூடுகின்றது. மாரி காலத்தில் வாவிகளில் இறால் மீன் பிடிப்பு சிறப்பாக நடைபெறும்.கிருஷ்ண பக்தர்களைக் கொண்ட இக் கிராமத்தில் பல கோயில்கள் காணப்படுகின்றன. பிள்ளையார், முருகன், அம்மன், காத்தவராயன், ஐயன், கிருஷ்ணன், ஈஸ்வரி, விறுமர், பேச்சி... போன்ற கோயில்கள் முக்கியமானவை.

தாலாட்டு, ஒப்பாரி, பூப்பூனிதநீராட்டுப்பாடல்கள், உடுக்கடி பாடல்கள், அம்மா(மீன்பிடித்தொழிற்பாடல்) மற்றும் கூத்துப் பாடல்கள் (காத்தவராயன் கூத்து,இசைநாடகம்) என பல்வேறுபட்ட கலைமரபுகளும் அவற்றின் பாடல்களுடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இக் கிராமத்தில் பேச்சி கோயிலும் அதன் பேச்சி மடையும் அங்கு நடைபெறும் கும்மியடித்தலும் பிரபல்யமும் அதிமுக்கியமும் கொண்டன. கற்கோவளம் கும்மி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் பேச்சி கோயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. சித்திராபௌர்ணமியை ஒட்டிய 10 நாட்களும், நவராத்திரியுடனான 10 நாட்களும் இங்கு பெண்கள் கும்மியடிப்பர். சிறு பெண்கள் முதல் வயதான மூதாட்டிகள் வரை வட்டமாக அசைந்து கும்மியடித்துக் பாடுவது பரவசம் தரும் நிகழ்வாகக் காணப்படுகின்றது.

இந் நிகழ்வில் பாடல்கள் மூலமும் உடலை குனிந்து, நிமிர்ந்து கைதட்டுவதன் மூலமாகவும் கடவுளை வழிபடும் ஒரு சிறந்த மார்க்கமாகக் கும்மியடித்தல் விளங்கி வருகின்றது. கும்மிப் பாடல்கள், குறித்த தெய்வங்களின் சிறப்புகளையும் வரலாறுகளையும் (வரலாற்றுப்பகுதிகளையும்) கூறுகின்ற ஒருவகை "கதைப்பாடல்"வடிவங்களாகவே அமைந்துள்ளன. சித்திரா பௌர்ணமி இரவில் 'காத்தவராயன் கூத்து கும்மி' அம்மன் மைதானத்தில் நிகழும்.

1989ம் ஆண்டிலிருந்து அவ்வப்போது கற்கோவளம் சென்று அங்கு கோயில்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அவதானித்து வருகிறேன். அவ்வேளை 'அன்னப்பிள்ளை' என்ற மூதாட்டியின் நேர்த்தியான கும்மியடிப்பையும், தங்கக் குரல் கொண்டு கும்மிப் பாடலைப்பாடி தலைமை தாங்கி வழி நடத்துதலையும் கண்டு பரவசம் கொள்வேன். இவர் கும்மிப் பாடலின் ஒரு வரியைக் கும்மியடித்துப் பாட மற்றவர்கள் பிற்பாட்டாக அவ்வரிகளை பாடிய படி கும்மியடிப்பர்.

கும்மி என்பது "கும்முதல்" என்ற சொல்லில் இருந்து தோன்றியதாகக் கூறப்படுகிறது. கும்முதல் என்பதன் கருத்து கைகுவித்தடித்தல் என்பதாகும். இதைவிட குழுமி என்ற சொல்லில் இருந்து கும்மி என்ற சொல் தோன்றியிருக்கலாம் எனவும் சிலர் கூறுகின்றனர்.(அறிஞர்.அ.இ.பரந்தாமனார்) ஆண்களுக்கான கும்மி 'ஒயிற்கும்மி' என்று அழைக்கப்படும் கற்கோவளத்தில் பெண்கள் மட்டுமே கும்மியடிப்பர். கும்மிக்கென்று தனித்த பாடல்வடிவம் இருந்தாலும் அந்தவடிவமில்லாத பாடல்களும் கும்மிப்பாடல்களாகப் பாடப்படுகின்றன. கால ஓட்டத்தில்கும்மிப் பாடல்கள் தமிழில் ஒரு வகையாகின. இது தனி இலக்கியப்பிரிவாக வளர்ந்துள்ளதை பின்வரும் நூல்களூடாக அறியலாம்.

1) அரிச்சந்திரன் கும்மி
2) வள்ளியம்மன் கும்மி
3) சிறுத்தொண்டநாயனார் கும்மி
4) பஞ்சபாண்டவர் வைகுந்தக் கும்மி

தமிழ்நாட்டில் குறித்த கும்மிப் பாடல் கதையில் வரும் பாத்திரங்களாக ஒப்பனை செய்து கும்மியடிக்கும் மரபு ஒரு சில இடங்களில் இருந்துள்ளது,

இதை தவிர கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் கும்மிப் பாடலூடாக வரலாறுகளை எழுதியுள்ளனர்.

உ+ம்: - ஞானஉபதேச பேரின்பக் கும்மி (கிறிஸ்தவம்)
நபியுள்ளக் காரணக் கும்மி (இஸ்லாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அரசியலை அடிப்படையாகக் கொண்ட கும்மிகளும்,விலைமாதர் சம்பந்தப்பட்ட கும்மிகளும் தமிழ் நாட்டில் உள்ளன.

தமிழ் நாட்டில் சண்டைக் கும்மி என்றொரு வகையுள்ளது. இது இன்பத்தை தருவதுடன் பெண்களுக்கு உடற்பயிற்சி முறைகளையும் விளக்கிக் காட்டுவதாக உள்ளது. வெவ்வேறு கும்மிப் பாடல்களில் அன்றாட வாழ்க்கையில் நிகழும் பல நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையன. அவற்றுள் சில நீரிறைத்தல், சோறு சமைத்தல், அரிசி அரைத்தல்.... முதலியவற்றை பாடல்களாகவும் ஆடல்களாகவும் விளக்கிக்காட்டுகின்றன.

தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர்இகே.குணசேகரன் கும்மியாட்ட அசைவுகள் பற்றி பின்வரும் தகவல்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"வலக்காலை முன்வைத்து குனிந்து இரு கைகளையும் கொட்டி, பின்னர் இடக் காலைப் பக்கவாட்டில் நகர்த்தி, வலக்காலைப் பின்னிழுத்து நிமிர்த்திக் கைகளை இயல்பு நிலைக்குக் கொணர்ந்து கும்மி ஆடுகின்றனர்.

கற்கோவளத்தில் பெண்கள் கும்மியடிக்கும் போது கைகளைப் பின்வருமாறு கொட்டுவர்.

1) மேலும் கீழும் கொட்டல்
2) இடம், வலமாக கொட்டல்

கை கொட்டும் போது முன் கைகளை நீட்டியும் மடக்கியும் கொட்டுகின்றனர். குனிந்தும், நிமிர்ந்தும் ஆடுவதுடன் முன்னர் சில வேலைகளில் வளைந்தும், திரும்பியும், துள்ளிக்குதித்தும் ஆடுவர்.பாட்டின் தாளங்களை அடிக்கடி மாற்றி கும்மியின் சுவையைப் பெருக்குவர். கற்கோவளக் கிராமமே திரண்டிருக்கும். பெண்கள் பார்வையாளராகவும் பங்காளராகவும் மாறி மாறி நிற்பர்.

அனுபவம் மிக்க பெண்கள் ஆடும்போது பொதுவாக கை, கால்களின் அசைவு பின்வருமாறே அதிகமாகக் கற்கோவளத்தில் காணப்படுகிறது. சாதாரண அசைவின் போது கால்களின் முழுப்பாதமும் நிலத்தில் படுகின்றது. வேகமாக கும்மியடிக்கும் போது முன்பாதங்களே பெரிதும் நிலத்தில் படுகின்றன. கைகளைத் தட்டும் போது இருவகையான கைதட்டல் முறைகளையே பெரிதும் அவதானிக்க முடிந்தது. அவையாவன,

1) உள்ளங்கைத்தட்டு
2) கையடியில் விரல் தட்டு

இதில் உள்ளங்கைத்தட்டே பெருமளவில் இடம் பெறுகிறது. சில வேளைகளில் கை கூப்பியது போல் அடிக்கும் "கும்மித்தட்டும்" காணப்படுகின்றது.

கற்கோவளம் கிராமத்தில் என்ன நோக்கத்திற்காக ஆடப்படுகின்றது என்ற வினாவெழுதல் நியாயமானது. கடற்றொழிலுக்கான வளம் வேண்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் கும்மியடிக்கப்பட்டது. காற்று,தொடர் மழை போன்றவற்றால் கரைவலை இழுக்க முடியாத போது கற்கோவளப் பெண்கள் கும்மியடித்து கடவுளரை மகிழ்வித்து சாதகமான காலநிலையை உருவாக்க கும்மியடித்தல் மூலம் முயற்சித்தனர். தற்போது கடற்றொழில்வள நோக்குடன் நோய்,பிணிகள் எனப் பல்வேறு நேர்த்திக்கடன்களையும் உள்ளடக்கி கும்மியடிக்கின்றனர்.

(தகவல் திருமதி அன்னப்பிள்ளை ஆச்சி)

கற்கோவளத்துப் பெண்கள் தமது கிராமத்தில் மட்டுமன்றி வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கும் சென்று கும்மி அடிப்பர். மாசி மாத 'வீம ஏகாதசி' இரவில் வல்லிபுரக் கோயிலின் தெற்கு வீதியிலமைந்த நாச்சிமார் கோயில் வாசல் முற்றத்தில் விடிய விடிய கும்மியடிப்பதை பதினைந்து வருடங்களுக்கு முன் கண்டு களித்துஅவர்களுடனான நேர்காணலையும் பதிவு செய்து வைத்துள்ளேன். ஒரு பகுதி பெண்கள் கும்மியடிக்கும் போது மற்றப் பெண்கள் பார்வையாளராக அமர்ந்திருப்பர். இவ்வாறு மாறி,மாறி தொடர்ச்சியாக கும்மியடிப்பர். பக்தியுடன் நம்பிக்கைகளும் உச்சம் பெற்ற தொரு நிகழ்வாக கும்மியடித்தல் நடைபெற்றது.

அதிகாலையில் வல்லிபுரக் கோயிலை வீதி வழியாகச் சுற்றிக் கும்மியடிப்பர். இவ்வேளை ஒரு நாடக நிகழ்வு போல இரண்டு பெண்களை முந்தானையால் மூடி அழைத்து வர, சில பெண்கள் நட்டுவ மேளம் அடிப்பது போலவும், மற்றும் சிலர் நாதஸ்வரம் வாசிப்பது போலவும் பாவனை செய்வர். மணப் பெண்களை கிருஷ்ணனுக்கு கொடுப்பதற்காக அழைத்து வருதலே இந்தப் பாவனை நிகழ்வினது நோக்கமாகும்.

வல்லிபுரக் கோயிலின் வடக்கு வீதி பல்வேறு கலை நிகழ்வுகளுக்காகப் பெயர் பெற்றது. வல்லிபுரக் கோயிலில் கும்மியடிக்கும் கற்கோவளம் கிராமத்துப் பெண்களால் இரவிரவாக கும்மியடித்தபின் விடியற் காலைப் பொழுதில் வடக்கு வீதியில் கும்மியடித்தல் மிகச் சிறப்பாக நிகழ்த்தப்படும். வல்லிபுரக் கோயிலின் வடக்குத் தெருவை "கும்மித்தெரு" என்று அழைக்கும் வழக்கமும் உள்ளது. வடக்குத்தெருவில் கும்மியடித்தலுடன் 'குடமூதல்', 'பாம்பாட்டம்' போன்றனவற்றையும் இவர்கள் நிகழ்த்துவர்.

குடமூதல் என்பது மேற்படி கும்மியடிக்கும் பெண்களில் ஓரிருவர் புதிய மண்குடத்தின் வாயில் பகுதியில் தமது வாயால் ஊதுதல் ஆகும். இவ்வேளை இனிய ஒலி எழுப்பப்படும். குடமூதலும் கடவுளை வணங்கும் ஒரு முறையாகக் கொள்ளப்படுகிறது.

குடத்தில் என்றும் 'நீரும், உணவும்' வற்றாமல் தரவேண்டும் என்ற சிந்தனையுடனான நம்பிக்கையின் பாற்பட்டதாகவும் குடமூதல் அமைந்துள்ளது. வள்ளியம்மை என்பவரின் பாம்பாட்டம் சிறப்பாக அமையும். இவரை "செட்டிநாகம்" வள்ளியம்மை என்ற சிறப்புப் பெயருடன் இணைந்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கின்றனர். 'தங்கக்குரல் அன்னப்பிள்ளை', 'பல்கலை அருவி மாணிக்கம்', 'செட்டி நாகம் வள்ளியம்மை' ஆகியோருடன் கும்மியடித்தல் பற்றி நேர்முகம் கண்டு குறிப்புக்களை வைத்திருந்ததால் தற்போது அது பற்றி எழுத முடிகின்றது.

வல்லிபுரக் கோயிலில் இரவிரவாக கும்மியடித்து பின் வடக்கு வீதிக்கு வந்து ஆடி, 'நிலம் வெளிக்கத் தொடங்கும் போது' வல்லிபுரக் கோயிலின் உள் வீதியில் உள்ள நாகதம்பிரான் வாசலுக்கு வாழ்த்துப்பாடிய படி சென்று, அங்கு கும்மியை முடித்து வைப்பர். இரவிரவாக உணவு, நீர், ஏதும் அருந்தாமல் விரதமிருந்து கும்மியடித்து முடிந்த பின்னர் தான் நீராகாரம் அருந்துவர்.

காற்றுக் கடுமையாக வீசும் காலத்தில் மீன் பிடித்தல் தடைப்படும். இக்காலத்தில் மீனவரின் பெண்டிர், தாய்மார் வல்லிபுரக் கோயிலுக்கு அதிகாலையில் கும்மியடிக்கச் செல்வர். செல்லும் போது வெற்றிலை, பாக்கு, பழம், கற்பூரம் போன்றவற்றை எடுத்துச் சென்று ஐயரிடம் கொடுப்பர். அத்துடன் "அவிசு" வைத்தலும் இடம் பெறும்.

அதிகாலையில் வல்லிபுரக் கோயில் கேணியில் நீராடி முதலில் பிள்ளையாருக்குக் கும்மியடிப்பர். இவ்வேளை கும்மிப் பாடல்களால் பிள்ளையாரின் வரலாறும்,பெருமைகளும் எடுத்துக் கூறப்படும். பின்னர் வல்லிபுர சந்நிதானத்துக்குச் சென்று கும்மியடிப்பர்.

'காக்கும் கடவுளாம் கிருஷ்ணர் தங்களையும் காப்பாற்றுவார்' என்ற அசையாத நம்பிக்கையுடன் பக்தி மேலிடக் கும்மியடிப்பர். பூசையின் போது கண்ணனை வேண்டி இறைஞ்சுவர். "அப்பு தொழிலின்றி நாங்கள் சாகின்றோம் நீ பார்த்துக்கொண்டா இருக்கின்றாய்? கருணைக் கடலே உதவி செய்யப்பு" எனப் பலவாறு வாய்விட்டுப் புலம்புவர்.

மத்தியானம் தாண்டும்வரை வல்லிபுரக் கோயிலில் கும்மியடிப்பர். சில பெண்கள் மேலாடையை நீக்கி விட்டு கண்ணன் சந்நிதியில் படுத்திருப்பர். "கண்ணா எங்களுக்கு நல்ல சேதி சொல்" என்று மீண்டும் மீண்டும் வாய் விட்டு வேண்டுவர். கோயிலின் உட்பகுதியில் பல்லி சொல்லும்வரை இவர்களது வேண்டுதல் தொடரும்.

பின்னர் பி.ப.4.00மணியளவில் தீர்த்தக் கடற்கரையில் உள்ள கண்ணன் கோயிலுக்கு நடந்து சென்று அங்கும் கும்மியடிப்பர். ஓடியாடி விளையாடுவர். சேலையை இழுத்துப் பறித்தெடுத்து விளையாடுவர். கடல் நீரில் மூழ்கி விளையாடுவர். மீண்டும் பக்தி மேலிடக் கும்மியடித்தல் தொடரும். மாலைக்கருக்கலில் கற்கோவளம் கிராமத்திற்குத் திரும்புவர். அங்குள்ள அம்மன், முருகன், காத்தான், பேச்சி... கோயில்களில் கும்மியடித்து இரவு 10.00 மணியளவில் தமது வீடுகளுக்குச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை ஒரு சில நாட்களில் சரியாகி விடும். "கிருஷ்ணன் கரையாருக்கு எப்பவும் உதவி செய்யும் தெய்வம் தான்" என்று கூறி நன்றி மேலிடபக்தியுடன் வீட்டிலிருந்து கிருஷ்ணனை நினைத்து வழிபடுவர்.

## பேச்சி அம்மன் கும்மி

தந்தனத்தம் தானமடி என் ஆதி மயமான பேச்சி
தானினத்தம் தானமடி என் ஆதி மயமான பேச்சி

அரி ஓம் சிவாயமென்று ஆதி மயமான பேச்சி (நீ)
ஆங்காரம் கொண்டெழும்பு அருமையான பேச்சி
பேச்சியறைச்சியடி ஆதி மயமான பேச்சி(நீ)
பிணந்தின்னும் பூச்சியடி அருமையான பேச்சி
நாக்கைப் பிளந்திடுவாய்(என்) ஆதி மயமான பேச்சி
நல்லுயிரை வாங்கிடுவாய் ஆதி மயமான பேச்சி
நடலை சுடலையடி ஆதி மயமான பேச்சி
நடுச்சுடலை தில்லைவனம் அருமையான பேச்சி
கோழி பலி தருவேன் ஆதி மயமான பேச்சி
கொண்டெழும்பு பூமரத்தை ஆதி மயமான பேச்சி
ஆடு பலிதருவேன் ஆதிமயமான பேச்சி
ஆட்டி விடு பூமரத்தை ஆதி மயமான பேச்சி
நில்லாதே நில்லாதே ஆதி மயமான பேச்சி
நிறுத்தாதே பூமரத்தை ஆதி மயமான பேச்சி
ஓடாதே ஒழியாதே ஆதி மயமான பேச்சி
ஒரு நொடியில் வந்து விடு ஆதி மயமான பேச்சி
முட்டைப் பொரியலடி ஆதி மயமான பேச்சி
முருங்கைக்காய் தீயலடி ஆதி மயமான பேச்சி
கஞ்சா உரொட்டியடி ஆதி மயமான பேச்சி
வெள்ளைக் கோழியடி ஆதி மயமான பேச்சி
வீரப்பலி ஆட்டுக்கடா ஆதி மயமான பேச்சி
நகைத்துச் சிரிப்பவரை ஆதி மயமான பேச்சி
நல்லறுக்கை செய்து வைப்பாய் ஆதி மயமான பேச்சி
சிரித்துப் பழித்தவளை ஆதி மயமான பேச்சி
சீரழிய வைத்திடுவாய் ஆதி மயமான பேச்சி
உன்னை நினைத்தல்லவோ ஆதி மயமான பேச்சி
நான் உடுக்கடித்துப்பாட வந்தேன் ஆதி மயமான பேச்சி
வாக்கிட்டால் தப்பாதம்மா ஆதி மயமான பேச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் கொடுத்தால் பொய்க்காதம்மா ஆதி மயமான பேச்சி
உண்டென்பார் வாசலிலே ஆதி மயமான பேச்சி
ஒளி விளக்காய் நின்றெரிவாய் ஆதி மயமான பேச்சி
இல்லை என்பர் வாசலிலே ஆதி மயமான பேச்சி
அரைநிமிசம் தாமதியாமல் ஆதி மயமான பேச்சி
அரிஓம் சிவாயமென்றோ ஆதி மயமான பேச்சி
அதி சுறுக்காய் வந்திடு ஆதி மயமான பேச்சி
சிறியோம் சிவாயமென்றோ ஆதி மயமான பேச்சி
சீக்கிரமாய் வந்திடடி வந்திடடி ஆதி மயமான பேச்சி

(தகவல்- திருமதி செல்வம் சதானந்தம் (வயது 74) 13.8.1999)

(மேலும் பல்வேறு வரிகள் கொண்ட பாடல்கள் உள்ளன. தனியாட்கள் பாடும் போது சொற்கள், வரிகள் என்பன மாறுபட்டுப் பாடுவது வழமையில் உள்ளது.)

பிள்ளையார் கும்மி, முருகன் கும்மி, சரஸ்வதி கும்மி, காத்தவராயன் கும்மி, கிருஷ்ணன் கும்மி, கண்ணகை கும்மி என பல்வேறு தெய்வங்களுக்கான கும்மிப்பாடலைப் படித்து கற்கோவளம் பெண்கள் கும்மியடித்து வருகின்றனர். இவர்களின் "கும்மி" கலையானது தொடர்ந்தும் பேணப்பட வேண்டியது அவசியம் மட்டுமன்றி எங்களது கடமையுமாகும்.

உசாத்துணை நூல்கள் / தகவல் குறிப்பு வழங்கியவர்கள் விபரம்:

திருமதி வள்ளிப்பிள்ளை
திருமதி அன்னப்பிள்ளை
திருமதி செல்லம்
திரு S.சதானந்தன்
திரு சி.இராகவானந்தன்

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேசத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஒரு பதிவு

திரு.மா.நடராஜசுந்தரம்
ஓய்வுநிலைப் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இலங்கைத்தீவின் வட பகுதியான யாழ்குடா நாட்டில் தமிழ்மரபு, சமயப் பாரம்பரியம், கல்விப் புலமை எனும் உன்னத கலைகள் சிறந்து விளங்கிய இடமாக வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை விளங்குகின்றது.இதன் பிரதேசத்தில் வாழும் மக்களும் குறிப்பிடத்தக்களவு பிரத்தியேகமான பண்புகள் கொண்டிருப்பது முக்கிய அம்சமாகும். ஒருசாரார் கல்வி அறிவு சிறுகைத்தொழில் முயற்சியாண்மை உணவுப் பண்டங்கள் தயாரித்தலில் சிறப்பியல்புகளை வெளிப்படுத்த இன்னொரு வகையினர் உடற் பயிற்சிக் கலைகளான மல் யுத்தம், கராத்தே, கரிலாத்தட்டை வீசசு, சிலம்பு தற்போது காப்பு கல்யாண அடிதட்டு, பாரம் தூக்கல், வாகனங்களை நெஞ்சில் ஏற்றல், ஆணழகன்கள் போன்ற உடற்பயிற்சிகளில் கவனம் செலுத்தினர். பாரம்பரிய செயற்பாடுகளை விரிவாக நோக்கும் பொழுது விளையாட்டு கழகங்களாலும், தனிப்பட்டவர் முயற்சியாலும் கலைகள் வளர்ச்சியடைந்து வந்தமையை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. உடற்பயிற்சிகலைகளை பயிற்றுவிப்பதற்கு பரம்பரை பரம்பரையாக பல திறமை மிக்க ஆசிரியர்கள் இருந்தார்கள்.

பொலிகண்டி பாரதி சனசமூக நிலையம் அத்துடன் இணைந்த பாரதி விளையாட்டுக் கழகம், பாரதி நாடக மன்றம் பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக்கழகம், மலாயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சிக் கழகம் வேறு பல கழகங்களும் இணைந்து பாரம்பரிய கலைவளர்ப்பதில் முக்கிய இடத்தை பெறுகின்றன. பயிற்சியாளர் ஆசிரியர் என்ற வகையில் பார்க்கும் பொழுது அமரர்.சு.கதிர்காமத்தம்பி முதலிடத்தை வகிக்கின்றார். 1929இல் பிறந்த இவருடைய சீடரான அமரர்.சாண்டோ எம்துரைரட்ணம் பின் அமரர்.ந.நடராசா(மலாயன் சாண்டோ) பொ.தம்பையா ஆகியோர் நினைவு கூறப்பட வேண்டியவர்களாவர்.

இந்தக் கட்டுரை இரு பிரிவாகபிரித்து ஆராயப்படுகின்றது. முதலாவதாக விளையாட்டுக் கழகங்களும் இக் கலைகளை வளர்ப்பதின் அவை வகித்த பண்புகளும் விளக்கப்படுகின்றன. இரண்டாவது பிரிவில் பாரம்பரிய விளையாட்டுக்கள் கலைகளை வளர்ப்பதற்கு முக்கியமாக இருந்த ஆசிரியர்கள், விற்பன்ன சிற்பிகள் பற்றி சுருக்கமாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிகண்டி பாரதி சனசமூக நிலையம்

தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களில் போர்த்தேங்காய் உடைத்தல், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு, குத்துச் சண்டை ஆகியவற்றை இப் பிரதேசத்தில் கட்டிக்காத்து வருவதில் பொலிகண்டி பாரதி சனசமூக நிலையமும் ஒன்றாகும். இந் நிலையத்தின் கீழ் பாரதி விளையாட்டுக் கழகம், பாரதி நாடக மன்றம் என்பனவும் உறுதுணையாக நின்று இந்த நிகழ்வுகளை முன்னெடுக்கின்றன. 1966ம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் ஆடிப்பிறப்பன்று சனசமூக நிலைய முன்றலில் போர்த் தேங்காய் அடி நிகழ்வு நடாத்தப்பட்டு வந்திருக்கின்றது. ஆரம்ப காலங்களில் திரு.த.தம்பையா முன்னின்று நடாத்தி வந்தார். தொடர்ந்து அவரது மகனான திரு.த.கனகபாதி நடாத்தி வந்தார். இவரும் தில்லை சிவலிங்கமும் இணைந்து வருடா வருடம் பொலிகண்டி கந்தவன வடக்கு வீதியில் பல கலைகளை இணைந்து போட்டி நிகழ்ச்சியாக நடாத்தி வருகின்றார்கள். இந்த வருடமும்(2014) மாவட்ட ரீதியாக முழங்காவிலில் நடந்த போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கழகங்கள் பெற்றுள்ளன.

## பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்

1964ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1980வரை விளையாட்டுத்துறையில் அதிகளவு பங்களிப்பை இக் கழகம் வழங்கியது. பருத்தித்துறையில் வீரதீர விளையாட்டுக்களின் வளர்ச்சிக்கு அவை இன்றுவரை நிலைநிற்பதற்கும் முக்கிய காரண கர்த்தாவாக காணப்படுகின்றது. சோதி அண்ணாவால் உருவாக்கப்பட்ட இந்த கழகத்துக்கு அமரர்.பொன்.மகாதேவா(தேவாண்ணா) அவர்களும் பக்கதுணையாக நின்று சேவையாற்றினார். இந்த கழகத்தின் வருடாந்த போட்டியில் ஆணழகன் போட்டி, அதிபாரம் தூக்குதல், குத்துச் சண்டை, மல்யுத்தம், சைக்கிள் ஓட்டம், நீச்சல், மரதன் ஓட்டம் போன்றன மிகவும் கோலாகலமாக நடைபெறும். புத்துயிர் அழிக்கப்பட்டு மீண்டும் இக் கழகம் இயங்கத் தொடங்கிற்று.

## துள்ளு மீன் விளையாட்டுக் கழகம்

'கொட்டடி' பகுதியில் 1968ம் ஆண்டு இளைஞர்களால் இக் கழகம் தொடங்கப்பட்டது. இதனை ஆரம்பித்தவர்கள் திரு.சிவானந்தராசா(அமரர்) முக்கிய இடத்தை வகிக்கின்றார். 1970களில் உன்னத வளர்ச்சி அடைந்து பிரபல விளையாட்டுக் கழகமாக விளங்கியது. சிறந்த நீச்சல் வீரர்கள், கபாடிவீரர்கள், ஆணழகர்கள், அதிபாரம் தூக்கும் வீரர்கள், மல்யுத்த வீரர்கள், கலைஞர்கள் உருவாக்கிய பெருமையை இக்கழகம் பெற்றிருக்கின்றது.

## திரு.வி.ச.கதிர்காமத்தம்பி

பருத்தித்துறையில் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 1950-1970ஆம் ஆண்டுவரை ஆசிரியராக பணிபுரிந்து யாழ்பிராந்தியத்திலேயே மிகவும் புகழ்பெற்ற தகுதி வாய்ந்த உடற்பயிற்சி விளையாட்டுத்துறை ஆசிரியராகவும் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துச்சண்டை, சிலம்படி, மல்யுத்தம் போன்ற மரபுரீதியான விளையாட்டுக்களில் சட்டதிட்டங்களையும், நுட்பங்களையும் அறிந்த ஒரு ஆசானாகத் திகழ்ந்தார். பருத்தித்துறையில் சாண்டோ துரைரத்தினத்தை ஒரு சிறந்த ஆசானாக மலர்ந்து இருந்தமைக்கு இவரே காரணகர்த்தாவாக இருந்தார். எல்லோருடைய அன்பையும் மதிப்பையும் பெற்ற ஒரு ஆசானாக காணப்பட்டார்.

1950, 60 களில் வேலாயுதம் மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டிகளில் தடகள விளையாட்டுக்கள் மட்டுமன்றி கபடிப்போட்டி, ஜூடோ சண்டைப் போட்டி இவற்றுடன் இணைந்த பலவீரதீர செயல்களும் இவருடைய தலைமையிலேயே நெறிப்படுத்தப்பட்டது. 1956ம் ஆண்டு முறைப்படி இந்த விளையாட்டினை யாழ் மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்த பெருமை இவரையே சாரும். வேலாயுதம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு முறைப்படி சட்ட ரீதியில் அடிப்படையில் அறிமுகம் செய்துவைத்தார். கபாடி விளையாட்டில் வேடம் பூண்டு தேவர் -அசுரர், புலி - எதிர் புலி என விளையாட வைத்து பாடசாலை மாணவர்களையும் கவர்ந்து ஈடுபட வைத்தார். இவையாவும் இன்று வரை நிலைநிறுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் இவர் நாமம் உச்சரிக்கப்படுகின்றது.

## மலாயன் சாண்டோ நடராசா மாஸ்டர்

1901ம் ஆண்டு பிறந்த இவர் தற்பாதுகாப்பு கலைகள், வீரதீர செயற்பாடுகளைக் காட்டும் சாண்டோ கலைகள், கரலாக்கட்டைவீச்சு, யோகாசனம், வர்மக்கலை போன்றவற்றில் சிறந்து விளங்கும் ஆசானாக விளங்கினார். மலேசியா நாட்டில் இருந்த காலத்தில் ஆங்கில ஆசிரியராக அங்கு பணி புரிந்து (1923-1947)பின்பு சிறந்து விளங்கினார். இந்தியாவில் 1930ஆம் ஆண்டிலிருந்து 1935ஆம் ஆண்டு வரை தற்பாதுகாப்புக்கலைகள், வர்மக்கலைகள் போன்ற பல கலைகளை அங்குள்ள சிறந்த ஆசான்களிடம் கற்றுக்கொண்டு, மலேசியாவில் இருந்த காலங்களில், அங்கு அவர் காண்பித்த வீரதீர செயல்களினால் மலாயன் சாண்டோ என்ற பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

மலேசியாவில் இருந்தகாலத்தில் வேகமாக இயங்க முனைந்த இரு மோட்டார் சைக்கிள்களை, இருபக்க கைகளாலும் ஒரே நேரத்தில் பின் இழுத்துப் பாராட்டைப் பெற்றார். தனது மார்பில் ஆட்கள் நிரம்பிய லொறியை ஏற்றி இருபது நிமிடங்கள் அசையாது இருக்கச் செய்தார். மேலும் கரலாக்கட்டை வீச்சை பருத்தித்துறையில் 1960ஆம் ஆண்டுகளில் முறைப்படி ஆரம்பித்து அதில் பல மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து முன்னேற்றியுள்ளார்.

மூச்சுப்பயிற்சியில் அதிகளவு கவனம் செலுத்தி வந்திருக்கின்றார். நாடி சுத்தியும் , பிராணயாமமும் இவரது மூச்சுப்பயிற்சிகளில் அடங்கும். இவர் உடற் கட்டழகுக் கலையில் கவனம் செலுத்தாவிட்டாலும் பாரம் தூக்குதலில் அதிகளவுக்கு ஆர்வம் காட்டி மாணவர்களை பயிற்றுவித்தார். தனது 93ஆவது அகவை வரை மிக ஆரோக்கியமாக இருந்து சேவை செய்து வந்தார். இவருடைய அன்புக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் திரு.பா.சித்திரவடிவேலாயுதம் என்பவர் மலாயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சிக் கழகத்தை நிறுவி இன்றும் பல மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றார்.

இவர் தொண்டமானாற்றை பிறப்பிடமாகக் கொண்டவர். பருத்தித்துறையில் இவர் வளர்ந்து இங்கு தன் ஆரம்பக் கல்விகளை முடித்து பின் மலேசியா சென்று அங்கும் கல்வி கற்று அங்கு இருக்கும் காலங்களில் சீக்கியர்கள் , பஞ்சாப் காரர்களுடன் மல்யுத்தம் (Free style), குத்துச் சண்டை, தற்காப்புக்கலை போன்றவற்றை வட இந்தியா, மேல்நிலை ஆசிரியர்களிடம் பயின்று இரண்டாம் உலக யுத்த காலங்களில் இந்தியா சென்று அங்கு சோதிடமும், மகான்களிடம் யோகப் பயிற்சிகளும் கற்றுத் தேர்ந்தார். மலேசியாவில் இருக்கும் போது மலேசியப் பெண்ணைத் திருமணம் முடித்தார். 1950களில் இலங்கை வந்தார். யாழ்ப்பாண கரையூரில் இருந்து பின் பருத்தித்துறை வந்து இங்கு தன் கலைகளை வளர்த்தார். இங்கும் மல்யுத்தம், யோகப் பயிற்சி போன்றவற்றை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தரர். அதில் முன்னணி மாணவர்களாக செல்லக்கிளி, மா.இரத்தினசோதி, பா.சித்திரவடிவேலாயுதம்(சுந்தர்) முன்னணி மாணவர்களாகத் திகழ்ந்தார்கள்.

## கலாபூஷணம் பொன்னுச்சாமி மகாதேவா



சந்தைமேற்கு ஒழுங்கை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பருத்தித்துறை சித்திவிநாயகர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் மேற்படிப்பினையும் மேற்கொண்டார். பாடசாலைக் காலங்களில் தடகள விளையாட்டுக்கள், மல்யுத்தம், குத்துச்சண்டை, சாகச நிகழ்ச்சிகள் கபாடி ஆகிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றி வீரனாகத் திகழ்ந்தார். இவருடைய ஆசான் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் உடற்பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றிய அமரர் உயர்திரு V.S.கதிர்காமத்தம்பி மாஸ்ரர் ஆவார்.

கபடி விளையாட்டில் பாடசாலை மட்டப் போட்டிகளுடன் மட்டும் நிற்காது வெளிக்கழகங்களிலும் பங்குபற்றியதுடன் பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக்கழக கபாடி அணித்தலைவராகவும் செயலாற்றி பல வெற்றிகளை ஈட்டினார்.

இவர் மாவட்டம் மட்டத்தில் மல்யுத்தம், குத்துச்சண்டை போட்டிகளிற்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றியதுடன் கபாடி போட்டிகளில் மாவட்ட மட்ட பிரதம தீர்ப்பாளராகவும், ஆலோசகராகவும் பணிபுரிந்து வந்திருக்கின்றார்.

உடற் கட்டழகுக்கலை ஆண் அழகன் போட்டி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை முதன் முதலில் 1965ம் ஆண்டு நடத்தப்பட்ட பொழுது அதில் பங்குபற்றி முதலாவது ஆண் அழகனாகத்தெரிவு செய்யப்பட்டார். பின்பு 1967ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு வடமராட்சி ஆண்அழகனாக முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். பளுதூக்கும் துறையிலும் 200 இறாத்தல் தூக்கியுள்ளார். இளமையின் இரகசியம் என்றும் நூலை எழுதி வெளியிட்டுள்ள இவர் தன் நூல் வெளியீட்டின் பொழுது தனது 59ஆவது அகவையில் Body Building Show நிகழ்வினையும் செய்து காட்டினார்.

தமிழர் பாரம்பரியமான உடற்பயிற்சி கலைகளில் ஒன்றான கரலாக்கட்டை சுழற்றும் பயிற்சியில் இவர் பல சுழற்சி முறைகளை தெரிந்துள்ளார். பெண்களுக்குரிய பயிற்சி முறைகளும் நன்கு தெரிந்தவர்.

## சாண்டோ எம்.துரைரட்ணம்

வடமராட்சியில் மல்யுத்தம், குத்துச்சண்டை, கபாடி மற்றும் சாகச் செயல்களை ஒருங்கிணைத்து மக்களிடையே அறிமுகம் செய்து வைத்து இத்துறையில் வீரர்களை பயிற்று வித்து நாட்டம் கொள்ள வைத்தவரும் வித்திட்டவரும் அமரர்.சு.கதிர்காமத்தம்பி ஆவர். இவர் 1929ஆம் ஆண்டு பிறந்தவர். இவருடைய சீடராக இருந்து அடுத்த பயிற்சியாளராக 1939களில் பிறந்த சாண்டோ எம்.துரைரட்ணம் முக்கிய இடத்தை வகிக்கின்றார். முதன் முதலில் சாகச விளையாட்டுக்களில் ஒன்றான இரட்டை மாடு பூட்டிய வண்டியில் அதற்கு மேலே ஆட்களை ஏற்றி தன் கழுத்தின் மேலாக ஏற்றி சாகசம் புரிந்தார். பகிரங்க மேடையில் மண்டையில் கம்பியை வைத்து வளைத்துக் காட்டினார். பருத்தித்துறையில் ஜிம்நாசியம் என்று கழகத்தை உருவாக்கி மாணவர்களை வழிநடத்தினார். மேலும் இவர் மேடை ஏறி B.S.A மோட்டாசு சைக்கிளை கழுத்தினாலும் அதே நேரம் 50 கிலோ கிராம் சீமெந்து பைக்கற்றை பற்களினாலும் ஒரே நேரத்தில் தூக்கி சாகசங்களை புரிந்தார். 1994ஆம் ஆண்டு கால தேவன் அவரை தன தாக்கிக் கொண்டான்.

## மாணிக்கவாசகம் இரத்தினசோதி



பல வகையான பாரம்பரிய விளையாட்டுக் கலைகளில் ஈடுபட்டுள்ள இவர் குத்துச் சண்டை,மல்யுத்தம், கராத்தே, சிலம்பம் யோகாசனம், மூச்சுப்பயிற்சிகள், தியானம் போன்ற கலைகளில் மிகுந்த நிபுணத்துவம் கொண்டவராகவும் பயிற்சியாளராகவும் தற்பொழுதும் செயற்பட்டுக் கொண்டு வருகின்றார். 'சோதி அண்ணா' என்ற பட்டப் பெயரைக் கொண்ட இவர் பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினை 1964ம் ஆண்டு நிறுவினார். முன்னாள் வித்தகர்கள் திரு.கார்த்திகேசு, மலாயன் சாண்டோ நடராசா, திரு.கதிர்காமத் தம்பி, மாஸ்டர் யாழ்ப்பாண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபரட்ணம் மாஸ்டர், ஸ்ரீலங்கா தேசிய மல்யுத்த பயிற்சியாளனான திரு.டி.டி.என்.பெரேரா மற்றும் பாஷையூரைச் சேர்ந்த கோர் கோனிஸ் அவர்களிடம் மல்யுத்த நுட்பங்களை பயின்று இன்று பல மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து வருகின்றார்.

*1975, 1976, 1978*ம் ஆண்டுகளில் தேசிய ரீதியாக நடந்த கராத்தே போட்டிகளில் கலந்து கொண்டு **1975**ல் இரண்டாம் இடத்தையும் நிலப்பட்டி யையும் பெற்றுக் கொண்டார். *1976 , 1978*ல் தேசிய மட்டவீரராக தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கம் பெற்றதுடன் **1976**ல் நாவல்பட்டியையும் **1978**ல் கறுப்புப் பட்டியும் வழங்கப்பட்டது. *1983*ல் Grand Master சூச்சுசூட் என்ற சீன வம்சாவழி மலேசிய விரனிடம் கராத்தேயில் வூடோகான் ஸ்ரைலில் பயிற்சி பெற்றார். இக்காலத்தில் பொனிறொபேட் மாஸ்ரரிடம் இருந்து கொழும்பில் **2**வது, **3**வது கறுப்பப் பட்டியையும் பெற்றுக் கொண்டார். **2002**ல் **4**வது கறுப்புப் பட்டியையும் பெற்று எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

கென்சி கவாசோ, நெய்ரோ, வத்தனாமே ஆகிய யப்பானிய பயிற்றுனர்களிடமிருந்து பயிற்சி பெற்று **2005**ல் கண்டியில் நிகழ்த்தப்பட்ட **4** நாடுகளின்(இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், போலந்து) பயிற்றுனர்களுக்குரிய காட்டா போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை பெற்றார். **2005**ல் இங்கிலாந்து சென்று ஒன்றரை மாதங்கள் நடுவர்களுக்கான நுட்பமான பயிற்சிகளைப் பெற்றார். யோகாசனத்திலும் நிபுணத்துவம் பெற்று இருந்தமையால் பலர் இன்றும் இவரிடம் சகல கலைகளையும் கற்று இப்பிரதேசத்தின் ஒரு மாண்புமிகு ஆளாக விளங்குகின்றார்.

*1973*ம் ஆண்டு கராத்தே பயிற்சி தொடங்கிய இவர் இன்றுவரை பல போட்டிகளிலும் கலந்து தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் பெற்று வருகின்றார். ஒவ்வொரு வருடமும் **60** வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டிகளில் இன்று வரை கலந்து வருகின்றார். **1963**ல் பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழக ஸ்தாபகர் இவருடைய கராத்தே சங்கத்கின் பெயர்-தற்காப்புக் கலையகம் (Gntitute ot mortial arb) யோகா, (Institute ot yoga) யோகா கலையகம் இவை சிறீலங்கா கராத்தே சம்மேளனம், சிறீலங்கா பாடசாலை கராத்தே சங்கம், U.K Trodihonal Karata Associatioa வேறு பல நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்றது.

## பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும்

*1970*ம் ஆண்டுகளில் வீரதீர செயல்களுக்காகப் இத்தகைய விளையாட்டுத் துறை அமைச்சர் கௌரவ சுகததாச அவர்களால் நேரில் பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

1. பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தர்ம பரிபாலன சபை யோகா கலைக்காக *30/04/1991* பாராட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வல்வெட்டித்துறை 'கலை இலக்கியப் பெருவிழாவில்' கராத்தே யோகக் கலைக்கான பாராட்டு2012/01/01இல் நடைபெற்றது.
3. Department of Sports North Province-2012 வர்ண இரவு(colour Night),Governw to Karate
4. கலைப்பரிதி விருது2012 கராத்தே யோகாக்கலை உடற்பயிற்சி பிரதேச கலாச்சாரப் பேரவை பருத்தித்துறை
5. சமூக சேவைக்கான கௌரவிப்பு 2012-யோகப் பயிற்சி கராத்தே நகராட்சி மன்றம் பருத்தித்துறை
6. 2014-A.A.A நிறுவனம்- கராத்தே யோகக் கலைக்கான கௌரவிப்பு யாழ்ப்பாணம்.

## திரு. இ. கணேசமூர்த்தி



மல்யுத்தம், குத்துச்சண்டை, கராத்தே, சிலம்பம், அடிதட்டு, பிடி உதை, அறை பிசைதல் போன்ற கலைகளில் மிக்க தேர்ச்சியும் பயிற்சியும் உடையவர் ஆசான் கணேசமூர்த்தி. இவருடைய பேரன் ஆ.குழந்தைவேலு புகழ் பெற்ற சிலம்புக்கலை அடிதட்டு, வர்மக்கலை என்பனவற்றில் மிக்க சிறப்பான முறையில் அனுபவத்தை கொண்டிருந்த போது பேரனுடன் இணைந்து இக்கலைகளில் நன்கு பயிற்சி பெற்றார். எட்டு வயதிலேயே இதில் ஆர்வம் கொண்டு பயிற்சிகளை அறிந்து கொண்டார் மேலும் சுப்பர் மடம் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து "கபாடி போட்டிகளில்" பங்கு பற்றி சிறந்த வீரனாக திகழ்ந்தார்.


1982ம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்ட 10வது கராத்தே போட்டியில் இலங்கை, இந்தியா, பங்காளதேஷ் ஆகிய நாடுகளின் வீரர்களுடன் மோதி Black Belt Grand Champion பட்டத்தையும் பின்னர் 5வது கறுப்புப் பட்டியையும் பெற்றுக் கொண்டார். மேலும் ஆசிய கராத்தே போட்டியில் 2003இல் பங்கு பற்றி 80kg க்கு மேற்பட்ட பிரிவில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டு தங்க பதக்கத்தையும் கறுப்புப் பட்டியையும் வென்றார்.

எமது சிறப்பு மிக்க பாரம்பரிய விளையாட்டான சிலம்புக் கலையில் இவரது நாட்டமும் அக்கலையைப் பேணி காக்க வேண்டுமென்ற உத்வேகமும் கொண்டு இதனை மாணவர்களுக்கு பயிற்றவித்து வருகின்றார். புதிய வீச்சுக்களையும் அறிமுகப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. சிலம்புடன் இணைந்த வேல், வால், பரசு என்பன கொண்டு விளையாடுவதில் வல்லமை பெற்றிருக்கின்றார். இவருடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று பங்கு பற்றி பல பரிசில்களையும் பெற்றிருக்கின்றனர்.

### மார்க்கண்டு அருச்சுனராசா



பிரபலியமான சிலம்பு வித்தகர். 1958ம் ஆண்டுகளில் பிரபல்யமாக இருந்தவர். வல்வை சோதிசிவம் சிலம்பு அருச்சுனராசா இருவரின் ஆரம்ப குருவாக "வல்வை செகிட்டு கார்த்திகேசு அப்பா" இருந்திருக்கின்றார். இவருடைய காலத்தில் குறிப்பாக 1962ம் ஆண்டுகளிலிருந்து சிலம்பு மல்யுத்த வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. சிலம்பம், மழு , சைக்கிள்ப் பயிற்சி போன்ற விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன. பிரதம மாணவர்களாக செல்லக்கிளி மாஸ்டர், செல்வநாயகம் ஓடக்கரை விஜயன் கடற்கரை சிவயோகம் காணப்பட்டனர்.

### செல்லக்கிளி மாஸ்டர்- (வி. விஜெயரட்ணம்)

பருத்தித்துறை நகரைச் சேர்ந்தவர் 1997ஆம் ஆண்டு நகர சபைத் தலைவராக மூன்று வருடங்கள் செயற்பட்டவர். சிலம்பகம் யோகா இரண்டிலும் விசேட தகைமைகளை பெற்றுள்ளார். இதன் விளைவாக சிலம்பம், மல்யுத்தம், குத்துச்சண்டை அடிதட்டு யோகப் பயிற்சியில் பல மாணவர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும். இவரின் பிரதம சீடர்களாக பல வகைகளிலும் பிரசித்தி பெற்ற ஆதவன் கொட்டடி, தெ.பிரபாகரன் (தும்பனை) ரமேஸ் கொட்டடி, சந்திரன் (யோகா), பலாலி ரமேஸ் (மல்யுத்தம்), மதன் (அம்பம்), இன்பர்சிட்டி (சீனன்) ரவீந்திரன் இருந்திருக்கின்றார்கள்.

### ஆ. புவனேந்திரன்



1980ஆம் ஆண்டு சிறிய மினிபஸ் ஒன்றை கழுத்தில் கயிறு போட்டு நெல்லியடி நகர சபைத் தலைவர் பாஸ்கரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு பருத்தித்துறை காந்தி சிலைவரை இழுத்து வந்தார்.

களியாட்டு விழா ஒன்றில் 6 நீளமும் 3 அகலமும் 1 1/2 ஆழமும் கொண்ட கிடங்கில் மூடப்பட்டு மேலே தீயிட்டு 1 மணித்தியாலம் வரை இருந்து மக்களின் கரகோசத்தைப் பெற்றார். மேலும் அதே களியாட்ட விழாவில் 5 தொன் எடையுள்ள லேலண்ட் பொதியை மார்பில் ஏற்றி பார்வையாளர்களாலும் நகரசபைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் ந.நடராசாவாலும் கௌரவிக்கப்பட்டார். பாரமான கல்லொன்றை மார்பின் மீது வைத்து சம்மட்டியில் உடைத்து சாகசம் புரிந்தார். மேலும் முள்ளாணி படுக்கை மீதுபடுக்க வைத்து அதன் மேல் மினிபஸ் ஒன்றை ஏற்றி மக்களின் ஆதரவை பெற்றார். அத்தோடு ஆறு அடி உயரத்திலிருந்து 28 இறாத்தல் இரும்புக் குண்டை சீடனின் வயிற்றில் போட்டு மக்கள் பாராட்டைப் பெற்றார்.

## யோ.ஜேசுராசா

வடமராட்சி பருத்தித்துறை ஆணழகனாக மூன்று தடவைகள் தெரிவு செய்யப்பட்டார் மேலும் யாழ் தினகரன் விழாவில் M.R. தினகரனாக தெரிவு செய்யப்பட்டு எமது பிரதேசத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். அவர் சாண்டோ துரையிடம் அவருடைய ஜிம்னார்சியக் கழகத்தில் பயின்று குத்துச்சண்டை, மல்யுத்தம், உடல் கட்டழகுப் பயிற்சி, பாரம் தூக்குதல் போன்றவற்றுடன் வீரதீர பயிற்சிகளும் பெற்றவர். குத்துச் சண்டை மத்தியத்தராகவும் கடமை ஆற்றியுள்ளார். இவருடைய முன்னேற்றத்துக்கு பருத்தித்துறை இலங்கைப் போக்குவரத்து சபையில் வேலை புரிந்த ஆணழகன் ஞானசபை என்பவரின் பயிற்சி காரணமாகியது.

## ஆ.செல்வவிநாயகம்



1968ம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பன்று பொலிஸ் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட மல்யுத்த போட்டியில் முதலாம் இடத்தை பெற்று வாகை சூடினார். மல்லர்களை உருவாக்குவதற்கு தெண்டா பயிற்சி வழங்குவதில் புகழ் பெற்றவராக காணப்படுகின்றார். மல்யுத்த ஆசிரியராகவும் கபடி Boxing நடுவராகவும் போட்டிகளில் செயற்பட்டு வருகின்றார். இத்தகைய போட்டிகளின் சகல பரீட்சைகளிலும் சித்தியடைந்து சான்றிதழ்களைப் பெற்று வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் புத்தாயிரம் ஆண்டு பிரதேச சாஹித்திய விழா (2006)இல் கலைஞர்கள் கௌரவிப்பு சான்றிதழ்களை மரபு விளையாட்டுக் கலைத்துறையிலும் வெள்ளி விழாவை நிறைவு செய்தமையைப் பாராட்டி வழங்கப்பட்டதுடன் 2011ல் கலைப்பரிதி விருதையும் பெற்று கௌரவிக்கப்பட்டார்.

## த.கங்காபதி

ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை நடைபெற்று வரும் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களில் மல்யுத்தமும் ஒன்றாகும். அதற்கு அமைவாக இந்த விளையாட்டினை திரு.தம்பையா கங்காபதி அவர்கள் 1972ம் ஆண்டு காலம் பகுதியில் அமரர் திரு.சுந்தரம் யோகராசா மற்றும் திரு.மாணிக்கம் ஜெகசோதி, திரு.வ.திருநாவுக்கரசு ஆகியோரிடம் முறையாக பயின்றார். இந்த மூவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய கால பகுதியில் தேசிய மட்ட மல்யுத்த போட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கங்காபதி அவர்கள் பல இடங்களிலும் சிறப்பாக விளையாடி வெற்றிவாகை சூடினார். 1948ஆம் ஆண்டு மல்யுத்த ஆசான் என்ற பட்டத்தையும் பெற்றார். இவர் நெறிப்படுத்தலில் நடந்த மல்யுத்த போட்டிகளில் பல பரிசில்களை வென்றெடுத்தார். மகாண மட்ட போட்டிகளிலும் இவர்கள் போட்டியிட்டு தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றுள்ளார்கள்.

## பா. சித்திர வடிவேலாயுதம்

சுந்தர் 1970களில் அவரிடம் குத்துச்சண்டை தற்காப்புக் கலை யோகப் பயிற்சி போன்றவற்றை முறையாகக் கற்றார்.

1991ம் ஆண்டு தை மாதம் மலேயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்கள் குத்துச்சண்டை, பாரம் தூக்குதல் (Weight lifting) வெறும் கை தட்டு விளையாட்டு கர்லாக் கட்டை போன்றவற்றை கற்பித்தார்.

மிகப் பெரிய அனலில் வடமாகாண ரீதியில் 2004,2005, 2011,2013 ஆகிய காலங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டது. சிறப்பான போட்டியாக 2005ம் ஆண்டு உடற்கட்டழகன் போட்டி நடத்தப் பெற்றது. கீழ்ப்பிரிவில் இவரது மாணவன் முதலாம் இடம் சிவனேசன், மத்திய பிரிவில் டொமினிக் பிரபாகரன் முதலாம் இடமும் மேற்பிரிவில் ரதி ஆசிரியர் மூன்றாம் இடமும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. கார்த்திக் என்பவரும் இரண்டாம் இடமும்(கீழ்பிரிவு) பெற்றுக் கொண்டார். மேற்படி கழகம் மிகப் பெரிய அளவில் உடற்பயிற்சிக் கருவிகளுடன் பருத்தித்துறையில் திகழ்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. 2013இல் சிறீலங்கா உடற்பயிற்சிக் (Body Building) கழகத்தில் முதன் முதலாக யாழ் மாவட்டத்தில் இருந்து பதிவு செய்வதற்கு தகுதி உள்ள ஒரு கழகமாக ஏற்றுக் கொண்டு பதிவும் செய்யப்பட்டது. 2013ம் ஆண்டு சிறீலங்கா உடற்பயிற்சிக் கழகத்தில் இருந்து மத்தியஸ்தர்கள் வந்து மத்தியஸ்தம் வகித்ததும் எமக்கு பெருமை தரும் ஒரு நிகழ்வாகும்.

## சென்சி தெ.பிரபாகரன்

பிரதம கராத்தே மா.இரத்தினசோதியின் மாணவன் 1973ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி பிறந்தார். தனது கல்வியை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கற்ற காலங்களில் பல வகையான விளையாட்டுக்களிலும் ஈடுபட்டுவந்தார். 1990களில் தற்காப்புக்கலையை மா.இரத்தினசோதி இடமும் சிலம்பத்தை 1996ல் சோதி சிவம் ஆசிரியர்களிடம் குத்துச்சண்டையை சுந்தர் மாஸ்டர் இடமும் அடித்தன்டினை செல்லக்கிளி மாஸ்டர் பொலிஸ் சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமும் கற்றுக் கொண்டார். 1990-1994ஆம் ஆண்டுகளில் தும்பளை ஐங்கரதாஸ் ஆசிரியர்களிடம் கராத்தே பயிற்சியைப் பெற்று பல பாராட்டுக்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மகாண மாவட்ட போட்டிகளில் கராத்தே போட்டிகளில் பங்குபற்றி தேசிய மாகாண மாவட்ட ரீதியில் பல பரிசில்களைப் பெற்றிருக்கின்றார். 1999-2014 வரை 12 தங்கம் 16 வெள்ளி 15 வெண்கலன்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. தற்பாதுகாப்பு வலயம் 2000ல் 1வது கறுப்புப்பட்டியையும் 2012ல் 4வது கறுப்புப்பட்டியையும் சிறீலங்கா கராத்தே சம்மேளனம் 4வது கறுப்பு பட்டியையும் பெற்று பெருமை சேர்த்துள்ளார். 500 மாணவர்களுக்கு மேல் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள். இவர் பயிற்றுவித்த மாணவர்களுள் P. துவாரகா 15 தங்கம், 7வெள்ளி, 2 வெண்கலம் P.தேனுகா 4 தங்கம், 1 வெள்ளி, S.சிந்துஜா 15 தங்கம், 8 வெள்ளி பதக்கங்களை போட்டிகளில் வெற்றிபெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

## சிங்கபாகு சிவக்குமார்

சிவக்குமார் 1978ம் ஆண்டு 3ம் மாதம் 24ம் திகதி சிங்கபாகு காந்திமதி தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். தற்பொழுது பாரம்பரிய வைத்தியரும் பருத்தித்துறை ஆயுள்வேத பாதுகாப்பு சபையில் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

தேசிய ஆசிய தங்கப்பதக்கம் பெற்ற ராஜதுரை கணேசமூர்த்தியிடம் குருவழிக் கல்வியையும் விளையாட்டுத்துறை சார்ந்த பயிற்சிகளையும் கற்றார். வடக்கு-கிழக்கு மாகாணமட்ட போட்டியில் 1999ல் உயரம் பாய்தலில் இரண்டாம் இடத்தை பெற்றார். 2000 ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கபடியில் முதலாம் இடத்தையும் பெற்று குழுத்தலைவராகவும் இருந்தார். 2000ம் ஆண்டு Shotokan Karate Do International federation Sri Lanka Diploma 1st Zoo Dam, 2nd Nee Dan பட்டத்தையும் 2009இல் வடக்கு-கிழக்கு மாகாணமட்ட குத்துச்சண்டை போட்டியில் முதலாம் இடத்தையும் தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றார். 15 வருடங்களுக்கு மேலாக பொக்சிங், கராத்தே பயிற்சியை 5000 மாணவர்களுக்கு மேலாக பயிற்றுவித்து வருகின்றார்.

## சாண்டோ வடிவேல் சர்வானந்தம்

இவர் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருடைய தகப்பனார் சாண்டோ வடிவேல் மலேசியாவில் பிரபலமாக இருந்து பல வகையான சாண்டோ சாகசங்களை நிகழ்த்தினார். இவருடைய மகன் சர்வானந்தம் விநாயகமுதலியார் வீதியில் வசித்து வந்த காலப்பகுதியில் 1960-1980 வரை மார்பில் லொறி ஏற்றுதல் கழுத்தில் கூரிய இரும்பு கம்பி வைத்து வளைத்தல் கற்களை மார்பில் ஏற்றி அமராமல் உடைத்தல் மற்றும் மந்திரக் காட்சிகளும் செய்வதில் நிபுணர். இவர் BATA கம்பனியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணிபுரியும் போது சுகததாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளகரங்கில் கம்பனியின் ஆண்டு விழாவின் போது மார்பில் யானை ஏற்றி சாதனை புரிந்தவர். தற்பொழுது இவர் இறைவன் அடி இணைந்து விட்டார்.

## சிங்கபாகு பரம் குமார்

கணேசன் தோட்டத்தில் வசித்து வந்த சிங்கபாகு-காந்திமதி தம்பதியினருக்கு இரண்டாவது பிள்ளையாக பரம்குமார் பிறந்தார். 2005ல் இந்தியாவில் பங்களூரில் வியாத்தி விகாஸ் பல்கலைக்கழகத்தில் Marketing and Corporative Development and Leader Ship training கற்கை நெறிகளில் பயிற்சி பெற்றார். 2012ல் கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியத்தை பகுதி நேர வரிவுரையாளராக பணிபுரிந்தார்.

1991ல் இராஜதுரை கணேசமூர்த்தி ஆசான் அவரிடம் குருவழிக் கல்வியையும் விளையாட்டுத்துறை சார்ந்த பயிற்சிகளையும் கற்றுக் கொண்டார். யாழ் பல்கலைக்கழகத்தில் சித்த ஆயுள் வேத வைத்தியத்துறையில் பட்டம் பெற்றவரும் வைத்திய உத்தியோகத்தவரும் ஆகிய வேலுப்பிள்ளை மயில்வாகனமாகிய அவருடைய தாத்தாவிடம் இருந்து வைத்தியத்தைக் கற்றுக் கொண்டார்.

1992-1994 ஆண்டுக் காலப் பகுதியில் பொக்சிங்கில் பிரதேச மாகாண மாவட்ட சம்பியனாக தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகத்தில் இணைந்து காற்பந்து வீரராகவும் செயற்பட்டார். வருடா வருடம் நடைபெறும் பிரதேசசெயலக விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டம், ஈட்டி எறிதல், குண்டெறிதல், தட்டெறிதல் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் கராத்தே ஆசிரியராக பணிபுரிகின்றார். 2014ம் ஆண்டு கராத்தே பொக்சிங் மாவட்டமாகாண போட்டிகளில் தங்கப்பதக்கத்தையும் பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

## திரு.கி.இராசேந்திரம்

இந்திய வம்சாவளி திரு.ஞானபாக்கியம் ஆகியோரிடம் சிலம்புப் பயிற்சியையும் கராத்தே பயிற்சியையும் திரு.மா.இரத்தினசோதியிடமும் தன்னை வளப்படுத்திக் கொண்டார். இப்பொழுது பல மாணவர்களை உருவாக்கி பிரதேசத்தின் பெருமை சேர்த்து தமிழர் பாரம்பரியத்தை அழியாது காப்பாற்றி வருகின்றார்.

## சோமசுந்தரம் சிறீகந்தலிங்கம் (K.S.லிங்கம்)

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியை சேர்ந்த சோமசுந்தரம் சிறீகந்தலிங்கம் பல வேறு விளையாட்டுத் துறைகளில் பங்கு பற்றி பிரபலியமாக இருந்து வெற்றிவாகை சூடியுள்ளார். ஒலிம்பிக் விளையாட்டு கழகம் நடாத்திய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்அழகன் போட்டியில் 1976, 1977, 1979ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக ஆணழகனாக தெரிவு செய்ப்பட்ட பெருமைக்குரியவராக இருக்கின்றார்.

### சாகசச் செயல்கள்


1978ஆம் ஆண்டு கிளிநொச்சி நகர மண்டபத்தில் 112 இறாத்தல் எடையுள்ள இரும்புக் குண்டை பத்து அடி உயரத்தில் இருந்து அவருடைய வயிற்றில் போட்டு அதனை தாங்கி சாதனை செய்துள்ளார். அத்துடன் மட்டுமல்லாமல் 1979இல் ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பற்களினால் 112 இறாத்தல் எடையுள்ள சீமெந்து பைக்கற்றை தூக்கியும் இரண்டு மோட்டார் சைக்கிள்களை ஒரு இரும்புக் கம்பியிலே கட்டி அதனை தோளில் தூக்கி வைத்து ஒரு சுற்று சுற்றி சாதனை படைத்தார். பாரம் தூக்கும் போட்டியிலும் 1979ல் 220 இறாத்தல் தூக்கி சாதனை படைத்தார் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் நன்மதிப்பை பெற்றவராக திகழ்கின்றார்.

### தேவ சிகாமணி தேவராஜேந்திரம்
### யோகா



அமரர் திரு.விஜயரட்ணம் (செல்லக்கிளி மாஸ்டர்) அவர்களிடம் யோகா பயிற்சியை பெற்று அதன் நன்மைகளை கருத்தில் கொண்டு 1990ஆம் ஆண்டளவில் தும்பளை யோகா சாந்தி நிலையத்தை ஆரம்பித்து பருத்தித்துறை மக்களுக்கு யோகாக்கலையை பயிற்றுவித்து வருகிறார். பல பாடசாலைகளில் அதிபர்களின் அழைப்பை ஏற்று அங்கு சென்று மாணவ மாணவிகளுக்கு யோகக் கல்வியை பயிற்றுவித்தார். மந்திகை ஆதார வைத்திய சாலையில் பணிபுரியும் வைத்தியர்களுக்கும் யோகாக் கல்வியை பயிற்றுவித்து அவர்களின் நல்லாசிகளையும் பெற்றசராவர். தற்போது 4ம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள ராஜாராணி இல்லத்திலும் பயிற்சி வழங்கிக் கொண்டு இருக்கின்றது.

### உடற் கட்டழகுக்கலை- ஆணழகன்
### பாக்கியராசா சிவானந்தராசா-பருத்தித்துறை



பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட பாக்கியராசா சிவானந்தராசா (வயது 38) பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர். உடற்கட்டழகுக்கலையில் ஆண் மகனாக 13-07-2013ல் மலாயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சி கழகத்தால் நடாத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான ஆணழகன் போட்டியில் பங்குபற்றி தனது எடைப்பிரிவில் முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை பெற்றதுடன் மற்றைய எடைப்பிரிவில் வீரர்களுடன் போட்டியிட்டு Mr. Nothern Province Grand Champion பட்டத்தை பெற்றுக் கொண்டார்.

## நாராயணமூர்த்தி கதிரவன்-குத்துச்சண்டை

இவர் குத்துச்சண்டையில் பிரசித்தி பெற்ற ஒரு இளைஞனாக பிரமணித்து வருகின்றார். கொழும்பில் நடைபெற்ற 45-49 கிலோகிராம் எடையுள்ள தேசிய விளையாட்டுப் போட்டியில் எட்மோன்ட் சில்வா விளையாட்டு மைதானத்தில் 2010ம் ஆண்டு இறுதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றார். மாகாணமட்டப் போட்டிகளில் 2011ம் ஆண்டு 2013ம் ஆண்டுகளில் முதலாம் இடத்தினைப் பெற்று எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும் குத்துச்சண்டையில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமினால் நடத்தப்பட்ட போட்டியில் முதலாவது இடத்தினைப் பெற்றார். இது மட்டுமன்றி கராத்தே போட்டியிலும் மாவட்டரீதியாக முதலாவது இடத்தினைப் பெற்று எமது பிரதேசத்திற்கு கௌரவத்தினையும், பெருமையினையும் பெற்றுத்தந்தார்.

விளையாட்டு அமைச்சினால் தேசிய ரீதியில் மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் குறிப்பாக குத்துச் சண்டையில் வடமாகாணத்தில் முதலாவது பரிசினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நாராயணமூர்த்தி செந்தூரன்-குத்துச்சண்டை

இவர் குத்துச்சண்டை, கராத்தே இரண்டிலும் தனது திறமையினை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். 49-52 கிலோகிராம் எடை கொண்ட குத்துச்சண்டையில் மாகாணமட்டப் போட்டியில் 2012ம் ஆண்டு 1ம் இடத்தையும், 2013ம் அண்டு 1ம் இடத்தையும் வல்வெட்டித்துறை இராணுவ முகாமினால் நடாத்தப்பட்ட போட்டியில் 1ம் இடத்தினையும் வென்றெடுத்துள்ளார். கராத்தே போட்டியில் மாகாண மட்டத்தில் 2013ம் ஆண்டில் 2ம் இடத்தையும் தட்டிச் சென்றுள்ளார். கொழும்பில் சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கராத்தே தேசிய விளையாட்டுப் போட்டியில் 2014ம் ஆண்டு 1ம் இடத்தினையும் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சர்வதேச கராத்தே விளையாட்டுப் போட்டியில் 2014ம் ஆண்டு 1ம் இடத்தினையும் அதனைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெற்ற சர்வதேச போட்டி ஒன்றிலும் 2014ம் ஆண்டு 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.



## கந்தசாமி இராசேந்திரம்

திரு.செ.சித்திரவேல் அண்ணாவியாரால் பயிற்சி அளிக்கப்பட்டு 1971ம் ஆண்டு திரு.கந்தசாமி இராசேந்திரம் அவர்கள் 1990ம் ஆண்டு அண்ணாவியராக பயிற்சி வழங்கி கலைஞர்களை பல மேடைகளில் ஏற்றி பெரும் சிறப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தி வந்தார். இதில் ஒரு பகுதியாக கரகம், காவடி, சிலம்பு, தீப்பந்து விளையாட்டு என பலவற்றையும் சிறப்புடன் கற்றுக் கொடுத்தார்.

## இராசேந்திரம் மதியழகன்



வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த இவர் கம்படி, சிலம்படி, தீப்பந்த விளையாட்டுக்களிலும் வீரனாகக் காணப்படுகின்றார். இவர் பல மாணவர்களுக்கு பயிற்சி அழித்து வருவதுடன் கரகாட்டம், காவடிஆட்டம், புலிஆட்டம், பொம்மலாட்டப் பயிற்சிகளையும் வழங்கி வரும் இவர் யாழ் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளிலும், மாகாண மட்ட நிகழ்வுகளிலும் பல்வேறு நிகழ்வுகளினை மேடையேற்றி பாராட்டி னைப் பெற்றுள்ளார். அண்மையில் முழங்காவிலில் நடைபெற்ற மாகாண வருடப்பிறப்பு விழா நிகழ்வில் இந்நிகழ்வுகளினை மேடையேற்றி பாராட்டினைப் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

## தங்கவேலாயுதம் பரமானந்தம்



பொலிகண்டியைச் சேர்ந்த தங்கவேலாயுதம் பரமானந்தம் ஆகிய நான் 1990ம் ஆண்டு சாண்டோ M.துரைரத்தினமண்ணா அவர்களிடம் சென்று அவருடைய பயிற்சியிலேயே இணைந்து கொண்டேன். மேலும் அவருடன் இணைந்து பல சாதனைகளைப் புரிந்து வந்தேன். 1993ம் ஆண்டு பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட மாபெரும் விளையாட்டுப் போட்டியிலேயே குதிரை வேகம் கொண்ட இரு மோட்டார் சைக்கிள்களை எதிரும் புதிருமாக ஓட முயன்ற வேளை கழுத்திலே கயிறிட்டு இழுத்து நிற்பாட்டினேன். அந் நிகழ்வை செய்தமைக்காக ஆசான் அவர்கள் அவ் மேடையிலேயே தன்னுடைய மாணவர்களிலே சிறந்த மாணவனாக பாராட்டிக் கௌரவித்தார். அதன் பின்னர் பல இடங்களில் அவருடன் சேர்ந்து சாதனைகளை நிகழ்த்தி வந்தேன்.

அவரது மறைவிற்குப் பின்னர் அக் கலையை மறைய விடாமல் எனது தலைமையில் புதிய மாணவர்களுடன் நானும் சேர்ந்து அவரது புகழை நிலைநாட்டினேன். அந்த வகையில் 1999ம் ஆண்டு முள்ளாணிப்படுக்கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருந்து ஆட்களுடன் கூடிய இரு உழவு இயந்திரத்தை தொடரணியாக ஏற்றினேன். 2000ம் ஆண்டு பொலிகண்டி மக்கள் படிப்பக விழாவிற்காக நடைபெற்ற நிகழ்வில் தொடராக இரு லொறிகளை ஏற்றியுள்ளேன். அந் நிகழ்விற்காக பருத்தித்துறை பிரதேச செயலளர் சிவசாமி ஐயா அவர்களால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2001ம் ஆண்டு கரவை நவசக்தி சனசமூக நிலைய விளையாட்டுக்காக எனது மாணவர்களை முன்னின்று நடாத்தி வீரதீர செயல்களை நடாத்தியமைக்காக பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதே வருடம் (2001) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட விழாவில் செடில் குத்தி கயஸ் வாகனத்தினை இழுத்த நிகழ்விற்காகவும் எனது மாணவர்களைக் கொண்டு பல வீரதீர சாதனைகளைச் செய்வித்தமைக்காகவும் அதனைப் பாராட்டி "Chief Organizer of Skill" இப் பட்டத்தை வழங்கி பல்கலைக்கழகம் கௌரவித்தது. சில கால இடைவெளியின் பின்னர் மீண்டும் எனது மாணவர்களின் வரிசையில் ஒரு புதிய திருப்பமாக பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழக மாணவர்களுக்கு எனது திறமையின் பொருட்டு குறுகிய காலத்துள் பல வீரதீர சாதனைகளை அரங்கேற்றினேன். அந் நிகழ்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் சஞ்சீவன் அவர்கள் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவித்தார். பாரதி விளையாட்டுக்கழகத்தினால் விரதீர சாதனைகளை நிகழ்த்திய மாணவர்களால் "வல்லமை தந்த வள்ளல்" என வாழ்த்துமடல் வழங்கி கௌரவித்தார்கள்.

இன்று வரை 80 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சியளித்து எனது அன்பிற்கும் பண்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஆசானாகிய சாண்டோ M.துரைரத்தினம் அண்ணா அவர்களின் பாதையில் புதுப்புது மாணவர்களை இணைத்து என் வாழ்நாள் உள்ள வரை இப் பணியினைத் தொடர்வேன். என்னை நாடி வரும் எந்த கழக விரர்களாயினும் எவ்வித வேற்றுமையும் இல்லாமல் எந்த வித சலுகையினையும் எதிர்பாராமல் பயிற்சி கொடுத்து வருகின்றேன்.

"எனது குருவின் பெயரை என்றும் மழுங்க விடாமல் அவரின் பாதையிலே....."
"தமிழர்களின் பாரம்பரிய வீரதீர விளையாட்டுக்களில் ஒன்றான இக் கலையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதே எனது இலட்சியம் ஆகும்.

**வல்வெட்டித்துறை சோதிசிவம்**



வல்வெட்டித்துறையின் பிரபல சிலம்ப ஆசானாக விளங்கியதுடன் சிலம்பம், தீப்பந்த விளையாட்டு, மழு, சுருள் வாள் விளையாட்டு போன்றவற்றில் திறமையானவராக விளங்கினார். இவர் வீச்சுக்கலை வகைகளை துறை போக கற்று கீழ்வரும் வீச்சுக்களான

1. அலங்காரம்
2. கலியாண வரிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. துளுக் காண்டம்
4. குறவஞ்சி
5. மறுக்கானம்
6. பனையேறி

என்பவற்றை தமது மாணவர்களிற்கும் கற்பித்து மாணவப் பரம்பரையை உருவாக்கியுள்ளார். இவருடன் இணையாக சிலம்ப விளையாட்டினைப் பயின்றவர் பயில்வான் சோமுவின் மகன் பழனிவடிவேல் இவரது மாணவப் பரம்பரை கீழ் வருமாறு.

1. சூரசங்காரம்-பொலிகண்டி
2. தில்லையம்பலம் தவராஜா (தில்லை சிவலிங்கம் பொலிகண்டி)
3. மா.இரத்தினசோதி- பருத்தித்துறை
4. பிரபு
5. கணேசமூர்த்தி (பருத்தித்துறை)
6. பத்தினிக் குமார் (வெளிநாடு)
7. ரவி (தற்போது கரவெட்டி)
8. வைரமுத்து யோகநாதன் போன்றோர்களை குறிப்பிடலாம்.

**தில்லையம்பலம் தவராஜா (தில்லை சிவலிங்கம்)**



பொலிகண்டியில் பிறந்த இவர் பிரபல சிலம்ப ஆசான் சோதிசிவத்தின் மாணவராவார். இவர் தனது 8வது வயதிலிருந்து முதல் குரு பழனியிடமும் பின் சோதிசிவம் மாஸ்டரிடமும் சிலம்பு , தீப்பந்தம், மழு , சுருள் வாள் போன்ற கலைகளை முறையாக கற்றதுடன் பிரதேசத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தி பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

1974ல் நடைபெற்ற தமிழாராட்சி மகாநாட்டிற்கு நல்லூரிலிருந்து வீரசிங்கம் மண்டபம் வரை தமது வித்தைகளைக் காட்டி பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இவர் தனக்கென மாணவர் பரம்பரையை உருவாக்கியுள்ளதுடன் இவரது முதன்மை சீடனாக சின்னக்கிளி-மந்திகை என்பவரையும் குறிப்பிடுகிறார்.

இவர் தனது பொலிகை மறவர் கலைக் குழுவினூடாக வருடாந்தம் போர்த்தேங்காய் உடைத்தல் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றார். இவரது குழுவினர் இந்த வருடம் முழங்காவிலில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் நடாத்தப்பட்ட வருடாந்த வருடப்பிறப்பு விழாவின் பராம்பரிய விளையாட்டு போட்டிகளில் ஒன்றான போர்த் தேங்காய் உடைத்தல் போட்டியில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கணேசமூர்த்தி கவீந்திரன்**

பொலிகண்டி மேற்கு செம்மீன் விளையாட்டுக்கழக சாண்டோ பயிற்சி ஆசிரியரான இவர் சாண்டோ M.துரைரத்தினத்தின் மாணவராவார். 16வது வயது முதல் பயிற்சியில் ஈடுபட்ட இவர் பாரம் தூக்கும் ஜிம் பயிற்சியையும் சாண்டோ விளையாட்டுக்களையும் கற்று வந்தார். 200cc மோட்டர் வாகனத்தை பற்களால் இழுத்துப் பிடித்ததுடன் 1மைல் தூரத்திற்கு வான் ஒன்றினை தலைமுடியால் இழுத்தும் சென்றார். மேலும் 2மைல் தூரம் கன்டர் ஒன்றினை வாயால் இழுத்தும் சாதனை படைத்தார்.

வெற்று உடம்பில் உழவு இயந்திரம், மினிபஸ், இசூஸ் லொறி, ஆட்களை ஏற்றிய உழவு இயந்திரம் என்பவற்றை ஏற்றியதுடன் கன்டர், எல்ப், உழவு இயந்திரம் என்பவற்றையும் தொடர் வாகனமாகவும் எற்றியுள்ளார். மேலும் ஆட்கள் ஏற்றிய தொடர் உழவு இயந்திரத்தை மார்பில் ஏற்றி முடித்ததும் தொடர்ந்து 38kg குண்டினை வயிற்றில் ஏந்தியும் சாதனை படைத்துள்ளார். அத்துடன் வடமராட்சி ஆணழகன் தெரிவுப் போட்டியில் பங்கு பற்றி 2ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

மேலும் தனக்கு மேலே நாலு பெரும் நாலு கல்லும் வைத்து ஒவ்வொரு கல்லாக உடைத்தும் சாதனை படைத்தார். தனது குருவின் மறைவிற்குப் பின்னர் தனக்கென மாணவர் பரம்பரையை உருவாக்கியதுடன் பெண் வீராங்கனைகளையும் உருவாக்கியுள்ளார். இவரது மாணாக்கர்கள் சாவகச்சேரி, மடு, கோண்டாவில், முழங்காவில் போன்ற இடங்களில் வீரதீர சாதனைகளை நிகழ்தியும் உள்ளனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

எமது பிரதேசத்தில் பல்துறை சார்ந்தவர்கள் மல்யுத்த வீரர்கள், கராத்தே வல்லுனர்கள், சிலம்படி வீரர்கள் மற்றும் இலக்கிய மேதைகள் இசைவிற்பன்னர்கள் நாடக வல்லுனர்கள் என பலர் சிறந்த தடம் பதித்தவர்கள் எம்மிடையே இருக்கின்றனர். பல விழாக்களிலும் மேடைகளிலும் உரிய பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் கௌரவம் பெற்றுக்கொண்டு இருக்கின்றார்கள் பெறவுள்ளார்கள். பாரம்பரிய விளையாட்டுக் கலைகள் பெருமளவுக்கு கிராமப்பக்கங்களில் தான் வளர்ந்து வரவதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இன்றைய கிராமங்கள் நகரங்களின் சூம்பிய வால்களாகிவிட்டன என்பது தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் ஜெயமோகனின் கருத்தாகும். இதில் அதிகளவு ஆழ்ந்த கருத்தும் அர்த்தமும் காணப்படுகின்றது.

எமது பிரதேசத்தில் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் இருந்து பலர் வெளிநாடுகளில் வசிப்பதாலும் எமது கிராமங்கள் உலகமயப்படுத்தலினைவாக வேறுபட்ட சிந்தனைகள் விருப்பங்களுக்கு உள்வாங்கப்பட்டிருப்பதாலும் பல வகையில் தனித்துவங்களை இழந்து செல்கின்றன. இதனால் பாரம்பரிய செயற்பாடுகளை ஊக்குவிக்கக் கூடிய முறையில் புதிய தோற்றங்களை தோற்றுவிப்பவர்களை காணமுடியாத சூழல் உருவாகிக் கொண்டு வருகின்றது. சர்வதேச உணர்வுகள் கிராமங்களுக்கு வந்துவிட்டன. ஆகையால் கிராமிய மட்டங்களில் பண்பாட்டு உணர்வகள் எழுச்சி பெற வேண்டியதன் தேவை உணரப்பட வேண்டிய காலம் உருவாகி இருக்கின்றது. அதிகமான முன்னைய கழகங்கள் வலுவின்றி காணப்படுவதனால் அவற்றை மீள வலுப்படுத்துவது எமது முக்கிய கடமையாகும்.

*******


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் சித்த மருத்துவப் பின்னணி

வைத்தியர் K.K.யோகநாதன்
அதிபர்,
யா/சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

தொண்டமனாறு முதல் வலிக்கண்டி வரை பரந்து செறிந்துள்ள பிரதேசத்தை உள்ளடக்கியதாக எமது பிரதேச செயலர் பிரிவு விளங்குகிறது.

35 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட இப் பிரதேசத்தில் நீண்ட காலப் பின்னணியில் கிராமங்கள் தோறும் வாழ்ந்து வந்த பல வைத்தியர்களுடைய வரலாறுகளையும் அவர்களது சேவைகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு.

மேலைத்தேய வைத்திய வசதிகள் மிகவும் அரிதாக இருந்த அல்லது இல்லாத காலப்பகுதியில் வாழ்ந்து மக்களது மனநம்பிக்கைகளுக்குரிய வைத்திய சேவையை தமது கிராமங்களிலேயே நிறைவேற்றக்கூடியவர்களாகச் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் காணப்பட்டுள்ளனர்.

இவ் வைத்தியர்கள் பலர் மிகவும் பிரபல்யமான சேவையை வழங்கி எல்லா வகையான நோய்களிற்கும் சிகிச்சையளித்து மக்களின் வாழ்க்கைச் செல் நெறிகளில் தனியான இடம் பிடித்திருக்கின்றார்கள். எந்தக் கிராமத்தில் சென்று விசாரித்தாலும் மக்களால் பிரஸ்தாபிக்கப்படும் வைத்தியர்களை விதந்துரைத்தே பதிலளிக்கின்றார்கள்.

இம் மலரில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த சுதேச வைத்தியர்களது விபரங்கள் இடம் பெறுவதற்காக வடமராட்சி வடக்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டு வினாக்கொத்துப் படிவம் வழங்கப்பட்டுச் சேகரித்த தகவல்களில் ஒவ்வொரு கிராமத்திலும் சாதாரணமாக ஒவ்வொரு துறையிலும் கை தேர்ந்தவர்கள் இருந்தமை அறியக் கூடியதாகவுள்ளது.

பருத்தித்துறை நகரை அண்டிய பகுதிகளில் வல்லிபுரப்பரியாரியாரின் பெயரோடு ஒரு வீதியும் உள்ளது. இவர் மூன்று தலை முறைகட்கு முந்திய சேவையில் கட்டு, புண், கரப்பான், சொறி, சிரங்கு, தேமல் வகைகள் எல்லாவற்றிற்குமான வைத்தியத்தில் கை தேர்ந்த தன்மை மகத்தானது. இன்னும் அவரது பேரனாரால் இது காப்பாற்றப்படுகிறது.

நல்லூர் சங்கிலியன் தோப்புச் சூழலில் வாழ்ந்து வந்த பிரபல்யமான பாரம்பரிய வைத்தியக்கலை மரபினரில் ஒருவரான தம்பிராசாப் பரியாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறையில் ஆயுர்வேத மருந்துக்கடையை நிறுவி இங்குள்ள வைத்தியர்களை ஊக்குவித்துள்ளார். இன்று குமாரவேல் மருந்துச்சாலை என்பது அது தான்.

பருத்தித்துறை ஒரு துறைமுகமாக விளங்கியதால் வைத்தியர்களின் வளர்ச்சிக்குரிய வாய்ப்பாக இது காணப்பட்டிருக்கின்றது. தட்டுப்பாடான மருந்து வகைகள் இலகுவாக இங்கு கிடைப்பதற்கு இது வாய்ப்பாக இருந்திருக்கிறது.

பருத்தித்துறைச் சிவன்கோவிலோடு தொடர்புடைய செட்டிமார்களில் பிரபல்யமான வைத்தியராகப் போற்றப்பட்ட செட்டி கந்தையா பரம்பரையைச் சுட்டலாம். இவரின் பேரன் Dr.பத்மநாதன் இதே துறையில் மிகுந்த பிரபல்யமான குழந்தைகளின் வைத்தியராகத் திகழ்ந்து 2013 இல் காலமானார்.

தும்பளைக்கிராமத்தின் மேற்குப்பகுதியில் சோதிடர்கள், வைத்தியர்கள், தமிழ்ப்புலமையாளர் பரம்பரை பல தலைமுறைகளாக வாழ்ந்து வருவதாகவும் இப்பரம்பரை பற்றிய தகவல்கள் பல தலைமுறையாகப் பேணப்பட்டு வருவதாக நீண்ட காலத்தின் முன்பே அறிய முடிந்தது. ஆழ்வார் சந்திரவர் பரமானந்தர் என்பவரது 7 பிள்ளைகளின் பரம்பரையினரே இக்கிராமத்து மக்களாவார்.

இக்கிராமத்தில் வாழ்ந்து 1946ல் புகையிரத விபத்தில் மரணமான மிகப்பிரபலம் பெற்று விளங்கிய கந்தையாபிள்ளை என்பவரது மரணம் குறித்த இரங்கற்பாக்கள் நூலைக் காணமுடிந்தது. இதன் மூலம் கிடைத்த தகவல் வருமாறு. கந்தப்பர் பெயர் கொண்ட வைத்தியர் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரது ஆண்மக்களான ஆறுமுகம் (சின்னையா), சின்னப்பு என்னும் பெயர்கள் கொண்ட இரு வைத்தியர்கள் 19ம் நூற்றாண்டில் பிறந்து 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகவும் பிரபலமாக வாழ்ந்து பெரும் பொருளீட்டினர் என்பதுடன் கந்தப்பரது மகள் வழிப்பேரன் கந்தையா பிள்ளைக்குச் சின்னப்பு என்பவர் வைத்திய நுணுக்கங்களைக் கற்பித்து வந்ததாகவும் சின்னையா வைத்தியர் காலமாக அவரிடம் இருந்த வைத்தியர் ஒரு மகளைப்பெற அவரது மகள் பொன்னம்மாவைக் கந்தையா தானே முன் வந்து திருமணம் செய்து மிகவும் பிரபல வைத்தியராக வாழ்ந்தார் என்பதை அந்நூல் மூலம் அறியமுடிகிறது. அவர் சகோதரி மகன் செல்வராசா என்பவரைத் தன்னுடன் வைத்திருந்து மகளையும் திருமணம் செய்து கொடுத்தார். அவரது மகன் சதாசிவம்பிள்ளையும் வைத்தியரே. இவரது மகள்வழிப் பேர்த்தி இப்போது சித்தவைத்தியப் பட்டதாரி மாணவியாக உள்ளார்.

இவர்களை விடப் பின்வரும் பெயர்களையுடையோர் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைத்தியர்களாயிருந்தனர். அமரர்கள் கதிர்காமு , சின்னையா (உ-ம்): கிருஷ்ணபிள்ளை , சோதிடரும் வைத்தியருமாகிய பரமானந்தர் அவர் மகன் சந்திரசேகரம் இவரது மகள் வழிப் பேர்த்தி சித்தவைத்தியப் பட்டதாரியாக அரச வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றார். ஆறுமுகம் , சிதம்பரப்பிள்ளை ஆகியோர் அடுத்த தலைமுறையினராக பின்வருவோர் வைத்தியர்களாக இருந்தனர். வயது ஒழுங்கில் அமரர்கள் அண்ணாமலை, சபாரத்தினம், செல்வராசா, சதாசிவம்பிள்ளை, குமாரசாமி ஆகியோர் அடுத்த தலைமுறையில் செல்வராசா மகன் திருவாளர் சுந்தரமூர்த்தி என்பவரே எம்மால் அறியப்பட்டவர்கள். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கு முன் வாழ்ந்தவர்கள் பற்றியும் பரம்பரை தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவேட்டில் தேடி அறிய முடியும்.

பருத்தித்துறை நகர் சார்ந்த இரண்டாம் குறுக்குத் தெருவில் திரு.செஸ்டி-பிலிப்பு (செல்லத்தம்பி) என்ற பெயரோடு 1950 ஆம் ஆண்டிலிருந்து சாலவிதமான முறிவு, நெரிவு, கண்டல், வாதம், தசைப்பிடிப்பு ஆகிய நோய்களுக்குச் சிகிச்சை அளித்து வந்துள்ளார்.

மூன்றாம் குறுக்குத் தெருவில் சர்வாங்க வைத்தியராக இருந்த காத்தி வேலர் (குணுவர் பரியாரியார்) மகப்பேற்று, தடிவைத்தியம், மாந்திரீகம் போன்ற வைத்தியத்திலும் பிரபல்யம் வாய்ந்தவராக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இவர் 1945 ஆம் ஆண்டின் முன் இந்த இடத்தில் தனது வைத்திய சேவையை மேற்கொண்டுள்ளார்.

இப் பகுதியில் வேறு வைத்தியார்களும் இருந்துள்ளார்கள். அவர்கள் பற்றிய பூரண தகவல்களைப் பெறக்கூடிய சந்ததியினரை அடையாளம் காண்பதிலுள்ள சிரமம் காரணமாகத் தவிர்த்துக்கொள்ளப்படுகிறது.

தம்பசிட்டிப் பகுதியிலும் பல வைத்தியர்கள் இருந்துள்ளனர். அவர்களில் சின்னத்துரை வைத்தியர் மிகவும் பிரபல்யமானவர் குழந்தைப்பிள்ளை ( பாலரோகம்) சிகிச்சையில் இவருடைய பெயரைக் கிராமத்தில் தெரியாதவர்களே இல்லை எனலாம். இவருடைய மகன் சச்சி வைத்தியரென எல்லோராலும் அழைக்கப்படுபவர் தற்போதும் சிகிச்சையளித்து வருகின்றார். இவர் வடமராட்சியில் சிறந்த வைத்தியரெனப் பெயர் பெற்றவர்.

இரண்டு வரிகளில் இவரை ஆய்வு செய்ய முடியாது காலம் கனிந்து வரும் போது சந்தர்ப்பம் கிடைத்தால் இவருடன் மேலும் தவறவிட்ட பல சுதேச வைத்தியர்களின் தகவல்களை ஆவணப்படுத்த முயற்சிப்போம்.

அல்வாய் வடக்குப் பகுதியில் வைத்தியர் விக்னேஸ்வர மூர்த்தி அவர்கள் திரட்டிய தகவல்களின் படி துறை போந்த பல வைத்தியர்கள் வசித்து வந்த வரலாறுகள் திரட்டப்பட்டுள்ளன.

திரு.சி. நாகமணி அவர்கள் 1917 ஆம் ஆண்டு பிறந்த மாறாம்புலம் அல்வாய் வடக்கில் வசித்து வந்தவர். இவர் கைநாடி சாஸ்திரத்தில் சிறந்து விளங்கியுள்ளார். 1984 ஆம் ஆண்டு இவர் சிவபதமடைந்து விட்டார்.

அல்வாய் வடக்கு சக்கோட்டையில் பல மாந்திரிகர்கள் வாழ்ந்திருக் கின்றார்கள். வைரவன் சின்னார், வைரப்பிள்ளை முருகேசு, சிக்கார் வைரப்பிள்ளை இவர் மாந்திரியத்துடன் சர்வாங்க வைத்தியத்திலும் ஈடுபட்டுள்ளார். முறிவு, நோவு, விஷவைத்தியம் போன்றவற்றில் கைதேந்தவர். வைரப்பிள்ளை பச்சைமால் இவர் பரம்பரை வைத்தியர். இவர் 2014 இல் சிவபதமடைந்துள்ளார். அல்வாய் வடக்கு, வயல் என்னும் முகவரியில் வசித்து வந்த பசுபதி கார்த்திகேசு அவர்கள் 1985ல் இறந்துவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இவரும் சிறந்த சுதேச வைத்தியராக இப் பகுதி மக்களுக்குச் சேவையாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமு பெருமாள் அவர்கள் 27ஆம் ஆண்டு பிறந்து 2007ம் ஆண்டு வரை வாழ்ந்த மாறாம்புலம் அல்வாய் வடக்கைச் சேர்ந்த சுதேச வைத்தியத்தில் ஈடுபட்டு வந்தவர். இவர் விஷவைத்தியம், எலும்பு முறிவு, நோவு போன்ற வியாதிகளுக்கு வைத்தியசேவை செய்ததாக அறியப்படுகின்றது.

வைரவிப்பிள்ளை நடராசா அவர்கள் சக்கோட்டை, அல்வாய் வடக்கைச் சேர்ந்தவர். இவர் முறிவு நோவு விச வைத்திய சேவைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பரம்பரை வைத்தியத்தில் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அல்வாய் வடக்குப் பகுதியில் பத்திற்கு மேற்பட்ட வைத்தியப் பரம்பரை இருந்ததாக திரட்டிய தகவல்களினூடாக அறியமுடிகின்றது. தற்போது பாரம்பரிய அல்லது சுதேச வைத்தியத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அருகியே வருகின்றது. மேலைத்தேய வைத்தியத்துறையின் வளர்ச்சி,மக்களின் வெளிப்பகட்டு, வசதி வாய்ப்புக்கள், ஆங்கில சுதேச வைத்தியத்தின் தன்மை போன்றவற்றால் இன்று மழுங்கடிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில் சுதேச வைத்தியத்துறையின் ஊக்குவிப்புக்கள் மற்றும் விளம்பரங்கள் வைத்தியர்களின் பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றையும் இதன் பின்னடைவிற்குக் காரணமாகக் குறிப்பிடலாம். இதனை டாக்டர் முத்தையா ஜோன் தனது சித்த வைத்திய சிகிச்சைக்கிரமம் என்ற நூலிற்கு அணிந்துரை வழங்கிய வித்துவான் பண்டிதர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் "நாகரிகம் அல்லாதவற்றை நாகரிகம் என்று கொண்டாடித் தடுமாறுவது இன்றைய உலகம்." "கானல் எனும் பேய்த்தேரை தண்ணீர் என்று விபரீதமாக எண்ணிக் குடிப்பதற்கு ஓடும் மான் போல ஓடுகின்றது. அதனால் வைத்திய சாஸ்திரத்திற் சிறந்த வைத்திய முறைகளும் கவனிப்பாரற்றுக் கைவிடப்படுகின்றனவே அன்றி இழக்கப்பட்டு வருதலும் கவலைக்கும் வெட்கத்திற்கும் இடமானதொன்றோ" , என்றும் மூலிகைகளுட் பல குறைவடைந்து வருகின்றன. சில மூலிகைகளின் பெயர்களையேயன்றி நன்கு அறிந்து கொண்டவர்களும் இன்று அருகி வருகின்றனர். போலிச் சக்களத்திப் பூண்டுகளைக் கையாள்வதும் சித்த வைத்தியம் மங்கிப் போவதற்கு ஒரு காரணமாகும்." என்று குறிப்பிட்டுள்ளார். இவரது புத்தகம் இன்று நூலகம் வலைத்தளத்திலே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் சித்தமருத்துவத்துறை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதற்கான வைத்தியத்துறையாக மாற்றமடைந்துள்ளமை இதனைத் தக்கவைக்கக் கூடியதோர் தீர்க்கதரிசன நடவடிக்கை என்று குறிப்பிடலாம். ஒளிப்படக்கருவி, துல்லிய கதிர்வீச்சுப் படக் கருவிகள், பரிசோதனைக் கருவிகள் எதுவுமில்லாத காலப்பகுதியில் ஞானத்தினால் உதித்த நாடிசாஸ்திரத்தின் மூலமும் தூதன்குறி போன்றவற்றினாலும் பல்வேறு நோய்களை நிர்ணயம் செய்து சிகிச்சை அளித்துள்ளார்கள் இன்றும் அளித்துக்கொண்டும் இருக்கிறார்கள். முறிவு, நெரிவு, நரம்புச் சுருக்குகள் ஆகியவற்றை மிக நேர்த்தியாகக் கண்டறிந்து சிகிச்சை வழங்கிய பல வைத்தியர்களை இன்றும் மக்கள் மறந்துவிடவில்லை. புலோலி கிழக்கு வராத்துப்பளை முறிவு,நெரிவு வைத்தியர் திரு.சு.செல்லையா அவர்களின் ஆற்றல் மிகவும் விதந்துரைக்கப்படுகிறது. இவரிடம் தென்னிலங்கையிலிருந்து மக்கள் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இவரது மகன் செ.புவனேந்திரம் இவரின் வைத்திய சேவையைத் தொடர்ந்தாராயினும் தற்போது அவரும் இறைவனடி சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தினால் இது அவரது கும்பத்தாரால் அயலவர்களுக்கான சேவையாகக் குறுகிவிட்டது. வராத்துப்பளையில் திரு.செல்லத்துரை என்பவரும் முறிவு நெறிவு வைத்தியச்சேவையில் ஈடுபட்டதாகவும் இவரது மகன் இதனைத் தற்போது முன்னெடுப்பதாகவும் அறியமுடிகின்றது.

கற்கோவளம் டாக்டர் V.முத்தையா ஜோன் அவர்கள் ஓர் சிறந்த ஆசிரியர். இவர் பதியப்பெற்ற சிறந்த வைத்தியராகவும் பணிபுரிந்துள்ளார். வடமராட்சியில் ஓர் தமிழ் வைத்திய சங்கம் 1972 ஆம் ஆண்டளவில் இயங்கிவந்திருக்கின்றது. இதற்கு டாக்டர் கே.எஸ்.கார்த்திகேசு அவர்கள் தலைவராக இருந்திருக்கின்றார்.

டாக்டர் முத்தையா ஜோன் அவர்கள் எழுதிய சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம் எனும் தமிழ் வைத்திய நூல் வெளியீட்டிற்கு வடமராட்சித் தமிழ் வைத்திய சங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதே நேரத்தில் தம்பசிட்டி பருத்தித்துறை திரு.சி.சின்னத்துரை வைத்தியர் அவர்கள் ஆசிரியர் அறிமுக உரையினை வழங்கி யிருக்கின்றார். இதில் ஆங்கில வைத்தியத்துடன் சவால்விட்டு மாற்றக்கூடிய பல மருந்து வகைகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலிலுள்ள மருந்து வகைகளில் “இராமபாணம்” எனும் மருந்து மாற்றமுடியாத புடைகரப்பன், வெடிப்புற்று, சூலைப்புற்று,வெண்குஷ்டம், விசநீர்ப்புற்று ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டு வெற்றி கண்டுள்ளதாக வைத்தியரும் அதிபருமாகிய க.க.யோகநாதன் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

கற்கோவளத்தில் பாடசாலை அதிபராகவும் அதே நேரத்தில் கண்டத்திற்கு மேற்பட்ட உறுப்புக்களில் ஏற்படுகின்ற எந்த நோயாக இருந்தாலும் அவற்றை மாற்றவல்ல மருந்துமுறைகளை கையாண்ட வைத்தியர் ஆனந்த உபாத்தியார் அவர்களை எல்லோரும் புகழ்ந்து பேசுகின்றார்கள். இவர் கற்கோவளத்தில் தனது சிகிச்சை நிலையத்தை நிறுவி பிரபல்யமான வைத்தியத்துறையில் ஈடுபட்டு வந்தார். அவருடைய பரம்பரையினர் இன்று இதனைத் தொடர்வதாக தகவல்கள் கிடைக்கவில்லை. இலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலிருமிருந்து மக்கள் இவரை நாடி பயன்பெற்றிருக்கின்றார்கள்.

அத்தோடு மயில்வாகனம், வேலுமயிலும் ஆகிய பெயர்களிலும் கற்கோவளம் புலோலி சார்ந்த பிரதேசங்களிலும் வைத்தியர்கள் சுதேச வைத்தியத்துறையில் ஈடுபட்டதாகவும், அவர்கள் சந்ததியினர் என அவர் குறிப்பிடப்படுகின்றது.

பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்திய முறையினை செய்துவந்துள்ள மிகப் பெரிய வைத்திய பரம்பரையினரான வடமராட்சி வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட தொண்டமானாற்றில் ஏறத்தாழ 15 தலைமுறைகளிற்கு மேலாக பாரம்பரிய சித்த ஆயுள்வேத வைத்திய முறையினை செய்துவந்துள்ள மிகப் பெரிய பரம்பரையினர் சில பெயர்களாவன. ஆண்டியப்பர் பரியாரியார், பூபாலர்பரியாரியார், ஆறுமுகம் பரியாரியார், கனகசபை பரியாரியார், சின்னத்துரைப் பரியாரியார்,செல்லக்கண்டு பரியாரியார், நடராசப்பிள்ளை பரியாரியார், விநாசித்தம்பிப்பரியாரியார், சுப்பிரமணியம் பரியாரியார், பெண் வைத்தியர்களான சிரோண்மணி, சின்னமணி, சிவமணி, வைத்தியர் விசாகரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவர்களின் சந்ததியினர் இன்றும் வைத்தியர்களாக சேவையாற்றி வருகின்றனர். இவ் வைத்திய பரம்பரையினர் வைத்தியத்துறையில் சிறந்து விளங்கியதற்கு ஆதாரமான புனித ஸ்தலமான தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருவூஞ்சல்ப்பாட்டு, எச்சரிக்கைப்பாட்டு, பராக்கு ஆகிய பாடல்கள் எச்சரிக்கை புலவர் ஆண்டியப்பர் பரியாரியார் சின்னப்பரியாரியார் அவர்களால் இயற்றப்பட்டு பாடப்பட்டுள்ளமையும் இன்றுவரை செல்வசந்நிதி முருகன் ஆலய பெருந்திருவிழாவில் 5ம் திருவிழாவிலிருந்து 15ம் திருவிழா வரை பாடப்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்லாது ஒவ்வொரு ஆண்டின் கார்த்திகை மாதத்தின் இறுதி ஞாயிறு ஆண்டியப்பர் பூசை தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

சுதேச வைத்தியத்துறைபற்றி கட்டுரை ஒன்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் வெளியிடப்படுகின்ற மலரில் இடம்பெறவேண்டுமென கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வசுகுணா சேனாதிராஜா அம்மையார் வடமராட்சி வடக்கு சுதேச வைத்தியத்துறை தலைவர் திரு க.க.யோகநாதன் அவர்களை அணுகிய போது சபை கூட்டப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கி தகவல்கள் திரட்டப் பட்டது. இப்பெரும்முயற்சி தகவல்கள் சிறிதளவில் கிடைத்த காரணத்தினால் நினைத்தபடி திருப்தியான ஓர் கட்டுரையாக இதனைப் பாதுகாப்புச்சபை குறிப்பிடவில்லை. இருப்பினும் டாக்டர்கள் இ.ஜெகதீசன்(பருத்தித்துறை), மகேசன் விக்கேஸ்வரமூர்த்தி (அல்வாய்), வி.பா.சசீந்திரன்(தொண்டமானாறு) ஆகியோரினதும் அன்றைய ஒன்றுகூடலில் சமூகம் கொடுத்த ஏனைய வைத்தியர்களதும் ஆலோசனையுடன் கால அவகாசம் அற்ற நிலையில் இதனை உருவாக்கியுள்ளோம். இதில் பல வைத்தியர்களுடைய தகவல்கள் இடம்பெற வில்லை. ஆயினும் தொடர்ந்து இத் தகவல்களுடன் ஏனைய தவறவிடப்பட்ட வைத்தியர்களது தகவல்களோடு அடுத்த மலரை உருவாக்குவதற்கு நாம் உதவியுள்ளோம் என்ற நம்பிக்கையோடு ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்கி உதவிய,உதவ இருக்கின்ற அனைத்து ஆர்வலர்களிற்கும் நன்றிகூறி முடிவுறுத்துகின்றோம்.


உசாத்துணை நூல்கள் :

1. திரு.பா.இரகுவரன் ஆசிரியர் அவர்கள் எழுதிய “ஊரும் வாழ்வும்”

2. டாக்டர் முத்தையா ஜோண் அவர்கள் எழுதிய சித்தவைத்திய சிகிச்சைக்கிரமம்



சித்த வைத்திய
சிகிச்சைக் கிரமம்
[ஓர் குறிப்பு வழிகாட்டி]

டாக்டர் கே. எஸ். கார்த்திகேசு

வடமராட்சி தமிழ் வைத்திய சங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்டது

ஆக்கம்:
டாக்டர் V. முத்தையா ஜோன்
இளைப்பாறிய ஆசிரியர்
கற்கோவளம்—பருத்தித்துறை.
1-10-72

தகவற் குறிப்பு வழங்கியோர்:
திரு.செ.சிதம்பரநாதன்
(தும்பளை வைத்தியர் விபரம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேசத்தவரின் மதிநுட்பத்தினை உலகிற்குப் பறைசாற்றிய அன்னபூரணியின் அமெரிக்கப் பயணமும் அதன் பின்னரான தாஹிற்றிப் பயணமும்

பா.மீனாட்சிசுந்தரம்
காப்பாளர்,
அரும்பொருட் காப்பகம்,
வல்வெட்டித்துறை.

அன்னபூரணி என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட அன்னபூரணி அம்மாள் என்னும் இரட்டைப் பாய் மரங்களையும் ஒன்பது பாய்களையும் கொண்ட கப்பல், வடமராட்சி வடக்குப் பகுதியைச் சேர்ந்த, வல்வெட்டித்துறையை வதிவிடமாகக் கொண்ட சுந்தர மேத்திரியார் என்பவரினால் உள்ளூர் வேப்பமரம் , இலுப்பை மரம் என்பவற்றைக் கொண்டு 1930ம் வருடம் கட்டப் பட்டதாகும். இதன் நீளம் 89 அடி. கப்பலின் அணியத்துடன் (FAUXEL) முன் கோடியில் நீட்டப்பட்டு பாய்களுடன் இணைக்கப் பட்டுள்ள பகுதியின் (JIB-BOOM) நீளம் 33 அடி குறுக்குவிட்டம் 19 அடி.





W.A.ROBENSON

வில்லியம் அல்பேட் றொபின்சன் என்பவர் வட அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு கோடீஸ்வரர் சொந்தமாக ஒரு கப்பல் கட்டும் தளத்தை வைத்து மீன்பிடிக்கப்பல்கள், அழகான உல்லாசப் பயணப் படகுகள் என்பவற்றைக் கட்டியதுடன் கடலில் உல்லாசப் பயணத்தை மேற்கொள்வதிலும் நாட்டம் கொண்டவர். அன்னபூரணி கொழும்புக்கும் சென்னைக்கும் இடையே சென்று வரும் காலங்களில் அதனைக் கண்டு அதன் அழகில் மயங்கி எப்பாடுபட்டும் அதனைத் தனதாக்கிக் கொண்டு விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டார். அன்னபூரணி வல்வெட்டித்துறையில் கட்டப்பட்டு வல்வை வாசிகளே மாலுமிகளாக இருந்தபோதும் அதன் உரிமையாளர் இந்திய நாட்டின் தேவ கோட்டை என்னுமிடத்தைச் சேர்ந்த நாகப்பச் செட்டியார் என்பவராகும். வல்வையரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவேற்பிள்ளை என்பவர் கப்பல்களை வாங்குவதற்கும் விற்பதற்குமென இடைத்தரகராக இருந்தவர். றொபின்சன் அவரை அணுகி அவரையும் கூட்டிக்கொண்டு தேவகோட்டை சென்று நாகப்ப செட்டியாரிடம் விலைபேசி முடித்து அன்னபூரணியைத் தனதாக்கிக் கொண்டு விட்டார்.

அன்னபூரணியை விலை கொடுத்து வாங்கியதும் அதனை அமெரிக்கா கொண்டு செல்லப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. கப்பல் நாகப் செட்டியார் வசம் இருந்த போது அதன் தண்டயலாக இருந்த க.தம்பிப்பிள்ளை என்பவரே இதன் தண்டயலாகவும் இதர மாலுமிகளாக வல்வையைச் சேர்ந்தவர்களும் புதிய உரிமையாளரினால் அமர்த்தப்பட்டனர். அத்தோடு அன்னபூரணியின் பெயர் FLORENCE C ROBINSON என்று பெயர் மாற்றம் செய்ப்பட்டு 27.2.1937 ல் வல்வையிலிருந்து புறப்பட்டு கொழும்பு சென்றடைந்தது. பாய்களின் உதவி யுடன் செல்வதற்கு உகந்ததான காற்று வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் மேலும் அவசிய மேற்படும் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்து வதற்கு ஏதுவாக வாக்கர் அன் கொட்பனியின் உதவியுடன் கப்பலுக்கு யந்திரமும் பொருத்தப்பட்டது.


தண்டையல் க.தம்பிப்பிள்ளை

சகல வேலைகளும் பூர்த்தியானதும் 4.3.1937ல் கப்பல் கொழும்புத்துறை முகத்திலிருந்து க.தம்பிப்பிள்ளைத் தண்டயல் தலைமையில் இதர வல்வைக் கடலோடிகளான தா.சபாரத்தினம், ஐ.இரத்தினசாமி, க.நடராசா, சேது நவரத்தினராசா, சி.சிதம்பரப்பிள்ளை, பூ.சுப்பிரமணியம், ஐ.தில்லையம்பலம், சாண்டோ சங்கரதாஸ் ஆகியோருடன் பயணத்தைத் தொடங்கியது. இக் கடல் பிரயாணத்தில் கப்பலின் புதிய உரிமையாளரான றொபின்சன் அவர்களும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த குக்(Cook) என்பவரும் இணைந்து கொண்டனர்.

கொழும்பிலிருந்து புறப்பட்ட அன்னபூரணி 2000 மைல்களைக் கடந்து 23 நாட்களின் பின்னர் 27.3.1937ல் ஏடன் துறைமுகத்தில் நங்கூரமிட்டது. இச் சந்தர்ப்பத்தில் றொபின்சன் அவர்கள் அமெரிக்கா சென்று விட தம்பிப்பிள்ளைத் தண்டயலுடன் இதர மாலுமிகளான ஐ.தில்லையம்பலம், பூ. சுப்பிரமணியம் சேது நவரத்தினராசா, நடராசா, சாண்டோ சங்கரதாஸ் ஆகியோர் தாயகம் திரும்பி விட்டனர். ஏனையோர் கப்பலைப் பாதுகாக்கும் நோக்குடன் ஏடனிலேயே தங்கி விட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த இடங்களுக்குச் சென்றவர்களில் தம்பிப்பிள்ளைத் தண்டயலும், ஐ.தில்லையம்பலம், பூ.சுப்பிரமணியம் ஆகியோரும் றொபின்சனும் ஏழு மாதங்களின் பின்னர் ஏடன் திரும்பி வந்ததும் 18.10.1937ல் அன்னபூரணி ஏடனிலிருந்து புறப்பட்டு 14 நாட்களின் பின்னர் இந்துசமுத்திரத்தின் செங்கடல் வழியாக 1.11.1937ல் சூடான் துறைமுகம் சென்றடைந்தது. சூடான் துறைமுகத்தில் நாற்பது நாட்கள் தரித்துநின்றதன் பின்னர், அங்கிருந்து 13.12.1337ல் புறப்பட்டு 13 நாட்களின் பின்னர் சுயெஸ்ஸினை 26.12.1937ல் கப்பல் சென்றடைந்தது. 15 நாட்கள் சுயெஸ்ஸில் தரித்து நின்றதன் பின்னர் 9.1.1937ல் சுயெஸ்ஸிலிருந்து 120மைல் தூரமுள்ள சுயெஸ் கால்வாயூடாக 12மைல் தூரமுள்ள இஸ்மாலியா துறைமுகத்தை ஒரு நாளில் சென்று தரித்தனர். இவ்விடம் கப்பல் ஆட்டம் காணாமல் இருக்கும் பொருட்டு "ஞானப்பாரம்" என்று சொல்லப்படும் மண்மூடைகள் கப்பலில் ஏற்றப்பட்டன. 30.1.1938வரை இஸ்மாலியாவில் தங்கியிருந்த காலப்பகுதியில் எகிப்திய மன்னரின் திருமண ஊர்வலத்தை 20.01.1938ல் கண்டு களிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்ததாக மாலுமிகளில் ஒருவரான ஐ. இரத்தினசாமி தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். 30.1.1938ல் இஸ்மாலியாவிலிருந்து புறப்பட்ட அன்னபூரணி ஒரே நாளில் போட்செயிட்டைச் சென்றடைந்தது. 20.2.1938 வரை போட்செயிட்டில் தங்கியிருந்த சமயம் றொபின்சனுடைய கப்பல் கட்டும் தளத்தில் பிரச்சினை ஏற்பட்டமையால் அவர் அமெரிக்கா திரும்பி விடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இச்சமயத்தில் வேறு ஒரு கப்டனை வரவழைக்க ஒழுங்குகளை மேற்கொண்டதோடு எம்மை ஜிப்றால்டரில் சந்திப்பதாகவும் கூறி எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றதாக ஐ.இரத்தினசாமி தனது நாட்குறிப்பில் மேலும் பதிவு செய்துள்ளார்.

20.2.1938ல் போட்செயிட்டிலிருந்து புறப்பட்ட மூன்றாம்நாள் 23.2.1938 அன்று பலத்த காற்று வீசத்தொடங்கி காற்று மேலும் அதிகரித்து புயலாக வீசத்தொடங்கியது. இதனால் கப்பல் செல்ல வேண்டிய பாதையிலிருந்து விலகி 250 மைல் தூரம் வரை சென்றது. இதன் காரணத்தினால் கப்பலின் பாய்கள் சேதமாக்கப்பட்டதுடன் ஒரு பக்கத்து நங்கூரமும் அதன் சங்கிலியும் சேதமடைந்தது. இவ்வாறு புயலில் சிக்கிய கப்பல் ஒரு வழியாக 28.2.1938ல் பெய்ரூட்டை அடைந்தது. மறுதினம் நாம் கரையை அடைந்தபோது மேற்குறிப்பிட்ட புயலினால் நான்கு கப்பல்கள் கடலுள் மூழ்கியதாகவும் அவற்றில் மூன்று கப்பல்களின் மாலுமிகள் காப்பாற்றப்பட்டதாகவும் நாம் அறிந்து கொண்டோம் எனத் திரு.ஐ.இரத்தினசாமி தனது 1.3.1938திகதிய நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். புயல்வீசத் தொடங்கிய நான்காம் நாள் மாலுமிகள் அனைவரும் "கடவுளே, கதிர் வேல், அரோகரா, அரோகரா" என சத்தமிட்டதாகவும் தனது நாட்குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார். 10.3.1938ல் பெய்ரூட்டில் இருந்து யந்திரத்தின் உதவியுடன் புறப்பட்ட கப்பல் மூன்றாம் நாளில் யந்திர ஓட்டம் தடைப்பட்டு பயணம் நிறுத்தப்பட்டது. ஒருவாறாக பழுதடைந்த யந்திரம் திருத்தப்பட்டு கப்பல் பயணித்துக்கொண்டிருந்த போது மறுநாள் 13.3.1938 அள்று பலத்த காற்று வீசத்தொடங்கவே மறுநாள் 15.3.1938 அன்று ஹைப்பேலி துறைமுகம் சென்றுநங்கூரமிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் சேதமடைந்த கயிறுகள், பாய்கள் முதலானவற்றைச் செப்பனிட்டு **17.3.1038**ல் கப்பல் ஹைபேலியிலிருந்து புறப்பட்டுகிரேக்க நகரத்துக்குத் தென்புறமாக அமைந்துள்ள கிறீற் தீவின் கண்டியா துறைமுகத்தை **21.3.1938**ல் சென்றடைந்தது எம்முடன் இணைந்து கொண்ட வயது முதிர்ந்த கப்டன் சக்கலிஸ் இக் காலப்பகுதியில் சுகவீனமுற்றதைத் தொடர்ந்து எம்மிடமிருந்து விடைபெற்று தனது ஊர் செல்ல எமது வேண்டுகோளை ஏற்று அத்திலாந்திக்கடலைக் கடப்பதற்கு ஏதுவாக கப்டன் டொனால் ஏ.மக்குயிஷ் என்பவர் றொபின்சனின் ஏற்பாட்டில் **24.4.1938**ல் கப்பலில் எம்முடன் இணைந்து கொண்டார். **29.4.1938**வரை கண்டியாவில் தங்கியிருந்தகாலப்பகுதியில் மாலுமிகள் விண்பூட்டிய பட்டங்களைத் தயாரித்துப் பறக்கவிட்டதோடு புகைக் கூண்டுகளையும்வானில் பறக்கவிட்டனர். **29.4.1938**ல் கண்டியாவிலிருந்து புறப்பட்ட அன்னபூரணி மத்தியதரைக்கடல் ஊடாக **36** நாட்கள் பயணம் செய்து **2.6.1938**ல் ஜிப்ரோல்டர் சென்றடைந்தது. அவ்விடம் ஐ.தில்லையம்பலம் தாயகம் திரும்பிவிட கப்பலில் இலங்கை மாலுமிகள் **5** பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர். **9.6.1938**ல் ஜிப்ரோல்டறிலிருந்து புறப்பட்டு அத்திலாந்திக் சமுத்திரம் ஊடாக நான்கு நாட்கள் பயணம் செய்து போர்மியூடாவின் ஹமில்டன் துறைமுகத்தை அடைந்து மூன்று நாட்கள் தரித்து நின்றதன் பின்னர் **24.7.1938**ல் அவ்விடமிருந்து புறப்பட்டு இறுதியாக ஏழு நாட்கள் பயணம் செய்து தென் அமெரிக்காவின் மசாசூசெற்ஸ் மாநிலத்தின் குளோசெஸ்டர் துறைமுகத்தை **1.8.1938**ல் அன்னபூரணி சென்றடைந்து நங்கூரமிட்டது,

**27.2.1937**ல் வல்வையிலிருந்து புறப்பட்டபோது தன்வசம் இருந்த உலகப்படம், திசையறி கருவி, கடலின் ஆழத்தை அறிந்து கொள்ள உதவும் ஆழமானி என்பனவற்றை மட்டும் கொண்டு இந்துசமுத்திரம், அரபிக்கடல், செங்கடல், சுயெஸ்கால்வாய், மத்திய தரைக்கடல், பயங்கரமிக்க அத்திலாந்திக்கடல் ஊடாக பத்தாயிரம் மைல்களைத்தாண்டி( உலகத்தின் பாதி உருண்டையைப் பயணித்து) குளோசெஸ்டர் துறைமுகத்தில் நங்கூரமிட்டுசாதனை படைத்த வல்வை மாலுமிகள் கடலில் பயணம் செய்த மொத்த நாட்கள் **171** துறைமுகங்களில் தரித்து நின்ற மொத்த நாட்கள் **350** ஆகும்.


THE BOSTON GLOBE

Reviving the Old Days at Gloucester

VOYAGE ENDED BY BRIGANTINE

Rare Spectacle Provided by Arrival From Ceylon

அன்னபூரணி அமெரிக்கா சென்றடைந்ததும் அதன் விபரம் கப்பலின் படம் போன்றவை அமெரிக்கப் பத்திரிகையான BOSTON GLOBE என்ற நாளேட்டின் **2.8.1938** பதிப்பில் அதன் நிருபர் NAT A BARROWS என்பவரால் வெளியிடப்பட்டது.

வெளிநாட்டவரின் கப்பலை ஆங்கிலேயரிடமிருந்து வாங்கி சுதேச வர்த்தகத்துக்கு தமிழரான வ.உ.சிதம்பரம் அவர்கள் உபயோகித்த செய்தி பலரும் அறிந்ததொன்று ஆனால் வல்வை மண்ணில் வல்வை மேத்திரிமார்களினால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டு அமெரிக்கர் ஒருவரினால் வாங்கப்பட்டு அமெரிக்கா கொண்டு செல்லப்பட்ட விபரம் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒரு சிலருக்கே மட்டும் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அன்னபூரணி அமெரிக்கா கொண்டு செல்லப்பட்ட பின்னர் வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதியான குளோசெஸ்டர் துறைமுகம் அமைந்துள்ள அத்திலாந்திக் சமுத்திரம் ஊடாக, பனாமாக்கால்வாய் வழியாக பசுபிக்சமுத்திரம் அடைந்து மேற்குப் பகுதியான தாஹிற்றி வரை பயணம் செய்த விபரம் மிக மிகச் சிலருக்கே தெரிந்த விடயமாதலால் அதன் விபரமும் ஏனையவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக சுருக்கமாகத் தரப்படுகிறது.



அன்னபூரணியை றொபின்சன் அவர்கள் அமெரிக்கா கொண்டு சென்றுஅதனை YATCH என்று சொல்லப்படும் உல்லாசப் பயணம் செல்லக் கூடிய ஒரு படகாக உருமாற்றம் செய்ய எண்ணியிருந்த போதும் அந்த யோசனையைக் கைவிட்டு தாஹிற்று கொண்டு சென்று கொப்பறா ஏற்றுமதியில் ஈடுபடுத்தவிரும்பினார். தாஹிற்றி கொண்டு செல்லும் பிரயாணத்துக்கும் வல்வை யரான தம்பிப்பிள்ளைத் தண்டயலையே ஈடுபடுத்த விரும்பிய போது அவர் அதற்கு இணங்கா மையினால் STERLING HAYDEN என்பவர் கப்டனாக நியமிக்கப்பட்டு *22.11.1938*ல் அன்னபூரணி குளோசெஸ்டர் துறைமுகத்திலிருந்து ***11*** அமெரிக்கா மாலுமிகளுடன் பயணத்தை ஆரம்பித்தது.




தாஹிற்றி புறப்படும் சமயம் திசையறி கருவி SEXTANT என்னும் கோணமாணி CHRONOMETER என்னும் காலக் கணிப்பளவுக் கருவி, வரைபடம் போன்றவற்றைத்தவிர வேறு எந்த உபகரணங்களும் இருக்கவில்லை. இவ்வாறு கப்பலின் மாலுமிகளில் ஒருவரும் TAHITI BOUND என்னும் நூலை எழுதியவருமான DONALD J.LANGLEY என்பவர் குறிப்பிட்டுள்ளார். மழை பெய்யும் வேளைகளில் மழைநீரைச் சேமித்து வைத்து தமது தேவைகளுக்குப் பாவித்துக் கொள்வதற்கு ஏதுவாக கப்பலின் பிரதான அறையின் (CABIN) மேற்பகுதி வடிவமைக்கப் பட்டிருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னபூரணி பயணத்தை ஆரம்பித்த 3ம் நாள் 24.11.1938 அன்று காற்று பலமாக வீசத்தொடங்கியதோடு மேலும் பலமான இரைச்சலுடன் வீசத்தொடங்கியது. இதன் காரணத்தினால் கப்டனின் கட்டளைகளைக் கூட கேட்கமுடியாத நிலைமை ஏற்பட்டது. கப்பல் பாயின் உதவியுடன் சென்றமையால் அவை சுருட்டி வைக்கப்பட்டன. கடல் அலை 40 அடி உயரம் வரைக்கும் எழும்பியது. புயல் வீசத்தொடங்கிய நான்காம் நாள் 28.11.1938ல் கடல் அமைதி கொண்டது. கப்டனின் கணிப்பின் படி HURRICANE எனப்படும் இப்புயலானது கப்பல் செல்லவேண்டிய வழமையான பாதையிலிருந்து 500மைல்கள் வரை கப்பலை விலகிச் செல்ல வைத்துவிட்டது. 8.12.1938ல் கியூபாவையும் அங்கிருந்து 10.12.1938ல் ஜமெய்க்காவையும்சென்றடைந்து அதன் பின்னர் 19 நாட்கள் பிரயாணம் செய்து குளோசெஸ்ரர் துறைமுகத்திலிருந்து 2156 மைல்கள் கடந்து 27.12.1938ல் பனாமாக்கால்வாய் வந்தடைந்தது. பனாமா கால்வாயூடாக பசுபிக்கடலை அடைந்து 15.2.1939ல் 8196 மைல்களைக் கடந்து 86 நாட்களின் பின்னர் தாஹிற்றியை அடைந்து அன்னபூரணி அம்மாள் என்னும் FLORENCE C.ROBINSON நங்கூரமிட்டது.

**உசாத்துணை நூல்கள் :**


1) வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள் பாமா ராஜகோபால்.

2) வரலாற்றில் வல்வெட்டித்துறை பா.மீனாட்சி சுந்தரம்

3) Re-opening of north Ceylon Ports - S.Muththulingaswamy

4) TAHITI BOUND - DONALD J.LANGLEY

5) DIARY of A.Ratnasamy


*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை ச.வயித்தியலிங்கம்பிள்ளை

பா.மீனாட்சிசுந்தரம்

வடமராட்சி மண் பெற்றெடுத்த அறிஞர்கள், சாதனையாளர்களுள் இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை ச.வயித்தியலிங்கம் பிள்ளையும் ஒருவராவர். அன்னார் கடலோடியாகவும், வணிகராகவும் திகழ்ந்த சங்கரநாதர் என்பவருக்கு 1843ம் வருடம் மாசி மாதம் பூர நட்சத்திரத்தில் பிறந்தார். நல்லை ஆறுமுகநாவலரது இருபத்தி ஓராவது வயதில் பிறந்து நாவலர் காலமானதன் பின் இருபத்தி ஒரு வருடங்கள் வாழ்ந்தார். நாவலர் போன்று இலக்கிய ஆக்கம்,ஆய்வு, நூற்பதிப்பு ஆகிய மூன்று துறைகளிலும் ஈடுபட்டிருந்தார். நாவலரைப் போன்றே இவரும் தமிழகத்தில் கௌரவிக்கப்பட்டதோடு பாடசாலை ஒன்றினையும் நடாத்தி வந்தார். நாவலர் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த உடுப்பிட்டி சிவசம்பு புலவரிடம் (1829-1910) இலக்கியம், இலக்கணம், வடமொழி ஆகியவற்றைக் கற்றுப் பண்டிதரானார். இவற்றுடன் கருவி நூல்கள்,உபநிடதங்கள் என்பவற்றையும் கற்றுப் பாண்டித்தியம் அடைந்தமையால் பல நூல்கள் எழுதவும்,பல நூல்களுக்கு மதிநுட்ப உரைகளைப் பலரும் போற்றும் வண்ணம் வகுக்கவும் முடிந்தது என்று கூறப்படுகிறது.

போதகாசிரியரின் அனைத்து நூல்களிலும்பிரசுரமான வருடம் குறிப்பிடப் படாமையால் அவற்றை காலவரன் முறைப்படிதொகுத்துக் கூறுவது சிரமமாக உள்ளபடியால் கீழ்வரும்முறைப்படி வகுக்க முடியும்.

## (அ) பதிப்புக்களும்உரைகளும்

வயித்தியலிங்கம் பிள்ளை அவர்களினால் முதன் முதலில் உரை எழுதி வெளியிடப்பட்ட நூல் நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்ட நம்பி அகப் பொருள் என்பதாகும். 1878ம் வருடம் சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்ட இந்நூலிற்கு இவரது ஆசிரியரான சிவசம்புப் புலவர் அவர்கள் சிறப்பு பாயிரம் ஒன்றினையும் வழங்கியுள்ளார்.

சுன்னாகம் வரதராஜபண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணமும் கரலிகித வழுக்களைந்து 1881ம் வருடம் தஞ்சாவூரில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூலிற்கு யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளை யவர்கள் சிறப்புப்பாயிரம் ஒன்றினை வழங்கியுள்ளார். இவர் உரை எழுதி வெளியிட்டு வைத்த இன்னொரு நூல் நல்லூர் சின்னத் தம்பிப்புலவரின் கல்வளை அந்தாதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் மீது பேரன்பு கொண்டமையால் அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரலங்காரத்திற்கும் உரை எழுதி 1878ம் வருடம் வெளியிட்டார். இந்நூலிற்கும் சிவசம்புப் புலவர் சிறப்புப்பாயிரம் ஒன்றை வழங்கியுள்ளார். முருகப்பெருமானின் திருஉருவ அலங்காரங்களை 100பாடல்களில் பாடிய அருணகிரிநாத சுவாமிகள் எவ்வளவு இன்பத்தினை அனுபவித்தார்கள் என்பதனை போதகாசிரியர் எழுதிய உரை எடுத்துக்காட்டுகின்றது என கீரிமலை நகுலேஸ்வரம் சிவன்கோயில் ஆதீனம் சிவஸ்ரீ ந. குமாரசுவாமிக்குருக்கள் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். போதகாரிசிரியர் கந்தபுராணத்திற்கான சில படலங்களுக்கும் உரை எழுதியுள்ளார். கந்தபுராணத்து அண்ட கோசப்படலத்துக்கான உரையினை 1885லும் தொடர்ந்து தெய்வானை அம்மன், வள்ளியம்மை திருமணப்படலங் களுக்கான உரையும், சூரபன்மன் வதைப்படலத்துக்கான உரையும் போதகாசிரியர் அவர்களினால் எழுதப்பட்டது. இம் மூன்று படலங்களுக்கான உரைகளும் முதலில் அன்னாரினால் வெளியிடப்பட்ட சைவாபிமானி என்னும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுஇறுதியில் நூல்வடிவு பெற்றிருந்தது. இவற்றில் வள்ளியம்மை திருமணப்படலத்துக்கான உரையின் மீள்பதிப்பொன்று 1955ம் வருடம் தென்இந்தியாவில் திருமயிலை என்னுமிடத்தை வதிவிடமாகக் கொண்ட சே.வெ.ஜம்புலிங்கப்பிள்ளையவர்களால் நாவலர் அச்சுக்கூடப் பதிப்பாக வெளியிடப்பட்டது. ஜம்புலிங்கப்பிள்ளையவர்கள் தனது பதிப்புரையில் வள்ளியம்மை திருமணப்படலத்துக்கான உரையினை சில புலவர்கள் எழுதியிருப்பினும் யாழ்ப்பாணத்து வல்வெட்டித்துறை ச.வயித்தியலிங்கம் பிள்ளை எழுதிய உரையே மிகவும் சிறப்புடையதாகக் காணப்படுவதால் அதனை மீள்பதிப்புச் செய்வது நலமென ஆறுமுக நாவலரது சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலராகிய ச.பொன்னுஸ்வாமி அவர்களிடம் முறையிட அவர்கள் நாவலர் அச்சுக்கூட வெளியீடாக இப்பதிப்பினை அச்சிட்டுதவினர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோர் தொடங்கி வைத்த பதிப்புப்பணி வித்துவசிரோமணி பொன்னம்பலம்பிள்ளை, வல்வை வயித்திலிங்கம் பிள்ளை போன்றோரிடம் பரவி தொடர்ந்து வந்த தமிழார்வலர்களினால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டதென்று சமீபத்தில் வெளிவந்த பத்திரிகைக் குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

(ஆ) நிகண்டு

வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் தனது 33வது வயதில் 1877ம் வருடம் சிந்தாமணி நிகண்டு என்னும் நூலினை இயற்றியுள்ளார். பாரம்பரியமான தமிழ்க்கல்வி முறையில் நிகண்டுப்பயிற்சி அத்தியாவசியமானது என்று சொல்லப்படுகிறது. முற்காலத்தில் இலக்கணம், இலக்கியம் என்பவற்றைக் கற்க முன்வந்தோர் இலக்கணம், நிகண்டு என்னும் இருவகைக் கருவி நூல்களையே தமது ஆதார நூல்களாகக் கையாண்டு வந்தனர். ஆழ்ந்த இலக்கியப் பரிச்சயமில்லாத ஒருவரினால் இது போன்ற ஒரு நிகண்டினை இயற்றமுடியாது என்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சிந்தாமணி நிகண்டானது நானூறு விருத்தங்களைக் கொண்டு இயற்றப்பட்டதோடு ஆசிரியரினால் ஒரு உரையும் எழுதப்பட்டுள்ளது. ஒரு சொல்லுக்கு ஒரு பொருளைக் கூறும் இந் நூல் "ககர" முதல் "னகர" வீறாக ஒவ்வோரடிக்கும் இரண்டு சொற்களைச் சேர்த்து இயற்றப்பட்டுள்ளது. இந் நிகண்டின் பிரதி கிடைப்பது அரிதாக இருந்தமையால் யாழ்பல்கலைக்கழகத்தி லிருந்து கிடைக்கப்பட்ட பிரதியொன்றினைக் கொண்டுஇக் கட்டுரையாளரினால் இதன் மீள் பதிப்பொன்று இந்து சமய கலாசார அலுவலகத்தின் அனுசரணையுடன் 2013ம் வருடம் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகண்டுக்கும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்கள் சிறப்புப் பாயிரம் ஒன்றினை வழங்கியுள்ளார்.

**(இ) கடவுளர் மீது பாடியவை**

1883ம் வருடம் வல்வை சிவன் கோயில் தாபிக்கப்பட்டபோது இவரால் வல்வை வயித்தியேசர் பதிகம், ஊஞ்சல் பாமணியைந்து, வாலாம்பிகை பாமணியைந்து என்பன இவரால் இயற்றப்பட்டது. முருகப் பெருமான் மீது கொண்ட பற்றுதல் காரணமாக செல்வச் சந்நிதித் திருமுறை, திருப்பள்ளி எழுச்சி, நல்லூர்ப் பதிகம், மாவைப்பதிகம் என்பனவற்றையும் இயற்றியுள்ளார். மேலும் வல்வை நெடியகாட்டுப் பதிகம் என்பதையும் பாடியுள்ளார்.

**(ஈ) கிறிஸ்தவ எதிர்ப்புக் கண்டனங்கள்**

சைவத்தை இழிந்துரைத்து கத்தோலிக்க மத போதகர்கள் சைவமகத்துவபானு பாலம்பனம் என்னும் நூலை எழுத போதகாசிரியர்சைவ மகத்துவ பானு என்னும் நூல் மூலமும் சைவ மகத்துவ பானு பாலம்பன வியாபாதனம் என்னும் நூல் மூலமும் எதிர்த்தார். சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள் சைவ மகத்துவம் என்னும் நூலை வெளியிட்ட போது இதற்கு எதிராக சைவ மகத்துவ ஆபாச விளக்கம் என்னும் பிரசுரம் வெளியிடப்பட்டது. இதற்கு எதிராக வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் சைவ மகத்துவ ஆபாச விளக்க மறுப்பு என்னும் பதிலை விடுத்தார். இதனை விட இருண்மதி சுடு சுடர், கபட மட நிடுதனம் என்னும் கண்ட நூல்களையும் வெளியிட்டார். சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களின் சைவமகத்துவம் என்னும் நூல் வெளியிடப்பட்ட போது அதற்கு எதிராக அருளம்பல முதலியார் என்பவரும், சூசைப்பிள்ளை என்பவரும் சைவ மகத்துவ திக்காரம் என்பதினை எழுத வயித்தியலிங்கம்பிள்ளை அவர்கள் சைவ மகத்துவதிக்கார நிக்கிரகம் என்பதினை வெளியிட தொடர்ந்து பாதிரிமார்கள் சைவ மகத்துவ திக்கார நிக்கிரக எதிரேற்றம் என்பதன் மூலம் பதில் கொடுக்க போதகாசிரியர் சைவ மகத்துவ திக்கார நிக்கிரக எதிரேற்ற மறுப்பு என்பதனைக் கொண்டு மறுத்து வாதத்தை முடித்து வைத்தார்.

**(உ) சமூகம் தொடர்பானவை**

சமூகம்தொடர்பாக எழுதிய நூல்களில் மூன்று பாகங்களாக எழுதப்பட்ட கள்ளுக் குடிச்சிந்து இரண்டு பாகங்களாக எழுதப்பட்ட மாதரொழுக்க தங்கச் சிந்து மற்றும் சாதி நிர்ணய புராணம் என்பன அடங்கும். நாவலர் கையாண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையைப்பின்பற்றி போதகாசிரியரும் தனக்கென அச்சுக்கூடம் ஒன்றையும் நிறுவிக் கொண்டார். வல்வைச் சிவன் கோவிலுக்கு அருகாமையிலேயே உள்ள மடத்திலே பாரதீநிலைய முத்திராஷரசாலை என்னும் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. இந்த அச்சுக்கூடத்திலேயே சைவாபிமானி என்னும் பத்திரிகையும் இவரினால் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை சமய சமூக பணியையே முதன்மையாகக் கொண்டியங்கிய போதும் இலக்கண இலக்கிய விடயங்களுக்கும் போதிய இடமளித்ததுடன் வடமராட்சிப்பகுதியில் வெளிவந்த பத்திரிகைகளில் இதுவே மூத்த பத்திரிகையாகவும் காணப்படுகிறது எனவும் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் தனது வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் தனது அச்சகத்துக்கு அருகிலேயே பாடசாலை ஒன்றையும் நடாத்தி வந்தார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கோ.கந்தசாமிப்பிள்ளையவர்கள் மட்டக்களப்பில் மரவியாபாரம் செய்து வந்தார். இவரது தூண்டுதலினால் மட்டக்களப்பு சென்று விரிவுரைகள் செய்தார். அவ்விடம் மட்டக்களப்பின் பேரறிஞர் எனப்படும் ச.பூபாலபிள்ளை(1855-1920) யவர்கள் இவரது மாணாக்கரானார். வித்துவான்ச.பூபாலப்பிள்ளையவர்கள் பாடிய சோமவாரவிரத மகிமையைக் கூறும் சீமந்தனி புராணம் போதகாசிரியரின் பார்வையிலேயே 1894ம் வருடம் சென்னையில் வெளியிடப்பட்டது.

புராண படனங்கள் நிகழ்த்துவதிலும் ஈடுபாடு கொண்ட அன்னார் தமிழ்நாடு சென்றும் விரிவுரைகள் நிகழ்த்தினார் இதன் காரணமாக தமிழ் நாட்டினரால் நன்கு மதிக்கப்பட்டதோடு தமிழ்நாட்டுப் பேரறிஞர்களே “இயற்றமிழ் போதகாசிரியர்” என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்.

இத்தகைய பெரியார் 1900.09.03 ஆவணி மூலத்தன்று இவ்வுலகைவிட்டு இறைவனடி சேர்ந்தார்.

**உசாத்துணை நூல்கள் :**
1) சிந்தாமணி நிகண்டு 2013 பதிப்பு
2) வல்வை வரலாற்றுச்சுவடுகள் - ந.நகுலசிகாமணி
3) வரலாற்றில் வல்வெட்டித்துறை - பா.மீனாட்சிசுந்தரம்

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ச் சமுதாயம் போற்றும் சதாவதானி

திரு. சி. தவச்செல்வன்
செயலாளர்,
சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலையம்,
திருநாவலூர்.

செம்மை மிகு சைவத்தினதும் சீரோங்கு செந்தமிழினதும் ஆற்றலின் வடிவமாக விளங்கி நல்லை நகர் தந்த நாவலருக்கு பின் அவர் வழியில் 19ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை தமிழ் நாட்டவருக்கு உடமையாக்கிய தன்மையால் தமிழ்ச் சமுதாயமே போற்றும் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் நூற்றாண்டைத் தாண்டிய நினைவுகளில் நின்று ஆற்றலின் வடிவமாக அவர் ஆற்றிச் சென்ற சைவத் தமிழ்ப் பணிகளை போற்றிப் புகழ்வதுடன் மீள அவரை, அவர் பணிகளை அடுத்த தலைமுறைக்கு ஞாபகமூட்டும் ஒரு முயற்சியாகவும் அவர் வழியில் இன்னும் நாம் ஆற்ற வேண்டிய பணிகளை வெளிப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் இக் கட்டுரை அமைகிறது.

ஈழத்துப் புலவர் ஒலி எனப் போற்றப்படும் மேதாவியர் வாழ் மேலைப்புலோலியில், 1871ம் ஆண்டு பிரசோற்பதி வருடம் மார்கழி மாதத்து மூன்றாம் நாளில், முருக பக்தரான நாகப்பிள்ளையும் சிவகாமி அம்மையாரும் சைவத் தமிழ் உலகும் செய்த தவப் பயனால் இவ்வுலகில் அவதரித்தவரே நம் சதாவாதானி நா.கதிரவேற்பிள்ளையாவார். இவர் ஈழத்தவராக இருந்தபோதும், தன் வாழ்வின் பெரும் பகுதியை தமிழகத்தில் கழித்தமையாலும் அங்கு இவர் பல்வேறுபட்ட எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் சைவமும் தமிழும்வாழ ஆற்றிய ஒப்பரிய பணிகளினாலும் இன்று தமிழ்ச் சமுதாயமே போற்றித் துதிக்கின்ற சதாவதானியாய் பெருமை பெற்றுள்ளார்.

முப்பத்தாறு வருடங்கள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த போதும் அக் குறுகிய கால கட்டத்தினுள் இவர், தமிழ் மொழிக்குத்தந்த தமிழ்ப் பேரகராதியாலும், தமிழ் உலகிற்கு தந்த தமிழ்த் தென்றல் திரு.வி.க.வினாலும், சித்தாந்த ஆற்றலாலும், பிரசங்க வன்மையாலும், உரைத்திறனாலும் ஒரே நேரத்தில் தான் அவதானித்த நூறு விடயங்களை கூறிய சதாவதானத்தினாலும், ஆலய வழிபாட்டை மீட்டெடுத்த சிறப்பாலும், ஆரணி சமஸ்தான வித்துவானாய் இருந்த பெருமையாலும் வள்ளலாரின் பாடல்கள் திருமுறைகளுக்கு நிகரான அருட்பாக்கள் அல்ல என்பதை நீதி மன்றம் வரை சென்று நிறுவி திருமுறைகளின் பெருமை காத்த தன்மையாலும் 19ம் நூற்றாண்டு ஈழத்துக்கே உரியது என்ற பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்கு அமைய நாவலர், சி.வை.தா.அடிச் சுவட்டில் சைவத் தமிழ்ப் பணிகளை ஆற்றி தமிழ்ச் சமுதாயம் போற்றும் சதாவதானியாய் இன்று உயர்ந்து நிற்கிறார்.

இவர் ஒலியென்று போற்றப்படும் ஈழத்துப் புலோலியம்பதியானது காலத்துக்கு காலம் பல சிறந்த சைவத் தமிழ் அறிஞர்களை தமிழ்கூறு நல்லுலகுக்கும், ஈழத்துத் தமிழ் இலக்கியஉலகுக்கும் வழங்கி பெருமை பெற்ற புலமை ஆறாப் பூமியாய் விளங்குகிறது. 'நல்லை நாவலன் கோவை' தந்த கந்தமுருகேசனார் கார்த்திகேச முதலியார், சைவப் புலவர் சிவபாதசுந்தரனார், புலவர் மணியின் தமிழ்ஆசான் சந்திரசேகர ஆசிரியர், முத்துக்குமார சுவாமிக் குருக்கள், தென்புலோலி கணபதிப்பிள்ளை, அருளம்பல சுவாமிகள், பண்டிதர் கணபதிப்பிள்ளை, பரந்தாமன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எனத் தொடரும் புலோலியூரின் புலமைப் பாரம்பரியம் நடுநாயகமாக அவதரித்தவரே நம்சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை யாவார். ஆயினும் அவரது முதன்மை 19ம் நூற்றாண்டு தமிழிலக்கிய, ஈழத்து இலக்கிய வரலாறுகளில் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுவதுடன் இவருக்கு இழுக்கை ஏற்படுத்தும் சில பொய்யான தகவல்களை வெளியிட்டும் வருகின்றனர். ஆயினும் தமிழ்க அறிஞர்கள் திட்டமிட்டுப் பரப்புவதும் வேதனைக்குரியது. இத்தகைய சலசலப்புகளுக்கு அப்பாலும் ஓட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் போற்றி கொண்டாடுகின்ற ஒருவராகவே இவர் விளங்குகிறார் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இவர் மீதான தமிழக அறிஞர் சிலரின் பொய்ப்பரப்புரைகளுக்கான தக்க பதிலாய் ஈழத்து அறிஞர்கள் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸின் நூலும், கலாநிதி ஸ்ரீ பிரசாந்தனால் எழுதப்பட்ட "தமிழ்மொழி அகராதி தந்த சதாவதானி" என்ற நூலும் "சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை" என்ற நூலும் முக்கியமானவையாக விளங்குகின்றன. இவற்றை விட இவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தென்றல் திரு.வி.க.அவர்கள், 'செந்தமிழ்ச் செம்மல் நா.கதிரவேற்பிள்ளை' என்ற நூலை எழுதி தன் குருநாதரின் உண்மை வரலாற்றை பதிவு செய்ததுடன் தனது கல்வி பற்றிய பிறிதொரு கட்டுரையில் "எனக்கு கல்விக் கண் திறந்தவர் மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையே" என்பதை குரு பக்தியுடன் வெளிப்படுத்தியும் உள்ளார்.

இளமைக்காலம் முதலே சைவத்திலும் தமிழிலும் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த கதிரவேற்பிள்ளையவர்கள், தமது ஆரம்பக் கல்வியை நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட 'மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலை'யில் கற்றார். இளமையில் வறுமையால் வாடிய அவர், புலோலியூரில் வாழ்ந்த செல்வந்தராகிய சிதம்பரப்பிள்ளைக்கு எழுதுநராக கடமையாற்றி, பின் தான் கற்ற பாடசாலையிலேயே உதவி ஆசிரியராக கடமையாற்றி, தன் அறிவைப் பெருக்கும் நோக்குடன் தனது 21வது வயதிலே தமிழகத்தை நாடினார். ஈழத்தில் நாவலரின் நன் மாணாக்கர்களான தியாகராசபிள்ளை, சதாசிவப்பிள்ளை போன்றோரிடம் தமிழ் இலக்கண இலக்கிய சைவதீக்ஷா சாத்திரங்களை கற்ற இவர், தமிழகத்தில் காசிவாசி செந்திநாதையர், கனகசுந்தரம்பிள்ளையார் முதலியோரிடம் அவற்றை விரிவாக கற்று தன் அறிவை மேலும் கூர்மைப்படுத்திக் கொண்டார். ஈழத்துப் புத்தன்தேவனார் தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், செந்திநாதையர் எனப் பல ஈழத்து அறிஞர்கள் தமிழகம் சென்று அரும்பணியாற்றியிருக்க அந்த உறவுப்பால வரிசையில் கதிரைவேற்பிள்ளையும் இணைந்து கொண்டார். இதனால் இவரது சைவத் தமிழ்ப்பணிகளுள் பெரும்பாலானவை தமிழகத்தை மையமாகக் கொண்டே எழுச்சி பெற்றதுடன் நாவலர் அடிச்சுவட்டில் அவர் விட்ட குறை தொட்ட குறை தொடர்வனவாகவே அமைந்தன.

இவரது சைவப் பணிகளுக்குச் சான்றுகளாக ஆரணி சமஸ்தான வித்துவானாய் இருந்து ஆலய வழிபாட்டை நெறிப்படுத்தியதையும் திருமுறை ஓதும் வழக்கத்தை ஏற்படுத்தியதையும் கந்தசுவாமி கோயில் வசந்த மண்டபம், சிந்தாதிரிப்பேட்டை புராணபடன, சமய பிரசங்கங்களையும் குறிப்பிட முடிவதுடன், நாவலரால் தொடக்கப்பட்ட வழக்காகிய வள்ளலாரின் பாடல்கள் திருமுறைக்கு நிகராக ஓதத்தக்க அருட்பாக்கள் அல்ல என பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் துணிந்து நீதிமன்றம் வரை சென்று வாதாடிவென்று திருமுறைகளின் புனிதத்தை காத்தமையும் இவரது சைவப் பணிகளுள் முக்கியமானவையாய் விளங்குகின்றன. இவரிடம் இயல்பாகக் காணப்பட்ட பேச்சாற்றல், வாதத்திறன், முருகன் அருள் அழகான சித்தாந்த அறிவு என்பன இவரது இப்பணிகளுக்கு துணை நின்றன என்று கூறலாம்.

காலம் அறிந்து இவர் செய்த இப்பணிகளால் ஆங்கிலேயரால் முன்னெடுக்கப்பட்ட கிறிஸ்தவ மத மாற்றமும், சைவ அழிப்பும் தடுக்கப்பட்டு தமிழக சைவ மக்களிடம் சமய விழிப்புணர்வு ஏற்பட்டு எமது சமயம் பாதுகாக்கப்பட்டது. இதனால் தமிழ்ச் சமுதாயம் போற்றும் சிறந்த சைவசித்தாந்த அறிஞராக இவர் போற்றப்படுகிறார். இப் பணிகளை பாராட்டி அன்றைய தமிழகப் பெரியோர்கள் இவருக்கு "அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், மாயாவாததுவம்சகோளரி" "சித்தாந்த மகாசரபம்" எனப் பல பட்டங்களை வழங்கி மதிப்பளித்தனர். மறுபுறத்தில் வள்ளலாரின் அடிவருடிகளிடம் இருந்து இவருக்கு பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

பல சமய நூல்கள் காலத்தால் அழியா வண்ணம் அவற்றை பதிப்பித்து வெளியிட்டமையும் பல சமய நூல்களுக்கு ஏற்கனவே உள்ள உரையை தம் அறிவால் புதுப்பித்து வெளியிட்டமையும் இவரது சிறப்பான சமயப்பணிகளாய் விளங்குகின்றன. அத்துடன் தானே சில சிறப்பான சைவ சித்தாந்த பக்தி இலக்கியங்களை படைத்தளித்து பணியாற்றியுள்ளார். இவரது உரை நூலுக்கு சான்றுகளாக 'ஏகாதசிப்புராண அரும்பத விளக்கவுரை', பழனித்தல புராண உரை, திருவானைக்கா கலம்பக உரை, சிவராத்திரிபுராண உரை, நைடத விருத்தியுரை, கதிர்காமக் கலம்பக முன்னுரை, கந்தபுராண விருத்தியுரை, சிவசேத்திராலய மகோற்சவ விளக்கவுரை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் நளனுடைய கதையைக் கூறும் நைடதம் என்ற நூலுக்கு இவர் எழுதிய விருத்தியுரை பல அறிஞர்களால் வியந்து போற்றப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தளித்த சமய இலக்கியங்களாக சுப்பிரமணிய பராக்கிரமம், சைவசந்திரிகை, அருட்பா-மருட்பா மறுப்பு, புத்தமத கண்டனம், சைவசித்தாந்த சங்கிரகம், புதுச்சந்திநிதிக் கந்தன் பிள்ளைத்தமிழ், கருவூர் மான்மியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் சைவசித்தாந்த எழுச்சிக்காக இவர் ஆற்றிய பணிகள் முக்கியமானவை. இதனாலும் தமிழ்ச் சமுதாயம் போற்றும் சதாவதானியாய் இவர் மதிப்புப் பெறுகிறார்.

தமிழகத்தில் தன் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்தாலும் கதிரவேற்பிள்ளையவர்கள் தான் பிறந்த தாய் நிலத்தையும் மறக்கவில்லை. இடையிடையே இங்கு வந்து சென்றார் என்றும் அவ்வாறு ஒருமுறை வந்தபோது அவர் சிவஞானவதியை தனது வாழ்க்கைத் துணையாய் வரித்துக் கொண்டார் என்றும் அறிய முடிகிறது. அவரது இல்லறப் பேறாய் வடிவாம்பிகை, திருநாவுக்கரசு என இரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர் என்றும் இன்றும் புலோலியில் வாழும் அவரது பரம்பரையினர் வழி அறிய முடிகிறது. கதிரவேற்பிள்ளையின் மகன் திருநாவுக்கரசு தற்போது அவுஸ்ரேலியாவில் வசித்து வருகிறார்.

கதிரவேற்பிள்ளையவர்கள் தனது முப்பத்தாறாவது வயதில் சென்னை இலட்சுமி விலாச மண்டபத்தில் பலரும் வியக்கும் வண்ணம் ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானித்து, அவற்றுக்கு ஒழுங்குபட விடை கூறவல்ல சதாவதானம் செய்து 'சதாவதானி'யாகி ஈழத்துப் புலமை ஆழமதை உலகறியச் செய்ததுடன் தமிழ்ச் சமுதாயமே போற்றும் மேதையாகவும் மாறினார். இதன் தொடர்ச்சியாய் இன்றும் கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் அவதானப் போட்டியொன்றை நடத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சதாவதானி கதிரவேற்பிள்ளையவர்கள் சைவத்தைப் போலவே தமிழையும் நேசித்தார். அந்நிய ஆதிக்கத்துள் தமிழ் அழிந்து கொண்டிருந்த நிலை உணர்ந்துபல பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தும், உரை எழுதியும் வெளியிட்டார். எனினும் அவை பற்றிய விபரங்கள் இன்றுவரை எமக்குச் சரியாகக் கிடைக்காமை துரதிஷ்டம். மதுரை தமிழ்ச் சங்கப் புலவராக இருந்ததும், ஆரணி சமஸ்தான வித்துவானாய் இருந்தும் இவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளுள் சிறப்புக்குரியனவாய் விளங்குகின்றன. எனினும் இவரது தமிழ்ப் பணிகளுள் மணிமுடியாய் திகழ்வது தமிழென்ற ஆழிக்கு இவரை கலங்கரை விளக்கமாய் திகழ வைத்தது இவரது 'அகராதிப் பணி'யே ஆகும். 1698 பக்கங்கள் கொண்டதாய் மதுரைச் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட இவ் அகராதியே தமிழ்மொழியில் தோன்றிய முதற்பேரகராதி என்ற சிறப்புக்குரியது. இவ் அகராதிக்குரிய சிறப்புப் பாயிரத்தை மதுரைத் தமிழ்ச் சங்க ஸ்தாபகர் பொ.பாண்டித்துரைதேவர் வழங்கியுள்ளார். பின்னர் இவ் அகராதியை பி.வே.நமசிவாய முதலியார் என்பவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். நிகண்டுகள் வலுவிழக்க ஆங்கில மிஷனறிமாரினால் அறிமுகப்படுத்தப்பட்ட அகராதிகளில் பெரும்பாலானவை கீழைத்தேச மக்களது சமய தத்துவ மொழிக்கு முதன்மை அளிக்காமலும் பொருள் தொகைத் தொடர் என்ற அடிப்படையில் அமையாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுடைய ஒரு மொழி அகராதிகளாக விளங்கிய வேளைதனில் இக் குறைபோக்கி அதிகளவான சொற்களையும் துறைகளையும் இணைத்தும் வீரமா முனிவரது 'சதுரகராதி'யை விடவும் பொருள், தொகைச் சொற்களை விரிவாகத் தருகின்றதுமான சிறப்புடன் 1899ம் ஆண்டு கதிரவேற்பிள்ளையின் 'தமிழ்ப் பேரகராதி' வித்யாரத்னாகர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தது. வெளிவந்த இரண்டாம் ஆண்டிலேயே 1901ம் ஆண்டு அடுத்த பதிப்பை இது பெற்றது என்பதில் இருந்தே இதன் முக்கியத்துவத்தை எம்மால் உணர முடிகின்றது. ஆங்கிலேயரின் உதவியின்றி முற்றுமுழுதாய் ஈழத்தமிழ் அறிஞர் ஒருவரால் தமிழகத்தில் நிகண்டு, வடமொழி, பழந்தமிழ் இலக்கிய, இலக்கண கருவூலங்களை அடிப்படையாகக் கொண்டு தொகுத்து வெளியிடப்பட்ட பெருமையையும் இவ் அகராதியே பெறுகின்றது. இவ் அகராதிக்கு பின்னரே தமிழ் என்ற அகராதியுடன் பல்வேறுபட்ட அகராதிகள் தோன்றின என்றும் அவற்றுக்கெல்லாம் வழிகாட்டிய பெருமை இவ் அகராதிக்கே உரியதென்றும் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இவ் அகராதி பற்றி தமது 'அகராதி தந்த சதாவதானி' என்ற நூலில் குறிப்பிடும் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் இவ் அகராதி இன்று தமிழ்மொழி பற்றி ஆய்வு செய்யும் மேலைத்தேய அறிஞர்களுக்கும் யப்பானிய ஒப்பியல் அறிஞர்களுக்கும் சிறந்த வரப் பிரசாதமாக விளங்குவதாய் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் இவ் அகராதிப் பணிக்கு மதிப்பளித்து சதாவதானிக்கு "அகராதிப் பேரரசன்" என்ற பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும் ஆயினும் இவரது அகராதியானது ஈழத்தில் இன்னும் சரியாக பரவலடையவில்லை என்பதும் இது பற்றிய காத்திரமான ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் வேதனைக்குரியதாகும். இவ் அகராதியின் சிறப்புப் பற்றி பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் குறிப்பிடும் போது "ஒரு மொழி அகராதி விருத்தியடையாது ஒரு நிலையிலேயே நின்றுவிட்டது. யாழ்ப்பாண அகராதி ஒன்றுதான் பயன்பட்டுவந்தது. அதனையும் பதிப்பாளர்களும் பிரசுரகர்த்தாக்களும் பாழாக்கி வந்தனர். இதற்கு ஒரு விதி விலக்காக நா.கதிரவேற்பிள்ளை இயற்றி வெளியிட்ட அகராதியை சொல்லலாம்"என்று கூறியுள்ளமை இவ் விடத்தில் ஒப்பு நோக்கத் தக்கதாகும். ஆயினும் தமிழ் அகராதி பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்ட ஜெயதேவன் போன்ற தமிழக அறிஞர்கள் சிலர் கதிரவேற்பிள்ளையின் 'தமிழ்ப் பேரகராதி'யின் முதலாம் பதிப்பு பற்றிய விபரங்களை இருட்டடிப்பும் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதே வேளை இவ் அகராதியின் திருத்திய பதிப்பின் ஆங்கில முன்னுரையில் நல்லசாமிப்பிள்ளையவர்கள் "எனது நண்பன் மேலைப்புலோலி நா.கதிரவேற்பிள்ளை அவர்கள் பதிப்பித்த அகராதியே இன்றுவரை வெளிவந்த அகராதிகளுள் தலைசிறந்தது. அவர் நிரம்பிய புலமையும் புத்திக்கூர்மையும் அபூர்வ ஞானமும் படைத்தவர். அவரைப் போன்ற விவேகிகளை இக் காலத்திற் காண்பதரிது" எனக்கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது அகராதிச் சிறப்பை தஞ்சை சுப்பிரமணிய ஐயர், குமாரசுவாமிப்புலவர், சண்முகம்பிள்ளை, தி.சு.வேலுப்பிள்ளை, பாண்டித்துரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர் போன்றோரும் போற்றியுள்ளனர். இவ்வாறு தமிழ்மொழியின் சொற்களஞ்சிய விருத்திக்காக, அன்றே எமது மொழி அடையாளத் தனித்துவத்தின் மேன்மையை உணர்ந்து, தீர்க்க தரிசனமாய் ஆங்கிலக் கலப்பில் இருந்து தமிழைக் காத்ததுடன் இவரது தமிழ்ப் புலமையை தமிழ்ச் சமுதாயமே போற்றிப் புகழவும் வைத்தது என்றால் அது மிகையல்ல.

முப்பத்தாறு ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த பிள்ளையவர்கள் அக்குறுகிய வாழ்நாளில் சதாவதானம் செய்து சைவத் தமிழ்ப் பணிகளை ஆற்றி 1907ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி மக நட்சத்திரத்தில் நீலகிரியில் கொடிய வெஞ்சுர நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் மாதர் பிறைக் கண்ணியானை..... என்ற தேவார ஒலியுடனேயே அகண்ட பரம் பொருளாம் சிவத்தோடு இரண்டறக் கலந்தார்.

நாவலருக்குப் பின் சைவத் தமிழ்க் காவலராய் போற்றப் பெறும் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்கள் எம்மைவிட்டு அகன்று இன்று நூற்றாண்டுகள் சென்றுவிட்டன. ஆயினும் அவர் ஆற்றிய பணிகளினூடாகவும் படைத்தளித்த இலக்கிய மொழி ஆக்கங்களினூடாகவும் தமிழ்ச் சமுதாயம் போற்றும் சதாவதானியாக ஈழம், தமிழகம் என்ற எல்லை கடந்து உலகத் தமிழர் இதயங்களில், பிறநாட்டறிஞர் உள்ளங்களில் கூட வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். மேலைப்புலோலியியில் அவரது சந்ததியில் வந்த உறவுகள் இன்றும் சைவ ஒழுக்கத்தோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதே போல அவருடைய திருநாமத்தை கொண்டிலங்கும் அவருக்கு குருபூசை செய்தும் நினைவுவிழா எடுத்தும் மாணவரிடம் போட்டிகளை வைத்தும் பல சமய, சமூகப் பணிகளை ஆற்றியும் சதாவதானியின் புகழை அவர் கண்ட கனவுகளை நனவாக்கி வருவது சிறப்புக்குரியதாகும். ஆயினும் இன்னும் பல பணிகள் அவர்கள் முன் காத்திருப்பதாகவே தோன்றுகிறது. இந்தவகையில் சதாவதானியின் முழுமையான உண்மையான வரலாற்றை அவரது உறவினர் உதவியுடனும் தொடர்புடைய ஈழத்துத் தமிழக அறிஞர்களை ஒன்றிணைத்தும் மீள எழுத வேண்டியது அவசியமாகும். அவரது பல நூல்களை தேடிப் பெற்றும், அவரது உரைகளை நூலகத்தில் ஆவணப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. சதாவதானியின் அகராதி பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தல், அகராதியை இணையத்தளத்தில் தரவிறக்கிப் பேணுதல் நினைவுப் பேருரையை பல்கலைக்கழகம், கொழும்பு தமிழ்ச் சங்கம், தமிழ்நாடு உள்ளிட்ட இடங்களில் ஆற்றுதல் தமிழ்ப் பாடநூல்களில் அவரது வரலாற்றைப் புகுத்துதல் அவர் பெயரால் விருது வழங்கல் போன்றவற்றை வகைமாதிரியாய் குறிப்பிடலாம். தமிழக, ஈழத்துத் தமிழ்ப் புலமை உலகுடன் இணைந்து, சனசமூக நிலையத்தினர் இவற்றை செய்ய முனைவதே தமிழ்ச் சமுதாயம் போற்றும் சதாவதானியின் நூற்றாண்டு நினைவுகளுக்கும் புலோலியின் புலமைப் பாரம்பரியத்திற்கும் நாம் செய்யும் கைம்மாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உசாத்துணை நூல்கள்:-

1) அப்புத்துரை.சி, இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்து தமிழ்ப் புலவர் வரலாறு பக் 44-48
2) கல்யாண சுந்தரம்.வி, குலரத்தினம்.க.வி. 2005 பங்குனி இரண்டாம் பதிப்பு, "செந்தமிழ்ச் செம்மல் நா.கதிரவேற்பிள்ளை"-சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் தம்பசிட்டி.
3) கணபதிப்பிள்ளை.கா(1971) "நாவலர் வழிக்கோர் காவலன்" நூலகம் திட்டம்.
4) மனோன்மணி சண்முகதாஸ்1995 "தமிழ்மொழி அகராதி தந்த சதாவதானி" வெளியீடு- நுழைன் தோட்டம்
5) ஸ்ரீ பிரசாந்தன், 2009, "சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை" கொழும்பு தமிழ்ச் சங்கம்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் (1878-1953)

## வாழ்வும், கல்வி, சைவம் சார்ந்த பணியும்

க.பாலசுப்பிரமணியம்
BA(Cey); Dip in Ed; MA in Ed.
ஓய்வுநிலை ஆசிரியர்.

**பிறப்பு:** ஆறுமுகநாவலர் அவர் உடலை உகுத்தது 1877ல் ஆகும். 1878ல் சிவபாதசுந்தரனார் அவதரித்தார்.

**பெருமை:** "தமிழ் ஆங்கிலம் என்ற இரு மொழிகளையும் நன்கு கற்றவரும் சைவத்தை உள்ளபடி உணர்ந்தவருமான இன்னொருவர் இவர் போல இல்லை"என்று பாராளு மன்றத்தில் வட்டுக்கோட்டை பிரதிநிதியாக விளங்கிய க.கனகரத்தினம் அவர்கள் 'ஈழகேசரி' யில் எழுதினார். 'சைவப் பெரியார் என்றால் அது புலோலி சு.சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களையே குறித்தது. 17-01-1878ல் புலோலியில் பிறந்தார். மூன்று பெண்கள் சகோதரிகள்.

**ஆரம்பக் கல்வி:** ஆரம்பக் கல்வியை புலோலி மருதடி வைரவர் சுவாமி கோயிலுக்கு சமீபத்தில் இருந்த சைவ வித்தியாசாலையிற் பெற்றார் எனக் கொள்ளக் கிடக்கின்றது. நாவலர் புலோலியில் அமைத்த அப் பள்ளிக்கூடம், பின் மூடப்பட்டதாக தெரிகிறது.

பருத்தித்துறையில் தற்போது ஹாட்லிக்கல்லூரி என விளங்கும் 'மத்திய ஆங்கில வித்தியாசாலையில்' ஆரம்பக் கல்வி பயின்றார் என்றும் கருதப்படுகின்றது. "அயலில் இருந்த ஆங்கிலப் பாடசாலையில் அறிய வேண்டிய ஆங்கிலக் கல்வியை அறிந்தார்" என்பது க.சி.குலரத்தினம் அவர்கள் கருத்து.

**இந்தியாவிற் கல்வி:** பின் பாரதம் சென்று திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரியிற் கற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் F.A என்னும் இடைநிலைத் தேர்வில் சித்தி பெற்றார். பின் திருச்சிராப்பள்ளி 'புனித சூசையப்பர்' கல்லூரியிற் கற்று B.A (கலைமாணி)த் தேர்வில் சித்தி அடைந்தார். கணிதம் அவரது சிறப்புப் பாடம். தர்க்கம், அகநூல், ஆங்கிலம், விஞ்ஞானம், வடமொழி அவருக்கு கைவந்தவை.

**ஆசிரியர் பணி:** ஈழத்துக்கு மீண்டு 1895ல் நிறுவப்பட்ட, அவரது மாமனாரது 'வேலாயுதம் பள்ளியில் ஆசிரியராக சேர்ந்தார்.

இலங்கையின் முதற் சைவப் பட்டதாரி ஆசிரியராகலாம் என்றும் கருதப்படுகிறது. B.A மாஸ்டர் என்றே இவர் அழைக்கப்பட்டு வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிபர்:** *1902-1904*ல் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி அதிபராக கடமை ஆற்றினார்.

கிறிஸ்தவக் கல்லூரியிற் கடமை ஆற்றிய காலமே சைவசமயத் தொண்டு செய்ய வேண்டும் என்று எண்ணம்தடித்து வேரூன்றக் காலாயிற்று.

பாதிரிமாரோடு ஊடாட வேண்டிய சந்தர்ப்பமும் கிடைத்தது. அவர்களின் மதமாற்றப் போக்குத்தான் பிள்ளையவர்களின் மனத்தை வருத்தியது.

அவருக்கு முப்பது வயதாகும் போதே 'சைவசமயத் தொண்டில் வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென 'திட்டமிட்டார்'. அவரது 75வது வயது வரை இத் தொண்டிற் தம்மை மூழ்கடித்தார். "அவரின் வாழ்க்கை சமய வாழ்க்கையாகவும், அவரின் ஒவ்வொரு மூச்சும் சைவ சித்தாந்த மூச்சாகவும் அமைந்தன".

**துணை அதிபர்:** *1904*ம் ஆண்டில் மானிப்பாய் சி.எம்.செல்லப்பா அமைத்த 'விக்டோரியாக் கல்லூரிக்கு" துணை அதிபராகச் சேர்ந்தார்.

*1920- 24*ம் ஆண்டுகளுக்கிடையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றிலும் கற்பித்தார்கள்.

**சைவ தீட்சை:** "மானிப்பாய் இந்துக் கல்லூரி"யில் ஒரு வருடம் கற்பித்த பொழுது மாணவர்களுக்கு 'சைவ தீட்சை' கொடுக்க ஒழுங்கு செய்தார்.

**தலைமை ஆசிரியர்:** ஒரு குறுகிய காலம் கொழும்பில் உள்ள கொச்சிக் கடைப்பகுதியில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் நிறுவிய "பொன்னம் பலம் பள்ளிக்கு" தலைமை ஆசிரியராக அமர்ந்தார்.

*22-08-1921* அன்று பரமேஸ்வராக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் பொறுப்பினை சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

**அதிபர் விக்டோரியா:** விக்டோரியாக் கல்லூரியில் அதிபராக கடமை ஆற்றிய காலம் *(1924-1933)* சிவபாதசுந்தரனார் புகழ், கல்வி அதிகாரிகள் மத்தியில் பரவலாயிற்று. "களையை அழித்தால் அன்றி பயிர் வளர மாட்டாது. கிறிஸ்தவ செல்வாக்கைக் கெடுத்தலாலன்றி சைவம் வளர மாட்டாது" இந்த நோக்கில் வலிகாமம் மேற்கில் மூன்று சைவப் பாடசாலைகளை தாபிக்க உதவினார்.

*1)* மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை

*2)* வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலை

*3)* திருநாவுக்கரசர் வித்தியாசாலை அவை.

*55* வது வயது வரை அதிபராக விக்டோரியாவில் சேவையாற்றி ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌரவ மேற்பார்வையாளர்:** கலாநிதி சு.நடேசப்பிள்ளை, பரமேஸ்வராக்கல்லூரியின் கௌரவ மேற்பார்வையாளராக சேவையாற்ற வேண்டினார். பரமேஸ்வரா, பண்டித ஆசிரிய கலாசாலை முதற்பாடத்தையும் சிவபாதசுந்தரனார் நடாத்தி வைத்தார்.

**கல்வி அபிவிருத்திக்கான இந்து சபை:** 'கல்வி அபிவிருத்திக்கான இந்துசபை'யின் தலைவராகவும் கடமை ஆற்றி பல சைவப்பாடசாலைகளை திறந்தார்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்:** சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக 1928-1930 ஆண்டுகளில் விளங்கினார். அப்பொழுது போசகர் இராமநாதன் அவர்கள். கௌரவ காரியதரிசி 1925-1929ல் எம்.எஸ்.இராசரத்தினம்அவர்கள். கல்வி மறுமலர்ச்சி மூலமும் சமூகப்பணி மூலமும் தமது சமூக அங்கத்தவருக்கு தொண்டு செய்யும் அவா சிவபாதசுந்தரனார் உள்ளத்தில் ஊறி இருந்தது.

'திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சி நிலையம்' 'அநாதைகள் இல்லம்' இவற்றை ஆதரிக்க வேண்டி வேண்டுகோள் விடுத்தனர். அப்பொழுது 7200 பிள்ளைகள் கொண்ட தமிழ்ப் பாடசாலைகளை 'சைவ வித்தியா விருத்திச் சங்கம்' பராமரித்து வந்தது.

**இளைஞர் வாலிபர் மகாநாடு:** 21-04-1930ல் இளைஞர் வாலிபர் மகாநாட்டுக்கும் சிவபாதசுந்தரனார் தலைமை தாங்கினார். இங்கே தான் "சாதி" என்பது தொழிற்பிரிவினையை ஆதாரமாகக் கொண்டே வந்தது. வருணாச்சிரம தருமத்தில் தீண்டாமை என்று ஒன்று இருக்கவே இல்லை என்றார். இங்கு சமஆசனம், சமபந்தி போசனம் வலியுறுத்தப்பட்டன.

**சைவ பரிபாலன சபை:** 1932-1933ல் சைவ பரிபாலன சபைத் தலைவராகவும் கடமை ஆற்றி வந்துள்ளார்.

**சைவப் பாடசாலைகள்:** நாவலர் மறைந்த பின் அவரை அடி யொற்றி சைவத்தைக் காக்கமுனைந்த வழித் தோன்றல் சிவபாதசுந்தரனார் என்று கொள்ளப்படுகிறார். அவரைப் போலவே சைவப் பாடசாலைகள் அமைக்க ஊக்குவித்தார். சமய மாற்றத்தை தடுக்க அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தவேண்டும் என்று வெகுவாக முயன்றார். 'ஆசிரியரும்சமய வாழ்க்கை வாழ வேண்டும்' என்பது அவர் கருத்து "நாங்கள் சார்ந்திருக்கும் சமயங்களுக்கும் எங்களுக்கும் வெகுதூரம் சைவ சமயத்தை அடைவதற்கு விரும்புவதும் முயலுவதுமே எங்கள் பரம நோக்கமாதல் வேண்டும்" என்றும் கூறியுள்ளார். 1953ல் சுதந்திரன் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் "எங்களுக்கு சமயமே இல்லை. நிரீச்சுரவாதி கடவுளே இல்லை என்கிறான்,நாங்கள் கடவுளை நிந்தனை செய்கிறோம்" என்று வருந்துகிறார். "ஆகம வழி வந்த சைவனையே மதி" என்பதும் அவர் கூற்று.

கல்வியில் அவருக்கு இருந்த அநுபவம், புலமை கருதி பல அரச குழுக்களிலே இடம்பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரச குழுக்கள்:** 'கன்னங்கரா விசாரணைச்சபை', 'கல்வி ஆலோசனை சபை' இவற்றில் அங்கத்துவம் பெற்றிருந்தார். கன்னங்கரா குழு, கல்வி விசேட குழு இவற்றில் தம் கருத்துக்களை நியாயமாக, நிதானமாக முன்வைத்தார் என்பர். கிறிஸ்தவ பாடசாலைகளில் இந்துப் பிள்ளைகள் கல்வி பெற வேண்டி இருந்ததை எதிர்த்தார்.

இந்துமத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேட விசாரணச்சபையின்(1951) அறிக்கையில் சிவபாதசுந்தரனார் ஆற்றிய பங்கு அளப்பரியது.

**பாடவிதானம்:** 1947ல் க.பொ.த சைவ சமய பாடவிதானத்தையும் அமைத்துக் கொடுத்தார். நாவலர் பெருமானைப் போலவே சைவசமயம் தொடர்பான நூல்கள், சைவ சித்தாந்த விளக்க நூல்கள் சிவபாத சுந்தரனார் உருவாக்கியவை. இவை எளிமை நிறைந்தவை கல்வி உளவியல் தொடர்பாகவும் எழுதியுள்ளார்.

**உருவாக்கிய நூல்கள்:** நாவலர் காட்டிய வழியை தொடர்ந்தவர் சிவபாதசுந்தரனார் என்பதில் ஐயமில்லை. சிவபாதசுந்தரனாரது நூல்கள்,

1) சைவ போதம் முதற்புத்தகம்- கிரிசாம்பாள், விலையுயர்ந்த இரத்தினம், புலையன் போன்றவை உள்ளன.
2) சைவ போதம் II- புலால் மறுத்தல் வலியுறுத்தப்படுகிறது.
3) சைவ போதம் III- திருவருட்பயனை அடியொற்றி கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.
4) சைவசமய சாரம்- சைவ வாழ்க்கை, சைவத்தின் மேன்மைக்கு ஏழு நியாயங்கள் கூறப்படுகின்றன.
5) சைவ சித்தாந்தம்- 16பக்கம் கொண்ட நூல் 1932ல் வெளியிடப்பட்டது.
6) சைவக்கிரியை நூல்- இராமலிங்கக் குருக்கள், சரபணபவ குருக்கள் இவர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.
7) ஆறுமுகநாவலர் வரலாறு- ஆங்கிலம்
8) படிப்பிக்கும் முறைகளும்விதிகளும்
9) அகநூல்
10) சுப்பிரமணிய பெருமான் கொண்ட திருப்பெருவடிவம்
11) கந்தபுராண விளக்கம்
12) அளவை நூல்
13) அப்பர் சுவாமிகள் தேவாரச் சிறப்பு
14) திருவாசக மணிகள்
15) An out line of Sivagnanabodham with a rejoinder to a Christian critic
16) The saiva school of Hinduism
17) Glories of Shaivaism

தமிழில் 14 நூல்களும் ஆங்கிலத்தில் 4 நூல்களுமாக மொத்தம் 18 நூல்கள் சிவபாதசுந்தரனார் எழுதி உள்ளவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புகழ் மாலைகள் :** இத்தொண்டினை எல்லாம் நினைவு கூர்ந்து பண்டிதர் சிவப்பிரகாசம் எழுதிய பாடல்

“வேதமெலாந் தழைத்தோங்க மிகு சைவம் தலை சிறக்க
காதல் மிகும் அரன் பணியே தன் பணியைப் பணி கொள்ள
பூதலத்துப் புது நூல்கள், புத்துரைகள், கட்டுரைகள்
வாதம் மிகும் ஆய்வுரைகள் வளம் மிகவே வழங்கினார்”

‘இந்து சாதனம்’ பின்வரும் இரு பாடல்களை வெளிக்கொணர்ந்தது

எப்பொருள் யார்க்கும் எளிதுறப் போதிக்கும் இன்குரவ
முப்பொருட் பெற்றி விரித்துரை செய்திடு மூதறிஞ
திப்பிற சைவத்திருநெறி போற்றும் திறத்தினர் யார்?
செப்புக, உன் போற் சிவபாத சுந்தர தேசிகனே

தோற்றமோ சுத்தசைவத் சூத்திரச் சொற்பொருள்
ஆற்றலோ ஆசிரிய அற்புதம் -மாற்று மதக்
கூற்றுவர்க்கு கூற்றம் இவர்- சைவப் பெரியாரென்று
ஏற்றுமே இப்பார் இசைத்து

**மதிப்பீடு:** சைவத்துக்கும்,கல்விக்கும் சிவபாதசுந்தரனார் ஆற்றிய சேவையை புறக்கணிக்க முடியாது. ஆயினும் சிலவற்றில் ‘விட்டுக்கொடுக்கிற மனம்’ என்பது அவருக்கு இல்லை. ‘எல்லா சமயங்களும் கடவுள் தந்த வரப்பிரசாதம்’ என்ற காந்திஜியின் கருத்துக்களோ, இராமகிருஷ்ணர் கருதியவையோ இவருக்கு ஏற்புடையன அல்ல. ‘சைவ சமயமே மேலான சமயம்’ என்பதில் உறுதி கொண்டவர். “முன்பின் முரணாகக் கூறி மக்களை மயக்க வைத்தமை இவரது உயர் நிலைக்கு பங்கத்தை வருவித்தது’ என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆலயத் திருப்பணிகள்:** *1948-1952* ‘திருக்கேதீஸ்சர ஆலய திருப்பணிச் சபை’த் தலைவராகக் கடமை ஆற்றினார். எழுந்தருளி விக்கிரகங்கள் நடராஜர்,சிவகாமி அம்மை வடிவம் அமைத்துக் கொடுத்தவர். திருஞானசம்பந்தர் மடம் அமைக்க உதவியவர். நவக்கிரகங்கள் அங்கு பிரதிட்டை செய்வதை விரும்பாமல் சபையில் இருந்து வெளியேறினார். கந்தவனக் கடவையிலும் நால்வர் கோயில் அமைக்க உழைத்தவர். நவக்கிரகங்களுக்கு கோயில் அமைப்பதை ஆதரிக்கவில்லை. ‘முத்தி நிலையிலும் ஆன்மா எந்த மாற்றத்திற்கும் உள்ளாவதில்லை’ என்பது அவரது தீர்க்கமான முடிவு.

**வாழ்க்கைத்துணைவி:** திலகவதி அம்மையாருக்கு இவர் வாழ்க்கைப்பட்டவர் என்பது ஆச்சரியத்தை தரும்.

**அரசாங்கப் பள்ளிக் கூடங்களை அமைத்து நடத்த வேண்டும்:** வாழ்நாளை சைவத்துக்காகவும், சைவப்பிள்ளைகள் மத மாற்றம் செய்யப்படாமல் தடுக்க அரசாங்கம் பள்ளிக்கூடங்களை கொண்டு நடத்தவேண்டும் என்பதில் முழுமூச்சுடனும் செயற்பட்டவர் சிவபாதசுந்தரனார். நாவலர் வாழ்வு முடிய அவர் பணியை தொடர்ந்து தமது வாழ்நாள் முடியும் வரை ஆற்றினார். : ஆகம வழி வந்த சைவனையே மதி” என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திதி:** ஆடி அத்தம் சிவபாதசுந்தரனாரது திதி ஆகும். கந்தவனக் கடவையில் ஒரு எளிய கொட்டிலில் அவர் தன் உடல் நீத்தார்.

**சேக்கிழார் காணும் சைவர் சிவபாதசுந்தரனார்:** பெரிய புராணத்தில் வரும் சைவ நெறி நின்ற சிவனடியார் பெருமை சாற்றும் பாடல்களில் இரண்டினை சைவப் பெரியார்சிவபாதசுந்தரனாருக்கு சூட்டி மகிழ்வோம்.

"மாசிலாத மணி திகழ் மேனிமேல்
பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளங்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்"

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப் பெருங்குன்றனார்"

********


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதியை ஆகார்சித்த எமது அருளம்பல (மௌன) சுவாமிகள்

**வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன்**

எமது யாழ் மண்ணின் செழுமைக்கு கை கொடுத்தவர்கள் பலர். கல்வி, வாணிபம்,அரசியல்,கலை, இலக்கியம் என எத் துறையை எடுத்துக்கொண்டாலும் அவற்றில் கால் பதித்து அளப்பரிய பணிகள் செய்து மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக வாழ்ந்தவர்கள் பலர்.

அந்த விதத்தில் எமது மண்ணின் ஆத்ம ஞானிகள் பலரும் மண்ணில் பலமாக ஆழ வேரூன்றி அகலச் சடைபரப்பி எம்மை ஒத்த சாதாரணர்களின் ஆன்மீக மேம்பாட்டிற்கு உள்ளொளி பாய்ச்சியதை மறக்க முடியாது. சித்தர்கள், யோகிகள், ஞானிகள், சுவாமிகள் எனப் பலவாறு எம்மக்களால் அழைக்கப்பட்டு உயர் பீடத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்கள். கடையிற் சுவாமிகள், யோக சுவாமி முதற்கொண்டு ஜேர்மன் சுவாமி என அறுகுபோல் வேரூன்றிப் படர்ந்த ஞானப் பாரம்பரியம் இம் மண்ணில் இருந்திருக்கிறது. அவர்களின் ஞானத் தேறலில் ஒரு சிறு பங்காவது எம் எல்லோரிலும் இன்றுவரை ஒட்டிக் கொண்டிருப்பது நாம் செய்த பாக்கியம் தான்.

'குவலயத்தின் விழி போன்ற' என மகாகவி பாரதி போற்றிய அற்புத ஞானி ஒருவர் வடமராட்சியில் அதுவும் நான் பிறந்த ஊரான வியாபாரிமூலை மண்ணில் விளைந்திருக்கிறார். அவர்தான் அருளம்பல சுவாமிகள் ஆவார். யாழ்ப்பாணத்துச் சுவாமி என பாரதி அவரை விழித்தபோதும் மௌன சுவாமி எனத் தன்னைத்தான் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஊரவர்களும் அருளம்பல சுவாமி, மௌன சுவாமி ஆகிய பெயர்களில் அவரைப் போற்றித் துதித்திருக்கின்றனர்.

ஆயினும் அவரைக் காணும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. எனது தந்தையார் பாட்டனார் ஆகியோர் அவரைக் காணும் பாக்கியம் பெற்றிருக்கின்றனர். 1942 மார்கழி மாதம் மகாசமாதியடைந்த அவரை வியாபாரிமூலை பேந்தாள் வளவிலிருந்து நிஷ்டையிலிருந்த அதே நிமிர்ந்த கோலத்தில் வாகனத்தில் ஏற்றி ஊர்வலமாக எடுத்துச் சென்று வியாபாரிமூலை வீரபத்திர கோயிலுக்கு அண்மையாக, ஈசான மூலையில் சமாதி வைக்கப்பட்டார். நானும் சிறுவனாக அதில் கலந்து கொண்டதை எனது தந்தையார் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். வியாபாரிமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளைக்கும் வதிரியைச் சேர்ந்த இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1880 ஆண்டு அருளம்பலம் பிறந்தார். அவர் பிறந்த தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1880 ஆம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி என அவரைப் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் நா.ஞானகுமாரன் "பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்" என்ற நூலில் ஆய்வு ரீதியாகக் குறிப்பிடுகிறார்.

எமது ஊரில் பிறந்து, எமது பகுதிப் பாடசாலையான மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் கல்வி கற்றபோது அவர் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை அவர்களின் மாணாக்கனாக இருந்தார் என்பதையும் அறிய முடிகிறது. 5ம் வகுப்புவரை இங்கு கல்வி கற்ற அவர் பின்னர் குடும்ப பொருளாதார நிலைகாரணமாகக் தொழில் நிமிர்த்தம் கம்பளை சென்றார். 5ம் வகுப்பு வரை மட்டுமே கல்வி கற்ற போதும் இராமாயணம் , மகாபாரதம், திருக்குறள் முதலான பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் பட்டினத்தார் பாடல்கள் அருணகிரிநாதர் பாடல்கள் வரையானவற்றில் தேர்ச்சி பெற்றிருந்ததை அவரது படைப்புக்கள் ஊடாக அறிய முடிகிறது என பேராசிரியர் நா.ஞானகுமாரன் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

உலக வாழ்வில் நாட்டங் குறைந்து ஆன்மீக ஆர்வம் மீதெள 1910ம் ஆண்டளவில் இந்தியா சென்ற அவர் நாகை நீலலோசனி அம்மன் ஆலயத்தில் நிஷ்டை நிலை கற்றார் என அவரது படைப்புக்கள் மூலம் அறிய முடிகிறது.1910 முதல் 1914 வரை நான்கு ஆண்டுகள் உணவு மறுத்து கடுமையான நிஷ்டையில் ஆழ்ந்தார். அந் நிலையில் புலித்தோலில் அவர் அமர்ந்திருக்கும் உடல் மெலிந்த ஞானத் தோற்றமுடைய புகைப்படம் ஒன்று கிட்டியுள்ளது. அவரது மேலும் இரு புகைப்படங்கள் கிடைத்துள்ளன.

நிஷ்டையில் இருந்த நேரத்தில் இவரது உண்மையான ஞானநிலையைப் புரியாத ஆலய நிர்வாகி போலிக் குற்றச்சாட்டுசெய்தபோது பொலிசார் இவரை ஒரு அறையில் அடைத்து வைத்தனர். சற்று நேரத்தில் பார்த்த போது அறைபூட்டியபடியேஇருக்க அவர் காணாமல் போயிருந்தார். தேடிய போது இவர் கடற்கரையில் நிஷ்டையில் இருப்பதைக் கண்டனர். இதைக் கண்ட நீதிபதி அவரது ஆன்மீக மகிமையை உணர்ந்து, எவரும் அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என ஆணையிட்டதாகத் தெரிகிறது. சித்து வல்லமை பெற்ற அருளம்பல சுவாமி அவர்கள் வரப்போவதை எதிர்வு கூறல், மக்களின் பிரச்சனைகளைத்தீர்த்து வைத்தல்,ஒரு நேரத்தில் பல இடங்களில் தன் உருவம் காட்டல் போன்ற பலவற்றைச் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறார். ஆனாலும் சித்து வேலைகளில் அதிக நாட்டம் கொண்டதில்லை.

அருளம்பல சுவாமிகள் ஞானத் தெளிந்த சித்தர். அதற்கு மேலாக அற்புதமான படைப்பாற்றல் கொண்டகலைஞனாகவும் காணப்படுகிறார். நுணுக்கமும் நேர்த்தியும் கொண்டஅவரது பல கைவினைப் பொருட்களான மண்விளக்கு,சட்டி,செம்பு போன்றவற்றை அவரின் பரம்பரையினர் வதிரியில் பேணி வந்ததை நேரில் கண்டுள்ளேன்.

அத்துடன் அவர் சிறந்த ஓவியராகவும் விளங்கியுள்ளார். எமது ஊரான வியாபாரிமூலை விநாயகர் ஆலய களஞ்சியசாலைக்கு முன்பாகவுள்ள வாகனசாலைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரில் செங்காவி கோட்டோவியமாக பக்த அடியார் ஒருவரின் சித்திரம் ஒன்றைச் சிறுவயதில் கண்டது மங்கிய கனவாக நினைவில் நிற்கிறது. அதேபோல வசந்த மண்டப சுவரிலும் அவர் வரைந்த தெய்வ ஓவியங்கள் இருந்திருக்கின்றன. பேணப்பட வேண்டிய பெறுமதி வாய்ந்த பொக்கிஷங்கள் அவை. பாவியரைக் கரை சேர்க்கும் ஞானத் தோணியான அருளம்பல சுவாமிகளின் உள்ளுணர்வுகளைப் பிரதிபலிக்கும் கைவண்ணமான அவற்றை வெள்ளை அடித்து மறையச் செய்த எமது பேதமையை எண்ணி மனங்கலங்குவார் எமது மண்ணின் பிற்கால ஓவியரான திரு.ஏ.கே.நடராஜா.

சித்தராக, கலைஞனாக, ஓவியனாக தன்னை வெளிப்படுத்திய அருளம்பல சுவாமிகள் தன்னை கவிஞனாகவும் எழுத்தாளனாகவும் வெளிப்படுத்தவும் தவறவில்லை. தான் தெளிந்த ஆன்மீக அறிவையும் உணர்வையும் மக்களுக்கு ஊறச் செய்யும் முயற்சியாக கவிதையாகவும் உரைநடையாகவும் அவர் படைத்தவை பல. பதின்னான்கிற்கு மேற்பட்ட இத்தகைய ஆக்கங்கள் உள்ளதாக பேராசிரியர் நா.ஞானகுமாரன் கூறுகிறார். இவை படித்துப் பயன்பெற ஏற்றவை என்பதற்கு மேலாக ஆய்விற்குரிய ஆவணங்களாகவும் திகழ்கின்றன.

அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி, கற்புநிலை, அருவாச தேவ ஆரம், நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம், நாகை நீலோசனி அம்மன் ஊஞ்சல், கற்பு நிலைச் சுருக்கம், பழைய வேற்பாட்டுடன்படிக்கை, ஆதிபுராணம், ஆதி நீதி ஆகியவை கிடைக்கப் பெற்றதாக பேராசிரியர் நா.ஞானகுமாரன் குறிப்பிடுகிறார். ஆநாதி போதம், சங்க வினாவிடை, சைவ வினாவிடை, தர்க்க சாஸ்திரம் ஆகியவை கிடைக்கப் பெறவில்லை இருந்த போதும் எம்மிடையே விளைந்த அந்த ஞான ஒளியை நாம் உணரத் தாமதித்தபோது, தமிழகப் பாரதி எம் கண்ணைத் திறக்கத் தேவைப்பட்டான். நாகையிலிருந்த சுவாமிகள் வேதாரணியம், அகத்தியாம் பள்ளி, மாயாவாரம், சிதம்பரம், காரைக்குடி, புதுச்சேரி ஆகிய இடங்களிற்கும் சென்றிருக்கிறார். பாரதி புதுவையில் மறைந்திருந்த காலத்திலேயே சுவாமிகளைச் சந்தித்துள்ளார்.

'மங்களம் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர்கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்
சங்கரனென் றெப்போது முன்னே கொண்டு
சரணடைந்த .......'

என்று பாரதி அவரைப் பாடுகிறான். வேறு இரு பாடல்களிலும் இவரைத் தனது ஞானகுருவாகச் சுட்டிக் காட்டுகிறான். பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் இவர் தான் என 1960 களில் இ.மு.எ.ச ஆரவாரமாக விழா எடுத்துக் கொண்டாடியதன் பின்னர் வெளியுலகில் மறக்கப்பட்டிருந்த அருளம்பல சுவாமிகளை, ஒரு பல்கலைக்கழகத்தின் அறிவாண்மையுடன் ஆய்வு செய்து 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' என நூலுருவில் நிலை நிறுத்தியவர் பேராசிரியர் நா.ஞானகுமாரன். அவரின் தொடர்ந்த சலிக்காத தேடலும், தன்னலமற்ற பணியும் காரணமாக அருளம்பல சுவாமிகளின் சில படைப்புகள் இப்பொழுது நூல் வடிவில் ஆவணப்படுத்தப்படுகின்றன.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிஞர் கந்தமுருகேசனார்

மலர்வு: - 27.4.1902 உதிர்வு: - 14.06.1965

புலோலியூர் தாமோதரம் ஜெயவீரசிங்கம்
ஓய்வுநிலை. உப அதிபர்.

படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு. என்ற பாடல் வரிகளுக்கு உயிர்த்துவம் அளித்த ஒரு சிலரில் அறிஞர் கந்த முருகேசனாரும் ஒருவர் என்பது காலத்தாற்புகட்டப்பட்ட பேருண்மையாகும். அவர் இளமாணி, முதுமாணி, கலாநிதி, பால பண்டிதர், பண்டிதர்,வித்துவான் என்று பட்டங்களைப் பெற்றவரல்லர். ஆனால் இத்தகைய பட்டங்களைப் பெற்ற பலர் அவரைத்தேடி வந்து அவர் குடிசைத் திண்ணையில் அமர்ந்து அவருடன் உரையாடி, உறவாடி உள்ளமுவந்து சென்றனர் என்பது அவர்காலத்தில் வாழ்ந்த அனைவரும் அறிந்த ஒன்றே- உலகம் வியந்த வேத விற்பனர், வீரத்துறவி என்று வையகம் போற்றிய விவேகானந்தரின் குரு இராமகிருஷ்ண பரமகம்சர் ஒரு பாமரப்பூசாரி ஆனால் வங்கம்தந்த பேரறிஞர் பலர் உதாரணமாகக் கேசவசந்திரசென், ரவீந்திரநாத்தாகூர் , பங்கிம் சந்திரசட்டர்ஜி, சரத் சந்திரர் மற்றும் மராட்டிய அறிஞர் மகாதேவகோவிந்த ரானடே போன்றோர் அவரைத் தேடி வந்து சந்தித்துச் சென்றனர். அதே போலத் தமிழகம் என்று பெயர்தாங்கிய குடிசைத்திண்ணையில் எப்போதும் கற்றோர் மற்றும் கற்போர் கூட்டம் நிறைந்திருக்கும் தமிழ், தத்துவம், தர்க்கம்(அளவையியல்) என்னும் துறைகளில் வினாவிடை விளக்கம் நடக்கும் அவர், ஆன்மீகப் பெரியார் இவர் பகுத்தறிவுப் பெரியார் கந்தமுருகேசனாருடைய தலை மாணாக்கர்களில் ஒருவரான மன்னவன் கத்தப்பு தனது கையறு நிலைக்கவிதையில்

"தத்துவத்தை அயலவர்க்குத் தருயவன நாட்டுத்
தலைமகனாம் சோக்ரடீஸ் தன்னுருவம் போல
மெத்தியவாம் அறிவழகு அமைதிதனைக் கொண்டு
மேலவனாங் கந்தமுருகேசர்" என்று போற்றிப் பாடியுள்ளார். இது வெற்றிப்புகழ்ச்சியல்ல. அரிஸ்ரோட்டில், பிளட்டோ, சோக்ரடீஸ் ஆகிய கிரேக்க ஞானிகளைப் போல் அவரும் வெண்தாடி வேந்தரே. அறிவிலும் அவர்களை ஒத்தவரே.

பனங்காணி ஒன்றின் நடுவிலே அமைந்த கிழக்கு வாயிற்குடிசை பனை ஓலையால் வேயப்பட்ட ஒற்றை மால் வாயிலின் இரு பக்கமும் திண்ணைகள் வலப்புறத் திண்ணையில் வாத்தியார் என்று ஊரால் அழைக்கப்பட்ட கந்தமுருகேசனார் வீற்றிருப்பார். அத்திண்ணையே அறிவன்னை அவருக்களித்த அரியணை. இடப்புறத் திண்ணையில் கல்வி நாடி வரும் பெரியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பார்கள். திண்ணைக்கு முன்னால் மல்லிகை, முல்லை, நான்குமணிப் பூக்கொடிகள் படந்திருக்கும் பந்தல் முன்றில் வெண்மணல் பரப்பி அழகாக இருக்கும். பள்ளி மாணவர்கள் மணலில் இருந்து படிப்பார்கள். பின்னேரங்களில் அவர்களுக்குப் பாடம் நடக்கும். வாத்தியாரின் சீடர்கள் சிலர் கிருஸ்ண பிள்ளை அவருடைய அண்ணன் ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் பாடம் நடத்துவர். எமது கல்விப் பாரம்பரியங்களில் ஒன்றான திண்ணைப் பள்ளி மரபின் இறுதிச்சான்றாதாரம் இதுவே என்பது எனது எண்ணம். வசந்தம் வீசும் சித்திரை வைகாசித் திங்கள்களில் மல்லிகை,முல்லைப்பூக்களின் சுகந்தமும் திண்ணை முற்றத்தில் வீசும் இயற்கையின் இனிமையோடு இணைந்த இக்கல்வி இனி எக்காலம் கிட்டும்? ஒரு சின்னஞ் சிறிய சாந்திநிகேதன் 1965ல் கந்தமுருகேசனார் அமரத்துவம் எய்திய பின்பும் அவருடைய அன்பரான க.பொன்னையா ஆசிரியர் அவர்களால் "இளங்கோ அகம்" என்னும் அவருடைய இல்லத்தின் முன்னாணியில் இரு கொட்டில்கள் போடப்பட்டு மாணவர்கள் கற்பிக்கப்பட்டனர். இங்கு கற்பித்த கந்தமுருகேசனாரின் சீடர்கள் வாழ்வாதாரம் தேடி அரச வேலைகளில் அமர்ந்த போது அக்கல்வியூட்டலும் முடிவுற்றது. சின்னஞ்சிறிய சாந்தி நிகேதனின் சரித்திரமும் முற்றுப் பெற்றது. தாகூர்களின் இலட்சியக்கனவாக்கம் வங்கத்தின் சாந்திநிகேதன் தாயகத்திலே கந்த முருகேசனாரின் நனவாக்கம் தமிழகம் திண்ணைப் பள்ளிக்கூடம்.

கந்தமுருகேசனார் ஒரு முற்போக்கு சிந்தனையாளர். சமூக சீர்திருத்த வாதி புலோலி பெற்றெடுத்த பெருமைமிக்க படைப்பாளிகளில் ஒருவரான என்.கே.ரகுநாதன் எழுதிய "நிலவிலே பேசுவோம்" என்னும் சிறுகதையில் போலிசீர்திருத்த வாதி ஒருவரிடம் சென்ற சிறுபான்மைத் தோழர்களை வீட்டுக்குள் அழைக்காது வெளியே நிலவிலே பேசுவோம் என்று தந்திரமாகக் கூட்டிச் சென்றதை கலைநயத்துடன் கவினுறச் சித்திரித்துள்ளார். கந்தமுருகேசனார் அப்படியானவ ரல்லர். சொல்லும் செயலும் ஒன்றானவர். உண்மையானவர், கண்ணியமானவர் எழுத்தாளர் என்.கே. ரகுநாதனும் கந்தமுருகேசனாரின் அன்பர்களில் ஒருவரே.

சாதிமேத பேதந் தனைக்கடந்து செந்தமிழர்
நீதி நெறிப்பட்டு நின்றதனாற்- கோதின்றிக்
கற்றுயர்ந்த பல்லோர் தாங் கண்கண்ட தெய்வமெனப்
பெற்றுயர்ந்தான் வாழ்க திருப்பேர்.

என்று அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா அவர்களின் கவிதை வரிகளில் கந்தமுருகேசனாரின் உண்மைத்துவம் உணர்த்தப்படுகின்றது உயர்த்தப்படுகின்றது. தாழ்த்தப்பட்டோர் என்று அக்காலப்பகுதியிலே தள்ளிவைக்கப்பட்டோரிடம் அன்பு காட்டி அவர்களை அரவணைத்துக் கற்பித்தவர் கந்தமுருகேசனார்.

நானாக்கும் பாடல்களை நன்குசுவைத்தேயூக்கந்
தானாகக் என்னைத் தனித்தழைக்கும்- ஆனாத
அன்புடைய ஐயாஇவ் ஆழ்துயரப்பாடலையும்
நன்கு சுவைப்பாயோ நவில்.

என்னும் கவிஞர் மு.செல்லையாவின் ஆற்றாமை மிக்க வரிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தமுருகேசனாரின் உயர்பண்பு எடுத்து உரைக்கப்படுகின்றது. கந்தமுருகேசனாருடைய இன்னும் ஓர் அன்பர் கே.ஜி.மகாலிங்கம் ஆக்கம் ஒன்றில் உயர் சற்குணவாதியாய் சாதி மத பேதம் சாடிய செங்கதிரோன் என்று நயந்து நவின்றுள்ளனர்.

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே கூடிப்பனங்கட்டி கூழும் குடித்து என்று குடாநாட்டு உணவுப்பாரம்பரியத்தை பாடல் மூலம் பறை சாற்றியவர் தங்கத்தாத்தா என்று அன்பாக அழைக்கப்பட்ட நவாலியூர் சோமசுந்தரப்புலவர். அதே போன்று வடமராட்சியின் உணவுப் பாரம்பரியத்தின் உன்னதமான ஓர் இடத்தை வகிக்கும் ஒடியற் கூழை மாதம் ஒருமுறையேனும் மூதூர்ப்பெரிய பானையிலே காய்ச்சித் தன்னுடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மாணவர்களுக்குக் கூழ் விருந்து படைப்பது கந்த முருகேசனாரின் விருப்பமான செயற்பாடுகளில் ஒன்றாகும். பரணியிலே சயங்கொண்டாராற் பாடப்பட்ட கூழ் கந்தமுருகேசனாரைக் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. அரையல்,உப்பு,புளி,கறிகள் மற்றும் சரக்குகள் அனைத்தும் வாத்தியாரின் கை பார்ப்பின் பின்பே பானைக்குப் போகும்.

வைப்புக்காணும் நமக்கு இன்று
வாரீர் கூழை எல்லீரும்
உப்புப் பார்க்க ஒரு துள்ளி
உள்ளங்கையிற் கொள்ளீரே.

என்ற கலிங்கத்துப் பரணி பாடலிற்கிணங்க அகப்பையில் அள்ளி ஊதிச் சூடாற்றி வாத்தியாரின் உள்ளங்கையில் சிறிது ஊற்றப்படும் அதை நக்கி சுவை பார்த்து எல்லாம் சரியென்று வாத்தியார் கூறியதும் கூழ்ப்பானை குதூகலத்துடன் இறக்கப்படும் கூழ்வாசம் நாவூறவைக்கும் நன்றாக செருக்கிய சிரட்டை, கோலிய பலாவிலை கொண்டு கூழ்பரிமாறப்படும். ஆடிப்பனங்கட்டிக் கூழை பாடிப் பெருமைப்டுத்தியவர் சோமசுந்தரப்புலவர் அவர் தங்கத்தாத்தா. ஒடியற் கூழைக் காய்ச்சிப்பகிர்ந்துண்டு உவந்தவர் கந்த முருகேசனார் இவர் தமிழ்த்தாத்தா.

தமிழகத்தவருக்கும் ஈழத்தவர்க்கும் தொப்புட் கொடி உறவென்று கூறப்படுவது வழக்கம். இவ்வுறவு வாத்தியாருடைய வாழ்வில் வலுப்பெற்றிருந்தது. இராமசாமிநாயக்கர் என்ற பெயரைக் கொண்ட ஈ.வே.ரா.பெரியாருடன் கந்தமுருகேசனார் நட்புக் கொண்டிருந்தார்.இருவரும் பகுத்தறிவு வாதிகள். சாதிபேதத்தை சாடிய சீர்தீருத்த செம்மல்கள். கந்தமுருகேசனார் சுயமரியாதைக் கழக திராவிடக் கழக அனுதாபி ஆதரவாளர். பெரியார் வயதில் மிகவும் இளையவரான மணியம்மையை மணந்ததை தொடர்ந்து அறிஞர் அண்ணா பிரிந்து சென்று திராவிடமுன்னேற்றக்கழகத்தைஉருவாக்கிய பின் கந்தமுருகேசனார் திமுக ஆதரவாளரானார். காஞ்சி திராவிட நாடு மாலை மணி போன்ற கழக வெளியீடுகள் வாத்தியாரின் தமிழகத்துக்கு ஒழுங்காக வந்து சேர்ந்தன. கழகத்தலைமையுடன் கடிதத்தொடர்பு பேணப்பட்டது. தி.மு.க லோக்கசபை உறுப்பினரும் சிறந்த பேச்சாளருமான நாஞ்சில் மனோகரன் இலங்கைக்கு வந்த போது தமிழகத்துக்கும் வந்து கந்த முருகேசனாரை சந்தித்து அளவளாவிச் சென்றார் அனல் பறக்கும் அடுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி எழுத்தாளரும் பேச்சாளரும் தி.மு.க சட்டசபை உறுப்பினருமான ஏ.வி.பி ஆசைத்தம்பி மற்றும் தி.மு.க பிரமுகர் அன்பில் தருமலிங்கம் ஆகியோரும் வாத்தியாரிடம் வருகை தந்தனர். தமிழ் ஆராய்ச்சி அறிஞர்களும் ஆர்வலர்களும் கூடியிருந்த உயர் அவை ஒன்றில் "அறிஞர் பேரறிஞர் என்றெல்லாம் என்னை அழைக்கின்றனர். ஆனால் ஈழத்தில் புலோலியில் ஒரு மூதறிஞர் இருக்கின்றார் அவர்தான் கந்தமுருகேசனார் என்று அறிஞர் அண்ணா புகழாரம் சூட்டிச் சென்றார். இது அறிஞர் அண்ணாவின் அருமையான அவையடக்கம் அதில் கந்தமுருகேசனார் புகழடக்கம் இவ்வாறாக கந்தமுருகேசனார் ஈட்டிய இசை எல்லாம் இம்மண்ணையே சேர்ந்தது. தமிழ் நாட்டில் பட்டி தொட்டியெல்லாம் சென்று சீர்திருத்தப்பரப்புரை செய்தார் ஈ.வே.ரா பெரியார். இங்கே முடமான நிலையில் திண்ணையில் இருந்தபடியே சீர்திருத்தப் பணியை முனைப்பாக முன்னெடுத்தார் கந்தமுருகேசனார் அவர் தமிழ்நாட்டுப் பெரியார் இவர் ஈழத்துப் பெரியார்.

கந்தமுருகேசனாரின் திண்ணையில் இருந்து தமிழ்கற்றவர்களின் பட்டியல் நீண்டது. குடாநாட்டின் புகழ்பூத்த பாடசாலை அதிபர்கள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள் என பலர் இப்பட்டியலில் அடங்குவர். முதலில் ஹாட்லிக் கல்லூரி அதிபராகவும் பின்பு யா/பரியோவான் கல்லூரி அதிபராகவும் அரும்பணி புரிந்த திரு.க.பூரணம்பிள்ளை, ஹாட்லிக்கல்லூரி அதிபர் டபிள்யூ.என் சாமுவேல் பூரணம்பிள்ளை காலத்தில் துணை அதிபராக கடமையாற்றிய எஸ்.ரி. சாமுவேல், வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் சே.ஏகாம்பரநாதன், வடஇந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி லோகநாயகி குமாரசாமி, புற்றளை மகாவித்தியாலய அதிபர் சி.தருமலிங்கம், புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபர் சுகணா என்று அழைக்கப்பட்ட சு.கணபதிப்பிள்ளை, உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் ஆண்கள் பாடசாலை அதிபர் சிதம்பரப்பிள்ளை என பட்டியல் பெரியது. நான் அறிந்தவர்களை மட்டும் எழுதுகின்றேன் அறியாதவர்களை விரிவஞ்சி எழுதாமல் விடுகின்றேன் அவ்வாறாக நான் எழுதத்தவறியவர்கள் என்னை மன்னிப்பார்களாக என மன்றாட்டமாக வேண்டி நிற்கின்றேன். பாலபண்டிதர், பண்டிதர் கலைப்பட்டதாரி (இலங்கை இலண்டன்) பரீட்சைகளுக்காக படித்தவர்கள் கலாசாலை விரிவுரை யாளர்களில் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை, கே.வி. நடராசா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களிலும் தூரத்திலிருந்து வந்தாலும் காரைசுந்தரம் பிள்ளை வாத்தியாருக்கு மிக நெருக்கமானவராக இருந்தார். வாத்தியாரிடம் அரிவரி தொடக்கம் பண்டிதர் வகுப்புவரை கற்றவர்களில் இன்று குடாநாட்டின் புகழ் விளங்கும் ஆங்கில ஆசான்களில் ஒருவராக ஒளிரும் சி.சிவசுப்பிரமணியம் சுட்டிக்காட்டப்பட வேண்டியவர். வாத்தியாரிடம் கற்ற பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கையோ ஆயிரத்தை எட்டும் எழுதி அடங்காது. எனவே எழுதாது விடுகின்றேன். வாத்தியாரின் மாணாக்கர்களில் மறையாது வாழும் ஆசிரியர்களுக்கு ஒன்றை உதாரணமாக புலோலியூர்ப் பண்டிதர் வீ.பரந்தாமனைக் குறிப்பிடுகின்றேன்.

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதிணெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இறையனார் அகப்பொருள், தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, கம்பராமாயணம், கந்தபுராணம், ஆழ்வார் பிரபந்தங்கள், சித்தாந்தசாத்திரங்கள் மற்றும் கோவை உலா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாதி,கலம்பகம், குறவஞ்சி, தூது, பள்ளு, பிள்ளைத்தமிழ் எனச் சிற்றிலக்கியங்கள் அனைத்திலும் எழும் ஐயங்களைஅறவே நீக்கி மாணவர்களுக்கு விளக்கும் வல்லமையும் வளமையும் வாத்தியாருக்கு இருந்தன. மதுவை நாடி மலரைத்தேடி வரும் மதுரக மன்ன மாணாக்கர் கந்தமுருகேசனாரின் தமிழகத்திண்ணையைத் தேடி வந்த வண்ணமிருந்தனர். 1963ல் அவர்களில் ஒருவரான விக்கி என்றழைக்கப்டும் விக்கினேஸ்வரராஜா (துன்னாலை) கரவெட்டி விக்கினேஸ்வராத்திடலில் அரங்கமைத்து வாத்தியாரைக் கௌரவிக்குமுகமாக மாபெரும் விழா ஒன்றை தனது தளரா முயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் சீரும் சிறப்பாக செவ்வனே செய்து முடித்தார். ஒத்துழைப்பு நல்கியோர்அனேகர். விரிவஞ்சி விபரம் எழுதாது விடுகிறேன். புலோலியில் இருந்து துன்னாலையூடாகக் கரவெட்டிவரை வீதியெங்கும் விழாக்கோலம். எனது அறிவுக்கு எட்டியவரை வடக்கில் எந்த ஓர் அறிஞருக்கும் அவர் வாழும் பொழுதே இவ்வாறாக ஒரு பாராட்டுவிழா எடுக்கப்பட்டதில்லை. இவ்வாறான ஓர் அரிய நிகழ்வுக்கு வடமராட்சி முன்னோடியாக வழிகாட்டியாக நின்றது.

கோவை உலா, அந்தாதிக்கோர் ஒட்டக்கூத்தன் என்று பாடினார் ஒரு புலவர். ஒட்டக்கூத்தரையொட்டிக் கந்தமுருகேசனாரும் தமிழ் வளர்த்த நல்லை ஆறுமுகநாவலர் மீது கோவைப் பிரபந்தம் பாடினார். ஈழத்தமிழுலகத்திற்கு அவர் விட்டுச் சென்ற அழிவிலா அருஞ்சொத்து வாத்தியார் பாடல்களைச் சொல்ல அவருடைய அன்பு மாணாக்கர்களில் ஒருவரான உடுப்பிட்டி கா.நீலகண்டன் அவற்றை எழுதுவார். நல்லை நாவலன் கோவை கையெழுத்துப் பிரதி நீலகண்டனிடமே இருந்து வந்தது நீண்ட காலத்தின் பின்பு வாத்தியாருடைய அன்பர்களில் முன்னிலை வகித்த ஆசிரியர் க.பொன்னையா அவர்களின் மூத்தமகன் பொ.இளங்கோ தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக தேவையான நிதியை வழங்கி எழுத்துப் பிரதியைப் பதிப்பிக்கும் பணியை முன்னெடுத்தார். அவர் ஒஸ்ரேலியாவில் இருந்தமையால் உள்ளூரில் வாத்தியாரின் வாஞ்சைக்குரியவர்களில் ஒருவரான திரு.சே.ஏகாம்பரநாதன் மற்றும் அண்மையில் அமரரான வே.வீரபத்திரப்பிள்ளை வீ.க.சண்முகநாதன் ஊடகவியலாளர், கே.என்.எஸ்.திருச்செல்வம், மு.கனகலிங்கம் போன்றோருடைய ஒத்துழைப்புடன் உரையும் எழுதப்பட்டுப் பதிக்கப்பட்டது. புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழாவும் நடத்தப்பட்டது. ஆனால் வாத்தியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அன்பர் சிலருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனது நெஞ்சை இது நெருடியது. இவ்வாறு விழாவில் இடம் பெறாமல் போனவர்களில் கந்தமுருகேசனாரின் சிறப்புச்சீடர் காரை சுந்தரம்பிள்ளையும் அடங்குவர். வலிகாமம் தந்த தவப்புதல்வர் நாவலருக்கு கோவை பாடிச் சிறப்பித்த பெருமை கந்தமுருகேசனார் மூலம் வடமராட்சிக்கு வந்தது.

1965 ஆனித்திங்கள் பதினான்காம் நாள் கந்தமுருகேசனார் யாக்கையை நீத்தார். தாயகத் தமிழ்த்தாய் இருபதாம் நூற்றாண்டின் தனது தலைமகனைக் காலனிடம் பறிகொடுத்தாள்.தமிழகம் தாழ்ச்சியுற்றது பகுத்தறிவுப் பண்ணை பாழ்போயிற்று. புலோலியின் ஒலி மங்கிற்று. மாணவர்களும் ஊராரும் ஒன்றிணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியாரின் இறுதி உலாவை ஒழுங்கமைத்தனர் அவருடைய பூத உடலைத் தண்டிகையில் அமர்த்தி சுடுகாட்டிற்குகொண்டு சென்றனர். இறுதி ஊர்வலத்தில் வடமராட்சியே திரண்டு வந்து கலந்து கொண்டது என்று கூறும் அளவிற்கு மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. தி.மு.கழகத்தின் கறுப்பு, சிவப்பு கொடி பூத உடல் மேல் போர்த்தப்பட்டிருந்தது. கந்தமுருகேசனார் வீதியென்று பின்பு பெயர் சூட்டப்பட்டவீதிச்சந்தியில் இருந்து ஆனைவிழுந்தான் மயானம் வரை அஞ்சலி செலுத்த வந்த அன்பர் கூட்டம் அலை மோதியது.பூத உடல் நெருப்பில் வெந்து நீறாகியது.

எத்தனை வித்தகம் செய்தாய் அத்தனை இலக்கண இலக்கியங்களிற்கும் விரிவான விளக்கம் சொன்னவாய் வெந்தழிந்தது.

ஆசுகவியால் அகிலவுலகெங்கும்
வீசு புகழ் காளமேகமே- பூசுரா
விண்கொண்ட செந்தழலில் வேகுதே- ஐயையோ
மண்டின்ற பானம் என்றவாய்

காளமேகப்புலவரின் பூதவுடல் சுடுகாட்டில் வேகும் போது அங்கு வந்த இரட்டையர் உருகிப்பாடிய பாடல் என் நெஞ்சில் நிழலாடியது.அறிஞர் கந்தமுருகேசனார்- யாக்கையை நீத்த ஆண்டில் அடியேனுக்கு அகவை பத்தொன்பது. அவரின் உறவினரான நான் அவருடன் ஐந்து ஆண்டுகாலம் பழகியுள்ளேன் அவரிடம் ஒருபோதும் நான் நேரடியாக கற்றவனல்லன் ஆனால் வித்துவான் சி.இ.கந்தசாமி பண்டிதர் வீரகத்தி, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் பண்டிதரும் வழக்கறிஞருமான வ.மகாலிங்கம் பண்டிதர் வீ.பரந்தாமன் பண்டிதர் சு.நாகலிங்கம் கவிஞர் மன்னவன் கந்தப்பு போன்றோருக்குக் கந்தமுருகேசனார் பாடம் சொல்லும் போது நானும் ஒருபக்கம் இருந்து கேட்பேன். அக்கேள்வியே அவரிடம் நான் கற்ற கல்வி.

கந்தமுருகேசனாருடைய சீடர்பரம்பரை அவரின் நினைவை உள்ளங்களில் இன்றும் ஏந்தி வருகின்றது. கந்தமுருகேசனாருடைய இலக்கியப்படைப்பான நல்லை நாவலன் கோவை பல்கலைக்கழகத் தமிழ்ப்பாட மாணவர்களின் பாடத்திட்டத்தில் ஒரு பாட நூலாக ஆக்கப்பட வேண்டும் என்பதே அவருக்குச் செய்யப்படும் உயர்ந்த கௌரவம் என்று அன்னாரின் மாணாக்கர்கள் அன்பர்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர். இது எதிர்காலத்தில் நிறைவேறும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் அனைவரும் உறுதியாகவுள்ளோம்.

வாழ்க தமிழ்
வாழ்க கந்தமுருகேசனார் புகழ்.

**குறிப்பு வழங்கியுதவினோர் :** திரு.சி.தருமலிங்கம்
திரு.சி.சிவசுப்பிரமணியம்
திரு.ஆ.புண்ணியமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலோலிக்குப் புகழ்சேர்த்த பண்டிதை பத்மாசனி அம்மாள்

திரு. அ. பௌநந்தி,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

ஈழத்துத் தமிழ் கல்வி பாரம்பரியத்தில் வடமராட்சிப் பிரதேசத்திற்கென கனதியான ஓர் இடம் உண்டு என்பது மறுப்பதற்கில்லை. புலவர்கள், பண்டிதர்கள் பலர் வாழ்ந்து கல்விப் பணியும் இலக்கியப் பணியும் கவிதைப் பணியும் ஆற்றியுள்ளனர். அதேவேளை ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்குப் பெண்கள் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பங்களிப்பும் முக்கியமானது. அது பற்றிய ஆய்வுகள் பலநிலைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பின்னணியில் "ஈழத்து நவீன கவிதை" (2007) என்ற நூலில் கலாநிதி செ.யோகராசா அவர்கள் ஈழத்தின் முதற் பெண்கவிஞராக மீனாட்சியம்பாள் நடேசையர் என்பவரைக் குறிப்பிடுகின்றார். அது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு தேடல்கள் நடைபெற்றதன் விளைவாக அவருடைய கருத்து நிராகரிக்கப்பட்டு ஈழத்தின் முதற் பெண் கவிஞர் பத்மாசனி அம்மாள் என்பதை ம.வே.மகாலிங்கசிவம் அவர்கள் உறுதிபடக் கூறுகின்றார். பத்மாசனி அம்மாள் பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பத்மாசனி அம்மாளின் தோற்றம்**

வடமராட்சியின் பருத்தித்துறையிலுள்ள புலோலியில் 06.06.1903 இல் பத்மாசனி அம்மாள் பிறந்தார். இவருடைய தாய் தங்கரத்தினம், தந்தை நமசிவாயம். ஆரோக்கியமான கல்விப்பாரம்பரியத்தையுடைய குடும்பப் பின்னணியில் பிறந்த பத்மாசனி அம்மாள், பெண்கள் கல்விபற்றிய விழிப்புணர்வு ஏற்படாத, பெண்கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகள் இல்லாத காலச்சூழலில் கல்வியறிவு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தனது வீட்டுச் சூழலில் கிடைத்த திண்ணைக் கல்வி மூலமாக பத்மாசனி அம்மாள் தனது அறிவாற்றலை வளர்த்துக்கொண்டார். திருவனந்தபுரம் மகாராஜக் கல்லூரியின் சமஸ்கிருதப் பேராசிரியரும் இரகுவம்சம், பில்கணீயம் முதலிய வடமொழி நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்தவருமான வ.கணபதிப்பிள்ளை, நன்னூற்காண்டிகை உரை விளக்கம், பாரத உரை என்பவற்றை எழுதியவருமான 'இலக்கணக் கொட்டர்' என்று போற்றப்பட்ட வ.குமாரசாமிப்புலவர் ஆகியோரின் சகோதரியான பார்வதி அம்மையாரின் (பாறாய்ச்சி) பேரப்பிள்ளைகளே பத்மாசனி அம்மாள், பாலாம்பிகை ஆகியோர், பார்வதி அம்மையார் கல்வியறிவு மிக்கவராக விளங்கினார். சைவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் க.சிவபாதசுந்தரனார் பார்வதி அம்மையாரின் மருமகன். குருகவி ம.வே.மகாலிங்கசிவம் பார்வதி அம்மையாரின் பேரனார். இவர்கள் இருவரும் பார்வதி அம்மையாரிடம் கல்வி கற்றவர்களேயாவர். அது மட்டுமன்றி தனது பேரப்பிள்ளைகளான பத்மாசனிஅம்மாள், பாலாம்பிகை ஆகிய இருவரையும் தானே கற்பித்து மதுரைத் தமிழ்ப் பண்டிதைகளாக்கியவர். இவர்களே ஈழத்தில் பண்டிதைப் பட்டம் பெற்ற மூத்தவர்களாக அறியப்படுகின்றனர் என்பதும் இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகும். எனவே, பத்மாசனி அம்மாளுக்கு முன்னர் பார்வதி அம்மையாரிடம் சிறந்த கல்வியறிவு காணப்பட்டது என்பது இங்கு முக்கியமான அம்சமாகும். புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதிக்கு பாயிரம் எழுதிய குருகவி ம.வே.மகாலிங்கசிவம் அப்பாயிரத்தில் கூறும் பின்வரும் கூற்று இவற்றுக்குச் சான்று பகர்வதாக அமையும்.

"திருந்து செந்தமிழ் நூல் பல எனக்கு அருள்செய்த
அருந்தவக் கலைக் கடல் நிகர் பார்வதியார் பால்
பரந்த மாமதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதையாய்
பொருந்துகின்ற பாலாம்பிகையோடும் தமிழ் பயின்றாள்"

இங்கு பாலாம்பிகையோடு தமிழ் பயின்றவளாக பண்டிதை பத்மாசனி அம்மாளை குறிப்பிடுகின்றார். பின்னாளில் பத்மாசனி அம்மாள் புலோலியைச் சேர்ந்த இராஜேந்திரா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரவீந்திரன், இந்துமதி என இரு பிள்ளைகள். பண்டிதை பத்மாசனி அம்மாள் 11.10.1978 இல் தனது 75 ஆவது வயதில் பூவுலகை நீத்தார்.

பண்டிதை பத்மாசனி அம்மாள்,

1. ஈழத்தின் முதற் பெண் கவிஞர்
2. ஈழத்தின் முதற் பெண் மொழிபெயர்ப்பாளர்
3. வெளியீட்டாளர்
4. கட்டுரையாசிரியர்

என பல்பரிமாண ஆளுமைமிக்கவராகத் திகழ்ந்துள்ளார்.

## 1. முதற் பெண் கவிஞர்

ஈழத்தின் முதற் பெண் கவிஞராக விளங்குகின்ற பண்டிதை பத்மாசனி அம்மாள் 'புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி' எனும் அந்தாதியை எழுதியுள்ளார். இது 1925 இல் வெளிவந்துள்ளது. புலோலி பசுபதீஸ்வரர் என்பது பருத்தித்துறை சிவன்கோவில் இறைவனைக் குறிப்பதாகும். அவர் மீது முதற் பாடலின் முடிவு (அந்தம்) அடுத்த பாடலின் தொடக்கமாக (ஆதியாக) அமையுமாறு 100 பாடல்களைக் கொண்ட நூற்றந்தாதியாகப் பாடப்பட்டுள்ளது. இந்நூல் மூன்று பதிப்புக்களைக் கண்டுள்ளது. மூன்றாவது பதிப்பு 2000 இல் நடைபெற்றுள்ளது. அதன் போது அதற்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் உரை எழுதி வெளியிட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதியில் புலோலியின் சிறப்பு, பசுபதீஸ்வரருடைய அருட்சிறப்பு ஆகியன விதந்து கூறப்பட்டுள்ளன. சீரும் சிறப்பும் மிக்க இடமாகப் புலோலியைப் பாடியுள்ளார். அதேபோல பசுபதீஸ்வரர் மீது அடியவர்கள் கொண்ட பக்தியையும் தான் கொண்டிருந்த அளவிறந்த பக்தி ஈடுபாட்டையும் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். பக்தியிலக்கியங்களில் குறிப்பாக தேவாரம் மற்றும் திருவாசகத்தில் அம்மையார் நிறைந்த ஈடுபாடும் பரிச்சயமும் கொண்டிருந்தார் என்பது அவரது பாடல்களைப் படிக்கும்போது புலனாகும். அத்துடன் வடமொழியில் அம்மையார் கொண்டிருந்த ஆற்றலையும் அவரது பாடல்களினூடாகத் தரிசிக்க முடிகின்றது. "கொள்ளரிய சதுர்வேதப் பரணவார்த்த கோமள சந்திரவதன லளித நாத தெள்ளு திராவிட கானப் பிரிய மோக திவாகர சந்திர மௌலீசுவர...." என்ற பாடலடிகள் இதற்குச் சான்று பகரும்.

அறுசீர் கழிநெடிலாசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம் ஆகிய யாப்புக்களைச் சிறப்புறக் கையாண்டு இந்த இலக்கியத்தை ஆக்கியுள்ளமையை அவதானிக்கலாம். பெரிதும் எளிமையும் தெளிவான கவிதையோட்டமும் கொண்டதாக அவ்விலக்கியம் பாடப்பட்டுள்ளமை பண்டிதை பத்மாசனி அம்மாளை ஈழத்தின் முதல் பெண் கவிஞராக மட்டுமன்றி சிறந்த கவியாற்றல் மிக்கவராகவும் அடையாளப்படுத்துகின்றது.

**2. முதற் பெண் மொழிபெயர்ப்பாளர்**

தமிழ், வட மொழி ஆகியவற்றில் மட்டுமல்லாது ஆங்கில மொழியிலும் பண்டிதை பத்மாசனி அம்மாள் தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது அவரது மொழி பெயர்ப்பு முயற்சியின் மூலம் தெளிவாகின்றது. தோமஸ் கிரே (Thomas Grhy) என்பவர் ஆக்கிய 'Elegy written in a country Churchyard' என்ற கவிதையை இவர் 'ஒரு நாட்டுப்புறத் தேவாலயத்தில் எடுக்கப்பட்ட இரங்கற்பா' என்ற தலைப்பில் மொழிபெயர்த்திருந்தார். இம் மொழிபெயர்ப்பு 48 பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. பெரும்பாலும் அறுசீர் விருத்தத்தைக் கையாண்டுள்ளார். இவரது இந்த மொழிபெயர்ப்புப் பாடல்கள் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' சஞ்சிகையில் 1926,1927 காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. இது பத்மாசனி அம்மாளுடைய மொழிபெயர்ப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றே கொள்ளப்பட வேண்டும். எளிமையான தமிழ் நடையில் விளங்கிக்கொள்ளக்கூடியதாக அம்மையார் தனது மொழிபெயர்ப்பினைச் செய்துள்ளார். அத்தோடு மேலதிக விளக்கத்திற்காக அவசியமான இடங்களில் ஆங்கிலச் சொல்லை அடைப்புக் குறிக்குள் கொடுத்துள்ளமை இவரது மொழிபெயர்ப்பின் ஒரு பண்பாக அமைகின்றது. மேலும், தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப தனது மொழிபெயர்ப்பினை மேற்கொண்டுள்ளமையும் அவரது மொழிபெயர்ப்பின் முக்கியமான சிறப்பம்சம் எனலாம்.

**3. வெளியீட்டாளர்.**

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இலக்கண இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சி மும்முரமாக நடைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பின்னணியில் பண்டிதை பத்மாசனி அம்மாள் ஓலைச் சுவடியாக இருந்த 'செய்யுட்பொருத்த இலக்கணம்' என்னும் நூலைப் பதிப்பாக வெளியிட்ட பெருமைக்குரியவராக அமைகின்றார். தனது வெளியீட்டு முயற்சிக்கான களமாக மதுரைத் தமிழ்ச்சங்க வெளியிடான 'செந்தமிழ்' சஞ்சிகையினை பயன்படுத்திக் கொண்டார். அச் சஞ்சிகையின் 22 ஆவது இதழில் இது வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் செய்யுளுக்குரிய மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உரை, வருணம், நாள், கதி, கணம் என்னும் பத்துவகை இலக்கணங்களைக் கூறுகின்றது.

**4. கட்டுரை ஆசிரியர்**

பண்டிதை பத்மாசனி அம்மாள் கவியாற்றலில் மட்டுமன்றி உரைநடையிலும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பதற்கு அவர் எழுதிய கட்டுரைகள் சான்று பகரும். செந்தமிழ் இதழிலும் சிவதொண்டன் நிலையத்தின் வெளியீடுகளிலும் கட்டுரைகள் எழுதியுள்ளதாக அறிய முடிகின்றது. எனினும் உரியவர்களின் அக்கறையீனம் காரணமாக அவற்றைத் தேடிப் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன. யாழ்ப்பாண சிவதொண்டன் நிலைய வெளியீடான 'யோகர் சுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்' (2004) என்ற நூலில் அம்மையாரின் 'என்னைக் கணமும் பிரியா இறைவன்' என்ற கட்டுரை மீள் பிரசுரம் செய்யப்பெற்றுள்ளமை அவரது கட்டுரையாற்றலை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அக்கட்டுரை யோகர் சுவாமியை தனது குருவாக ஏற்றுக்கொண்டமை பற்றியதாக அமைந்துள்ளது. ஆற்றொழுக்குப்போல அமைந்துள்ள எளிமையான மொழிநடையை அவர் கையாண்டுள்ளதோடு பொருத்தமான உவமை, உருவகங்களைக் கையாண்டு தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமையும் அவதானிக்கலாம்.

**நிறைவு**

ஈழத்து தமிழ் இலக்கியத்தில் தடம் பதித்துச் சென்ற பல்வேறு அறிஞர்களின் மத்தியில் புலோலியில் பிறந்து வளர்ந்து புகழை நிலைநாட்டியவர்களுள் முக்கியமானவராக விளங்கும் பண்டிதை பத்மாசனி அம்மாளின் பணியும் காலத்தால் அழியாது. கல்விப் பாரம்பரியம் மிக்க குடும்பப் பின்னணியில் பிறந்து ஈழத்தில் பண்டிதைப் பட்டத்தை முதன்முதலில் பெற்றுக்கொண்ட பண்டிதைகள் இருவரில் ஒருவராக விளங்கும் பண்டிதை பத்மாசனி அம்மாள் ஈழத்தின் முதல் பெண் கவிஞராக, ஈழத்தின் முதல் பெண் மொழிபெயர்ப்பாளராக, பதிப்பாசிரியராக, கட்டுரையாசிரியராக பல்வேறு தமிழ்ப் பணிகளை மேற்கொண்டு சிறப்புப் பெற்றுள்ளார். ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் அவர் ஆற்றிய பங்களிப்பு காலத்தால் அழியாது. அவருடைய இலக்கியப் பணிகள் பற்றிய ஆய்வுகள் மேலும் விரிவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அவசியமாகின்றது.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் பற்றிய அறிமுகக் குறிப்பு (1903- 1968)

திரு.க.சுதர்சன் (B.A)
தும்பளை,
பருத்தித்துறை.

பேராசிரியர் கந்தசாமி கணபதிப்பிள்ளை இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் நவீன சமூக, பண்பாட்டு வரலாற்றின் மிக முக்கியமான ஆளுமை ஆவார். பன்முகமான புலமைத்துவத்தின் உச்சமாகவும், இயல்பூக்கமான படைப்பாளியுமாகத்திகழ்ந்தார். முன்னைய இலக்கியமரபுகளின் தொன்மையை அறிவதிலும் அவற்றிற்கு புதிய பரிமாணம் அளித்தலையும் பல இலக்கியப் பரிசோதனை முயற்சிகளின் முன்னோடியுமாக விளங்கினார்.

கந்தசாமி கணபதிப்பிள்ளை 1903.07.02 அன்று தும்பளையில் பிறந்தார். இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரியிற் படித்து இலண்டன் பல்கலைக்கழகத்தின் கலைமாணித் தேர்வில் முதலாவது வகுப்பில் 1930ம் ஆண்டில் தேர்ச்சியடைந்தவர். இதனால் இலங்கை அரசாங்கம் கீழைத்தேச மொழி ஆராய்ச்சிப்பரிசிலை இவருக்கு வழங்கியது. இந்தோ-ஆரிய மொழிகளைப் பாடமாகக் கொண்டு கலைமாணித்தேர்வுக்கு கற்ற மாணவரில் முதன்முதலாக முதல் வகுப்பிலே சித்திபெற்றார். இவருக்கு இளமைக்காலத்தில் தமிழும் சமஸ்கிருதமும் கற்றுக்கொடுத்தவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ஆரிய திராவிட மகா பண்டிதர் பிரம்மஸ்ரீ.முத்துக்குமாரசுவாமிக்குருக்களாவார்.

உயர்திரு. விபுலானந்த அடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு முதல் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருந்த காலத்தில் பேராசிரியருடைய புலமைத்திறனைக் கண்டு இவரை சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு இரண்டு ஆண்டுகள் தொல்காப்பியம் முதலிய தமிழ்ப் பேரிலக்கணங்களையும் சங்க இலக்கியங்களையும், கம்பராமாயணம், கந்த புராணம் முதலிய காவியங்களையும் நன்கு கற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே வித்துவான் பட்டம் பெற்றதும், இலண்டன் பல்கலைக்கழகக் கீழைநாட்டுக் கல்லூரியிற் சேர்ந்து பேராசிரியர் ரேணர் என்பவரிடம் மொழியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்தோ ஐரோப்பிய இந்தோ ஆரிய மொழிகளின் நுண்மையைக் கற்றறிந்தார். ஏழாம் எட்டாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சாசனங்களை ஒருங்கு சேர்த்து அவற்றின் மொழி இலக்கணத்தைச் செவ்வனே விளக்கி ஆராய்ச்சி நூலை எழுதினார். இலண்டன் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குக் கலாநிதிப் பட்டம் அளித்தது. கலாநிதிப் பட்டம் பெற்று இலங்கைக்குத் திரும்பி வந்ததும், இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளராகவும், 1936 ஆம் ஆண்டில் நியமனம் பெற்று 1947 ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றித் தமிழ்த் துறையை விருத்தி செய்து 1965 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

தமிழுக்கும் தமிழைக்கற்றவருக்கும் இகழ்ச்சி பெருக்கிக் கொண்டு சென்ற காலத்திலே தமிழ்த்துறையை உயிர்த்துடிப்புடன் இணங்கச் செய்த பெருமை இவருக்கே உரியது. ஈழத்துக் கவிஞர்களுடைய இலக்கியங்களையும் ஈழத்து எழுத்தாளரின் படைப்பு இலக்கியங்களையும் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடப் புத்தகங்களிற் சேர்த்த பெருமை இவருக்கே உரியது.

பேராசிரியர் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் மாணவர்களின் இலக்கியப் படைப்புக்களையும், நாடக ஆற்றல்களையும் வளர்த்தெடுத்தார். தமிழ்ச்சங்கத்திற்கு இவர் செய்த இன்னொரு சிறப்புத் தொண்டு தமிழ்ச் சங்க ஏடாகிய 'இளங்கதிரை' த் தொடக்கி வைத்து அதன் தொடர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தார்.

மாணவர்களின் முன்னேற்றத்தில் மிக அக்கறை கொண்டதுடன் எப்போதும் அன்புடன் பழகியுள்ளார். புலமைத்துவ வீச்சுமிக்க மாணவப் பரம்பரையைத் தோற்றுவித்ததில் பேராசிரியரின் பங்கு மிகப் பெரியது. பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, சி.தில்லைநாதன், அ. சண்முகதாஸ், ஆ.வேலுப்பிள்ளை ஆகியோரை இம்மரபில் கூறலாம். கிராமிய வாழ்க்கையிலும் கிராமியக் கலைகளிலும் கிராமிய வழிபாட்டுமுறைகளிலும் இருந்த அதிக ஈடுபாடு காரணமாக சாதாரண மக்களுடன் தொடர்பு கொள்வதைப் பெறுபேறாகக் கொண்டவர். அவர்களை எல்லாம் தமது நாடகங்களிலும் நாவல்களிலும் முக்கிய பாத்திரங்களாக்கினார்

பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்திற்கென பல நாடகங்களை எழுதினார். 'உடையார் மிடுக்கு', 'முருகன் திருகுதாளம்', 'கண்ணன் கூத்து', 'நாட்டவன் நகர வாழ்க்கை' ஆகியன 'நானாடகன்' என்ற பெயரில் அச்சிலும் வந்தன. 'பொருளோ பொருள்', 'தவறான எண்ணம்' என்பன இரு நாடகம் என்ற பெயரில் வந்தன. 'சங்கலி' என்ற வரலாற்று நாடகம் 'சுந்தரம் எங்கே?' 'துரோகிகள்' ஆகிய நாடகங்கள் தவிர்ந்த ஏனைய நாடகங்கள் பேச்சு வழக்கு மொழியில் எழுதப்பட்டது. இலங்கை நாடக மரபில் நவீன யதார்த்த பாணி நாடகங்களையும், அரசியல் நாடகங்களையும் ஆரம்பித்து வைத்தவர் பேராசிரியரே.

பேராசிரியரது ஏனைய நூல்களாக 'காதலியாற்றுப்படை', 'தூவுதும் மலரே' ஆகிய கவிதை நூல்களும், 'ஈழத்து வாழ்வும் வளமும்', 'இலங்கைத் தமிழர் வரலாறு' போன்ற ஆய்வு நூல்களும், 'பூஞ்சோலை', 'வாழ்க்கையின் விநோதங்கள்', 'நீரர மகளிர்' போன்ற மொழி பெயர்ப்புக்களையும் விதந்து குறிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி உன்னத படைப்பாளி ஒருவர் தான் வாழும் சமுதாயத்தின் சமத்துவமான வாழ்விலே ஆத்ம திருப்தி அடைகின்றார். பேராசிரியர்க.கணபதிப்பிள்ளை அவர்களும் தனது பேராசிரியப் பணியினூடாகவும், கலை, இலக்கியத்துறைப் பங்களிப்பின் ஊடாகவும் தம்மை அர்ப்பணித்தவர். அவரது வாழ்வு நெடுங்கவிதையாக வியாபித்திருக்கின்றது. இளைய சமூகத்தினராகிய நாம், பேராசிரியரது புலமைத்துவத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது கடலளவாய் பரந்துள்ளது.

**துணைநின்றவை:**


1. பேரா.க.கணபதிப்பிள்ளையும் இலங்கைப் பல்கலைக்கழகமும், கலாநிதி.சு.வித்தியானந்தன் - 'இளங்கதிர்' (1967-1968) தமிழ்ச்சங்கம், பேராதனை.
2. 'A Profile of Late Professor Dr.K.Kanapathipillai-Prof-A-Shanmugadas திருவுடையாள் -02
3. Multifaced Professor.K.Kanapathipillai- 'Moondravathu Kann' Issue, February 07, 2007.


*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்மொழி வல்லுனரும் ஆய்வாளனுமாகிய தும்பளை கலாநிதி தாவீது அடிகளார் (1907-1981)

திரு. சீமாம்பிள்ளைஅந்தோனிமுத்து
B.A Hons., Dip.in.Ed.,
ஓய்வுநிலைஉபஅதிபர்,
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை.

யாழ் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசம் கல்விமற்றும் கலைப் பாரம்பரியத்தைக் கொண்டு இலங்கும் ஒருபிரதேசம், அப்பிரதேசம் பலகல்விமான்கள் மற்றும் அறிஞர்களின் ஊற்றும் உறைவிடமும் ஆக விளங்குகிறது. வடமராட்சி வடக்கிலுள்ள தும்பளைஎன்னும் கிராமம் பன் மொழிப்புலமை பெற்றதாவீதுஅடிகள் பிறந்தகளமாக அமைந்தமையால் வடமராட்சிபுகழ் பெறுகிறது.

1907ம் ஆண்டுயூன் மாதம் 28ம் திகதி தும்பளையில்"மாவச்சை"எனப் பெயரிட்டவளவில் தவிதுப்பிள்ளை–எலிசபேத் தம்பதிகளின் தலைமகனாகப் பிறந்தவரேஹயசிந் சிங்கராயர் (தாவீது) ஆவார். ஆங்கிலமொழி மூலம் ஆரம்பக்கல்விதொடக்கம் கற்ற தாவீது London Matriculation பரீட்சையில் சித்தியடைந்து பின் London" பல்கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டம் சிறந்தபெறுபேறுகளுடன் பெற்றுக் கொண்டார் 1931ம் ஆண்டில் கத்தோலிக்க துறவியானார். இவருடைய கல்வித் திறமையினால் புனிதபத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு 1966 வரை பணிபுரிந்தார். இவர் வரலாறு,பொருளியல் ஆகிய துறைகளில் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தாலும் இவர் காலத்தில் வாழ்ந்த மொழி ஆய்வாளனாகிய நல்லூர் சுவாமிஞானப்பிரகாசர் மற்றும் தமிழ்ப்புலமை மிக்க சுவாமி விபுலானந்தர் ஆகியோருடன் கொண்ட தொடர்பினால் சமஸ்கிருதம் மற்றும் தமிழ் போன்ற கீழைத்தேய மொழிகளைக் கற்கத்தூண்டப்பட்டார். நல்லூர் சுவாமிஞானப்பிரகாசர் போன்றஅறிஞர்களின் ஆரிய-திராவிடமொழிக் குடும்பங்கள் பற்றிய ஆய்வுகளை வாசித்து அறிந்து கொண்ட தாவீது அடிகள் வரலாற்றுப் பின்னணியில் மொழிக் குடும்பங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள ஆர்வங் கொண்டமையினால் 1950களில் இந்தியாவுக்குச் சென்று சமஸ்கிருத மொழியில் முது கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து தமிழ் மொழியில் தொல்காப்பியம் என்னும் நூலை ஆய்வுசெய்து கலாநிதிப்பட்டத்தினை இலண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

இத்தகைய புலமைமிக்கதாவீது அடிகள் 30க்கு மேற்பட்டகீழைத்தேய, மேலைத் தேயமொழிகளைக் கற்றார். அவ்வாறு பல மொழிகளில் ஆழ்ந்தபுலமை பெற்றதினால் தனது குருவாகியநல்லூர் சுவாமிஞானப்பிரகாசர்(1875-1947) மேற் கொண்ட மொழிகளின் ஆய்வில் நாட்டங் கொண்டுஅவர் தொடக்கி வைத்த சொற்பிறப்பியல் பேரகராதி(Etymological Lexicon) யைப் போன்று சுவாமி ஞானப்பிரகாசரின் மறைவின் பின் அவரைப் பின்பற்றி புதிய சொற்பிறப்பியல் ஒப்பீட்டு பேரகராதிகளை எழுதி வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேய,மேலைத்தேய பழைய மொழிகளை நன்கு ஆய்வு செய்து, மொழிகளின் சொற்பிறப்பியல் ஒப்பீட்டு பேரகராதிகளை 1970ம் ஆண்டு தொடக்கம் ஆறு பாகங்களில் வெளியிட்டார் அத்துடன் வேறுபல நூல்களையும் எழுதினார். அவையாவன:

1. An Etymological and Comparative Lexicon (6 Parts)
2. We are Kith and Kin
3. Whence Came Sinhala Here?
4. ஈழத்தில் தமிழர்
5. Whence Came the recent Programs Here?
6. We Stand for.....

முக்கியமாக அவர் வெளியிட்ட கருத்துக்களில் தமிழினதும், சிங்களத்தினதும் மூல மொழி ஒன்றே என்பதும், தமிழ் மக்களும் சிங்களமக்களும் ஓர் இனத்தைச் சேர்ந்தோரே என்பதும் கவனிக்கத்தக்கது. இந் நாட்டுமக்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் சமாதானமாக, சகோதரத்துவமாகசீரிய இலங்கையில் (சிறீலங்கா) வாழ்வதே சாலச் சிறந்தது என்பதை அவர் இலட்சியமாகக் கொண்டவர். இன மொழிபேதம் அற்றசமுதாயத்தை - நாட்டை உருவாக்குவதை அவர் தனது அபிலாஷையாகவும் கொண்டிருந்தார் என்பதை நாம் மறவாது அதற்காக உழைப்போமாக.

அவரது பரோபகாரப் பண்பும் இங்குசுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும். அவர் ஏழைச் சிறுவர்களுக்கு கல்விகற்க வேண்டிய உதவிகளைச் செய்த ஓர் பெருந்தகை. அவருடைய அக் கொள்கையை தொடர்வதற்காக அவருடைய பெயரால் (Rev Fr HS David Trust Foundation) அருட்தந்தை கலாநிதி தாவீது அடிகள் நம்பிக்கைநிதியம் என்பது 2013 யூன் 28ல் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்நிதியத்தின் மூலம் தகுதியுள்ள சிறுவர்களுக்கு ஏழைகளாயின் கல்வியைத் தொடர உதவிகள் செய்யப்பட்டு வருவதை இங்கு சுட்டிக்காட்டப்படுவது பொருத்தமாகும்.

இத்தகை மேதை, ஆசியாவில் சிறந்துவிளங்கிய 90,000 நூல்களைக் கொண்ட கலைப் பொக்கிஷமாகிய யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்டு அதிர்ச்சியினால் 1981 யூன் முதலாம் திகதி உயிர் நீத்தார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. யூன் முதலாம் திகதி அவரின் நினைவுதினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

**ஆதாரங்கள் :** 1) தாவீது அடிகள் எழுதிய நூல்களில் காணப்படும் குறிப்புகள்
2) புனித பத்திரிசியார் கல்லூரி நூற்றைம்பதாவது ஆண்டு மலர்

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி வடக்கு பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த கவிஞர் யாழ்ப்பாணன்

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்
முகாமையாளர்,
மக்கள்வங்கி, பருத்தித்துறை.

நண்டின் காலை ஒடிக்காதே
நாயை கல்லால் அடிக்காதே
வண்டைப் பிடித்து வருத்தாதே
வாயில் பிராணியை வருத்தாதே

கோழிக் குஞ்சைத் திருகாதே
குருவிக் கூண்டைச் சருகாதே
ஆழி சூழும் உலகேத்தும்
அன்பு காட்டி வதிவாதே

ஊனைத் தின்று வாழாதே
உயிரைக் கொன்று தாழாதே
மானைக் கொன்றால் மான் கன்று
வருந்தல் நீயும் அறிவாயோ?

கிளியைக் கூண்டில் அடைக்காதே
கேடுனை வந்து சூழ்ந்திடுமே
ஒளியே இல்லாச் சிறைதனிலே
உன்னை வைத்தால் சகிப்பாயோ?

எல்லா உயிரும் இறைமகவே
இன்பம் நாடி உழைப்பனவே
பொல்லாப் பொன்றும் செய்யாதே
புனித வாழ்வு காண்பாயே!

இந்தக் கவிதை இங்கே முழுமையாகத் தந்த தன் நோக்கம் இன்றைய தலைமுறையினருக்கு போய்ச் சேர வேண்டும் என்பதே ஆகும். ஜனரஞ்சகமான இந்தக் குழந்தைப்பாடலுக்குச் சொந்தக்காரன்தான் நமது கவிஞர் யாழ்ப்பாணன்.

பருத்தித்துறை வியாபாரிமூலையில் நாச்சிமார் கோயிலுக்கு அருகாமையில் 'வேதர் வளவில்' 02.09.1908 இல் வேல்மயில்வாகனன் சிவக்கொழுந்து பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குடும்பச்சூழ்நிலை காரணமாக மிக இளவயதிலேயே சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து உழைத்ததன் மூலம் பெற்றுக்கொண்ட வருமானத்தை தாயின் கையில் கொடுத்து குடும்ப பாரத்தைத் தானும் சுமந்து பங்களித்தார் எனும் தகவல் கவிஞர் யாழ்ப்பாணன் பற்றிய மதிப்பொன்றை ஆரம்பத்திலேயே நமதுள்ளத்தில் விதைத்து விடுகிறது.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போதே முதலாம் வகுப்புத் தொடக்கம் பத்தாம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு எண்கணிதம்,அட்சர கணிதம், கேத்திர கணிதம், பூமி சாத்திரம், சுற்றாடல் முதலான பாடங்களுக்குரிய நூல்களை அரச பாடவிதானங்களுக்கு ஏற்ப ஆக்கி அரச அங்கீகாரத்துடன் வெளியிட்டார் என்பதும் அவை அக்காலத்து மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற ஆக்க பூர்வமாக அமைந்தன என்பதும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்ற உண்மைகள்.

*1938* இல் தம்பிப்பிள்ளை அவர்களது இளைய மகள் நவமணியைத் திருமணம் செய்ததன் பயனாக நான்கு பெண்களையும் ஓர் ஆண் குழந்தையையும் பெற்றார். அம்பிகையின் மேல் கொண்ட அளவற்ற பக்தி காரணமாக அம்பிகையின் திருநாமங்களைப் பெண் பிள்ளைகளுக்கும், கண்ணன் மீது கொண்ட காதல் காரணமாக மகனுக்குக் கண்ணன் என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

தனது பாடநூல் வெளியீடுகளாயினும் சரி,கவிதைத் தொகுதிகள் உட்பட இலக்கியம் சார்ந்த வெளியீடுகளாயினும் சரி பெரும் ஒத்தாசையாக இருக்குமென எண்ணியதன் காரணமாக, தானே பருத்தித்துறை நகரில் 'கலாபவனம்' என்ற பெயரில் ஒரு அச்சகத்தை நடாத்தி வந்திருக்கிறார்.

கலாபவனத்தில் அச்சிட்டு வடலங்கா புத்தகசாலை வெளியீடாக வெளியீடுகளைச் செய்திருக்கின்றார்.அச்சகத்தில் பலருக்கு வேலை வாய்ப்பளித்து அவர்களது குடும்பங்களின் உயர்வுகளிலும் அக்கறை கொண்டவராக வாழ்ந்திருக்கின்றார். தனது வயல், தோட்டம் ஆகியவற்றில் விளைந்தவற்றையே தனது உணவுக்குப் பயன்படுத்தி தன்னிறைவான ஒரு வாழ்க்கையினை வாழ்ந்து காட்டியிருக்கிறார். பிரிக்க முடியாதது புலமையம் வறுமையும் என்ற கருத்தை பொய்ப்பித்து வாழ்ந்து காட்டியிருக்கிறார் நமது யாழ்ப்பாணன் என்றால் அது பொய்யல்ல.

இவர் இறுதியாக வெளியிட்ட 'ஜீவயாத்திரை' எனும் நாவல் இவரது உரைநடை திறனைக் கண்டுகொள்ள ஓர் உரைகல்லாகும் என சமகாலத்து அறிஞர்கள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்நூலை மஹாகவி பாரதியாரின் பேர்த்தியார் திருமதி விஜயபாரதி சுந்தரன் அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

கவிதைத்துறையை எடுத்துக் கொண்டால் மாலைக்குமாலை, கவிதைக்கன்னி, முல்லைக்காடு, பாலர்கீதம், கண்ணன் பாட்டு ஆகியவை தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சமஸ்கிருத காவியம் ஒன்றை தமிழ் மரபோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டி புதிதாகப் பாடி நூலுருவாக்கம் செய்ய ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் போது அப்பணி நிறைவேற காலம் அவருக்குக் கைகொடுக்கவில்லை.

'முல்லைக்காடு' எனும் கவிதைத் தொகுதியில் தனது கவிதைகளை மட்டும் உள்ளடக்காமல் ஏற்கனவே கவிஞருடன் கவிதைகள் ஊடாக இலக்கிய உறவைப் பேணி வந்த ஜீவா (பரிமளா) மற்றும் அவரது கணவரான ராஜதுரை ஆகியோரது கவிதைகளையும் அவர்களுடனான கவிதையிலான கடிதங்களையும் சேர்த்து வெளியிட்டமை இவரது இலக்கியப் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

கவிதைக்கன்னி, முல்லைக்காடு ஆகிய இரண்டு தொகுதிகளிலும் அக்காலத்தைய கவிஞர்களின் பாடுபொருளாக பெரிதும் இடம் பிடித்துக் கொண்ட பாரதமாமா, பாரத விடுதலை, மகாத்மா காந்தி, சுபாஸ் சந்திரபோஸ், பாரதியார், புத்தர், யேசு, தமிழ்த்தாய் மற்றும் ஈழத்து மகாலிங்கசிவம், ஆறுமுகநாவலர், சேர்.பொன். இராமநாதன் முதலான கவிதைத் தலைப்புக்களில் இடம் பெற்றவை ஆச்சரியமானவை அல்ல. மற்றும் அக்காலத்தைய கவிதைப் போக்குகளான சமூகத்திற்கு நன்னெறி புகட்டும் தன்மை இவரது கவிதைகளில் விஞ்சி நிற்பதும் பொதுவான தன்மைகளாகும். ஆனால், பின்வருவன நம்மை வியப்புக் குள்ளாக்குகின்றன.

'தோல் எல்லாம் சுருக்கம் கண்டு
சுடரொளிக் கோலம் வற்றி
காலிரண் டுறுதி இன்றிக்
கைபிலோர் கோலும் ஊன்றிச்
சாலையில் மெல்ல வூரும்
தளர்வுறு கிழவி......' யை எங்களது கவிஞர் யாழ்ப்பாணன் கண்டு

'பாட்டியுன் வறுமை தீர்க்கப்
பாரினில் மக்கள் உண்டோ
வாட்டமிங் ககற்றி வைக்கும்
வளர்வுறு சுற்றமுண்டோ?
வீட்டினை விட்டு நீங்கி
வீதியே னைலைந்து நிற்பாய்
நாட்டம் நீ நவில்வை யாயின்
நானுமிங் உதவி செய்யும்' என்கிறார்.

வயோதிபன் எனும் தலைப்பிலான கவிதையில்

'நடையில் தளர்வு காணும்
நடுங்கிய உடலங் காணும்
இடையினில் கந்தை காணும்
இவனில்லை எடுத்துக் கூறும்' என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வயதுமோர் எண்பதாகும்
வாட்டமில் னுளத்தினோடும்
தயவினை நாடி நாழும்
தரத்தினர் பாடம் கற்க.....
'.... சாலையில் மெல்ல மெல்ல
தளரடி வைத்து வைத்துக்
காலையும் மாலை நேரம்

கடைகளில் மடல்கள் விற்று' என தள்ளாத வயதிலும் கை நடுக்கத்துடன் தொழில் செய்து வாழும் வயோதிபரைப் பற்றி எழுதுகிறார். இவ்விரண்டு கவிதைகளையும் இக்காலத்தில் வயோதிபர்களால் நிரம்பி வழியும் முதியோர் இல்லங்களுக்கு சமர்ப்பணம் செய்யலாம்.

கவிஞர் யாழ்ப்பாணன் மீனவர் துயரினைப் பாடியிருக்கிறார். கரையினில் அவரது மனைவியர் கைக்குழந்தையுடன் ஏக்கத்தொடு காத்திருக்கும் நிலையினைப் பாடியிருக்கிறார். சாதிக் கொடுமையைச் சாடியிருக்கிறார். ஆலயங்களில் வேள்விகளில் சன்னதம் ஆடிக்கொண்டு ஆட்டுக்கடாக்களை பலியிடுவதைப் பாடியிருக்கிறார்.

'யாழ்ப்பாணன் அவர்களுடைய கவிதைகளில் பெரும்பாலானவை அன்பிற் தோய்ந்தவை. நினைவிற்கப்பால் நீடுறவே வளரும் ஒரு நிலைத்த அன்பு- பேரன்பு அவரின் கவிதைகளில் ஜீவ ஊற்றாக விளங்குகின்றது' என நமது வரதர் குறிப்பிட்டிருப்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

பல கவிதைகளை குடத்தனைக் கிராமத்தில் இருந்த தனது வயலுக்குப் போகும் போதும் வரும் போதும் வயலில் தனது கருமங்'களை ஆற்றும் போதும் யாத்திருக்கிறார் என்பது தனது ஆசிரியத் தொழில்,அச்சகத் தொழில் ஆகியவற்றால் ஏற்படும் நேரமின்மையின் நிர்ப்பந்தத்தால் தனது கவி வேட்கையை இவ்வாறு தணித்திருக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

யாழ்ப்பாணத்தில் பண்டித பாரம்பரியத்தைப் பேசி இன்புற்ற காலகட்டத்தில்
'இலக்கணம் கற்றே னல்ல
இலக்கிய அறிவு மஃதே என்ற சுய அறிமுகத்துடன் இவ்வாறு கூறுகிறார்.

'நான் ஆசிரியனாக இருக்கலாம் ஆனால், நான் இலக்கணம் கற்கவில்லை. கற்கும் ஆர்வமும் இருக்கவில்லை. இலக்கணம் கற்று அணியையும் யாப்பையும் துருவி, மோனையையும் எதுகையையும் தேடி சொற்களை பிணைத்து தமியேன் கவி பாட முன்வரவில்லை. இலக்கணம் கற்றால்தான் கவிதைகள் சோபிதமுறும் என்பதில் எனக்கு நம்பிக்கையுமில்லை'. என்று துணிந்து கூறும் கவிஞர் யாழ்ப்பாணனின் இக்கூற்று 'எத்தனையோ ஆண்டுகளுக்கு பின்பு
'யாப்பு எனும் குதிருக்குள்
இலக்கணம் போட்ட உத்தரவுக்குப் பயந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கிக் கிடக்கும் சோம்பேறிச் சொற்களுக்காக
கவிதை என்று கட்டியம் கூறுவீர்? என்ற கவிஞர் மேத்தாவின் கவிதைக்கு முற்பட்டதல்லவா?

தனது 'கவிதைக்கன்னி' எனும் தொகுதிக்கு தமிழ் நாட்டு ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் மற்றும் ராஜாஜி கி.வ.ஜகந்நாதன் கல்கி ஆகியோரிடம் முன்னுரை, அணிந்துரை வாங்கி நூலுக்கு அணி சேர்த்த அதே வேளை ஈழத்து அறிஞர்களான கலாநிதி க.கணபதிப்பிள்ளை, பண்டிதர் பொன். கிருஸ்ணபிள்ளை, தி.ச.வரதராசன் (வரதன்) ஆகியோரிடம் விமர்சனம் வாங்கிச் சேர்த்துள்ளமை கவிஞர் யாழ்ப்பாணனின் எண்ணப் பாங்கை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

அறுபது வருடங்களே வாழ்ந்த கவிஞர் யாழ்ப்பாணன் **10.05.1968** இல் காலமாவதற்கு முதல் வருடம் யாழ். இலக்கிய வட்டத்தினரால் கௌரவிக்கப்பட்டார் என்ற தகவல் எம் இதயத்திற்கு இதமளிக்கின்ற சேதியல்லவா.

கவிஞர்.வே.சிவக்கொழுந்து எனும் இயற்பெயரை விட யாழ்ப்பாணன் எனும் புனைபெயரே அவருக்கு நீடித்த பிரபல்யத்தையும் புகழையும் தந்தது. என்று அடித்துக் கூறலாம்.

இக் கட்டுரையினை மேலும் நீட்ட எண்ணாது யாழ்ப்பாணனின் முத்திரைக் கவிதைகளில் 'அந்தநாள் வாராதோ?' எனும் கவிதையின் சில பகுதிகளை இக்காலத்தின் பொருத்தப்பாடு கருதி கீழே தந்து இக்கட்டுரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

'தோட்டந் துரவுகளில் சுவரின் சரிவுகளில்
நீட்டிக் கால் முடங்கி நிமிர்ந்து குதித்தெழுந்து
ஆட்டங்கள் போட்டுவிட்டு அமர்ந்தொடுங்கிப் பின்கதவால்
வீட்டிற்குள் நுளைந்திடுநாள் மீட்டுமினி வாராதோ?'


'மட்டிக் கழுதையென மண்டுமிக மூடமெனக்
குட்டுக்கள் பலவிழவே குடல் நடுக்க மெடுத்துவிட
எட்டுடன் எட்டினை இருபது முறைகூட்டித்
தட்டுத் தடுமாறும் தருணமினி வாராதோ?'

'பரீட்சை முடிந்ததடா 'பாஸ்பெயில்' பின் பார்ப்பமடா
வெருட்சி தீர்ந்ததடா விடிவிளக்கும் நூர்ந்ததடா
சுருட்டிச் சுவடியினைச் சுவரிடுக்கில் வைத்துவிட்டு
மருட்சிமான் கன்றெனவே வாவும்நாள் வாராதோ?'

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருபதாம் நூற்றாண்டின் சாதனையாளர்
# மு.நவரத்தினசாமி

திரு. இ. ஆழ்வாப்பிள்ளை
கெருடாவில்.

இருபதாம் நூற்றாண்டிலே தமிழன் பெருமையை உலகிலே நிலை நாட்டிய நீச்சல் வீரர் நவரத்தினசாமி அவர்கள். இலங்கா துவீபத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பாகத்திலே தொண்டைமானாறு என்னும் ஊரிலே பல்லோராலும் நன்கு மதிக்கப் பெற்ற சைவப் பெரியார் உயர் திரு.முருகுப்பிள்ளை என்பவரின் செல்வப் புத்திரனாய் 1909ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் திகதி ஜனனமானார். இவரைப் பெற்றோர் சீராய் சிறப்பாய் செல்லமாய் வளர்த்துப் பாலப் பருவங் கடந்து பள்ளிப் பருவமெய்தியதும் அரிச் சுவடி முதலாம் ஆரம்பக் கல்வியை தொண்டமனாற்றிலும் மேல் படிப்புக்களை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பயிற்றுவிக்க லானார்கள்.

வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலும் விளையும் பயிரை முளையிலும் தெரியுமென்ற பழமொழிகளுக்கொப்ப இவரது கூரிய மதியும் வீரிய திறனும் நேரிய சிந்தையும் மாணவனாக இருக்கும் பொழுதே நன்கு விளங்கியது.

கல்வி பயிலும் காலத்திலேயே முன்னெவராலும் கடந்திராத ஆங்கிலக் கால்வாயை ஓர் வெள்ளைக்கார வீரன் நீந்திக் கடந்த அதிசயச் செயலை வகுப்பாசிரியர் மூலம் அறிந்தார். இதனை அறிந்ததும் தானும் தம் பக்கத்தில் இருக்கும் பாக்கு நீரிணையை எப்படியும் ஓர் நாள் நீந்திக் கடந்து முடிக்க வேண்டுமென்று நினைத்து இவ்வாசையை தன் நெஞ்சத்திலே ஆழப் பதிய வைத்தார். அன்றிலிருந்தே நீச்சற் பயிற்சியை ஆரம்பித்து தனது நாளாந்த பணிகளொழிந்த காலை நேரங்களிலெல்லாம் எவ்வித சோம்பலும் சோர்வுமின்றி நீந்திப் பழகலானார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் முதுமொழியையும் தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும் என்னும் திருவள்ளுவர் வாக்கையும் தம் மனதில் பதிய வைத்து நாற்பத்தி நான்கு வயது நிரம்பப் பெற்றவராயிருந்தும் வீரமுறுக்கேறிய வாலிபனைப் போன்று காலையிலும் மாலையிலும் கடலிலே காலத்தைக் கடத்தி பயிற்சி செய்தார்.

நீச்சல் வீரர் நவரத்தினசாமி 19ஆம் பிராயத்தில் தனது பள்ளிப் படிப்பை முடித்து விட்டு அரசாங்க கிருஷிக் இலாகாவில் சேர்ந்து கடமையாற்றலானார். அங்கு பணியாற்றும் போது தன் கூரிய மதியைக் கொண்டு கிருஷிக பாவனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய விதைதூவும் இயந்திரம் போன்ற பல இயந்திரங்களை நவீன முறையிலே அமைக்கக் கூடிய மாதிரிப் பிரதிகளை அமைத்து அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்று கிருஷிக இலாகாவுக்குத் தனிப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தார். இவரது அயராத உழைப்பையும், விடாமுயற்சியையும், புத்திக் கூர்மையையும், விவேகத்தையும் அறிந்த கிருஷிக இலாகா மேலதிகாரிகள் இவரை கிருஷிகப் பகுதி போதகாசிரியராக நியமிக்கலானார்கள்.

நம் வீரனின் ஆண்மையும், ஆற்றலையும், வீரதீரச் செயல்களையும் சிந்திக்கும் பொழுது குஸ்தி மல்லர்களின் தோற்றமும், பலமும், எடையும் அமைந்திருக்குமென்று நாம் ஊகிக்கலாம். ஆனால் மட்டமான கட்டுமஸ்தான தேகம், வீரம் செறிந்த தோற்றம், எதற்கும் அஞ்சாத சிங்கநடை, புன்னகை பூத்த முகம், அமைதியான பேச்சு, அன்பொழுகும் பார்வை, உயரம் 5அடி 7அங்குலம் 140 றாத்தல் எடை இது வெரும் கலியுக மாருதியின் தேக அமைப்பு.

மலை சரிந்தாலும் மனம் சளையாத மாவீரன் நவரத்தினசாமியின் மனம் சோர்வடையக் கூடியதோர் சோகசம்பவம் இவரது இல் வாழ்க்கையில் எதிர்பாராத விதமாகக் குறுக்கிடலாயிற்று. அதாவது அன்புடன் நேசித்து வந்த அருமைப் பத்தினி நோய்வாய்ப்பட்டு பத்தாவும் புத்திரரும் ஏங்கித் தவிக்க சிவபதம் சென்று விட்டாள். மங்கா மாணிக்கத்தை மாதர் குலதிலகத்தை மனதிற்குகந்த மனையாளைப் பிரிந்ததால் சாகசக் குமரனின் மனம் சஞ்சலத்திலாழ்ந்தது. துன்பியல் வந்த பொழுதும் துவண்டு போக வில்லை. நெஞ்சத்திலே பதிந்த உறியான லட்சியம் துவளவில்லை.

**நீச்சல் ஆரம்பம்**



தமிழ் அன்னையின் தவப் புதல்வன் ஈழநாட்டுச் சிங்கம் சாகசக் குமரன் நவயுக மாருதி திரு நவரத்தினசாமி அவர்கள் (31 1/2 மைல் நீளமுள்ள பாக்கு நீரிணையை நீந்திக் கடப்பதற்காக 1954ம் ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி முதன் முறையாக ஆழியில் குதிக்கலானார். இவ் வீரதீர மகனை ஆசீர்வதித்து வழியனுப்புவதற்கும் நாலா திக்கிலிருந்தும் மக்கள் கும்பல் கும்பலாக வல்வெட்டித்துறை துறைமுகத்தில் வந்து குவியலானார்கள். எல்லோர் நாட்டமும் இவ்வீரனிலும் இவரது வீர செயலிலுமே லயித்திருந்தன. தாயுள்ளம் படைத்த தமிழ் மக்கள் தங்களின் வீரமகன் வெற்றி விருதுடன் வீடு திரும்ப வேண்டுமென இறைவனைப் பிராத்தித்தனர். அன்று பிற்பகல் 2மணிக்கு இவரது மூன்று புதல்வர்களும் இனசனங்களும் நண்பர்களும் புடைசூழ பாக்கு நீரிணைப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு புன்னகை பூத்த முகத்துடனும் பூரிப்புடனும் சிங்க நடை போட்டு சிந்துக் கரை வந்து சேர்ந்தார். கரையின் இவரின் வீரவடிவம் கண்டதும் அங்கு குழுமியிருந்த சனக் கும்பல் கரகோசமிட்டு ஆரவாரஞ்செய்து தமது உள்ளத் தூய்மையை அன்பின் பெருக்கைப் பிரத்தியட்சமாய்க் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நமது வீரமகன் தமது மூன்று புத்திரர்களையும் மார்புறத் தழுவி முத்தமிட்டு பிரியாவிடை கூற முதியவர்கள் ஆசியியம்ப மக்கள் அரஹரா செபிக்க இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாக சமூகம் கொடுத்திருந்த திரு. வி. நல்லையா எம். பி அவர்கள் வழியனுப்பி வைக்க பிற்பகல் 2.30 மணிக்கு நவயுக மாருதி நவரத்தினசாமி தமது வீரப் பாதம் ஆழியில் தோய்ந்து நீச்சலை ஆரம்பிக்கலானார்.

செந்தமிழ் மைந்தன் செல்வன் சித்தாயாத்திரை சென்றதும் பாதுகாப்பிற்காக வைத்திய சுகாதார அதிகாரியும் பொலிஸ் பகுதியினரும் மற்றும் இனசனமும் இரு மோட்டார் படகுகளிலும் கட்டுமரத்திலும் ஏறிக் கொண்டு பின் தொடர்ந்தனர். நீச்சலை ஆரம்பித்து சொர்ப்ப தூரம் சென்றதும் கரையோரத்தில் கண்ணிமை கொட்டாது பார்த்துக் கொண்டு நின்ற சனக் கும்பலுக்கு போய்வருகிறேன் என்றுகூறும் பாவனையாக கைகாட்டி அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

இயற்கையை எதிர்த்து யாரால் போரிட முடியும்? இயந்திர சாதனங்களா லியங்கும் மோட்டார் படகுகளே கடலில் எழும்பிய கொந்தளிப்பை சமாளித்து திரை கிழித்து முன்னேறிச் செல்ல முடியாது தத்தளித்ததென்றால் சாதாரண மானிடப் பிறவி அதிலும் அரைக்கிழப் பருவத்தை அண்டி நிற்பவர் அக்கத்துணை பக்கத்துணை இன்றி, ஆள்துணை தோள் துணையின்றி, ஆழியின் மத்தியில் அலைகளின் நடுவிலே, காற்றினிடையிலேயே மழையின் துளியிலே, மின்னலின் வீச்சிலே, இடியின் முழக்கிலே தனித்து நீந்திச் சென்று கரை சேருவதானால் அது சாதாரண வல்லமையன்று.

எனினும் முன்னறிவிப்பின்றி இயற்கை அனுப்பிய போரப்பத்திரத்திற்கு நமது மறத் தமிழன் அஞ்சி ஒதுங்கிப் பின் வாங்காது, புறமுதுகு காட்டாது, ஆழி கிழித்த கரத்தை சோரவிடாது நீந்திய காலை, நிலமூன்றாது சபாஸ் எனச் சவால் விடுத்து கையடித்துப் போர் தொடுத்தனன். இவரது அஞ்சாமையையும், நெஞ்சத்து வலிமையையும், தனக்குத் தலை வணங்காது தன்னை எதிர்த்து போர் பொருத்த வந்த வீராண்மையையும் கண்ட இயற்கை அரக்கன் எது விதமும் இப் போரிலே இவரை தோற்கடிக்க வேண்டுமென நினைப்புக் கொண்டு தனது சகல வல்லமையையும் காட்டி வீரச்சிங்கனை எதிர்த்தது. அப்படி எதிர்த்தும் அஞ்சாது நெஞ்சுடைய நம் மாருதி இயற்கையை சற்றேனும் கெஞ்சாது முன்னேறிச் சென்றார்.

குறிக்கப்பட்ட கோடிக் கரைக் கோட்டையை மறத்தமிழன் கைப்பற்றிக் கொடி நாட்ட ஆகக் கூடியது ஏழு மைல்களே இருந்தன. இதனை இயற்கை அறிந்ததும் வந்தது மோசமென எண்ணி தனது கடைசி ஆயுதமாகிய நீரோட்டமெனும் நீடிய மதியை நீலத்திரைக் கடல் நடுவே நிலை நாட்டியது. இதனால் நமது வீரன் முன்னேறிச் சென்றதூரத்திலிருந்து பல மைல் பின்னாடி வர வேண்டியதாயிற்று. இவ்வியற்கை கொடுத்த பெரும் போரினாலும் எதிர்ப்பினாலும் நமது நீச்சல் நிபுணன் தமது நீச்சலை நிறுத்திக் கட்டுமரம் ஏறலானார். ஆயினும் ஆழியில் பாதமிட்டு நீச்சல் ஆரம்பித்த அன்று தொடக்கம் நீச்சலைக் கைவிட்ட நேரம் வரைக்கும் 23 1/2 மணித்தியாலம் அலை கடலில் மிதந்து நீரோட்டம் அள்ளிக் கொண்டு போன தூரம் வரைக்கும் உண்மைக்கணக்கின் படி 35 மைல் நீந்திக் கடந்துள்ளார். எனவே முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவையிலேயே முன்னிந்த உலகரெக்கார்ட்டை உடைத்தெறிந்த வீரரென குறிப்பிடுதல் உண்மையிலேயே பொருத்தமானதாகும்.



பாக்கு நீரிணையைக் கடந்தே தீருவேன் அன்றேல் என்பிள்ளைகளில் ஒருவன் நிச்சயமாகக் கடப்பான் இவ்விதம் 1954ம்ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி பாக்கு நீரிணையைக் கடக்க முதல் தடவையாக ஆழியில் குதித்து இயற்கை கோளாறினால் முன்னேறிச் செல்லமுடியாது கரை சேர்ந்த நமது வீரன் நவரத்தினசாமி அவர்களால் கூறப்பட்ட பொய்யா மொழியாகும்.

தான் கூறிய வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்றும் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டான் தமிழனென்ற நற்பெயரை நிலைநாட்ட வேண்டுமென்றும் மங்கியிருந்த மறத்மிழனின் நாமம் திரும்பவும் இவ் இருபதாம் நூற்றாண்டிலே பொங்கியெழ வேண்டுமென்றும் தணியாத ஆசை கொண்டு 1954ம்ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.10 மணிக்கு மீண்டும் கடலில் குதிக்கலானார். நீச்சலை நமது வீரமகன் ஆரம்பித்ததும் கரையோரத்தில் கூடியிருந்த ஜனக் கும்பல் மீண்டும் அரஹராகோசமிட்டு ஆற்பரித்தனர். மூன்று மோட்டார் படகுகள் கம்பத்தின் உச்சியில் நம் தாய்நாட்டின் மணிக்கொடியைக் கம்பீரமாக பறக்க விட்டுப் பின் தொடர்ந்தன. ஆழியின் தோய்ந்த நம்வீரனின் பொற்பாதமும் அலைகளைக் கிழிக்க ஆரம்பித்தன. வெற்றியைக் காண வீரமேனி விரைந்து சென்றது. இவரது வீரத்தையும், தீரத்தையும் இம்முறைகண்ட இயற்கை ஏங்கிக் கொண்டது. இனிமேல் இவ்வீரனை கலியுக மாருதியை சமுத்திர மைந்தனை எவ்விதத்திலும் தோற்கடிக்க முடியாதென நினைத்து தனது அபாய ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு புறமுதுகு காட்டி ஓடியது. இயற்கையின் புறமுதுகை இலக்காக வைத்து நமது வீரன் விரைந்து விரைந்து நீந்திக் கொண்டே போனான். இலங்கை மாதா தன் மைந்தனின் நீச்சலை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள். தமிழ்த்தாய் வெள்ளக் கமலத்தில் வீற்றிருந்து உள்ளம் மிகிழ்ந்தாள். பாரத மாதா தனது உடன்பிறந்த தங்கை மகனை வரவேற்க புன்னகை பூத்த முகத்துடனும் புதுமலருடனும் கொடிகரையை அண்டிவந்தாள். நீச்சலை ஆரம்பித்த நேரத்திலிருந்து சொற்ப நேரமும் இளைப்பாறாது தொடர்ந்து நீந்திச் சென்று தாய் நாடும் சென்று தமிழகமும் ஆசியாக் கண்டமுமே ஆனந்தத்தால் கரைபுரண்டோட உலகமே கேட்டிராத ஒப்பற்ற சாதனையை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ்மகன் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி நிறைவேற்றி கோடிக் கரையேறி கொடியேற்றி வைத்தார்.

வெற்றி ஈட்டி விட்டான் - தமிழன் - விருது நாட்டி விட்டான்
உலகு முற்றும் கேட்டிராத புகழினை முடியில் ஏற்றிவிட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாய்ச் சென்ற தாயின் புகழை எங்கும் பேச வைத்து விட்டான்
ஈழம் நற்றவத்தினாலே ஈன்ற நவரத்தினசாமி.

இப் போரிலே கையில் ஏற்றிய பாம்பு விஷத்தைக் கக்கியிருந்தால், வட்டமிட்ட மச்சம் வாயைத் திறந்திருந்தால், நெரிகட்டிய கை தரிப்பட்டிருந்தால், நீந்திய கால் ஓய்ந்திருந்தால் நமது வீரனின் நிலை என்னாகும்.

போர்க்களம் சென்று புறமுதுகு காட்டாது போர்புரிந்து வாகைமாலை சூடி வெற்றித்திலகம் ஏந்தி தன் தாய்நாட்டின் தலைநகரம் வரும் தளபதியை அரசபிரதானிகளும் பிரசைகளும் எவ்வண்ணம் குதூகலத்துடன் வரவேற்க முன்வாசலில் முரசு கொட்டி நிற்பார்களோ அவ்வண்ணமே நமது வீரன் நவரத்தினசாமியை வரவேற்க வல்வை நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது.

இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். இவரை ஏற்றிவந்த மோட்டார் படகு துறைமுகத்தை அண்டியதும் மக்கள் கோசமிட்டும் அரஹரா சொல்லியும் அவரை வரவேற்றனர். பருத்தித்துறை பிரதிநிதி, சாவகச்சேரி பிரதிநிதி, இந்தியத்தூதுவர் திரு.வி.நல்லையா, டாக்டர் என்.எம்.பெரேரா முதலான பிரமுகர்களால் பாராட்டுரைகள் கூறப்பட்டு வரவேற்பு வைபவம் மிகவும் விமர்சையாக நடைபெற்றது. இன்னும் இவ் வீரரை கௌரவிக்கும் முகமாக முறையே யாழ்ப்பாண நகர மேயரால் தங்கச் சங்கிலியும், பிரதமர் கொத்தலாவையால் ஓர் வெள்ளிக் கேடயமும் பரிசளிக்கப்பட்டது. ஈற்றில் நமது வீரனை இலங்கை அரசாங்கம் மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கும் கோமகனுக்கும் அறிமுகம் செய்து பெருமைப்படுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது. ஈற்றில் அவர் இன்னுமொரு சாதனையை செய்து முடிக்க எண்ணினார். இலங்கையைச் சுற்றி கட்டுமரத்தில் தனது கையால் வலித்துக் கொண்டு 60 வது பிறந்த நாளில் சாதனை படைப்பதற்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது நீர்க்கு அஞ்சாத அந்த நீச்சல் சிங்கம் 01-07-1969 காலமானார்.

நீச்சல் வீரன் நவரத்தினசாமியின் சாதனை வடமராட்சிக்கு மட்டும் அல்ல யாழ்மாவட்டத்திற்கு மட்டுமல்ல அகில இலங்கை ரீதியாக ஒரு சாதனையாகும். சாதனையாளர்கள் போற்றப்படுவார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை நிகழ்வுகளின் பதிவுகள்

பண்பாட்டுப் பெருவிழா – 2011





'தரிசனம்' சிறுகதைத் தொகுதி வெளியீடு – 2012





நாடகவிழாவும் பரிசளிப்பு வைபவமும் – 2013





போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி – 2012






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்கு பிரதேச செயலக நிகழ்வுகளின் பதிவுகள்

### மகளிர் தினம் - 2014





### கிராம அபிவிருத்தித் திணைக்கள தையல் கண்காட்சி - 2014







### பிரதேச விளையாட்டு விழா - 2013





### சமுர்த்தி திவிநெகும சந்தை - 2013




### பயனாளிக்கான சைக்கிள் விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆலயங்களின் மகோற்சவ ஒழுங்கமைப்பு


ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலய ஒழுங்கமைப்பு கூட்டம்


செல்வச்சந்நிதி ஆலய உற்சவகால பணிமனை

அரசாங்க அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டியில் வெற்றியீட்டிய அலுவலர்கள் – 2014







பிரதேச செயலரினால் கலாசார மத்திய நிலைய கட்டுமானப்பணி ,
நெல்லண்டை நெசவு நிலையம் என்பன பார்வையிட்ட போது





கௌரவ பாரம்பரிய, மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சரின் வருகையும்,
பருத்தித்துறை துறைமுக வீதி திறப்பு நிகழ்வும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் , முதியோர் தின நிகழ்வு – 2013





தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை – 2013






மீன்பிடி உபகரணங்கள் விநியோகம்






வெள்ள அனர்த்தம் பார்வையிடல்



வாய்க்கால் புனரமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி



சிசு உதான
சிறந்த எதிர்கால சந்ததியினர்

மக்கள் வங்கியின் 'சிசு உதான'
சேமிப்புக் கணக்கு வழங்கும்



5 ஆம் ஆண்டு
திறமைசாலிகளுக்கு
7500 இற்கும் மேற்பட்ட
பெறுமதிமிக்க புலமைப்பரிசில் பரிசுகள்

**தேசிய மட்டத்தில் புலமைப்பரிசில்கள்**
நாட்டின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறுவோர்க்கு முறையே ரூ.100,000/=, ரூ.75,000/=, மற்றும் ரூ. 50,000/= பெறுமதியான புலமைப்பரிசில்கள்

**மாவட்ட மட்டத்தில் புலமைப்பரிசில்கள்**
சகல மாவட்டங்களிலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறுவோர்க்கு முறையே ரூ.25,000/=, ரூ.20,000/=, மற்றும் ரூ. 15,000/= பெறுமதியான புலமைப்பரிசில்கள்

ரூ.5,000/=பெறுமதியான புலமைப்பரிசில்கள் 1,000

மாவட்ட ரீதியிலான வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் விஷேட பரிசுகள்

2014 செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன் சிசு உதான கணக்கில் ரூ.5,000/= அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகள் அனைவரும் இப் புலமைப்பரிசில் பரிசுகளுக்காக விண்ணப்பிக்கும் தகுதி பெறுவர்.

நீங்கள் ஏற்கனவே ஆரம்பித்திருக்கும் அல்லது புதிதாக ஆரம்பிக்கும் 'சிசு உதான' கணக்கில் ஆகக் குறைந்தது ரூ.5000 வரையில் சேமிப்பினை உயர்த்தியோ, வைப்பில் இட்டோ சிசுஉதான கெப் ஒன்று, புத்தகப்பொதி, பாடசாலைப்பை ஆகிய பரிசுகளை வைப்புச் செய்த தொகைக்கேற்றவாறு பெற்றுக்கொள்ளலாம்.

இப்புலமைப்பரிசில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளும் தகுதி உள்ளவர்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதும் 'சிசு உதான' கணக்கினை நடைமுறைப்படுத்தும் கிளைக்குச் சென்று உரிய விண்ணப்பத்தினை நிரப்பி, கையளிக்க வேண்டும்.



PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE



BOC காந்தா ரண் கிறிம்



இலவச ஆயுட் காப்புறுதியுடன் அதிக பிரதிபலன்கள்

- கடன் மற்றும் செலவு அட்டைகள்
- இணையத்தள மற்றும் கையடக்கத் தொலைபேசி வங்கிச் சேவைகள்
- குறைந்த வட்டியுடனான கடன் வசதி
- உயர் வட்டி

இலங்கை வங்கியின் மகளிர் பொற் கணக்கு வைத்திருக்கும் நீங்கள் மெகா வாசி பரிசிழுப்பிற்கு நுழைவதோடு பெறுமதிமிக்க பரிசில்களை பெறும் வாய்ப்பினை பெறுவீர்கள்.



- மில்லியனாளர்கள் 7 பேர்
- லட்சாதிபதி 60 பேர்
- மேலும் பத்தாயிரம் பணப்பரிசு

ஊடாக

மகளிர் பொற் கணக்காளரான உங்களுக்காக
பேங்கொங் சவாரி 100
சேமிப்பினால் ஊக்கம்
ஆரோக்கிய பராமரிப்பு

சர்வதேச மகளிர் தினத்துடனான அறிமுகப்படுத்தும் வைப்புக்களை ஒன்று சேர்க்கும் திட்டத்தின் கீழ் மகளிர் பொற் கணக்கொன்றை ஆரம்பித்தல் அல்லது பண வைப்பு செய்தல மூலம் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் மார்பக புற்றுநோய் பிரிவிற்கு இலங்கை வங்கியின் முக்கிய பங்களிப்பில் உங்களுக்கும் பங்கு கொள்ள முடியும்.

நீங்களும் இன்றே அருகில் இருக்கம் இலங்கை வங்கியில் சென்று மகளிர் பொற் கணக்கினை ஆரம்பியுங்கள்.

தொடர்பு நிலையம் : 011 220 4444
222.boc.lk

இலங்கைவங்கி
BOC
தேசத்தின்வங்கியாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARINE WEALTH

**IMPORTERS & EXPORTERS**
**DEALERS IN SEA FOOD**



*No. 250, PALANGATURA, KOCHCHIKADE,*
*Tel: 031-2278488 Fax : 031-2278823*
*E-mail: marine.wealth@gmail.com*

✱ கடல் உணவு ஏற்றுமதி, இறக்குமதி

✱ பனிக்கட்டி உற்பத்தி ஆலை

✱ கடற்றொழில் உபகரண விற்பனை நிலையம்

**T.P.No: 021 226 2962**
**021 205 5555**

சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

S.P.M.OFFSET PRINTERS

# S.P.M Printers
# பிறின்ரேர்ஸ்

**V.M.Road,**
**Point Pedro.**

**T.P.No : 077 4966997**
**021 226 0055**
*E-mail: puvan2009@gmail.com*

வி.எம்.றோட்,
பருத்தித்துறை.

சகலவிதமான அச்சு வேலைகளும் தரமான முறையில் செய்து கொடுக்கப்படும்.

புத்தகங்கள், திருமண, பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள் அச்சிடுதல், கண்ணீரஞ்சலி பிரசுரங்கள், பில் புத்தகங்கள், Bag பிறின்ரிங், வினாத்தாள்கள், நினைவுமலர், பாடபுத்தகங்கள் , போட்டோகொப்பி போன்ற அனைத்துவிதமான அச்சு வேலைகளும் மிகவும் குறுகிய காலத்தில் நேர்த்தியான முறையில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

போட்டோ பிரதி A4 ஒரு பக்கம் - 2 ரூபா A4 இரண்டு பக்கம் - 3 ரூபா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்....

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையானது 'செம்பருத்தி' என்னும் பிரதேச மலரினை இன்று வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகின்றது. எமது பிரதேசம் நீண்டகால யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு, பெரும் அழிவுகளையும், இடப்பெயர்வுகளையும் சந்தித்த ஒரு பிரதேசமாகும். இதனால் இப் பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் கலை கலாசார நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல், பதிவு செய்தல் என்பது இதுவரை பெரிதும் சாத்தியம் இல்லாத ஒன்றாக இருந்தது. எனவே தற்கால அமைதிச் சூழலிலே இப் பிதேச மக்களின் வாழ்வியற் கோலங்களை, பண்பாட்டுப் பாரம்பரியங்களை பதிவு செய்வது என்பது கட்டாயக் கடமை என எமது கலாசாரப் பேரவை உணர்ந்து கொண்டது.

இந் நிலையில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிற்கும் ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியுடன் ஏனைய பொது அமைப்புக்களின் உதவியினையும் பெற்று இவ் அமைச்சின் அறிவுறுத்தல் களுக்கமைவாக மூன்றுமாதகால அவகாசத்தில் இப் பிரதேச மலரினை தங்கள் முன் மலர விட்டுள்ளோம். இந்நூல் சிறந்த ஆவணப்படுத்தல் நூலாக தொடர்ந்து ஒவ்வொரு வருடங்களிலும் மலர்ந்து மணம் வீச வேண்டும் என்பது எமது அவாவாகும்.

எனவே "செம்மையான பருத்தி நகர்" எனப் பொருள் பொதிந்துள்ள இச் "செம்பருத்தியின்" மிகக்குறுகியகால நற்பிரசவத்திற்கான பங்காளர்களை நினைவில் நிறுத்தி இந்நூலினைத் தொகுத்தவர் என்ற வகையில் எனது அன்பு கலந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன்.

அவ் வரிசையில் முதலில் இத்திட்டத்தினை முன்மொழிந்து அதற்கான நிதியுதவியினையும் வழங்கியுதவிய வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ குருகுலராஜா அவர்களிற்கும், செயலாளர் உயர்திரு.சி.சத்தியசீலன் அவர்களிற்கும், பிரதிப் பணிப்பாளர் திருமதி.உஷா சுபலிங்கம் அவர்களிற்கும் எமது மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இம் மலர் வெளியீட்டுக்கான அனைத்து ஆலோசனைகள் வழிகாட்டல்களையும் வழங்கியதுடன் மட்டும் நில்லாது பங்காளனுமாகி இடர்கள், தளர்வுகள் வரும்பொழுது உரிய ஆலோசனைகளுடன் ஊக்கப்படுத்தி இம் மலர் வெளிவருவதற்குப் பெரும் காரணமாக இருந்த பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய உயர்திரு த.ஜெயசீலன் அவர்களிற்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இம் மலருக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்கி பங்காளிகளாக இருந்த அனைத்து கலாசாரப் பேரவை உறுப்பினர்களிற்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது மலரிற்கு ஆசிச்செய்திகளை வழங்கிய சமயப் பெரியார்களையும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய உயர் அதிகாரிகளிற்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மிகக்குறுகிய கால அவகாசத்துடன் கட்டுரைகளை வழங்கி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த கட்டுரையாளர்களிற்கும், அவர்களிற்கு தேவையான தகவல்களை வழங்கியவர்களிற்கும் நன்றிகளை காணிக்கையாக்கு கின்றேன். இம் மலருக்கான அட்டைப்படத்தினை கச்சிதமாக வரைந்துதவிய திரு.ஆசை இராசையா அவர்களிற்கும், கலாசாரப் பேரவையினர்க்கான குழுப்படத்தினை எடுத்துதவிய குகன் ஸ்ரூடியோ உரிமையாளர்க்கும், இப்புத்தகத் திற்கான **I.S.B.N** இலக்கத்தினைப் பெற்றுத் தந்த புலோலியூர் இரத்தினவேலோன் அவர்களுக்கும், இம் மலருக்கான விளம்பர அனுசரணையை வழங்கி உதவிய வர்த்தகர்களிற்கும் நன்றியினைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றேன்.

மேலும் இக்கட்டுரைகளை செவ்வை பார்ப்பதற்கு உதவிய திரு.க.பாலசுப்பிரமணியம் , திரு.எஸ்.கணேசன் , திரு.மு.ஸ்ரீபதி, திரு.பா.மீனாட்சிசுந்தரம், பொலிகையூர் சி.க. சிந்துதாசன், திரு.சித்திரா சின்னராஜன், திரு.க.கீர்த்திராஜன், திரு.த.சுந்தரபாரதி, பொன் சுகந்தன் அவர்களுக்கும், மொழி பெயர்ப்பினைச் செய்துதவிய திரு.எஸ்.பஞ்சநதம் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவிப்பதுடன், இம் மலரின் பிரசவத்திற்காக எனக்கு உறுதுணையாகவிருந்து கட்டுரைகளின் எழுத்துப்பிழை , சொற்பிழை என்பவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து கால நேரம் பார்க்காது அர்ப்பணிப்புடன் பணியாற்றிய யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை அதிபர் திரு.பொ.அரவிந்தன் அவர்களிற்கும், வெளியீட்டுரையை நிகழ்த்திய சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி இ.ஜெயலட்சுமி அவர்களிற்கும், நயப்புரையை வழங்கிய திரு.இ.இராஜேஸ்கண்ணன் அவர்களிற்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக இம் மலரினை சிறப்பாக உரிய நேரத்தில் பதிப்பித்த **S.P.M** பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினர்க்கும், முதற் பிரதி, சிறப்புப் பிரதிகளை பெற்றுக்கொண்ட நல்லுள்ளங்களிற்கும், இக் கடமையில் என்னுடன் இணைந்து பணியாற்றிய கலாசாரப்பேரவை உறுப்பினர்/ கிராம அலுவலர் திரு.க.யோகேந்திரநாதன் அவர்களிற்கும், கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.ஜெ.கிரிதரன், ஆராய்ச்சியும் தொடர்பாடலுக்கு மான அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.க.சஞ்சீவன், பொதுமுகாமைத்துவ உதவியாளர் திருமதி.வி.தர்மராணி மற்றும் அனைத்து கிராம அலுவலர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் , சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , மற்றும் அலுவலகப் பணியாளர்கள், சாரதிகள் அனைவரிற்கும் எனது இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி.சே.செல்வசுகுணா,**
**செயலாளர்/கலாசார உத்தியோகத்தர்,**
**பிரதேச கலாசாரப் பேரவை,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-955-41633-0-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org